# ஐரோப்பிய வரலாறு (1789 முதல் 1960 வரை)
# அலகு – 1
# பிரெஞ்சு புரட்சி

பிரெஞ்சு புரட்சி – காரணங்கள் - போக்கு – விளைவுகள் 1789 – ல் ஏற்பட்ட பிரெஞ்சு புரட்சி உலக வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இப்புரட்சி மூலம் பிரான்ஸ் நாட்டில் மன்னர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, மக்களால் உருவாக்கப்படும் ஆட்சி அமைவதற்கு வழிவகுத்தது. மக்களாட்சி உருவாக்கப்படுவதற்கு மூலகாரணமாக இருந்தது பிரெஞ்சு புரட்சிதான். பின்னர் இது சமுதாய புரட்சியாக உருவெடுத்தது. இப்புரட்சி மூலம் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" ஆகிய கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவியது.

**பிரெஞ்சு புரட்சி ஏற்பட காரணங்கள்**

**1.சமுதாய காரணங்கள்**

பிரெஞ்சு புரட்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக விளங்கியது. சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளேயாகும். சமுதாயம் இரண்டு பிரிவுகளாக பிரிந்திருந்தது. அவர்கள் உரிமை பெற்ற மக்கள் (privilaged) உரிமைபெறாத மக்கள் (unprivilaged) ஆகும்.

**உரிமை பெற்றவர்கள்**

பிரபுக்கள், மதக்குருமாகள், அரச குடும்பத்தினர்கள் போன்றவர்கள் எல்லா உரிமைகளும் பெற்றய ஆடம்பரமாக வாழ்ந்தனர். பிரான்ஸ் நாட்டின் மக்கள் தொகையில் 2மூ உள்ள பிரபுக்கள், குருமார்கள் நாட்டின் வளமான நிலத்தில் 1∴3 பகுதியை உரிமையாக பெற்றிருந்தனர். இவர்கள் சமதாயத்தில் சிறுபான்மையினராக இருந்தாலும் எல்லா சலுகைகளையும், உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர்.

பிரபுக்கள், பாமரமக்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர். ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அரசாங்கத்திலும், இராணுவத்திலும், திருச்சபையிலும் உயர்பதவி இவர்களுக்கே வழங்கப்பட்டது. சர்ச்களிலும், தியேட்டர்களிலும், பொது இடங்களிலும் தனி இடம் ஒதுக்கப்பட்டது. தங்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டு பெருந்தொகையை குத்தகைதாரர்களிடமிருந்து பெற்று வந்தனர். இவர்களது கொடுங்கோன்மை ஆட்சி, கிராமங்களில் தலைவிரித்தாடியது. வேட்டையாடுவதிலும், சூதாட்டங்களிலும் ஈடுபட்டனர். புாமர மக்களின் நிலையைப்பற்றி இவர்கள் கவலைப்படவே இல்லை.

மதகுருமார்களும் சிறப்புரிமைகளை அனுபவித்து வந்தனர். திருச்சபையின் உயர்பதவிகள் யாவும் இவர்களே பெற்றிருந்தனர். தங்கள் கடமைகளை மறந்து சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபட்டு செல்வ செருக்குடன் வாழ்ந்து வந்தனர். வரிகொடுப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர். இதனால் பாமர மக்களின் வெறுப்புக்கும் கோபத்திற்கும் உள்ளானார்கள். இவர்கள் ஆடம்பர பொருட்கள் அடங்கிய அரண்மனைகளில் வாழ்ந்தனர். ஒரே சமயத்தில் 200 விருந்தினர்களை பேணி பராமரிக்கும் நிலையில் குருமார்கள் இருந்தார்கள்.

1. **குடியானவாகளின் தாழ்ந்த நிலை**

குடியானவாக்ள அனுபவித்த இன்னல்கள் சொல்ல முடியாத அளவிற்கு இருந்தது. அடிமட்டத்தில் வாழ்ந்த தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமான இருந்தது. பிரபுக்களும், குருமார்களும் அனுபவித்து வந்த உரிமைகள் இவர்களுக்கு

மறுக்கப்பட்டது. ஏழை குடியானவாகள் தங்கள் வருமானத்தில் பாதிக்கு மேல் வரியாக செலுத்த வேண்டியதிருந்தது. டைத் (Tithe) என்ற திருச்சபை வரியும், டெய்லி (Taile) என்ற அரசனுக்கு செலுத்தும் நிலவரியும், விங்டைம் (Vingtime) என்ற வருமான வரியும்ஈ காபெல்லி (Cabelle) என்ற உப்புவரியும் பாமரமக்கள் செலுத்த வேண்டியிருந்தது. கார்வி(Carvee) என்ற கட்டாய வேலையும் பிரபுக்கள் வீட்டில் ஊதியம் இல்லாமல் செய் வேண்டியதிருந்தது. இவ்வாறு பொதுமக்கள் வரிச்சுமையினால் பெரும் அல்லல் பட்டனர்.

உயர்குடியினர் பலவகைகளில் சலுகைகளையும், உல்லாச வாழ்க்கையும் அனுபவித்து வ்நத போது வஞ்சிக்கப்பட்டனர். வறுமையால் வாடினர். எனவே தான் **பிரபுக்கள் போரிட, மதகுருமார்கள் வழிபாடு செய்ய, மக்கள் வரிகொடுக்க** (The nobles fight the clergy pray and the people pay) என்ற கூற்று உண்மையாக இருந்தது. இவ்வாறு சமுதாயத்தில் காணப்பட்ட அதிருப்தியும், ஏற்றத்தாழ்வுமே பிரெஞ்சு புரட்சிக்கு காரணமாக அமைந்தது. "பிரெஞ்சு புரட்சி சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து நடந்த புரட்சி என்று கூறுவதை விட சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்து நடந்த ஒன்று என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்" என்று மாட்லின் என்ற பேராசிரியர் கூறுகிறார்.

வரிவசூலிப்பவன் குடியானவர்களை கசக்கி பிழிந்தனர். "பிரான்சில் பத்தில் ஒன்புத பட்டினியால் இறந்தனர். மீதி பங்கினர் வயிற்று கோளாறினால் மாண்டனர்"என்று கூறப்படுகிறது. "மூன்றில் ஒரு பகுதி மக்களுக்கு வருடத்தில் மூன்றில் ஒரு பகுதி நாட்களில் மூன்றாம் தர உருளைகிழங்கை தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை" என்று கார்லைஸ் என்பவர் தம்முடைய "பிரெஞ்சு புரட்சி" என்ற நூலில் கூறியுள்ளார். வறுமையை எதிர்த்து கலகமிட்ட மக்களைகப் பார்த்து "நிலத்திலுள்ள புல்லை பிடுங்கி வயிறார தின்னுங்கள்" என்று 16 – ம் லூயி கூறினார். மேற்சொன்னவைகளிலிருந்து குடியானவர்களின் துயரம் வறுமை எந்த அளவுக்கு இருந்தது என்பதை உணரலாம்.

**நடுத்தர மக்களின் நிலை**

வழக்கறிஞர்கள், வணிகர்கள், பேராசிரியர்கள், வங்கி ஊழியர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், தத்துவஞானிகள் போன்றோர் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களிடம் பணமும், மூளையும், உலக அனுபவமும் நிறைந்திருந்தன. இவர்கள் பிரெஞ்சு புரட்சிக்கு முதுகெலும்பாக இருந்தனர். சமுதாயத்திலுள்ள வேறுபாடுகளைக் களைவதற்காக ஏற்பட்ட புரட்சி என்றே கூறலாம். எனவே மாவீரன் நெப்போலியன் "இப்புரட்சி உரிமை பெற்ற மக்களுக்கு எதிர்ப்பாக செயல்பட்ட மக்கள் இயக்கமாகும்" என்று கூறியுள்ளார்.

**3.அரசியல் காரணங்கள்**

பிரான்சை ஆண்ட போர்போன் மன்னர்கள் வல்லாட்சியைக் கடைபிடித்தார்கள். நிர்வாகத்தில் கவனம் செலுத்தவில்லை. "வல்லான் வகுத்த வழி" என்ற பழமொழிக்கு இணங்க ஆட்சி நடத்தினர். முக்களிடம் நேரடியாக தொடர்பு வைக்கவில்லை. நாட்டில் எந்தவித சுற்றுப் பயணமும் மேற்கொள்ளவில்லை. இதனால் மக்களின் துன்பங்கள் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போய்விட்டன. போர்போன் மன்னர்கள் **'அரசப் பதவியின் தெய்வீக உரிமைகொள்கை'யின் படி** ஆட்சி செய்தனர்.

போர்போன் வம்சத்தைச் சார்ந்த 14 – ம் லூயி மன்னர் காலத்திலிருந்தே நாட்டுமக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைய ஆரம்பித்தனர். இதற்கு காரணம் 14 – ம் லூயி பல ஆடம்பர போர்களில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தனர். "நானே நாடு" என்று கூறிக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட

சட்டசபைகளை ஒழித்தார். சுட்டம் இயற்றுதல், வரிவிதித்தல், நீதிவழங்குதல், அதஜகாரிகளை நியமித்தல் ஆகிய அனைத்து அதிகாரங்களும் அரசன் கையிலே இருந்தது. 1614 – க்கு பிறகு பிரெஞ்சு பாராளுமன்றம் “ஸ்டேட் ஜெனரல்”(States General) கூட்டப்படவே இல்லை. அரசனால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மூலமே ஆட்சி நடந்தது. 14 – ம் லூயிக்கு பின் பதவிஏற்ற 15 – ம் லூயினாலும் நிலைமையை சீர்படுத்த முடியவில்லை. இவரும் திறமையற்றவர். ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தார். இவர் தனது ஆசை நாயகிகளான மேடம் -டி-பாம்டூர், மேடம்-டு-பாரி ஆகியோரின் சொற்படி ஆட்சி நடத்தி வந்தார். மக்களின் தேவைகளைப் பற்றி அரசனோ, அதிகாரிகளோ கவலைப்படவில்லை.

இந்த பிரெஞ்சு மன்னர்கள் பாரிசிலிருந்து 12 மைல் தொலைவிலுள்ள வெர்சேய்லிசில் உள்ள ஆடம்பர மாளிகையில் வாழ்ந்து வந்தனர். அங்கு மன்னர்களுக்கு வேலைச் செய்ய 18 ஆயிரம் பேர்கள் இருந்ததாகவும் அரசிக்கு பணிவிடைச் செய்ய மட்டும் 500 பேர்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. புாமர மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளாமலும், எந்த சீர்திருத்தங்களும் செய்யாமலும் கொடுங்கோலாட்சி புரிந்து வந்த பிரெஞ்சு மன்னர்கள் இப்புரட்சி ஏற்பட காரணமாயிருந்தனர்.

**4.திறமையற்ற மன்னர்கள்**

14 – ம் லூயி ஆட்சிக்காலத்தில் பிரான்சு நாட்டின் தொரளாதாரம் சீர்கெட ஆரம்பித்தது. ஆகவே பௌலன் என்ற தத்துவஞானி “லூயி பிரான்சை ஏழ்மையில் தள்ளிவிட்டாரெனவும், அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த மக்களின் மேல் அவர் அரியணையை உருவாக்கினார்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15 – ம் லூயி தன் தந்தையைப் போல பல போர்களில் ஈடுபட்டும்,கேளிக்கை விளையாட்டுகளில் கலந்தும் பணத்தை விரயமாக்கினார். மேலும் இவர் ஒழுங்கற்ற நிர்வாகத்தை நடத்தியும், மதிகெட்ட நிர்வாகிகளை வைத்தும் ஆட்சி நடத்தினார்.

**மேரி அன்டாய்னட் (MARY ANTOINETTE)**

15 – ம் லூயிக்குப் பின் பதவிக்கு வந்தவர் 16 – ம் லூயி ஆவார். இவர் காலத்தில் தான் பிரெஞ்சு புரட்சி வெடித்தது. இவர் மிகவும் நல்லவர்தான். ஆனால் திறமையற்றவர். இவரது பொழுதுபோக்கு வேட்டையாடுதல், சாப்பிட்டு விட்டு அந்தப்புரத்தில் உறங்குதல் ஆகியவையாகும். நாட்டை எதிர்நோக்கியிருந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய திறமையோ, விவேகமோ, மனப்பக்குவமோ இல்லாதவர். எனவே தான் இவரது அழகான மனைவி அண்டாய்ன்ட் நாட்டின் ஆட்சி பொறுப்பை தன் கையில் எடுத்துக் கொண்டு, தன் விருப்பப்படி ஆட்சி புரியலானாள்

ஆஸ்திரிய நாட்டு பேரரசி மரிய தெரசாவின் மகளான மேரி அண்டாயின்ட் ஓர பேரழகி. ஆடம்பர வாழ்க்கை வாழ அரசு பணத்தை செலவு செய்தார். அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்த காரணத்தினால் ஏழை மக்களின் இன்னல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை உதாரணமாக சாப்பாட்டிற்கு ரொட்டி கூட கிடைக்காமல் மக்கள் அரண்மனை முன்பு கூடி கோஷமிட்டபோது “ரொட்டி கிடைக்காவிட்டால் கேக் வாங்கி சாப்பிடுவது தானே” என்று கூறினார் அண்டாயினட் (If they don’t have bread let them eat cake) மக்களால் பற்றாக்குறை அரசி (Madam deficit) என்று பட்டம் சூட்டப்பட்டாள். ஏழாண்டு போரில் பிரான்ஸ் தோற்றுக் கேவலப்பட்டதற்கு இவளே காரணம். ஆரண்மனை விவகாரங்களில் தன்னை எதிர்த்தவருக்கு சிறைத்தண்டனை வழங்கினார். இதனால் நிர்வாகம் சீர்கேடடைந்தது. மேலும் அந்தப்புரத்தில் அரசர் அரசியுடன் உல்லாச வாழ்க்கை வாழ்ந்தார். பிரான்சை இழிநிலைக்கு கொண்டு வந்த

இவனை மக்கள் வெறுத்தனர். எனவே புரட்சி ஏற்பட முக்கிய காரணங்களில் ஒன்றாக மேரி அண்டாயினட்டை கருதலாம்.

அண்டாயினட்டின் மேல் இரக்கம் கொண்டு அவளுடைய சகோதரர் இரண்டாம் ஜோசப் "உன் மேலுள்ள நலத்தினாலும், ஆர்வத்தினாலும் நான் வெளிப்படையாக கூறுகிறேன். சகோதரியே உனக்கு சம்மந்தம் இல்லாத விஷயங்களில் தலையிட்டு வெறுப்பை தேடிக் கொள்கிறாய்…… அந்தப்புரத்தில் அடைத்து வைத்திருக்கும் அரசரை ஆட்சி செய்ய அனுப்பு….. இவற்றை விட்டு நூல்களைப் படித்து அறிவை தேடிக் கொள், வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணியும் இதைத்தான் செய்வார்கள்" என்று கடிதம் எழுதினாராம். இக்கடிதத்திலிருந்து அண்டாயினட் எப்படிப்பட்டவள் என்பதை உணரலாம்.

**5.சீர்கெட்ட நிர்வாகம்**

பிரான்சில் தனிமனித சுதந்திரம் இல்லை. பொதுக்கூட்டங்கள் நடத்துதல், சங்கங்கள் அமைத்தல் போன்ற உரிமைகள் மக்களுக்கு மறுக்கப்பட்டன. நாடு 40 மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் பலவகையான சட்டங்களும், பலவகையான வழிமுறைகளும் செயல்பட்டு வந்தன. இதனால் நிர்வாகத்தில் குழப்பம் நிலவியது. அரசு பணியாளர்கள் சோம்பேறிகளாகவும், லஞ்சபேர்வழிகளாகவும், பகட்டான இன்பம் அனுபவிப்பவர்களாகவும் காணப்பட்டனர். எனவே நிர்வாக முடக்கம் ஏற்பட்டது. மன்னர்கள் அந்தப்புரத்தில் காலம் கழித்தனர். மனைவிகளின் சொல்கேட்டு கொடுங்கோலாட்சி புரிந்தனர். "பிரெஞ்சு அரண்மனை தேசத்தின் கல்லறை" என்று பழித்துக் கூறப்பட்டது.

ஊழல்களை எடுத்துக் கூறியவர்கள் விசாரணையின்றி சிறையிலடைக்கப்பட்டனர். தனக்கு பிடிக்காத யாரையும் அரசன் எவ்விதக் காரணமும் கூறாமல் விசாரணையும் இல்லாமல் 'Letter–de-Cachet' என்ற அரசனின் முத்திரையிடப்பட்ட வாரண்டுகள் மூலம் கைது செய்து சிறையிலடைக்க முடியும். இந்த வாரண்டுகளை அரசனிடமிருந்து பிரபுக்களும் பெற்றுக் கொண்டு தங்களை எதிர்த்த மக்களை சிறையிலடைத்தனர். சித்திரவதை செய்தனர். இவ்வாறு நாட்டு நிர்வாகம் சீர்கேடு அடைந்து காணப்பட்டது. இது புரட்சி ஏற்பட காரணமாயிற்று.

**6.குழப்பமான நீதித்துறை**

பிரான்ஸ் நாட்டின் சட்டம் மற்றும் நீதிமுறைகள் குழப்பத்தை ஏற்படுத்தின. பிரான்ஸ் முழுவதும் ஒரே மாதிரியான சட்ட அமைப்பு இல்லை. அரசன் நினைத்தவை எல்லாம் சட்டங்களாக அமுல் செய்யப்பட்டன. நாட்டில் முரண்பாடான 285 வகையான சட்டத் தொகுப்புகள் காணப்பட்டன. எனவே தான் ஒரு சாதாரணக் குற்றத்திற்கு ஒரு நீதிமன்றம் சாதாரணத் தண்டனையும், மற்றொரு நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கும் அவலநிலை காணப்பட்டது. மேலும் சட்டங்கள் லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்ததால், மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. பிரபுக்களில் சிலர் ஆயள் முழுவதும் நீதிபதிகளாக இருந்தனர். வழக்கை விசாரணை செய்யும் முறை இல்லை. சித்திரவதை சர்வ சாதாரணமாக இருந்தது. மரண தண்டனை கொடூரமான முறையில் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு சீர்கெட்ட நிர்வாகத்தினாலும், மோசமான நீதிமுறையினாலும் மக்கள் இன்னலடைந்தனர். பொறுமையிழந்த மக்கள் புரட்சி செய்ய தயாராயினர். ஆட்சி மாற்றத்தை விரும்பினர்.

### 7.பிரெஞ்சு நாட்டு தத்துவ ஞானிகளின் பங்கு

பிரெஞ்சு புரட்சி ஏற்படுவதற்கு பெரிதும் துணை நின்றவா்கள் தத்துவஞானிகளும்,எழுத்தாளா்களும் தான். இவா்களின் எழுத்தாற்றலாலும், சிந்தனைக்குரிய கருத்துக்களாலும் தூங்கி கிடந்த மக்களை தட்டி எழுப்பிப புரட்சி பாதையை நோக்கி செல்லுமாறு செய்தார்கள்.

### 8.வால்டேர் (VOLTAIRE-1694 -1778)

இவரது இயற்பெயா் (Francis maria Arouet) என்பதாகும். ஆனால் தன்னை வால்டோ் என்று அழைத்துக் கொண்டார். இவா் ஓர சிறந்த எழத்தாளா். சிந்தனையாளா், தத்துவஞானி. இவா் எழுதிய நூல்களில் இங்கிலாந்தில் நிலவிய வரம்புக்குட்பட்ட முடியாட்சியின் நன்மைகளையும், பிரான்சில் நிலவிய வரம்பு கடந்த முடியாட்சியின் தீமைகளையும் ஒப்பிட்டாா். இங்கிலாந்திலுள்ள ஆட்சியைப் போன்று பிரான்சிலும் அமைய வேண்டும்.இவா் திருச்சபை செய்யும் அட்டூழியத்தை அம்பலப்படுத்தினாா். முற்போக்கு சீா்திருத்த கருத்துக்களை ஆதரித்தாா். இவரது கருத்துக்கள் நாட்டு மக்களிடையே பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. ‘‘கடவுளை வணங்கு. நல்ல மனிதனாக இரு’’ என்ற கருத்தை வலியுறுத்தினாா்.

வால்டேர் கொடுங்கோண்மை ஆட்சியை கடுமையாக எதிா்த்தாா். ஒடுக்கப்பட்ட மக்கள் மீது பரிவு காட்டி அவா்களுக்குாக போராடினாா். இவா் பிரஷ்ய மன்னா் இரண்டாம் பிரடெரிக்கை பெரிதும் பாராட்டினாா். காரணம் இவா் நன்மை பயக்கும் சா்வாதிகாரியாக இருந்து மக்களுக்கு நன்மை செய்தாா்.

### 9. மாண்டஸ்கியு

மாண்டஸ்கியுவின் அதிகார பிரிவினை டீகாட்பாடு (Separation of Powers) மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். சட்டம் இயற்றும் துறை, நிா்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றும் ஒரே நபரிடம் இருந்தால் அது கொடுங்கோண்மைக்கும் சா்வாதிகாரத்திற்கும் வழிவகுக்கும் என்றாா் இந்த தத்துவஞானி மாண்டஸ்கியூ.

மாண்டஸ்கியூவின் ‘அதிகார பிரிவினை கோட்பாடு’ பிரெஞ்சு மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றது. புரட்சிகரமான இக்கருத்துக்களுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. அவா்கள் புதிய அரசை உருவாக்க துடித்தனா். புரட்சியாளா்களுக்கு புதிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு இக்கொள்கைகள் பெரிதும் உதவின.

### 10.ரூசோ

பிரெஞ்சு தத்துவஞானிகளிலேயே மிகவும் சிறந்தவரும், தீவிரவாதியாகவும் விளங்கியவா் ஜீன்ஜேக்கஸ் ரூசோ ஆவாா். இவரது கருத்துக்களை சாதரண மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும், அவா்களின் சிந்தனைகளை பெரிதும் தூண்டியது. பிரெஞ்சு புரட்சியை பொறுத்தவரையில் ரூசோவின் கருத்துக்கள் வலிமை பொருந்தியவையாகக் காணப்பட்டன. இவா் எழுதிய நூலில் பெரிதும் புகழ்பெற்றது **‘‘சமூக ஒப்பந்தம்’’** என்ற நூலாகும். இது 1762-ல் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் புரட்சி கருத்துக்களை கொண்டிருந்ததால் பிரெஞ்சு அரசு இதனை தடை செய்தது. உடனே ரூசோ சுவிட்சா் லாந்துக்கு ஓடிவிட்டாா். பிரெஞ்சு புரட்சியின் மறை நூல் என்று அழைக்கப்படும் **‘சமூக ஒப்பநதம்’** என்ற நூலில் தான் பிரெஞ்சு புரட்சிக்கு தத்துவ அடிப்படையை அளித்த ரூசோவின் முக்கிய கருத்துக்கள் காணப்படுகின்றன.‘‘இயற்கையில் மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான். ஆனால் அவன் பிறந்த பிறகு அரசாங்க ஆணை என்ற சங்கிலியால் பிணைக்கப்படுகிறான்.

நாகரீகமும்,விஞ்ஞான வளர்ச்சியும் படிப்பும் மனிதனை கெடுத்து விட்டன. ஆகவே மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இயற்கையோடு இணைந்த வாழ்வுக்கு மீண்டும் செல்ல வேண்டும்'' அங்கு தான் அவன் நீதியையும், அமைதியையும், மகிழ்ச்சியையும் பெறமுடியும் என்றார். இந்த நூலில் மனிதனைப் பற்றியும் மக்களாட்சிப் பற்றியும் தெளிவாக கூறுகிறார் ரூசோ.

''அரசாங்கமும், சட்டமும் மனிதனுடன் பிறக்கவில்லை. தன் நல்வாழ்க்கைகாக பிற்காலத்தில் தானே வகுத்துக் கொண்ட ஒரு ஆட்சிமுறை. ஆளும் பொறுப்பு மக்களிடமே உள்ளது. மக்கள் தான் அப்பொறுப்பை மன்னரிடம் அளித்தனர். எனவே தவறு செய்த தனது கடமையை நிறைவேற்ற உரிமை உள்ளது. ''ஆளும் பொறுப்பு என்பது மக்களும், மன்னரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட ஓர் ஒப்பந்தமே'' என்று கூறினார்.

இவ்வாறு ரூசோ தனது நூலில் ''இறைமை'' மக்களிடத்தில் தான் உள்ளது என்றார். கொடுங்கோலாட்சியை புரட்சியின் மூலம் அகற்றும் உரிமை மக்களுக்கு உண்டு என்ற கருத்தை வலியுறுத்தினார். இது மக்களை புரட்சி செய்ய துாண்டியது. இந்நூால் பிரெஞ்சு புரட்சிக்கு ஒரு தீக்கொள்ளியை போல பயன்பட்டது. ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் **சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற** கோட்பாடுகளை உலகிற்கு அளித்தது.

இவ்வாறு பிரெஞ்சு சிந்தனையாளர்களின் எழுத்துக்களும், பேச்சுக்களும், மக்களின் எண்ணங்களை வெகுவாகப் பாதித்தன. அவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. தாங்கள் அநீதிக்கு கொடுமைப்படுத்தப்படுபவர்கள் என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்தி இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்ற உறுதியை அவர்களுக்கு அளித்தன என்றால் மிகையாகாது. பிரெஞ்சு தத்துவஞானிகளால் புரட்சி துரிதப்படுத்தப்பட்டது என்றும் கூறலாம்.

### 7. அமெரிக்க சுதந்திரப் போரின் துாண்டுதல்

1776-ல் அமெரிக்க குடியேற்றங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரப்போரை ஆரம்பித்தனர். இப்போரில் அமெரிக்கவிற்கு ஆதரவாக பிரான்ஸ் பணஉதவி, படைஉதவி செய்தது. இப்போரின் மூலம்.பிரெஞ்சு அரசுக்கு அதிக செலவு ஏற்பட்டது. அரசு கருவூலம் காலியானது. இப்போரில் **லபாயட்** (Lafayate) என்பவரின் தலைமையில் ஒரு பிரெஞ்சுபடை அமெரிக்காவுக்கு ஆதரவாக பங்கேற்றது. போரின் இறுதியில் அமெரிக்க குடியேற்றங்கள் வெற்றியடைந்தன. போரில் பங்கு கொண்டு நாடு திரும்பிய லபாயட்டும் அவரது வீரர்களும் அமரிக்க சுதந்திரப் போரில் அமெரிக்கா வெற்றிப்பெற்று அங்கே மக்களாட்சி நிறுவியது போல தாங்களும் பிரெஞ்சு மன்னரின் சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்ட முடியும் என்று திடமாக நம்பினர். முக்கள் மனதிலும் இந்த எண்ணம் தோன்றி புரட்சிக்கு வழிவகுத்தது.

### 8. பொருளாதார காரணங்கள்

பிரான்ஸ் நாட்டில் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. 14-ம் லுாயி, 15-ம் லுாயி, ஆகியோர்கள் செலவுமிக்க போர்களினாலும், ஆடம்பர செலவுகளினாலும் அரசு கருவூலம் காலியானது. இதனால் பிரான்சிற்கு கடன் ஏராளமாக இருந்தது. ஆண்டுதோறும் பொதுக்கடன் மேலும் அதிகமாகியது. பொதுக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டித் தொகையை விட தேசிய வருமானம் குறைவாகவே இருந்தது. பிரான்ஸ் நாட்டின் மோசமான பொருளாதார நிலைக்கு மேலும் பல காரணங்கள் உண்டு.

1) முதலாவதாக வரி மதிப்பீடு செய்வதில் பல தடைகள் காணப்பட்டன. சலுகைகள், வரிவிலக்கு ஆகியவற்றினால் வரிமதிப்பீடு சரிவர செய்ய முடியவில்லை. இதனால் நாட்டின் வருமானம் குறைந்தது. மேலும் வரிவசூல் செய்வதில் அதிக செலவும் ஊழலும் காணப்பட்டது.

2) இரண்டாவதாக நாட்டின் வரவு செலவு திட்டம் செயல்படுத்தப்பட வில்லை. ஆட்சியில் செலவை ஈடுகட்ட புதிய வரிகள் விதிக்க நேரிட்டது. இந்த வரி விதிப்பு நடுத்தர மக்களையும், பாமரமக்களையும் தான் அதிகம் பாதித்தது.

3) மூன்றாவதாக ஒரு சில பணக்காரர்கள் அரசனுக்கு அதிக அளவில் பண உதவி செய்து, அதற்கு ஈடாக அதே அளவிற்கு வரி வசூலித்து கொள்ள உரிமை பெற்றுக் கொண்டனர். ஆனால் அவர்கள் தாங்கள் கொடுத்த பணத்திற்கு அதிகமாகவே வரிவசூலித்தனர். இதனால் அரசாங்கத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

4) நான்காவதாக பிரான்ஸ் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், பொருட்களுக்கு சுங்கவரி வசூலிக்கும் முறை இருந்தாலும், ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தானியங்கள் எடுத்துச் செல்லக்கூடாது என்று சட்டங்கள இருந்தாலும் வியாபாரிகளும், பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பஞ்சம் ஏற்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணம் மேற்கொள்ள முடியவில்லை. இவ்வாறு பிரான்ஸ் நாட்டில் பொருளாதார நெருக்கடி மக்களை புரட்சியின் பாதைக்கு இழுத்துச் சென்றது.

### 9. பொருளாதார நெருக்கடியை தீர்க்க 16-ம் லூயி மேற்கொண்ட சீர்திருத்தங்கள்

சிறப்புரிமை காரணமாக நாட்டின் பிரபுக்களும், செல்வந்தர்களும், வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கும் வரை பிரான்ஸ் நாட்டின் நிதி நிலையை மேம்படுத்தி நாட்டிற்கு தேவையான வருவாயை பெறுவது என்பது இயலாத ஒன்றாகும். எனவே நிதிநிலையை மேம்படுத்த 16-ம் லூயி உண்மையாகவே சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### 10. டர்காட் (TURGOTT– 1774 -1776)

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியை தீர்க்க டர்காட் என்பவரை நிதியமைச்டசராக 16-ம் லூயி நியமித்தார். ஏற்கனவே இவர் மாநில ஆளுநராக இருந்து போதிய அனுபவம் பெற்றவர். இவர் பிரான்சில் சலுகை பெற்ற பிரபுக்களும் குருமார்களும் அனுபவித்து வந்த தனி உரிமைகளை ரத்து செய்யவும், வரிப்பழுவை எல்லாப் பிரிவினருக்கும் சமமாக பங்கிடவும், தடையில்லா வாணிபத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தார். இதனால் பிரபுக்களும், குருமார்களும் இவருடைய சீர்திருத்தங்களை எதிர்த்தார்கள். மேலும் இவர்கள் மேரி அண்டாயினட்டிடம் டர்காட்டை நீக்கும்படி ஆலோசனை கூறினார்கள். இவர்களின் ஆலோசனைகளைக் கேட்ட மேரி அண்டாயினட் 1776-ல் டர்காட்டை பதிவியிலிருந்து நீக்கினார்.

### 11. நெக்கர்

டர்காட்டுக்கு பிறகு நெக்கரை நிதியமைச்சராக 16-ம் லூயி நியமித்தார். இவர் ஜெனிவாவை சார்ந்த ஒரு வங்கியாளர். சிறந்த பொருளாதார நிபுணர். நூட்டின் வரவு செலவுகளை ஓரளவு சரி செய்தார். 1777-79 க்குள் சுமார் 500 தேவையில்லா பதவிகளை ஒழித்தார். பிரான்ஸ் நாட்டிலுள்ள வரவு செலவை முதல் முறையாக மக்கள் அறியும் பொருட்டு வெளியிட்டார். இதன் மூலம் மன்னரின் செலவு, மேரி அண்டாயினட்டின் ஆடம்பர செலவு போன்றவைகளை அறிந்த மக்கள் மன்னரின் மீது கோபம் கொண்டார்கள். இதற்கு முன்பு இந்த அறிக்கை வெளியிடப்படாமல்

இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. எனவே இவரையும் மன்னர் 1781-ல் பதவி நீக்கம் செய்தார்.

## 12. கலோன் (CALONE– 1781 – 1787)

16-ம் லூயியால் புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சர் கலோன் என்பவர் திறமையற்றவர். அரசுடன் ஒத்துப்போனால் தான் பதவியில் நீடிக்கமுடியும் என்பதை புரிந்து கொண்டு மேரி அண்டாயினட்டின் கையாளாக இருந்தார். இவரது லட்சியமே **“அதிக செலவு செய்வது அதிகமாக கடன் வாங்குவது”**ஆகும். எனவே நிதி நெருக்கடியை செம்மை செய்ய கடன் வாங்க புதிய முறைகளை கையாண்டார். இவர் மூன்றே ஆண்டுகளில் 300 மில்லியனுக்கு மேல் கடன் வாங்கி அனைத்தையும் செலவிட்டார். மேலும் கடன் கொடுக்க யாரும் முன்வராததால் எல்லா மக்கள் மீதும் வரிவிதித்தார். இவர் விதித்தத வரியை உரிமைப்பெற்ற பிரபுக்களும், குருமார்களும் கட்ட மறுத்தார்கள் உரிமை பெற்றவர்கள் எதிர்த்ததால் இவரும் 1787-ல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

## 13. பிரைன் (BRINEE) (MAY 1787)

கலோன் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிறகு பிரைன் என்பவர் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் உரிமைப்பெற்ற பிரபுக்கள், குருமார்கள் உட்பட எல்லோர் மீதும் வரி வதித்தார். இந்த வரி விதிப்பை உரிமை பெற்றவர்கள் கட்ட மறுத்ததால் இவரும் விலக்கப்பட்டு மீண்டும் நெக்கரை நிதியமைச்சராக மன்னர் எண்ணினார்.

### உடனடி காரணம் (முப்பேராயம் கூட்டப்படுதல்)

### நெக்கர்

இவர் மீண்டும் நிதியமைச்சராக வந்தவுடன் மக்களின் விருப்பபடி பாராளுமன்றத்தை கூட்ட விரும்பினார். ஏனென்றால் மன்னரால் வெளியிடப்பட்ட புதிய வரிகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியாக வேண்டும். 1789- மே 1-ல’ 175 ஆண்டுகள் கூட்டப்படாத பிரெஞ்சு பாராளுமன்றமாகிய முப்பேராயத்தை கூட்ட நிதியமைச்சருக்கு 16-ம் லூயி ஆணைப் பிறப்பித்தார். 1789 மே 5-ல் முப்பேராயம் 175 ஆண்டுக்கு பிறகு வெர்செய்ல்ஸில் கூட்டப்பட்டது. பாராளுமன்றம் கூட்டப்படுவதும், பிரெஞ்சு புரட்சி வெடித்ததும் சரியாக இருந்தது.

### புரட்சியின் போக்கு

1789 மே மாதம் 5-ம் தேதி பிரெஞ்சு பாராளுமன்றமான முப்பேராயம் (ளுவயவநள புநநெசயட) கூட்டப்பட்டபோதே புரட்சி ஆரம்பித்துவிட்து எனலாம். பாராளுமன்றத்தில் மூன்று பிரிவுகள் இருந்தன. அவை பிரபுக்கள் மன்றம், குருமார்கள் மன்றம், பொதுமக்கள் மன்றம் ஆகியவையாகும். இம்மன்றத்தில் பிரபுக்கள் பிரதிநிதிகள் குருமார்கள் பிரதிநிதிகள் சேர்த்து 300 பேர்களும் பொதுமக்களின் பிரதிநிதிகள் 600 பேர்களும் இருந்தனர். சட்டசபை கூடியதும் பொதுமக்களின் பிரதிநிதிகள் சபையில் எங்கே அமர்வது? ஏப்படி வாக்களிப்பது? ஏன்ற பிரச்சனை ஏற்பட்டது. பழைய முறைப்படி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒருவாக்கு என்பது நடைமுறை. எனவே பொதுமக்கள் கொண்டுவரும் எல்லா தீர்மானங்களையும், பிரபுக்களும், குருமார்களும் இணைந்து தோற்கடித்து விடுவார்கள்

ஆனால் தற்பொது புதிய வரிகள் விதிப்பதற்கு உரிமை பெறுவதற்காகவே 16-ம் லாயி முப்பேராயத்தை கூட்டியிருந்தனர். மக்களின் பிரதிநிதிகள் குருமார்களின் பிரதிநிதிகள், பிரபுக்களின் பிரதிநிதிகள் ஆகிய மூன்று பிரிவினரும் சேர்ந்துதான் அமர வேண்டும் என்றும், ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு என்ற முறையைப் புகுத்த வேண்டுமென்றும் மக்கள் பிரதிநிதிகள் வற்புறுத்தினர் எனவே குழப்பம் ஏற்பட்டது.

**தேசிய சட்டமன்றம்**

ஜீன் 17, 1789 மே 6-ம் நாள் மீண்டும் மன்றம் கூடும்போது மூன்று பிரிவினருக்கிடையே மோதல் ஏற்பட்டது. இதற்கிடையில் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு ஆதரவாக பல குருமார்களும் சில பிரபுக்களும் சேர்ந்து கொண்டனர். பொதுமக்களின் மிகச்சிறந்த பேச்சுவன்மை உடையவரும், உறுதியான அரசியல் வாதியுமான மிராபோ என்பவர் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும்படி மன்னரிடம் வேண்டுகோள் விடுத்தார். இவர் உயர் குடியில் பிறந்தவராயினும் மக்கள் பக்கம் சேர்ந்திருந்தார். தங்கள் கோரிக்கைகளுக்கு மன்னன் இணங்க மறுத்ததால் ஐந்து வாரங்கள் தொடர்ந்து பாராளுமன்றம் கூடிக் கொண்டேயிரந்தது. ஊக்கமடைந்த பிரதிநிதிகள் ஜீன் 17-ம் தெதி தங்கள் மன்றத்தை **தேசிய சட்டமன்றம்** என்று அறிவித்தார்கள். தேசிய சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களை தடை செய்யவும், அதன் சம்மதம் இல்லாமல் மக்கள் மீது வரி விதிக்கவும் மன்னருக்கு உரிமை இல்லை என்றனர்.

**டென்னிஸ் மைதான உறுதிமொழி ஜீன் 20, 1789**

அதிருப்தி அடைந்த மன்னர் தேசிய சட்டமன்றத்தை கலைக்க முயற்சித்தார். 1789 ஜீன் 20-ல் தேசிய சட்டமன்றம் கூடியிருந்த மண்டபத்தை பூட்டி, வெளியே ஆயுதம் தாங்கிய போர்வீரர்கள் நிறுத்தப்பட்டனர். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் வெர்செயில்ஸ் மாளிகை அருகிலுள்ள டென்னிஸ் மைதானத்தில் கூடினர். பிரான்ஸ் நாட்டிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் வரை கலைந்து செல்லப் போவதில்லை என்று உறுதிமொழி எடுத்தனர். இதற்கு **டென்னிஸ் மைதான உறுதிமொழி** என்று பெயர். உடனே மன்னர் பணிந்து முப்பேராயத்தின் மூன்று பிரிவுகளும் சேர்ந்து அமரும்படி ஜீன் 27-ல் ஆணையிட்டார். பிரான்ஸ் நாட்டிற்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க தேசிய அரசியல் நிர்ணய சபை 1789 ஜீலை 6-ல் உருவாக்கப்பட்டது.

**3. பாஸ்டில் சிறைச்சாலையின் வீழ்ச்சி**

நிதியமைச்சராக செயல்பட்ட நெக்கரை ஜீலை 11-ம் நாள் பதிவியிலிருந்து நீக்கினார். பிற்போக்குவாதிகள் பதவியில் அமர்த்தப்பட்டனர். முன்னரின் இச்செயலை அறிந்த பிரெஞ்சு மக்கள் மன்னரின் எண்ணங்கள் மீது சந்தேகம் கொண்டனர். நகர் முழுவதும் எதிர்ப்பு புயல் வீசத் தொடங்கியது. பதட்டம் நிலவியது. ஏழை தொழிலாளர்கள், நடுத்தரமக்கள், பட்டினியால் வெறிபிடித்த கும்பல் 1789- ஜீலை 14-ம் நாள் பாஸ்டில் சிறைச்சாலையை தகர்த்தெறிந்தனர். கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். வீழ்நதது பாஸ்டில் சிறைச்சாலை அல்ல போர்பான் சர்வாதிகாரமே என்று மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

100 அடி உயரமும், 30 அடி கனமுடைய சுவர்களையும், எட்டு பெரிய பாதுகாப்பு கோபுரங்களையும், வெளிப்பக்கம் 70 அடி அகலமான அகழியையும் உடைய பாஸ்டில் சிறைச்சாலையின் வீழ்ச்சி அரசியல் ரீதியாக பிரெஞ்சு புரட்சியின் முதல் முக்கிய சம்பவமாக திகழ்கிறது. மக்களின் உரிமைகளின் வெற்றியாக

திமழ்கிறது. கொடுங்கோலாட்சியின் சிகரத்தையே வீழ்த்தியது போன்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியது.

பாஸ்டைல் சிறைச்சாலையின் வீழ்ச்சியைக் கண்டு பயந்து போன 16-ம் லூயி தேசிய சட்டசபையை அங்கீகரித்தார். மக்களின் மதிப்பைப் பெறாத அமைச்சர்கள் விலக்கப்பட்டு, நெக்கர் மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டார். இது முடியாட்சியின் மீது புரட்சி இயக்கம் பெற்ற முதல் வெற்றியாகும். இதைத் தொடர்ந்து பிரெஞ்சு நகரத்திலுள்ள பழைய நிர்வாக அமைப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு கம்யூன் என்ற ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரெஞ்சு நகரம் தேசிய காவல்படையை அமைத்துக் கொண்டது. அதன் தலைவராக **லபாய்ட்** நியமிக்கப்பட்டார். இது போன்ற கம்யூன்களும், தேசிய காவல்படையும் நாட்டின் ஒவ்வொரு நகரிலும் அமைக்கப்பட்டன. போர்பான் மன்னர்களின் கொடி மாற்றப்பட்டு சிவப்பு, வெள்ளை, நீலம் நிறம் கொண்ட புதிய கொடி தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசினுடைய அதிகாரத்தை நாடே ஏற்க மறுத்துவிட்டது என்ற உண்மை இதனால் தெரிய வருகிறது. பிரெஞ்சு புரட்சி இப்போது மக்களின் இயக்கமாக மாறியது. இன்றும் பாஸ்டில், வீழ்ச்சியடைந்த ஜீலை 14-ம் தேதியை **மனித உரிமைகள் நாளாக** பிரெஞ்சு மக்கள் கொண்டாடி வருகிறார்கள்.

### 4. அரசனும், அரசியும் பாரிசு நகருக்கு கொண்டு வரப்படுதல் (அக்டோபர் 6, 1789)

தொடக்கத்திலிருந்தே பாரிசு மக்கள் மன்னர் பாரிசு நகரத்தில் வந்து தங்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் இதுவரை மன்னர் வெர்சேயில்ஸ் அரண்மனையை விட்டு வெளியே வருவதற்கு மறுத்து வந்தார். ஆரசன் புரட்சியைஅடக்க தனியாக பிளமிஷ் என்ற படையை தயார் செய்கிறார் என்ற வதந்தியும் பாரீசில் பரவியது. மேலும் மூவர்ணக் கொடியினை அரசரும், ராணுவ வீரர்களும் அவமதித்ததாகவும் கூறப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பெண்கள் கூட்டம் ஒன்று ஓரளவு ஆயுதம் தாங்கிய தேசியக் காவல்படை சூழ வெர்செயில்ஸ் அரண்மனையை அடைந்தது. முன்னரை பாரிசு வந்து தங்கும்படி கேட்டுக் கொண்டது. மன்னரின் பதில் திருப்தி அளிக்கவில்லை. எனவே அக்டோபர் 6-ம் தேதி அக்கூட்டம் அரசனும் அரசியும் வசிக்கும் அறைக்குள் நுழைந்தது. பின்னர் அரசன், அரசி அவர்களின் மகன் ஆகியோரைக் கட்டாயப்படுத்தி அரண்மனையை விட்டு வெளியேற்றி பாரிசு நகருக்கு அழைத்து வந்தனர். பாரிசு நகரத்தில் ஒரு கைதி போல் அரசன் வாழ வேண்டிய நிலையை ஏற்பட்டுவிட்டது. நாட்டில் வன்முறை

### 5.தேசிய அளவில் நிர்ணய சபை (1789 முதல் 1791 வரை)

தேசிய சட்டசபை இச்சூழ்நிலையில் பிரான்சுக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க முனைந்தது. இதனால் தன்னை அரசியலமைப்பு நிர்ணயசபை என்று அழைத்துக் கொண்டது. பின்னர் இது கீழ்க்கண்ட பல சீர்த்திருத்தங்களைச் செய்தது.

1. பிரபுக்களும், மதகுருமார்களும் அனுபவித்து வந்த விசேஷ உரிமைகள் ஒழிக்கப்பட்டன. அவர்களின் பட்டங்களும், பதவிகளும் பறிக்கப்பட்டன.
2. பிராபோ, லபாயட், கமிலிடிஸ்மோனின்ஷ் ஆகியோரின் தலைமையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்படி **'மக்களின் இறைமை' அதிகார பிரிவினை'**ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வரம்புக்கு உட்பட்ட முடியாட்சி முறையை ஏற்றுக் கொள்ள தீர்மானித்தது.
3. நாட்டின் நிர்வாக அமைப்பு முழுவதும் மாற்றியமைக்கப்பட்டது. நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட நாடு டிப்பார்ட்மென்டுகள், கான்ட்கள், கம்யூன்கள் என்ற பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.நீதிபதிகள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
4. திருச்சபையின் அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும், பறிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக புதிய திருச்சபை சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

இதன்படி திருச்சபை அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது. அதன் நிலங்கள் பிறமுதல் செய்யப்பட்டது.

5. அரசியல் நிர்ணய சபை ஆற்றிய பணிகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அது தயாரித்து வெளியிட்ட **மனித உரிமை அறிக்கையாகும்.** இந்த உரிமைகளின் அறிக்கையில் ரூசோவின்கோட்பாடுகளின் செல்வாக்கை தெளிவாக காணலாம். ஏல்லா மனிதர்களும் பிறப்பில் சுதந்திரத்துடன், உரிமைகளில் ஏற்றதாழ்வு இல்லாமல் சமமானவர்கள். நூட்டில் சட்டங்களை இயற்றுவதில் எல்லா மக்களும் பங்குசு எடுத்துக் கொள்ள உரிமைகள் உண்டு. தனிமனித சுதந்திரம், சொத்துரிமை, பேச்சுரிமை சட்டத்திற்கு புறம்பாக சிறையிட்ப்படா உரிமை ஆகியவை ஒவ்வொரு மனிதருக்கும் உண்டு. இந்த அறிக்கை பிரான்ஸ் நாட்டிற்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயத்தின் நலனிற்காகவே வரையப்பட்ட ஒன்றாகும்.

**அரசனும், அரசியும் தப்பி ஓடுதல் (ஜீன் 20, 1791)**

இந்த புதிய அரசியலமைப்பையும், சீர்திருத்தங்களையும் 16-ம் லூயி வெறுத்தார். பொதுவாக மேடைப் பேச்சாளர்களும், பத்திரிக்கைகளும், மன்னரையும், மன்னரின் உறவினர்கள் செய்த தவறையும் சுட்டிக் காண்பித்துக் கொண்டேயிருந்தது. சொத்துக்களை இழந்த பிரபுக்களும், குருமார்களும் நாட்டை விட்டே ஓடினர். இப்படி ஓடிப்போன பிரபுக்களுக்கு **empire** என்று பெயர். புல பிரபுக்களும் குருமார்களும் கில்லட்டின் தலைவெட்டு பொறியினால் தலைகள் வெட்டப்பட்டது. மன்னரின் நிலைமை பரிதாபமாக இருந்ததால் நாட்டை விட்டே ஓட திட்டம் போட்டார். ஒருநாள் இரவு மன்னனும், தன் மனைவி பிள்ளைகளுடன் வேலைக்காரன் போல மாறுவேடம் போட்டுக் கொண்டு தப்பி ஓடினார்கள். இவர்கள் பிரான்சின் எல்லையைக் கடக்க 21 மைல் இருக்கும் போது வாரன்னீஸ் என்ற இடத்தில் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு மீண்டும் பிரான்சிக்கு கொண்டுவரப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியால் அரசனின் செல்வாக்கு அடியோடு குறைந்தது. அயல்நாட்டுக்கு சென்று அயல்நாட்டின் ஆதரவோடு பிரான்சின் மீது படையெடுக்க திட்டமிட்டார். 16-ம் லூயி என்ற வாந்தி பரவியது. எனவே மக்கள் அரசரை தேசத்துரோகியாகவே கருத ஆரம்பித்தனர். அவருக்கு வழங்கப்பட்டு வந்த அரச மரியாதைகள் நிறுத்தப்பட்டன. 1791-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் புதிய அரசியலமைப்பை மன்னர் ஏற்றுக் கொண்டார்.

**7.சட்டமன்றமும் அதன் உறுப்பினர்களும் (அக்டோபர் 1791 முதல் ஆகஸ்ட் 1792 வரை)**

**அ**ரசியலமைப்பை உருவாக்கும் பணி முடிவடைந்தவுடன் அரசியலமைப்பு நிர்ணய சபை கலைந்தது. புதிய அரசியலமைப்புப் படி சட்டமன்றம் 1791 அக்டோபர் முதல் நாள் கூடியது. ஆதில் 750 உறுப்பினர்கள் இருந்தனர். இதில் கீழ்கண்ட மூன்று பிரிவினர் காணப்பட்டனர்.

**அ) கிராண்டியர்கள்**

இவர்கள் தென்மேற்கு கிராண்டி என்ற மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள். எனவே கிராண்டியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நல்ல வசதி படைத்தவர்கள்ஈ படிப்பாளிகள், பகுத்தறிவாதிகள் அதிக அளவு உறுப்பினர்களை உடையவர்கள்.

**ஆ) ஜேக்கப்பியர்கள்**

இவர்கள் பிரெஞ்சுப் புரட்சியின் தீவிரவாதிகள். பாரிசு நகரிலுள்ள தூய ஜேக்கியுஸ் மடாலயத்தில் தங்கள் அலுவலகத்தை நிறுவி இருந்ததால் ஜேக்கப்பியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இரத்த புரட்சி செய்தாவது முடியாட்சியை ஒழித்துக்கட்ட விரும்பியவர்கள்.

**இ) மாரட்**

மராட் என்பவரின் தலைமையில் பிளெய்ன் என்ற மூன்றாவது பிரிவும் இருந்த

து. இவர்கள் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியவர்கள். புதிய அரசியல் அமைப்புபடி புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் 36 தீர்மானங்கள் கொண்டுவந்து சட்டமாக்கப்பட்டன. 1972 ஜனவரிமுதல் தேதிக்குள் ஓடிப்போன பிரபுக்கள் நாடு திரும்ப வேண்டும். இல்லையேல் அவர்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று ஒரு சட்டம் கூறியது.

**புரட்சிபோர்கள்**

**இ**தற்கிடையே ஓடிப்போன பிரபுக்கள், குருமார்கள் ஆதரவுடன் மேரி அண்டாயினட்டின் சகோதரான ஆஸ்திரியப் பேரரசர் 2-ம் லியோபோல்டும், 16-ம் லூயின் தம்பியுமான 18-ம் லூயியும் புரட்சியை நசுக்கவும், பிரான்சில் மீண்டும் மன்னராட்சியை கொண்டு வரவும் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் ஒன்று திரட்டினர். இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ரஷியா, ஸ்பெயின், ஸ்விடன் ஆகிய நாடுகளுடன் ரஷ்ய ஆஸ்திரிய கூட்டு படையும் பிரான்சுக்குள் நுழைந்தது. எனவே பிரான்ஸ் சட்டமன்றம் 1792 ஏப்ரல் 20-ல் போர் பிரகடனம் செய்தது.

இப்படைகள் புரட்சி படையால் தோற்கடிக்கப்பட்டன. உடனே புரட்சியாளர்கள் அரண்மனையைத் தாக்கினார்கள். அவர்கள் தாக்குதல் நடத்துவதற்கு முன்பே அரசனும், அரசியும் சட்டசபை கூடும் ஒரு பெரிய அறையில் அடைக்கலம் புகுந்தனர். வெற்றி பெற்ற கலக்காரர்கள் சட்டமன்ற கட்டிடத்தை முற்றுகையிட்டு அரசன் பதவி துறக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆதனை மறுக்க முடியாத16-ம் லூயி முடித்துறுத்தலுக்கு சம்மதித்தார். ஜேக்கப்பியர்களும், கிராண்டியர்களும் 1500க்கு மேற்பட்ட பிரபுக்களையும், குருமார்களையும் கில்லட்டின் என்ற தலைவெட்டுப் பொறியில் வைத்து தலையை வெட்டிக் கொலைச் செய்தார்கள். இப்படுகொலை ஐந்து நாட்கள் நீடித்தது. இதற்கு **செப்டம்பர் படுகொலை** என்று பெயர் துரோகிகளை ஒழித்துக்கட்டியபின் புதிய புரட்சிப்படை ஒன்று அன்னியர்களை எதிர்க்க புறப்பட்டது.

**10. வால்மி சண்டை (செப்டம்பர் 19, 1792)**

பிரான்ஸ் எல்லைக்குள் நுழைந்த கூட்டுப்படைகள் பிரான்சின் எல்லை பகுதிகள் பலவற்றை கைப்பற்றியது. பின் இப்படை பிரான்சின் வடகிழக்கில் இருந்த **வால்மி** என்ற இடத்தில் 1792 செப்டம்பர் 19-ல் பிரெஞ்சு படையின் முன்பு சரணடைந்தது. இப்போரில் பிரெஞ்சு படைகள் வெற்றி பெற்றன. கூட்டுப்படை பின்வாங்கியது. அன்னிய தலையீடு ஒடுக்கப்பட்டது. இது புரட்சியாளர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

1792 செப்டம்பர் 21 முதல் பிரான்சில் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. பிரான்ஸ் ஒரு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. 16-ம் லூயி மீது விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது. 16-ம் லூயி 1792 டிசம்பரில் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டார். குற்றவாளி என தீர்ப்பு கூறி மரண தண்டனை வழங்கப்பட்டது. 1793 ஜனவரி 21-ம் தேதி காலை 10.30 மணி அளவில் பாரிசிலுள்ள குடியரசு சதுக்கத்தில் **சேம்சன்** என்ற கொலையாளி மூலம் 16-ம் லூயி மன்னரின் தலை கில்லட்டின் என்ற தலைவெட்டு

பொறியில் வெட்டப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அப்போது கூடியிருந்த மக்கள் குடியரசு வாழ்க என முழக்கமிட்டனர்.

16-ம் லூயி படுகொலை செய்யப்பட்ட செய்திப ல இடங்களுக்கு பரவியது. இதனால் பல இடங்களில் முடியாட்சிக்கு ஆதரவாக கிளர்ச்சி ஏற்பட்டது. கிளர்ச்சி லாயான்ஸ், மார்சையில்ஸ் போன்ற நகரங்களிலும் பரவியது. ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பொதுவாக புரட்சியின் போது நடைப்பெற்ற படுகொலைகள் எல்லாம் டாக்டர். குல்லட்டின் என்பவர் கண்டுபிடித்த தலைவெட்டும் கருவி மூலமாக நிறைவேற்றப்பட்டன. ஆதனால் அந்த இயந்திரத்திற்கு அவருடைய பெயரே சூட்டப்பட்டன.

16-ம் லூயி மரணத்துடன் பிரெஞ்சு புரட்சியின் போக்கு முடிவுற்றது என்று சொல்லலாம். இதற்கு பின் தேசிய கன்வென்ஷன் மேலும் சில நடவடிக்கைகளை மேற்கொண்ட கடன்களும் கட்டணங்களும் ரத்து செய்யப்பட்டன. புதிய சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. புதிய காலண்டர் முறை புகுத்தப்பட்டது. மெட்ரிக் அளவு முறை புகுத்தப்பட்டது. கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக **‘பகுத்தறிவு வழிபாடு’** என்ற புதிய சமயம் புகுத்தப்பட்டது.

**பிரெஞ்சு புரட்சியின் விளைவுகள்**

1.பிரெஞ்சு புரட்சி பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது பிரான்சில் போர்பான் மன்னராட்சி முடிந்து குடியரசு ஆட்சி முறை ஏற்பட்டது.

2. பிரெஞ்சு சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மறைந்தன. நாடு முழுவதும் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே மாதிரியான நிர்வாக முறையும், சட்டத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

3. பிரெஞ்சு புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் ஆகிய கருத்துகளை உலகிற்கு அளித்தது. பிற்காலத்தில் பல உலக நாடுகளில் மக்களாட்சி முறை தோன்றவும், தேசியம் வளரவும், அன்னியர் ஆட்சி ஒழிக்கப்படவும் இக்கோட்பாடுகள் தூண்டுதலாக விளங்கின.

4. தனிமனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட்டது.

5. மதவழிபாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை ஸ்தல ஆட்சி அமைக்கும் உரிமைகள் மக்களுக்கு கிடைத்தது.

6. 16-ம், 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவநிலநநந் மன்னர்களின் தெய்வீக உரிமை கோட்பாட்டின் படி இயங்கி வந்த வல்லாட்சி முறையை அரசாங்கம் ஒழித்தது. மக்களின் செல்வாக்கு உயர்த்தப்பட்டு, அரசியலமைக்கு உட்பட்ட அரசாங்கம் அமைவதற்கு வழிவகுத்தது.

7. ஆட்சி செய்யும் பொறுப்பு மக்களுக்கே உண்டு என்ற உண்மை உணர்த்தப்பட்டது. தேசிய உணர்வு உலக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

8. பிரெஞ்சு புரட்சியால் தேசியம் என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டது. தேசிய உணர்வு ஐரோப்பிய அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

9. மனிதாபிமான கருத்துக்கள் தோன்றுவதற்கு பிரெஞ்சு புரட்சி வழிவகுத்தது. சிறைச்சாலை சீர்திருத்தங்கள், சித்திரவதை ஒழிப்பு, அடிமைமுறை ஒழிப்பு, மதசகிப்புத் தன்மை, மனிதநேயம் ஆகிய கருத்துக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

10. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை இப்புரட்சி வலியுறுத்தியது. நிலஉரிமை, படைமானிய முறை ஆகியவை ஒழிக்கப்பட்டது. ஆண்களும், பெண்களும் சம உரிமை பெற்றனர்.

11. பிரான்ஸ் நாட்டின் இலக்கிய துறையில் மறுமலர்ச்சி ஏற்படவும் இப்புரட்சி வழிவகுத்தது. புரட்சிக் கருத்துக்களால் தூண்டப்பட்டு பல இலக்கியங்கள் உருவாயின.

12. ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வசித்த அரசியல் தத்துவஞானிகளும், கவிஞர்களும் பிரெஞ்சு புரட்சி கருத்துக்களால் செல்வாக்குப் பெற்றனர். ஊதாரணமாக காந்த், கதே, ஹம்போல்ட், ஷில்லர் போன்ற ஜெர்மன் எழுத்தாளர்களும், வோர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ், ஷெல்லி, கீட்ஸ் போன்ற ஆங்கில கவிஞர்களும் தாமஸ்பெயின் என்ற அமெரிக்க அறிஞரும் பிரெஞ்சு புரட்சியால் செல்வாக்குப் பெற்றனர்.

13. பிரெஞ்சு புரட்சியின் தூண்டுதலால் பிறநாடுகளிலும் புரட்சி கருத்துக்கள் பரவி முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. இங்கிலாந்தில் 1832, 1867, 1884, 1918 ஆகிய வருடங்களில் இயற்றப்பட்ட சட்டங்கள் பிரெஞ்சு புரட்சியின் பிரதிபலிப்புகளேயாகும் மேலும் இங்கிலாந்தில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதும், பொதுமக்கள் சபை வலிமையடைந்ததும் பிரெஞ்சு புரட்சியின் கருத்துக்களின் தூண்டுதலேயாகும்.

14. மேலும் இப்புரட்சி லத்தீன் அமரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்கு தூண்டுகோலாக அமைந்தன.

15. ரஷ்யபுரட்சி தோன்றுவதற்கும் இப்புரட்சித்தான் வழிவகுத்தது எனலாம்.

பிரெஞ்சு புரட்சியினை ஒரு சமுதாய புட்சி என்று கூறலாம். ஏனெனில் இப்புரட்சியின் முதன்மையான நோக்கம் சமுதாயத்தை மாற்றியமைப்பதாகும். சமுதாயத்தில் காணப்பட்ட சீர்கேடுகளை ஒழிக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டது தான் பிரெஞ்சு புரட்சி.

## 2. நெப்போலியன் போனாபார்ட்

**'பிரெஞ்சு புரட்சியின் குழந்தை'** என்று அழைக்கப்படும் நெப்பொலியன் போனபார்ட் மத்திய தரைக்கடலிலுள்ள கார்சிகா தீவில் பிறந்தார். இளமையிலேயே பேராற்றல் பெற்று விளங்கினார். துணிவு தன்னம்பிக்கை, கற்பனைதிறன், பரந்த பொது நலன் ஆகியவற்றின் மொத்த உருவமாக விளங்கினார். பிரெஞ்சு புரட்சியின் போது அவருக்கு வயது 20. பிரெஞ்சு புரட்சியின் போது பிரெஞ்சு ராணுவத்தில் சாதரண பீரங்கி படைவீரராக சேர்ந்தார்.

### புரட்சியில் ஆர்வம்

வுால்டோ,ரூசோ, ஆகியோரின் புரட்சிக் கருத்துக்களுக்கு நெப்போலியன் மதிப்பு கொடுத்தார். தனது தாய்நாடு விடுதலை அடையவேண்டும் என்று புரட்சி வாதிகளுடன் சேர்ந்து பேசி வந்தார். இதனால் பல இடர்பாடுகளை அவர் அனுபவித்தார். துன் கைக்கடிகாரத்தைக் கூட அடகு வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**நெப்போலியனும் பிரஞ்சு புரட்சியும்**

புரட்சியின் போது மன்னர் 16-ம் லூயி பதவி நீக்கம் செய்யப்பட்டார். செப்டம்பர் படுகொலைகள் நடந்தன. ஏங்கு பார்த்தாலும் புரட்சிக் கருத்துக்கள் காட்டுத்தீ போல் பரவின். இந்நிலையில் நெப்போலியனுக்கு பதவி மீண்டும் கொடுக்கப்பட்டது. குடியரசை நிலை நிறுத்துவதற்காக நெப்போலியன் 1793-ம் ஆண்டு **தியூல்லரி** அரண்மனையை மன்னன் ஆதரவு புரட்சியாளர்களிடமிருந்து மீட்டார். இதனால் இவருக்கு பதவி உயர்வு கிடைத்தது.மேலும் தன் பீரங்கி படைமூலம் மன்னன் ஆதரவு மக்கள் கூட்டத்தை கலைத்து கன்வென்சன் சபையை காப்பாற்றினார். இதனால் மீண்டும் பதவி உயர்வு கிடைத்து, படைத்தலைவர் ஆனார்.

**திருமணம்**

ஜோசப்பைன் புகார்னே என்ற அழகியின் கணவர் புரட்சியின் போது இறந்து விட்டார். இவளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு நெப்போலிய்ன அங்கே சென்றபோது அவரது அழகில் மயங்கி மனதை பறிகொடுத்தார். இதனால் 1796-ம் ஆண்டு மார்ச் 9-ம் நாள் இவர்களின் திருமணம் எவ்வித சமயசடங்குகளுமின்றி எளிய முறையில் நடைபெற்றது. இவர் நெப்போலியனை விட ஆறு வயது அதிகமானவர். இரண்டு பிள்ளைகளுக்கும் தாயாக இருந்தாள். இவளுடைய ஆலோசனையின் பேரில் நெப்போலியன் இத்தாலியின் மீது படையெடுத்தார்.

**இத்தாலிய படையெடுப்பு**

1796-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இத்தாலியின் மீது படையெடுத்து சுலபமாக வென்றார். ஆல்ப்ஸ் மலையை கடந்து இத்தாலிக்குள் நுழைந்து அங்கிருந்த ஆஸ்திரியப் படைகளையும் தோற்கடித்தார். இப்படையெடுப்பில் இத்தாலியிலிருந்து மிகுந்த செல்வத்தையும், கலைப்பொருட்களையும் நெப்போலியன் கவர்ந்து வந்தார். நேப்போலியன் புகழ் அதிகமானது. பிரான்சின் ஒப்பற்ற வீரராக திகழ்ந்தார்.

**இயக்குநர் ஆட்சியை தன்வசம் பெறுதல்**

நெப்போலியன் பிரான்சுக்கு திரும்பியவுடன் அங்கு இயக்குநர் ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருந்தது. இவ்வாட்சி செம்மையாக நடைபெறவில்லை. இந்த நிலையை பயன்படுத்தி **கியஸ்** என்பவரின் துணையுடன் இயக்குநர் ஆட்சியை தூக்கி எறிந்தார் நெப்பொலியன். இதுதான் **எட்டாவது புரூமேரீன் திடீர் அரசு மாற்றமாகும்.**

அதன்பின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்படி மூன்று கான்சல்கள் பொறுப்பினை ஏற்றனர். நெப்போலியன் முதல் கான்சலானார். நெப்பொலியனுக்கு உதவிக்காக **ராஜ்யசபை டிரிபியூனேட், சட்டமன்றம், செனட்** போன்ற நான்கு அமைப்புகள் இருந்தன.

நேப்போலியன் 1804-ல் பேரரசர் ஆனார். **“பிரான்சின் மணிமுடி தரையில் கிடந்தது அதை என் வாளால் எடுத்து வைத்துக் கொண்டேன்.”** ஏன்று நெப்பொலியன் கூறினார். மேலும் போப் மணிமுடியை நெப்போலியன் தலையில் வைப்பதற்கு முன்பு நெப்பொலியன் அதை பறித்து தன் தலையில் வைத்துக் கொண்டார்.

**நெப்போலியனின் போர்கள்**

**எகிப்தியப் படையெடுப்பு (1799)**

இங்கிலாந்தின் அரசியல் ஆதிக்கத்தை ஒடுக்கவும், இங்கிலாந்து இந்தியாவுடன் கொண்டிருந்த வியாபார தொடர்பை துண்டிக்கவும் அதற்காக எகிப்தின் மீது படையெடுக்கவும் நெப்போலியன் திட்டம் ஒன்று தீட்டினார். அதற்கு **'பெருங்கீழ் திசைத் திட்டம்'** பெயர். இத்திட்டத்தை பிரான்சின் இயக்குநர்கள் உடனடி ஏற்றுக் கொண்டார்கள். குாரணம் மக்களிடம் புகழ்பெற்றுக் கொண்டிருக்கும் நெப்போலியன் பாரிசை விட்டு எங்காவது போனால் சரி என நினைத்தார்கள். மேலும் அதிக தூரம் உள்ள எகிப்துக்கு சென்றால் நெப்பொலியன் திரும்பி வர இயலாது என்பதும் அவர்களின் எண்ணம்.

டைரக்டரி அரசாங்கத்தின் ஒப்புதலுடன் வலிமைமிக்க ஒரு கப்பல்படையுடனும், காலாட்படையுடனும் பிரான்சிலிருந்து எகிப்து நோக்கி புறப்பட்டார். நெப்பொலியன் எகிப்துக்கு போகும் வழியில் மால்ட்டா தீவைப் பிடித்துக் கொண்டார். பின்னர் எகிப்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த **மம்லூாக்குகளை** 1798-ல் நடந்த **பிரமிடுகளின் போரில்** வென்று எகிப்து முழுவதும் தன் வசப்படுத்தினார். ஆனால் ஆங்கில கப்பல்படை ஒன்று நெல்சன் தலைமையில் பின் தொடர்ந்து வந்தது. நெல்சன் 1799 ஆகஸ்ட்1-ல் நடைப்பெற்ற **'அபுகார்பே'** அல்லது **நைல்நதி போரில்** பிரெஞ்சு கப்பற்படையை தோற்கடித்தார். எகிப்தில் மேலும் வெற்றி வாய்ப்பு இல்லாததாலும், தாய்நாட்டுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும், பிரான்சுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள இரண்டாவது கூட்டணியை அமைத்த செய்தியை கேள்விப்பட்டதாலும், நெப்போலியன் ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார்.

## 2. புருமையர் புரட்சி – 1799 நவம்பர் 18)

எகிப்து நாட்டு படையெடுப்புக்கு பிறகு பிரான்ஸ் திரும்பிய நெப்போலியனின் புகழ் மங்கவில்லை. அப்போது இருந்த டைரக்டரி அரசாங்கம் மக்களின் ஆதரவை இழந்திருந்தது. காரணம் பிரான்சுக்கு எதிராக இரண்டாவது கூட்டணி அமைத்துக் கொண்ட இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் இத்தாலியிலிருந்த பிரெஞ்சு படைகளை விரட்டியடித்தன. எனவே இதற்கு எதிராக பல இடங்களில் கிளர்ச்சி ஏற்பட்டது. மக்களும் பிரான்சில் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த நெப்போலியனால் தான் முடியும் என்று நம்பினார்கள்.

இச்சூழ்நிலையில் **பாராஸ், சீயஸ்** என்ற இரண்டு டைரக்டர்களின் உதவியுடன் 1799 நவம்பர் 18-ம் தேதி டைரக்டரி அரசாங்கத்தை கவிழ்த்தார் நெப்போலியன். பிரான்சுக்கு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த புரட்சி காலண்டரின் படி **புருமைர் மாதத்தில்** நடைப்பெற்றதால் **'புருமைர் புரட்சி'** என்று அழைக்கப்படுகிறது. புதிதாக அமைக்கப்பட்ட அரசுக்கு கான்சுல்லேட்களின் ஆட்சி என்று பெயர். மூன்று கான்சுல்லேட்களில் முதல் கான்சுலேட்டாக நெப்போலியன் பதவி ஏற்றார். அதிகாரங்கள் அனைத்தும் தன்வசம் குவித்துக் கொண்டார். கான்சுலேட் என்பது மூன்று போர் அடங்கிய அரசியல அமைப்பாகும். துலைமை கான்சுலேட்டான ளெநப்போலியன் ஏனைய இரண்டு பேருக்கும் தலைமை அதிகாரியாக விளங்கினார்.

## 3. இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பு (1800)

நெப்போலியனின் வளர்ச்சிக்கு அவரது வெற்றிகளே எப்போதும் காரணமாக இருந்தது. அவர் தலைமை கான்சுலேட்டாக பதவி ஏற்றபின் இத்தாலிய படையெடுப்பை மேற்கொண்டார். இந்நேரத்தில் நெப்போலியனின் படைத்தலைவரான **மோரே** இத்தாலிய டான்யூப் பகுதியில் இருந்த ஆஸ்திரிய படைகளை தாக்க ஆயத்தமானார். நேப்போலியனும் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து கி.பி.1800 ஜீன் மாதத்தில் **மாரங்கோ** என்ற இடத்தில் நடந்த சண்டையில் ஆஸ்திரிய படைகள் படுதோல்வியடையச் செய்தார். இவ்வெற்றியை தொடர்ந்து கி.பி.1800 டிசம்பரில் **பவேரியா** மற்றும்

**ஹோகன்லிண்டன்** என்னும் இடங்களில் நடந்த போரில் ஆஸ்திரியர்களை தோற்கடித்தார்.

இந்த இரண்டு தோல்விகளாலும் துவண்டுபோன ஆஸ்திரியா நெப்போலியனுடன் சமாதானம் செய்துகொள்ள முடிவு செய்தது. அதன் பயனாக கி.பி.1801 பிப்ரவரியில் லூனாவில் என்ற இடத்தில் உடன்படிக்கை கையெழுத்தானது. ஆதன்படி இத்தாலியில் அடிகே ஆற்றின் அப்பால் இருந்த பகுதிகள் எல்லாம் ஆஸ்திரியா கைவிட நேர்ந்தது. ரைன் நதிக்கு மேற்கில் இருந்த எல்லா ஜெர்மன் பகுதிகளையும் பிரான்சிடம் நிபந்தனையின்றி ஒப்படைத்தது.

### 4. நெப்போலியன் பேரரசர் ஆகுதல் 1804)

**நெ**ப்போலியனின் உள்நாட்டு சீர்திருத்தத்தினால் நெப்போலியனின் புகழ் மேலும் உயர்ந்தன. 1799-ல் நெப்போலியன் முதல் கான்சுலேட்டாக நியமிக்கப்பட்ட போது பதவிக்காலம் பத்தாண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1802-ல் நடந்த வாக்களிப்பின் படி நெப்போலியன் வாழ்நாள் முழுவதும் கான்சுலேட்டாக இருக்க வேண்டும் என்று பிரெஞ்சு மக்கள் வாக்களித்தனர். 25 லட்சம் பேர் சாதகமாகவும் 8 ஆயிரம் பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

ஆனாலும் பிரெஞ்சு மக்களின் மனதில் ‘‘நெப்போலியன் பிரான்சின் மன்னராக வேண்டும்’’ என்ற எண்ணம் மக்களின் மனதில் குடிகொண்டது. எனவே பிரெஞ்சு செனட் இதுபற்றி விவாதித்து இறுதியில் ‘‘நெப்போலியன் போனபார்ட் அரசர் என்று அழைக்கப்படவேண்டும் பிரெஞ்சு குடியரசு அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது.’’ என்ற தீர்மானத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றியது. அவரது முடிசூட்டு விழாவில் மக்கள் ‘‘மாமன்னன் நெப்போலியன் வாழ்க’’ என முழங்கினார். பிரெஞ்சு குடியரசு மீண்டும் முடியரசானது. நெப்பொலியனின் வாரிசே அவருக்கு பின் பேரரசாக வேண்டும் என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்கு ஆதரவாக 30, 50,000 ஆயிரம் வாக்குகளும், எதிராக 2000 வாக்குகளும் கிடைத்தது. நெப்போலியன் போனபார்ட்டின் பரம்பரையின் பிரான்சை ஆள்வதற்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது.

### 5.டிரபால்கர் (அக்டோபர் 21, 1805)

இத்தாலியில் நெப்போலியனின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். மேலும் 1803-ல் இங்கிலாந்து மன்னருக்கு சொந்தமான **ஹனோவர் அரசை** பிரான்ஸ் பிடித்துக் கொண்டது. மேலும் குடியேற்ற ஆதிக்கத் துறையிலும் இவ்விரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி பகைமை உணர்ச்சியை வளர்த்தது. எனவே மீண்டும் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் இடையே 1804-ல் போர் மூண்டது.

ஸ்பெயின் நாட்டு கடற்படை உதவியைப் பெற்று ஆங்கில கால்வாயைக் கடந்து இங்கிலாந்தை தாக்க திட்டம் தீட்டினார் நெப்போலியன். இதற்காக ஆங்கில கால்வாயில் பௌலாங் என்ற இடத்தில் நிலையான படை ஒன்றை திரட்டி வைத்தார். இங்கிலாந்தின் கப்பற்படைத் தளபதி நெல்சனின் தலைமையில் ஒரு படை ஆங்கில கால்வாயைக் கண்காணித்து வந்தது. எனவே திட்டமிட்டபடி நெப்போலியன் படையெடுப்பு நடைபெறவில்லை. எனினும் ஸ்பானிய பிரெஞ்சு கூட்டுப் படையை ஆங்கில கடற்படை தளபதி அட்மிரல் நெல்சன் டிரபால்கர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்து அழித்தார். ஆனால் அட்மிரல் நெல்சன் இப்போரில் உயிரிழந்தார். அவரது சிறந்த வெற்றியினால் இங்கிலாந்தின் கடலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது.

அத்துடன் இங்கிலாந்தின் மீது படையெடுக்கும் திட்டத்தையும் நெப்பொலியன் கைவிட்டார்.

### 6.ஆஸ்திரியாவுடன் போர் (1805)

இங்கிலாந்து பிரதமர் ‘இளையபிட்’ ரஷ்யா, ஆஸ்திரியா, ஸ்வீடன் ஆகிய நாடுகளுடன் 1805-ல் கூட்டணி ஒன்றை ஏற்படுத்தினார். இது பிரான்சுக்கு எதிராக அமைக்கப்பட்ட மூன்றாவது கூட்டணியாகும். டிரபால்கர் போரில் நெப்பொலியன் அடைந்த தோல்வி ஜெர்மனியில் அவர் பெற்ற வியக்கதக்க வெற்றியால் மறைந்து போனது. 1805-ல் ஆஸ்திரியப் படைத்தளபதி மாக் என்பவரின் தலைமையில் போரிட்ட படைகளை உல்ம் என்ற இடத்தில் நெப்போலியன் தோற்கடித்தார். 33,000 ஆஸ்திரிய வீரர்கள் சரணடைந்தனர். மறுபடியும் **ஆஸ்டர்லிட்ஸ்** என்ற இடத்தில் நடந்த பெரிய போரில் ஆஸ்திரியா படு தோல்வியடைந்தது. நெப்போலியன் புகழ்பெற்ற வெற்றியைப் பெற்றார். ஆஸ்திரியா பிரான்சுடன் 1805-ல் டிசம்பரில் பிரஸ்பர்க் என்ற உடன்படிக்கையை செய்தது. இதன் மூலம் வட இத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கம் மறைந்தது.

### 7.பிரஷ்யாவுடன் போர் (1806)

ஆஸ்திரியாவின் வீழ்ச்சிக்குப்பின் பிரஷ்யாவிற்கும், நெப்பொலியனுக்கும் இடையே போர் ஏற்பட்டது. இதற்கு காரணம் ஜெர்மனியில் பிரான்சின் ஆதிக்கம் முழுமையாக ஏற்படுத்தப்பட்டதை பிரஷ்யா ஏற்கவில்ழல. மேலும் மேற்கு ஜெர்மனியில் பதினாறு அரசுகளை இணைத்து ரைன் கூட்டரசு என்ற புதிய அமைப்பை உருவாக்கி பிரஷ்யாவுக்கு நெப்போலியன் போட்டியை உண்டு பண்ணினான். எனவே **சாக்சினி** மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன் பிரான்சுக்கு எதிராக பிரஷ்யா போர் அறிவிப்பு செய்தது. 1806-ல் அக்டோபரில் நடைபெற்ற **ஜீனா** சண்டையில் பிரஷ்ய படைகளை நெப்போலியன் அழித்தார். பேர்லின் நகரம் கைப்பற்றப்பட்டது. இத்தோல்வி பிரஷ்யா பெற்றிருந்த புகழுக்கு இழுக்காக அமைந்தது.

### 8.தீபகற்ப போர் (1808-1814)

போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகள் அமைந்த **பகுதிக்**கு **‘ஐபிரியத் தீபகற்பம்’** என்ற பெயர். நேப்போலியன் இந்த இரு நாடுகளுடன் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் இதற்கு தீபகற்ப போர் என்று பெயர் ஏற்பட்டது.

**காரணங்கள்**

(a) இங்கிலாந்தின் நட்பு நாடான போர்ச்சுக்கல் தனது வாணிகம் பாதிக்கப்பட்டதால் இங்கிலாந்துடன் உறவை வளர்த்துக் கொண்டு, நெப்போலியனால் கொண்டு வரப்பட்ட கண்டத்திட்டத்தை ஏற்க மறுத்தது. எனவே நெப்போலியன் போர்ச்சுக்கல் மீது படையெடுத்தார். **லிஸ்பன்** பிடிபட்டது. அங்கிருந்த போர்ச்சுக்கல் அரசக்குடும்பம் **பிரேசிலுக்கு** தப்பி ஓடியது.

(b) போர்ச்சுக்கல்லை நிரந்தரமாக தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டுமானால் வழியில் அமைந்திருக்கும் ஸ்பெயினை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று நெப்போலியன் நினைத்தார்.

(c) ஸ்பானிய நாட்டை மிக இழிந்த நாடாகக் கருதினார் நெப்போலியன். அது மிகவும் நலிந்ததாகவும், ஒற்றுமையின்றி காணப்பட்டதாகவும் அவர் கண்களுக்கு தெரிந்தது.

(d) ஆப்போது ஸ்பெயினை ஆட்சி புரிந்த நான்காம் சார்லசுக்கும் அவரது மகன் பெர்டினண்டுக்கும் இடையே பல காரியங்களில் சச்சரவு ஏற்பட்டது. அதனை தீர்த்து வைப்பது போல் பாசாங்கு செய்து ஸ்பானிய உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டார் நெப்பொலியன். இறுதியில் தகப்பனையும், மகனையும் ஏமாற்றி உதறி தள்ளி ஸ்பரினய அரியணையில் தனது சகோதரன் **ஜோசப்பை** அமர்த்தினார். இதனால்

ஸ்பானிய மக்களிடம் தேசிய உணர்வு ஏற்பட்டு நாட்டின் பல்வேறு நகரங்களிலும், கிராமங்களிலும் எதிர்ப்புகள் அதிகரித்தன. பிரெஞ்சு படைகள் தாக்கப்பட்டன. ஆவற்றின் பாதுகாப்பு நிலையங்களும் தாக்கப்பட்டன.

**போரின் ஆரம்பம்**

ஸ்பெயினில் மக்களிடையே ஏற்பட்ட தேசிய உணர்வு, நெப்போலியனுக்கு எதிராக பெரும் கிளர்ச்சியாக வெடித்தது. 1808-ல் ஜீலை மாதம் ஜ்பெயினில் தென்பாகத்தில் ஏற்பட்ட ஒரு கலகத்தை அடக்குவதற்காக **தளபதி டூபான்ட்** என்பவர் தலைமையில் நெப்போலியன் ஒரு படையை அனுப்பினார். இப்படை பைலன் என்ற இடத்தில் தோல்வியடைந்தது. நெப்போலியனின் எழுச்சிசக்கு பிறகு மிகப் பெரிய அளவில் பிரெஞ்சுபடைகளுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி இதுவேயாகும். இதன் விளைவாக பிரான்ஸ் நாடெங்கும் பெரும் கலகங்கள் தோன்றின.

இச்சூழ்நிலையில் ஸ்பானிய மக்களுக்கு உதவி செய்யத் தயாரக இருப்பதாக இங்கிலாந்து அறிவித்ததோடு மட்டுமில்லாமல் வெலிங்டன் பிரபு தலைமையில் ஒரு ஆங்கில படை 1808 ஆகஸ்ட் மாதம் ஸ்பெயின் வந்தடைந்தது. எனவே படைக்கு நெப்போலியனே தலைமை தாங்கி ஸ்பெயினில் நுழைந்தார். இதில் பிரெஞ்சு படைகள் விரட்டியடிக்கப்பட்டன. இதுவே தீபகற்ப போர் என்றழைக்கப்படுகிறது.

**போரின் விளைவுகள்**

1) இந்த தீபகற்ப போரில் தான் முதன் முதலாக பிரெஞ்சு படைகள் தோல்வியடைந்தன. நேப்போலியனுக்கு அவமானம் ஏற்பட்டது. தோற்கடிக்க முடியாத வீரர் என்ற பெருமை மறைந்தது. நெப்போலியன் மீது பிரெஞ்சு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை மிகவும் குறைந்தது.
2) தீபகற்ப போரின் விளைவாக பிரான்ஸ் தலைசிறந்த போர் தலைவர்களையும், போர் வீரர்களையும் இழக்க நேரிட்டது.
3) நெப்போலியனின் தோல்வி, எதிரி நாடுகளுக்கு மீண்டும் நம்பிக்கையை கொடுத்தது. பல நாடுகள் நெப்போலியனுக்கு எதிராக மீண்டும் போர் கோலம் பூண்டன.
4) இப்போரின் விளைவாக பிரான்ஸ் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நாட்டின் செல்வம் கரைந்தது.

ஸ்பானியர்களின் வெற்றிக்கு ஸ்பானியர்களின் தேசிய உயர்வும், அவர்களின் கொரிலா போர் முறையும் தான் காரணம் ஆகும்.

## நெப்போலியினின் ரஷ்ய படையெடுப்பு (1812)

**காரணங்கள்**

1) நேப்போலியனின் கண்ட திட்டத்தினால் ரஷ்யாவில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டபோது அதனை கவிடுவதாக 1811ல் ரஷ்யா அறிவித்தது. இதனால் ரஷ்யா மீது நெப்போலியன் ஆத்திரம் அடைந்தார்.
2) நெப்போலியன் **ஒல்டன்பர்க்** என்ற ஜெர்மனியின் பரந்த நிலப்பகுதியை வெற்றியின் மூலம் இணைத்துக் கொண்டதால், அவரது ஆதிக்க வெறியை ரஷ்ய மன்னர் சார் அலெக்ஸ்சாண்டர் வெறுத்தார்.
3) நெப்போலியன் தனது முதல் மனைவிக்கு குழந்தை இல்லாததால் விவகாரத்து செய்துவிட்டு, ஆஸ்திரிய இளவரசி மரியலூயிசாவை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு ஆஸ்திரிய உறவை ஏற்படுத்தி கொண்டது ரஷ்ய மன்னருக்கு பிடிக்கவில்லை.
4) நெப்போலியன் ரஷ்ய படையெடுப்பிற்காக ஐந்து லட்சம் பேர் கொண்ட மாபெரும் படை ஒன்றை திரட்டினார். இதைப்போன்று ஒரு பெரும் படையை ஐரோப்பாவிலேயே யாரும் கண்டதில்லை என்ற ஏற்பட்டது.

1812 ஜீன் மாதம் தனது பெரும்படையுடன் ரஷ்யாவைச நோக்கி புறப்பட்டார் நெப்போலியன். இப்படையை கண்ட ரஷ்யசச போர் தலைவர்கள் பின்வாங்கினார்கள். ஆனால் பிரெஞ்சு படைகள் அவர்கள் விட்டு செல்லும் பகுதியை எரித்தல் என்ற

கொள்கையை பின்பற்றி ரஷ்ய படைகள் உணவுக் கிடங்குகள், பாலங்கள், பயிர்கள்ஆகியவற்றை அழித்து சென்றனர். **பொரேடினா** என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் பிரெஞ்சுபடை வெற்றி பெற்றாலும் இப்பொரில் 40000 பிரெஞ்சு போர்வீரர்கள் மரணம் அடைந்தார்கள். ஆதன்பின் நெப்பொலியன் மாஸ்கோவை அடைந்தார். மாஸ்கோவில் ரஷியர்கள் சரணடைவர் என்று நினைத்த நெப்போலியன் ஏமாற்றம் அடைந்தார். ஏனெனில் அங்கு யாருமே இல்லை. உணவு கிடங்குகள் காலியாகவும் தீப்பற்றி எரிந்துக் கொண்டும் காணப்பட்டன. எனவே 1812 அக்டோபரில் நெப்போலியன் மாஸ்கோவிலிருந்து பின் வாங்கினார். நெப்போலியன் மாஸ்கோவிலிருந்து பின்வாங்கிய நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் நெப்போலியனின் இருப்பிடத்தை சற்று பின்னுக்குத் தள்ளியது.

அச்சமயம் ரஷியாவில் குளிர்காலம் ஆரம்பித்ததால் எங்கும் பனிமூட்டம். ஆறுகள் உறைந்து பனிக்கட்டிகளாயின. உணவு இன்றி பிரெஞ்சு படைவீரர்கள் பெரும் துன்பப்பட்டனர். ஆச்சமயம் ரஷிய வீரர்கள் கொரிலா தாக்குதல் நடத்தினர். இதனால் பிரெஞ்சு வீரர்கள் 1,70,000 பேர் மடிந்தனர். 170,000 பேர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்த பேரழிவுக்கு இணையாக வரலாற்றில் எதையும் கூற முடியாது. எஞ்சிய தனது படையின் ஒரு சிறிய பகுதியுடன் ஜெர்மானிய எல்லைக்குள் நுழைந்தார்.

நெப்போலியனின் ரஷ்ய படையெடுப்பு, அவர் செய்த மாபெரும் தவறாகும். நாட்டின் செல்வத்தையும், மக்களின் ஆற்றலையும், வலைமதிக்க முடியாத வீரர்களின் உயிரையும், நெப்போலியன் வீணாக்கினார். ரஷ்ய படையெடுப்பு தான் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது.

### 10. நாடுகளின் போர் (1813)

#### லீப்சிக் போர்

ரஷ்ய படையெடுப்பில் நெப்போலியன் தோற்றுப்போன செய்தியால் ஐரோப்பிய நாடுகள் விழிப்புற்றன. நேப்போலியனின் தோல்வி அந்நாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகள் 1813-ல் நெப்போலியனுக்கு எதிராக நான்காவது கூட்டணியை அமைத்தன. மிகப்பெரிய மூன்று லட்சம் வீரர்கள் கொண்ட படை திரட்டப்பட்டது. நெப்போலியனும் நம்பிக்கை இழக்காமல் 185000 வீரர்கள் கொண்ட ஒரு படையை திரட்டினார். 1813-ல் அக்டோபர் 19-ம் நாள் **லீப்சிக்** என்ற இடத்தில் ஒரு போர் நடந்தது. இப்போர் தான் நாடுகளின் போர் அல்லது மக்களின் போர் என்று அழைக்கப்படுகிறது. மூன்று நாட்கள் நடந்த இப்போரில் நெப்போலியன் முழுமையான தோல்வியை தழுவினார். மோத்தம் 1,30,000 வீரர்கள் மடிந்தனர். இதில் 50,000 பேர் பிரெஞ்சு வீரர்கள், பிரெஞ்சு படையின் ஒரு பகுதியுடன் நெப்போலியன் தப்பி பாரிசுக்கு ஓடினார். மீதி இருந்த வீரர்கள் சரணடைந்தனர். கூட்டு படையின் தளபதியான வெலிங்டன் பிரான்சின் தென்பகுதி வழியாக பிரான்சினுள் நுழைந்தார். கூட்டுப் படைகளின் தாக்குதலை எதிர்பார்த்த நெப்போலியன் தலைநகரை பாரிசிலிருந்து **லாயிர்** என்ற இடத்திற்கு மாற்ற உத்தரவிட்டார். ஆனால் இந்த ஆணையை யாரும் ஏற்றுக் கொள்ளவோ செயல்படுத்தவோ தயாராக இல்லை. சூழ்நிலையை புரிந்துக் கொண்ட நெப்போலியன் ‘‘ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்ட நான் தடையாக இருப்பதாக எல்லோரும் நினைப்பதால் பதவி விலகுகிறேன்’’ என்று கூறி 1814 ஏப்ரல் 6-ல் முடிதுறப்பு பத்திரத்தில் கையெழுத்திட்டார். இதன்படி நெப்போலியனுக்கு வருடத்திற்கு இரண்டு மில்லியன் பிராங்குகள் ஓய்வூதியமாகவும், அவர் மனைவி மரியலூாயிஸாவிற்கு இத்தாலிய பகுதியான பார்மாவும், நெப்போலியன் குடும்பத்திற்கு வருடத்திற்கு 2.5 மில்லியன் பிராங்குகள் ஓய்வூதியமாகவும் கொடுக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அடுத்த இரண்டு வாரத்திற்குள்ளாக இத்தாலிக்கு அப்பாலிலுள்ள சிறிய எல்பா தீவில் ஓய்வெடுக்க செல்ல அனுமதிக்கப்பட்டார்.

**அந்த நூறு நாட்கள் (1815 மார்ச் 20 முதல் 1815 ஜீன் 29 வரை)**

நெப்போலியன் எல்பா தீவிற்கு அனுப்பட்ட பிறகு ஐரோப்பா நாடுகள் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா மாநாடு (1815) ஒன்றை கூட்டின. பிரான்சஜல் 16-ம் லூயின் தம்பி 18-ம் லூயி மன்னராக்கப்பட்டார். இதற்கிடையில் எல்பா தீவில் எந்தவித பாதுகாப்பிலும் வைக்கப்படாத நெப்போலியனுக்கு தீவிலிருந்து தப்பி செல்லும் எண்ணம் ஏற்பட்டது. மீண்டும் பிரான்ஸ் செல்ல முடிவு செய்தார்.

தீவில் தனது செலவுகளுக்கு கொடுக்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டிருந்த பணம் கொடுக்கப்படாததால் அதனையே காரணமாக வைத்து 1815 பெப்ரவரி 26-ல் எல்பா தீவிலிருந்து ‘in constant’ என்ற கப்பல் மூலம் புறப்பட்டு பிரான்சின் தெற்று கடற்கரையிலுள்ள **கேன்ஸ்** என்ற இடத்திற்கு மார்ச் 1 முதல் 20-ம் தேதி வரை சுமார் 720 மைல்கள் பயணம் மேற்கொண்டு மார்ச் 20 9 மணிக்கு பாரிசு வந்தார். 18-ம் லூயின் ஆட்சியில் வெறுப்படைந்த மக்களும் நெப்போலியனை வரவேற்றனர். இராணுவமும் 18-ம் லூயியை கைவிட்டது. அவர் நாட்டை விட்டு ஓடினார்.

1815 மார்ச் 20-ம் நாள் முதல் 1815 ஜீன் 29-ம் தேதி வரை நெப்போலியன் தனது ஆற்றலையும் வலிமையையும் பெருக்கி பிரான்ஸில் மீண்டும் வந்து தங்கிய அந்த நூறு நாட்கள் பிரெஞ்சு வரலாற்றில் சிறப்பு மிக்க நாட்களாக கருதப்படுகின்றது.

நெப்போலியன் எல்பா தீவிலிருந்து பிரான்சிற்கு வந்து விட்டார் என்ற செய்தியை கேட்ட வியன்னா மாநாட்டில் கூடியிருந்த ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சியடைந்தன. தங்களது நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு நெப்போலியனை தோற்கடிக்க பெரும் படை ஒன்றை திரட்டினர். கூட்டணி படைகள் ஒன்று சேர்ந்து **வாட்டர்லூ** என்னும் இடத்தில் 1815 ஜீன் 18 ஞாயிற்றுக் கிழமை நெப்போலியனை தோற்கடித்தது. பிரெஞ்சு படைகள் நிலைகுலைந்தன. நெப்போலியன் பாரிசை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

**11. நெப்போலியனின் சோகமுடிவு**

**நெ**ப்போலியன் பிரான்ஸ் வந்ததும் தனது பதவியை துறந்தார். நெப்போலியன் அமைச்சரவையில் இருந்த காவல்துறை மந்திரியின் தலைமையில் தற்காலிக அரசாங்கம் ஒன்று பிரான்சில் அமைக்கப்பட்டது. ‘‘நெப்போலியன் உடனடியாக பிரான்சை விட்டு வெளியேற வேண்டும்’’ என்று சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. உடனே நெப்போலியன் அமெரிக்கா செல்ல தனது நண்பர்களுடன் இரண்டு கப்பலில் புறப்பட்டார்.

பிரான்சை விட்டு வெளியேறிய நெப்போலியனை எத்திசையிலும் போகவிடாது ஆங்கில கப்பல்கள் தடுப்பு சுவர்போல் நின்றன. இதனால் ஆங்கில கப்பல்படை தளபதியுடன் இங்கிலாந்து செல்ல முடிவு எடுத்தார். இதனால் 1815 ஜீன் 15-ல் நெப்போலியன் ஆங்கில கப்பலில் ஏறினார்.

நெப்போலியன் ஏறிய கப்பல் ஜீலை 26-ல் இங்கிலாந்திலுள்ள பிளைமவுத் துறைமுகம் வந்து சேர்ந்தது. உடனே துறைமுக காவலன் விஸ்கவுண்ட் கீத் என்பவர் ‘‘நெப்போலியன் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்’’ என்று கூறினார். இது நெப்போலியனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ‘‘அடைக்கலம் வந்த என்னை ஆங்கில அரசு வஞ்சித்து விட்டது’’ என்று கூறி பொறுமினார். இங்கிலாந்தின் இந்த மனித நாகரீகமற்ற செயலை கண்டித்தார்.

**12.நெப்போலியனின் இறுதி நாட்கள்**

நேப்போலியன் கைது செய்யப்பட்ட பின் அவரை சுட்டு கொல்வதா அல்லது செயின்ட் ஹெலினா தீவிற்கு அனுப்புவதா என்று ஆங்கில பாராளுமன்றத்தில் விவாதம்

நடைப்பெற்றது. இறுதியில் செயிண்ட் ஹெலினா தீவிற்கு அனுப்பிவிட முடிவு செய்யப்பட்ட்து.

1815, அக்டோபர் 15-ல் நெப்போலியன் செயின்ட் ஹெலினா தீவில் இறங்கினார். அங்கு ஜேம்ஸ்டவுண் என்ற சிற்றுாரில் வசதி குறைவான ஒரு சிறிய வீட்டில் சிறை வைக்கப்பட்டார். அங்கே நோய்வாய்ப்பட்டு ஆறு ஆண்டுகள் கழித்து 1821 மே 5-ம் தேதி நெப்போலியன் உயிர் நீத்தார். அவரது உடல் ஹெலினா தீவிலே அடக்கம் செய்யப்பட்டது.

**நெப்போலியனின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

நெப்போலியனின் புகழ் 1867-ம் ஆண்டு வரை உச்சத்தில் இருந்தது. எல்லாப் போர்களிலும் வெற்றி பெற்றார். சிறந்த தளபதியாகவும், ஆட்சியாளராகவும் விளங்கினார். இவரை எதிர்க்கும் ஆற்றல் கொண்ட இராணுவ வீரர்கள் எவரும் ஐரோப்பாவில் இல்லை என்றே கூறலாம். 1808-ம் ஆண்டுக்கு பிறகு நெப்போலியனுடைய புகழ் மங்க தொடங்கியது. போரில் தோல்வியை தழுவினார். அத்தகைய தோல்வியை தழுவுவதற்கான காரணங்கள் பின்வருமாறு,

1. **இராணுவ கொள்கை**
நெப்போலியன் ஏராளமான வீரர்களுக்கு போர் பயிற்சி கொடத்து போர்க்களம் நடத்தி சென்றார். அடிக்கடி போர் செய்ததால் பலவீரர்கள் மரணம் அடைந்தனர். இதனால் புதிய வீரர்களை சேர்த்து அடிக்கடி பயிற்சி கொடுக்கும் நிலை சிரமமான ஒன்றாக இருந்தது. மேலும் இவரது இராணுவத்தில் இத்தாலியர்கள், டச்சுக்காரர்கள், ஸ்பெயின் நாட்டவர்கள், டென்மார்க்கை சேர்ந்தவர்கள் இருந்ததால் நாட்டுப்பற்று இவர்களிடம் இல்லை. ஒருமித்த கருத்தும் இல்லாமல் போரிட்டனர். மோத்தத்தில் இராணுவ வீரர்கள் டீம் ஸ்பிரிட் இல்லாமல் போர் செய்தது தோல்வியில் முடிந்தது.
2. **கண்டத்திட்டம் (கண்ட பொருளாதார திட்டம்)**
இங்கிலாந்தின் வாணிபத்தையும், பொருளாதாரத்தையு நசுக்கி தனது காலடியில் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்துடன் கண்டத்திட்டத்தை நெப்போலியன் கொண்டு வந்தார். இங்கிலாந்து செல்லும் கப்பல்கள் சோதனையிடப்பட்டது. பிரான்சும்நட்பு நாடுகளும் இங்கிலாந்துடன் வாணிகம் செய்ய தடைவிதிக்கப்பட்டது. இத்திட்டத்தை இங்கிலாந்தும், அதனுடைய காலனி நாடுகளும், ஸ்பெயின், போர்ச்சுக்கல், ரஷியா பிரஷ்யா போன்ற நாடுகள் ஏற்க மறுத்தன. பொதுவாக இத்திட்டம் ஒரு தோல்வி திட்டமாகும். சுரியான கப்பற்படை இல்லாமல் இத்திட்டத்தை செயல்படுத்தமுடியாது. மேலும் நெப்போலியனிடம் சிறந்த கப்பல் படைத்தளம் கிடையாது. எனவே இத்திட்டம் தோல்வியடைந்தது. இதுதான் தீபகற்ப போருக்கும், ரஷிய படையெடுப்புக்கும் வழிவகுத்தது. எனவே நெப்போலியனின் வீழ்ச்சிக்கு கண்டத்திட்டமும் ஒரு அடிப்படை காரணம் ஆகும்.
3. **ரஷிய படையெடுப்பு**
நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு அவர் செய்த மாபெரும் தவறாகும். இப்படையெடுப்பில் லட்சக்கணக்கான போர்வீரர்கள் இறந்தனர். மேலும் இவர் படையெடுத்த பொழுது மழைக்காலம், மழையாலும், பணியாலும் நெப்போலியனின் வீரர்கள் படுதுயரம் அடைந்தார்கள். போர்வீரர்களுக்கு உணவு சரியாக கிடைக்கவில்லை. இதனால் இராணுவ வீரர்கள் பசியாலும், பட்டினியாலும், குளிராலும் இறந்தனர். இதனால் நெப்போலியனின் படைபலம் குறையத் துவங்கியது.
4. **தீபகற்ப போர்**
நெப்போலியனுடைய ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் ஆட்டத்தை ஏற்படுத்தியது தீபகற்ப போராகும். போர்ச்சுக்கீசிய, ஸ்பானிய படைகளின் தேசப்பற்றுக்கு முன்பு பிரெஞ்சு படைகளால் நிற்கமுடியவில்லை. இப்போரில் தான் முதன் முதலில் பிரெஞ்சு படைகள் தோல்வியடைந்தன. இப்போரினால் பிரான்சில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

மேலும் நெப்போலியனின் தலைசிறந்த போர் தலைவர்களும், வீரர்களும் மாண்டனர். இந்த ஸ்பானிய அல்சர் புண் தான் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**5. நெப்போலியனின் குணங்கள்**

நெப்போலியன் இளகிய மனமும், உறவினர்களுக்கு பரிவும், பாசமும் காட்டும் குணமும் கொண்டவன. ஆனால் இவரது உறவினர்கள் இவருக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை. குறிப்பாக இவரது சகோதரர்களே இவருடைய தோல்விக்கு முக்கிய காரணமாக இருந்தனர். ''நான் எனது உறவினர்களுக்கு செய்த நன்மையை விட அவர்கள் எனக்கு அதிக தீங்கு செய்திருக்கிறார்கள்'' என்று மெட்டர்னிக்கு நெப்போலியன் கடிதம் எழுதியுள்ளார்.

**6. நெப்போலியனின் பேராசை**

நெப்போலியன் தன்னுடைய வலிமை வாய்ந்த படையின் மூலம் ஒரு பேரரசை உருவாக்க விரும்பினார். ஆவ்வாறு ஏற்படுத்தி அதை ஐரோப்பா முழுவதும் விரிவுபடுத்த விரும்பினார். அவருடைய ஆசைக்கு அளவே இல்லை. மேலும் தன்னுடைய பேரரசில் நல்லாட்சி நடத்த எவ்வித வழிவகைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஐரோப்பா முழுவதும் பிடித்தவுடன் தன் வலிமையை உலகம் முழுவதும் ஏற்படுத்த விரும்பினார். இவருடைய இந்த ஆசையே இவருக்கு வீழ்ச்சியை உண்டாக்கியது எனலாம்.

**7. நாடுகளின் ஆதரவின்மை**

நெப்போலியன் வென்ற நாடுகள் எல்லாம் நெப்போலியனின் கட்டாயத்திற்காக அடிபணிந்தன. மற்ற நேரங்களில் நெப்போலியனை எதிர்த்தன. நெப்போலியன் வென்ற நாடுகளில் உள்ள மக்கள் நெப்போலியனுக்கு எதிராக புரட்சியை ஆரம்பித்தனர்.

**8. பிரெஞ்சு மக்களின் ஆதரவின்மை**

நெப்போலியன் பிரான்சின் கான்ஸ்லேட்டுகளை ஒழுங்கற்ற முறையில் தூக்கி எறிந்து பிரான்சில் அரியணை ஏறியதை மக்கள் வெறுத்தனர். நெப்போலியனின் அதிகாரம், பெருமை, ஆதிக்கம் எல்லாம் வெளித்தோற்றத்திற்கு கவர்ச்சியாக இருந்தன. ஆனால் உள்தோற்றத்தில் வெற்றிடமாகவே காட்சி தந்தன. எனவே நாட்கள் செல்லச் செல்ல மக்கள் நெப்போலியனுக்கு அளித்த ஆதரவை விலக்கி கொண்டனர்.

**''தனிப்பட்டவருக்கு மேல் தேசம் உண்டு. தேசத்திற்கு மேல் ஒழுங்கான சட்டம் உண்டு. சட்டத்திற்கு மேல் உயர்ந்த நோக்கம் உண்டு. போர்களும் உண்டு. போருக்கு மேல் அமைதியுண்டு என்பதை மறந்துவிட்டார் நெப்போலியன்'' என்று ஃபாச்** என்பவர் குறிப்பிடுகிறார்.

9. **போப்பாண்டவரை கைது செய்தல்**

நெப்போலியனின் கண்டத் திட்டத்தை போப்பாண்டவர் ஏழாம் பயஸ் ஏற்காததாலும் கன்கார்டட் உடன்படிக்கையை மீறியதாலும் அவரை கைது செய்து அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை 1808-ல் கைப்பற்றினார். இதனால் ஐரோப்பாவில் கத்தோலிக்கர்களின் ஆதரவை இழந்தார். எல்லா மதத்தையும் நெப்போலியன் சமம் என்றார். இதனால் இவரை மதத்துரோகி, சமயநம்பிக்கை அற்றவன், என்ற குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. குறிப்பாக பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்கர்களின் வெறுப்புக்கு ஆளானார்.

10. **திறமைமிக்க தளபதிகளை குறைத்து மதிப்பிடல்**

வெலிங்டன், புளுச்சர், நெல்சன் போன்ற பிரெஞ்சு தளபதிகள் திறமைசாலிகளாகவும், போர் தந்திரங்கள் உடையவர்களாகவும்விளங்கினார். இவர்களுடைய திறமையை நெப்போலியன் குறைவாக மதிப்பிட்டான். நெப்போலியனுக்கு தோல்வியை தேடித் தந்தன.

11. **இங்கிலாந்தின் கடலாதிக்கம்**

இங்கிலாந்தின் கடலாதிக்கம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் ஆகும். இங்கிலாந்துக்கு எதிராக நடந்த அனைத்து போர்களிலும் நெப்போலியனுக்கு தோல்வியே ஏற்பட்டது. இங்கிலாந்தின் கப்பல்படைக்கு ஈடாக பிரான்சின் கப்பல் படை வலிமையடையவில்லை. இங்கிலாந்து கடல்களின் ராணி, கப்பற்படை திறனில் திமிங்கலம் போன்றது என்று வருணிக்கப்படும் நாடு ஆங்கில கப்பல்படை தளபதியான நெல்சன், வெல்லிங்டன் ஆகியோர்களின் சிறந்த போர்திறன் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

12. **எண்ணற்ற எதிரிகள்**

நெப்போலியன் தனது ஆக்கிரமிப்பு கொள்கைகளாலும், ஓயாத படையெடுப்பாலும், கண்டத்திட்டக் கொள்கையாலும் ஏராளமான எதிரிகளை சம்பாதித்துக் கொண்டார். இங்கிலாந்து, ஸ்பெயின், ஸ்வீடன் பிரஷ்யா, ஆஸ்திரியா, போர்ச்சுக்கல், சார்டீனியா போன்ற பல நாடுகள் நெப்போலியனின் எதிரி நாடுகளாயின. மேலும் இந்த நாடுகள் நெப்போலியனை வீழ்த்துவதற்கு கூட்டணிகளை அமைத்துக் கொண்டு ஒற்றுமையாயின. இதுவும் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

**அதிகார குவிப்பு**

நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக் கொண்டார். நெப்போலியன் பேரரசரான பின் அவரது பழக்கவழக்கங்களை மக்கள் வெறுத்தனர். எல்லா அதிகாரங்களும் நெப்போலியன் கையில் இருந்ததால் போர் காலங்களில் உள்நாட்டு முன்னேற்றத்திற்கு எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பிரெஞ்சு புரட்சியின் மூலம் உருவாகிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவைகளை நெப்போலியன் மட்டுமே அனுபவித்தான். அவை மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. அதிகார குவிப்பு நிர்வாக மாற்றங்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்தது.

13. **ஐரோப்பாவில் பரவிய தேசிய உணர்ச்சி**

பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் தேசிய உணர்வு அதிகரிக்க தொடங்கியது. தன்னையும், தன் நாட்டையுமே பெரிதாக கருதினார் நெப்போலியன். இதனால் பிறநாட்டு மக்களின் தேசிய உணர்ச்சியை மதிக்கவில்லை. பிற நாடுகளின் சுதந்திரத்தை பறித்தது, அதன் எல்லைகளை தன் இஷ்டப்படி மாற்றியமைத்தது நெப்போலியனுக்கு பெரிய எதிர்ப்பை ஏற்படுத்தியது. இது ஐரோப்பிய மக்களிடையே உறங்கி கிடந்த தேசிய உணர்வுகளை தட்டி எழுப்பியது. இதுவும் நெப்போலியனது வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகியது.

## 4. கண்டத்திட்டம் (1806-1812)

நெப்போலியன் ஐரோப்பாவில் பல நாடுகளை தோற்கடித்தப் போதிலும் இங்கிலாந்தை மட்டும் தோற்கடிக்க முடியவில்லை. இங்கிலாந்தின் கடல் வலிமை நெப்போலியனுக்கு ஒரு சவாலாகவே அமைந்தது. எனவே இங்கிலாந்தை அடிபணியச் செய்ய நெப்போலியனின் மூளையில் ஒரு நூதனமான புதிய திட்டம் உதித்தது. அத்திட்டத்திற்கு **கண்டதிட்டம்** அல்லது ஐரோப்பிய **பொருளாதார திட்டம்** என்று பெயரிடப்பட்டது.

**கடல் இராணி** என்று அழைக்கப்படும் இங்கிலாந்து கடல் ஆதிக்கத்தில் சிறந்து விளங்கியது. இங்கிலாந்தின் செல்வத்திற்கும், வளத்திற்கும் காரணம் அந்நாட்டின் அயல்நாட்டு வியாபாரம் தான் எனவே இங்கிலாந்தின் வாணிப நடவடிக்கைகளை ஒழித்துவிட்டால் நாட்டின் பொருளாதார வளம் குன்றி, செல்வம் சுருங்கி ஏழை நாடாகி விடும். ஆதன்பின் அதன் அரசியல் ஆதிக்கத்தை ஒழித்துவிடலாம் என்பது நெப்போலியனின் கண்டதிட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

மேலும் இங்கிலாந்து தொழில் வளமிக்க நாடாக இருந்த காரணத்தால் போதிய விவசாய உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதில் நாட்டம் காட்டவில்லை. உணவுப் பொருட்கள் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பிற நாட்டுக்கப்பல்கள் இங்கிலாந்திற்கு அடியோடு நின்று விடும். ஆப்போது இங்கிலாந்து மக்களும் ராணுவ வீரர்களும் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் அவதிப்பட்டு இறக்கநேரிடும். அப்போது இங்கிலாந்து மீது படையெடுத்து எளிதில் வெற்றி கொள்ளலாம் என்பது கண்டத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்.

மேலும் இங்கிலாந்து தொழில் வளமிக’க நாடாக இருந்த காரணத்தால் போதிய விவசாய உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதில் நாட்டம் காட்டவில்லை. உணவுப் பொருட்கள் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இந்த உணவுப் பொருட்கள் கப்பல்கள் மூலமே இறக்குமதி செய்யப்பட்டன. பிற நாட்டுக் கப்பல்கள் இங்கிலாந்திற்கு செல்லவிடாமலும், இங்கிலாந்து கப்பல்களை பிறநாட்டுத் துறைமுகங்கள் ஏற்காமல் இருப்பதாலும் உணவுப் பொருள் சப்ளை இங்கிலாந்திற்கு அடியோடு நின்டு விடும். ஆப்போது இங்கிலாந்து மக்களும் ராணுவ வீரர்களும் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் அவதிப்பட்டு இறக்க நேரிடும். அப்போது இங்கிலாந்து மீது படையெடுத்து எளிதில் வெற்றி கொள்ளலாம் என்பது கண்டத் திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்.

இங்கிலாந்தின் மீது பொருளாதாரத் தாக்குதலை மேற்கொள்ளும் தனது திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு 1806-ம் ஆண்டு நவம்பரில் பெர்லின் நகரில் இருந்து சில ஆணைகளை நெப்போலியன் வெளியிட்டார். இவை **பெர்லின் ஆணைகள்** எனப்பட்டன. இதன்படி இங்கிலாந்து மீது பொருளாதார முற்றுகையிடப்பட்டது. பிரான்சும் அதன் குடியேற்ற நாடுகளும் மற்றும் சார்பு நாடுகளும் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது. ஐரோப்பிய துறைமுகங்களில் இங்கிலாந்து கப்பல்கள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது.

நேப்போலியனின் இந்த பொருளாதார முற்றுகையை கண்டு இங்கிலாந்து பயப்படவில்லை. இதற்கு பதில் நடவடிக்கையாக **‘கவுன்சில் உத்தரவுகள்’** என்ற ஓர் எதிர் ஆணையை 1807-ல் பிறப்பித்தது. அதன்படி ‘‘பிரான்சுடனோ அதன் கூட்டாளி நாடுகளுடனோ, வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் கப்பல்கள் இங்கிலாந்துத் துறைமுகங்களுக்கு வந்து அனுமதிப் பெற்ற பின்னர் தான் பிரான்சுக்கு செல்ல வேண்டும்’’ என்று இந்த ஆணைகள் கூறின.

அதே நேரம் நெப்போலியன் சில புதிய ஆணைகளை பிறப்பித்தார். அவை மிலான் ஆணைகள், 1807, வார்சா ஆணைகள் 1807 போன்டெயின்புளோ ஆணைகள் 1810 என்பவைகளாகும். இவைகளின் மூலமாக தனது கண்ட திட்டத்தை மேலும் தீவிரமாக்கினார். ஆனால் நெப்போலியனின் கண்ட திட்டம் தோல்வியில் முடிந்தது.

**கண்டத் திட்டம் தோல்வியடைவதற்கான காரணங்கள்**

**1.பிடிவாத கொள்கை**

நெப்போலியன் தன்னுடைய திட்டத்தில் கொஞ்சமும் தளராமல் பிடிவாதமாக இருந்தார். வளைந்து கொடுக்கும் தன்மை அவரிடம் இல்லை. மெலம் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் தன்னுடைய கண்டத்திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றார். இதை இந்த நாடுகள் ஏற்க மறுத்தன.

**2.லூாயி போனபார்டின் மறுப்பு**

ஹாலந்தை ஆண்ட நெப்போலியனின் சகோதரரான **லூயி போனபார்டே** இத்திட்டத்தை ஏற்க மறுத்தார். "நான் கண்டத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தன் நாட்டு மக்கள் பாதிக்கப்படுவார்கள்" என்று கூறினார்.

3. **ஸ்வீடன் மறுப்பு**

ஸ்வீடன் மன்னர் **நான்காம் குஸ்தாவஸ்** இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். மேலும் இந்த நாட்டு மன்னர் இங்கிலாந்துக்கு ஆதரவாக செயல்பட்டார்.

**4. போப்பாண்டவர் எதிர்ப்பு**

நேப்போலியனின் கண்டத்திட்டத்தை போப்பாண்டவர் ஏழாம்பயஸ் ஏற்க மறுத்துவிட்டார். இதனால் கோபம் கொண்ட நெப்போலியன் போப்பாண்டவரின் ஆட்சிக்குரிய பகுதிகளை கைப்பற்றியதோடு போப்பாண்டவரை கைது செய்து சிறையில் அடைத்தார். போப்பாண்டவரை நெப்போலியன் கைது செய்ததை ஐரோப்பாவில் உள்ள கத்தோலிக்க சமயத்தினர் அத்தனை பேர்களும் எதிர்த்தனர். நெப்போலியன் மீது வெறுப்பை காண்பித்தனர். மேலும் பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்கர்களும் இச்செயலை கண்டித்தனர்.

**5.ரஷியாவின் மறுப்பு**

நெப்போலியனின் கண்டத்திட்டத்தை ஏற்க மறுத்தது. இதனால் ரஷியாவை ஆண்ட மன்னர் நெப்போலியன் மீது பகைமை கொண்டு இங்கிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தம் செய்துக் கொண்டார்.

**6.போர்ச்சுக்கல் மறுப்பு**

போர்ச்சுக்கல் இளவரசர் கண்டத் திட்டத்தை அமல்படுத்த முடியாது என்று சொன்னார். இதனால் கோபம் கொண்ட நெப்போலியன் போர்ச்சுக்கல் மீது படையெடுத்தார்.

**7.இங்கிலாந்தின் எதிர்ப்பு**

கண்டத் திட்டத்தை ஏற்காத நாடுகளுக்கு இங்கிலாந்து மறைமுகமாக பொருளாதார உதவி வழங்கியது. இராணுவ பாதுகாப்பும் வழங்கியது.∴ உலகத்தில் பல இடங்களில் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளை அமைத்துக் கொண்டதால் அந்ததந்த குடியேற்ற நாடுகளை தடுக்க நெப்போலியனால் முடியவில்லை. இதனால் நெப்போலியனின் கண்டத்திட்டம் தோல்வியடைந்தது.

**கண்டத் திட்டத்தில் இங்கிலாந்து வெற்றியடையக் காரணங்கள்**

**1.**இங்கிலாந்து கடல் வலிமை மிக்க நாடாக இருந்தமையால் நெப்போலியனின் கண்டத் திட்டத்திற்கு போதுமான தடை விதிக்க முடியாதநிலை ஏற்பட்டது.

2. பிரான்சிற்கு வலிமையான கப்பற்படையில்லாததால் இங்கிலாந்துக்கு பொருட்கள் கடத்தி வரப்பட்டதை தடுக்க முடியவில்லை. நெப்போலியனின் வீரர்கள் கூட இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை அணிந்திருந்தனர்.

3. உலகத்தில் பல்வேறு இடங்களில் இங்கிலாந்து குடியேற்றங்களை அமைத்துக் கொண்டதால் இங்கிலாந்தின் வியாபாரம் பாதிக்கப்படவில்லை.

4. இங்கிலாந்தின் பொருட்கள் ஐரோப்பாவில் அதிகமாக தேவைப்பட்டது. அப்பொருட்கள் கிடைக்காத பிரெஞ்ச் மக்களே இத்திட்டத்தை எதிர்க்க ஆரம்பித்தனர்.

5. இங்கிலாந்துடன் செய்து வந்த ஒயின் வியாபாரம் தடைபட்டதால் போர்ச்சுக்கல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எனவே போர்ச்சுக்கல் 1808-ல் கண்டத்திட்டத்தை மீறி இங்கிலாந்துடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது. கண்டத் திட்டத்தை கைவிட்டது போர்ச்சுக்கல்.

6. இங்கிலாந்து உணவுப் பொருட்களை கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யாமல் வேறு வழிகளை பின்பற்றி உணவு பொருட்களை இறக்குமதி செய்து நிலைமையை சமாளித்தது.

மொத்தத்தில் நெப்போலியனின் கண்டத் திட்டம் சரிவர செயல்படுத்த முடியாத காரணத்தினாலேயே தோல்வியடைந்தது. இதுவே நெப்போலியனின் வீழ்ச்சியின் ஆரம்பம்.

**கண்டத்திட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள்**

தொடக்கத்தில் கண்டத்திட்டம் நெப்போலியனுக்கு வெற்றியைத் தேடி தந்தது. ஐரோப்பாக் கண்டத்தின் பெரும்பகுதி அவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததால் இத்திட்டத்தை செயல்படுத்துவது சாத்தியமாயிற்று. நடுநிலை நாடுகளான டென்மார்க், ஸ்வீடன் கூட இவரது ஆணைக்கு கீழ்படிந்தன. ரஷியாவும் இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்புக்கொண்டது. ஆனால் இங்கிலாந்து தன் எதிர் நடவடிக்கையை தீவிரமாக செயல்படுத்தியதால் கீழ்கண்ட விளைவுகள் ஏற்பட்டன.

1. நெப்போலியனின் கண்ட திட்டத்தினால் ஐரோப்பிய நாடுகளுடன் இங்கிலாந்து செய்து வந்த வியாபாரம் தடைப்பட்டது. ஆனால் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுடன் இங்கிலாந்தின் வியாபாரம் தங்கு தடையின்றி நடைபெற்றது.
2. பிரான்ஸ் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்த தானிய இறக்குமதி நின்று போனதால் ஐரோப்பிய நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் விலை ஏறியது. நெப்போலியனுக்கு எதிர்ப்பு பல நாடுகளில் தோன்றின.

3. கள்ளக் கடத்தல் வியாபாரம் கொடிகட்ட பறந்தது. இங்கிலாந்து பொருட்களையே உபயோகித்து வந்த ஐரோப்பிய மக்கள் தொப்பி,பூட்ஸ், பருத்தி ஆடைகள், கம்பளி ஆடைகள் போன்ற பொருட்களை கள்ளக் கடத்தல் மூலம் பெற ஆரம்பித்தனர். ஸ்பெயினும், போர்ச்சுக்கல்லும் கள்ளக்கடத்தல் மையங்களாயின.

4. இத்திட்டத்தை போப்பாண்டவர் ஏழாம் பயஸ் ஏற்க மறுத்த போது அவரை கைது செய்ததால் பிரெஞ்சு கத்தோலிக்க மக்கள் நெப்போலியன் மீது வெறுப்படைந்தன்.

5. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் பல இடையூறுகள் இருந்ததால் ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக எதிர்க்க ஆரம்பித்தன. முதலில் போர்ச்சுக்கல்லும், பின்னர் ஸ்பெயின், ரஷ்யா ஆகிய நாடுகளும் கண்டத் திட்டத்தை ஏற்க மறுத்தன. எனவே அந்த நாடுகளுடன் நெப்போலியன் போரில் ஈடுபட்டார். அதுவே அவரது வீழ்ச்சிக்கு காரணமானது.

6. இங்கிலாந்தில் வாணிபம் மந்தமானது. ஐரோப்பாவில் வாணிபம் நசுக்கப்பட்டது. 1810-ல்**ஹம்பர்க்கில்** இருந்த 428 சர்க்கரை ஆலைகளில் ஒன்றோ, இரண்டோ தான் வேலை செய்தது. இதன் மூலம் இத்திட்டத்தின் கொடுமையை நன்கு உணரலாம்.

7. இறுதியாக இத்திட்டத்தால் இங்கிலாந்துக்கு லாபமும் பிரான்சுக்கு நஷ்டமும் ஏற்பட்டது.

## வியன்னா மாநாடு – 1815

நெப்போலியன் லீப்சிக் போரில் தோற்கடிக்கப்பட்டு எல்லா தீவிற்கும் அனுப்பப்பட்ட பிறகு ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள்

1814-ம் ஆண்டு மே மாதம் செய்துக் கொண்ட பாரிசு உடன்படிக்கையின் படி ஐரோப்பாக் கண்டத்தின் வரைபடத்தை மாற்றி அமைக்க ஒரு மாநாடு கூட்டப்பட வேணடும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஐரோப்பிய மன்னர்களும், அரசியல் தலைவர்களும் குழம்பிப் போய் கிடக்கும் ஐரோப்பிய நாடுகளில் எல்லைகளை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவில் 1814-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு மாநாட்டை கூட்டினார். ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் வெகுவாக குழம்பி கிடந்ததால் ஐரோப்பாவின் வரைபடத்தை திருத்தி அமைக்க இம்மாநாடு முடிவு செய்தது.

ஆனால் நெப்போலியன் எல்பாத் தீவிலிருந்து தப்பிவிடவே இம்மாநாடு நிறுத்தி வைக்கப்பட்டது. வாட்டர்லூ போரில் மீண்டும் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பிறகு மாநாடு தொடர்ந்து நடைபெற்றது. ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து போன்ற முக்கிய நாடுகள் இம்மாநாட்டில் முக்கிய பங்கெடுத்தது. வியன்னா ஒப்பந்தம் 1815 ஜீன் மாதம் கையெழுத்திடப்பட்டது.

## மாநாட்டில் பங்கு கொண்டவர்கள்

1. **முதலாம் பிரான்சிஸ்**
முதலாம் பிரான்சிஸ் ஆஸ்திரியாவின் பேரரசர் ஆவார். நேப்போலியனை தோற்கடித்ததில் ஆஸ்திரியா பெரும் பங்கு வகித்ததால் அதன் தலைநகரமான வியன்னாவில் இம்மாநாடு கூட்டப்பட்டது. இவர் தான் மாநாட்டின் வரவேற்பாளர்.

2. **சான்சலர் மெட்டர்னிக்**
**இவர் ஆஸ்**திரிய நாட்டின் சான்சிலர் ஆவார். வியன்னா மாநாடு கூட்டப்படுவதற்கு இவரே காரணம். முாநாட்டிற்கு தலைமை ாைங்கியவரும் இவரே. முிகசிறந்த ராஜதந்திரம் உடையவர். இவர் "18-ம் நூற்றாண்டின் மாக்கியவல்லி" என அழைக்கப்படுகிறார். முாநாட்டில் ஏற்பட்ட சில பிரச்சினைகளுக்கும் நல்ல முறையில் தீர்வு கண்டார்.

3. **கேசல் ரீ பிரபு**
இவர் இங்கிலாந்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சர். இவர் முற்போக்கான கருத்துக்களை உடையவர். வியன்னா மாநாட்டில் பிரான்ஸ் நாட்டின் மீது இரக்கத் தன்மையுடன் நடந்து கொண்டார். இவர் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

4. **டெலிராண்ட்**
இவர் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். இவர் தன்னுடைய நிர்வாக திறமையாலும், தெளிவான கருத்துக்களின் மூலமும் அனைத்து பிரதிநிதிகளையும் கவர்ந்து விட்டார். இவருடைய ராஜதந்திரத்தினால் தான் பெருந்தன்மையுடனும், மதிப்புடனும் பிரான்ஸ் நடத்தப்பட்டது. இவருடைய பெரும் முயற்சியினால் தான் பிரான்ஸ் நாட்டிற்கு சாதகமான சில அம்சங்கள் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது. இதனால் பிரெஞ்சு மக்களிடையே செல்வாக்கும், புகழும் பெற்றார் டெலிராண்ட்.

5. **சார்.முதலாம் அலெக்ஸாந்தர்**
இவர் ரஷிய நாட்டின் சார்பாக கலந்து கொண்டார். இவர் பெருந்தன்மை படைத்தவர் என்றாலும் முரண்பட்ட கொள்கைகளை உடையவர். இவரை மற்ற பிரதிநிதிகள் சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. அதே போல் இவராலும் மற்ற பிரதிநிதிகளை புரிந்து கொள்ள முடியவில்லை.

6. **மூன்றாம் பிரடெரிக் வில்லியம்**
இவர் பிரஷ்யாவின் அரசர் ஆவார். பிரஷ்யாவின் பிரதிநிதியாக வியன்னா மாநாட்டில் கலந்து கொண்டார்.

## வியன்னா மாநாட்டின் நோக்கங்கள்

1. **ஐரோப்பிய அரசியல் வரைபடத்தை மறுபடியும் வரைதல்**
நெப்போலியனின் ஆக்கிரமிப்பு கொள்கையால் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் குழம்பிக் காணப்பட்டன. பல நாட்டு அரசர்கள் நெப்போலியனால் பதவி இழந்தனர். எனவே 1789-ம் வருட பிரெஞ்சு புரட்சிக்கு முன்பு இருந்தபடி நாடுகளின் எல்லைகளை திருத்தி அமைக்க நினைத்தனர். அதே சமயம் நெப்போலியனால் விரட்டப்பட்ட பழைய அரச வம்சங்களை மறுபடியும் அரியணையில் அமர்த்த வேண்டும் என்றும் நோக்கம் கொண்டது வியன்னா மாநாடு.

2. **ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துதல்**
எதிர்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்புகளை தடுத்து இனிமேல் ஐரோப்பாவில் போர்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். ஆதற்காக பிரான்சின் வலிமையை ஒடுக்கி அதனை பலவீனப்படுத்ா வேண்டும். ஆத்துடன் நெப்போலியனின் பரம்பரையினர் மீண்டும் பதவிக்கு வரவிடாமல் தடுத்தலும் மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

3. **புரட்சி கருத்துக்கள் பரவ விடாமல் தடுத்தல்**
எதிர்காலத்தில் இனி புரட்சியே வேண்டாம் என்று அனைத்து பிரதிநிதிகளும் விரும்பினர். முக்களாட்சி கருத்துக்கள், தேசிய உணர்வு, சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் ஆகிய தாராள கருத்துக்களை ஒடுக்குவதும் வியன்னா மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

4. **ஐரோப்பாவின் சக்தி சமநிலையை பாதுகாத்தல்**
பிரான்ஸ் பெரும் வலிமை பெற்றதினால்தான் நெப்போலியன் ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டார். எனவே எந்த ஐரோப்பிய நாடும் இன்னொரு பலமற்ற நாட்டை பயன்படுத்திக் கொண்டு அதிக பலம் பெற்றுவிடக் கூடாது என்று மாநாட்டில் வற்புறுத்தப்பட்டது. ஆகவே ஐரோப்பாவின் சக்தி சமநிலையை ஏற்படுத்துவதே இம்மாநாட்டில் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

5. **போரின் கொள்ளை பொருட்களை பங்கிடுதல்**
பிரான்சும், பிரான்சை ஆதரித்த நாடுகளும், அரசர்களும் தண்டிக்கப்பட வேண்டுமென்று மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் முடிவு செய்தனர். அதே நேரத்தில் நெப்போலியனை முறியடிக்க ஒத்துழைத்த எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று நினைத்தனர். இதற்காக பிரான்ஸ் நாட்டின் பகுதிகளையும், பொருட்களையும் பங்கு போட்டுக் கொள்ள திட்டம் தீட்டினர்.

6. **குடியரசுகளை ஒழித்தல்**
இந்த வியன்னா மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் முடியரசர்கள், அவர்கள் ஐரோப்பாவில் மீண்டும் குடியரசுகள் ஏற்படுவதை விரும்பவில்லை. எனவே ஐரோப்பாவில் குடியரசுகளை ஒழித்தல் வியன்னா மாநாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.
மேற்கண்ட நோக்கங்கள், கொள்கைகளின் அடிப்படையில் வியன்னா மாநாட்டில் ஏற்பாடுகள் அமைக்கப்பட்டன.

## வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள்

1. **பிரான்ஸ்**
பிரான்ஸ் நாட்டின் எல்லைகள் 1790-ல் இருந்ததைப் போல் அமைக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற நாடுகளின் கூட்டுப் படைகள் சுமார் மூன்று ஆண்டு காலத்திற்கு பிரான்சில் நிறுத்தி வைக்கப்படவேண்டும். பிரான்ஸ் நாட்டின்

குடியேற்ற நாடுகள் பெரும்பாலானவற்றை இங்கிலாந்து பிடுங்கி கொண்டது. பிரான்சை சுற்றியிருந்த பிரஷ்யா, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் இராணுவபலம் அதிகரிக்கப்பட்டது. நெப்போலியனால் அமைக்கப்பட்ட ரைன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டு 39 மாநிலங்களை கொண்ட ''ஜெர்மன் கூட்டமைப்பாக'' மாறறப்பட்டது. இந்த கூட்டமைப்பு ஆஸ்திரியாவின் கண்காணிப்பில் வைக்கப்பட்டது. இவை தவிர பிற நாடுகளின் தலைநகர்களிலிருந்து எடுத்து வந்த கலை பொக்கிஷங்களை பிரான்சால் அந்தந்த நாடுகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

2. **ஆஸ்திரியா**

இத்தாலியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவுக்கு கொடுக்கப்பட்டது. ஆஸ்திரிய அரச வம்சத்தைச் சார்ந்தவர்களே பார்மா, மடானா, டங்கனே ஆகிய இத்தாலியப் பகுதிகளில் அரசர்களாக நியமிக்கப்பட்டனர். அனேகமாக வடஇத்தாலி ஒரு நிலவியல் சொல்லாக மாற்றப்பட்டது.

3. **ரஷியா**

பிரஷ்யாவிடமிருந்து போலந்து பகுதிகளும், ஸ்விடனிலிருந்து பின்லாந்தும் பிடுங்கப்பட்டு அவை ரஷியாவுக்கு கொடுக்கப்பட்டன. வார்சா பிரதேசமும் ரஷ்யாவிற்கு கொடுக்கப்பட்டது.

4. **இங்கிலாந்து**

முத்திய தரைக்கடலில் மால்டா, வடகடலில் ஹெலிகோலந்து செயின்ட் லூசியா, தென் ஆப்பிரிக்காவில் கேப் காலனி, டொபாகோ டிரினிடாட், அயோனியின் தீவுகள், நன்னம்பிக்கை முனை, ஹோண்டுராஸ், மலாக்கா, இலங்கை ஆகிய பகுதிகள் இங்கிலாந்துக்கு கிடைத்தன.

5. **பிரஷ்யா**

பிரஷ்யாவிற்கு வெஸ்ட்போலியா, சாக்கனி, மேற்கு பொம்ரோனியா ஆகிய பகுதிகள் கிடைத்தது. இதனால் பிரஷ்யாவின் செல்வமும், செல்வாக்கும் பெருகியது. மோஸன், டான்சிக் ஆகிய பகுதிகளையும் பிரஷ்யா தக்க வைத்துக் கொண்டது. ஜெர்மன் கூட்டமைப்பு நாடுகளில் பிரஷ்யாவின் வலிமை பெருகியது.

6. **இத்தாலி**

வியன்னா மாநாடு இத்தாலியை பிரித்து அதன் ஐக்கியத்தை குலைத்து விட்டது. ஆஸ்திரியாவின் செல்வாக்கு இத்தாலியில் வலுத்தது. போப்பாண்டவருக்கு சொந்தமான பகுதிகன் ஒன்றாகஇணைக்கப்பட்டு போப்பின் அரசு மீண்டும் உருவாக்கப்பட்டது. நேபிள்ஸ், சிசிலி ஆகியவை போர்பான் அரசருக்கு கொடுக்கப்பட்டது. Duchy of Parma நெப்போலியனின் மனைவியான மரியலூயி சாவுக்கு கொடுக்கப்ட்டது. இவ்வாறு இத்தாலியின் ஒற்றுமையை சின்னாபின்னமாக்கப்பட்டது.

7. **சுவிட்சர்லாந்து**

சுவிட்சர்லாந்து ஒரு சுதந்திரக் குடியரசாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது தனித்து நிற்கும் உரிமை பெற்றது. ஆதற்கு மேலும் மூன்று இடங்கள் கொடுக்கப்பட்டது.

8. **பெல்ஜியம், ஹாலந்து**

பெல்ஜியமும், ஹாலந்தும் இணைக்கப்பட்டு நெதர்லாந்து என்ற தனிநாடு அமைக்கப்பட்டு. ஹாலந்து மக்கள் புராட்டஸ்டாண்டு மதத்தினர். பேல்ஜியம் மக்கள் கத்தோலிக்கர்கள் இவர்களிடையே ஒற்றுமையும், நட்பையும் ஏற்படுத்துவது கடினமான காரியம் என்று தெரிந்தும் இந்த ஏற்பாட்டை வியன்னா மாநாடு செய்தது.

9. **நார்வே, ஸ்வீடன்**

டென்மார்க் நெப்போலியனுக்கு உதவி செய்ததால் அது தண்டிக்கப்பட்டது. அதனிடமிருந்து நார்வே பிடுங்கப்பட்டு ஸ்வீடன் நாட்டுடன் இணைக்கப்பட்டது. இச்செயலினால் ஒற்றுமையாக இருந்த இரு நாட்டு மக்களும் மன அமைதி இழந்தனர். இதன் இணைப்பை அவர்கள் விரும்பவில்லை.

10. **ஸ்பெயின், போர்ச்சுக்கல்**

இவ்விரண்டு நாடுகளிலும் முடியாட்சி மீட்கப்பட்டது. பழைய போர்பான் அரச வம்சம் அங்கு அரியணையில் அமர்த்தப்பட்டது.

**11. ஜெர்மனி**

ஜெர்மனியிலுள்ள 300-க்கு மேற்பட்ட சிற்றரசுகளை இணைத்து ஜெர்மானிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு ஆஸ்திரிய பேரரசர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்தியது. ஆனாலும் சில முக்கிய பிரச்சினைகளுக்கு அமைதி காண தவறிவிட்டது. இருப்பினும் இம்மாநாட்டின் மூலம் ''ஒரு பொது பிரச்சினையை தீர்ப்பதற்கு உன்று சேர்வது'' என்ற எண்ணம் முதல் முறையாக நடைமுறைக்கு வந்தது. இதுவே பிற்காலத்தில் பன்னாட்டுக் கழகம், ஐ.நா.சபை போன்ற உலக நிறுவனங்கள் தோன்றக் காரணமானது. ஆனால் தேசிய உணர்வு, நாட்டு உரிமை ஆகியவற்றை மறந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் வியன்னா மாநாட்டில் முடிவுகள் அனைத்தும் விரைவில் அழிந்து தோல்வியைத் தழுவின.

**வியன்னா மாநாட்டின் தோல்விக்கான காரணங்கள்**

**1. உரியவர்களுக்கு வழங்கும் உரிமை**

வியன்னா மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 'உரியவர்க்கு வழங்கும் உரிமை' கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டனர். ஆனால் இந்த கொள்கை காற்றில் பறக்கவிட்டது. ஏனெனில் நெப்போலியனால் அரியணை இழந்த அனைவருக்கும் அவர்களுடைய அரசு வழங்கப்படவில்லை. மேலும் நியமிக்கப்பட்ட அரசர்களை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

**2. பெரிய நாடுகளின் ரேராசை**

இங்கிலாந்து, ரஷியா, பிரஷ்யா, ஆஸ்திரியா போன்ற பெரிய நாடுகள் தங்கள் சுயநலன்களிலேயே அக்கறை எடுத்துக் கொண்டனர். இவ்வல்லரசுகள் பழைய பகுதிகளை தங்களிடம் வைத்துக் கொண்டதுடன், நல்ல பல பகுதிகளை புதிதாகவும் பெற்றுக் கொண்டன. பலவீனமான சிறிய நாடுகளை கவனிக்காமல் விட்டு விட்டனர். சிறிய நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன.

**3. தேசியத்தன்மை அவமதிக்கப்படல்**

நாடுகளின் தசிய உணர்ச்சியை மதிக்காமல் வியன்னா மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்களின் சம்மதத்தைப் பெறாமலும் நாடுகளின் விருப்பங்களுக்கு எதிராகவும் நாடுகளை பங்குபோட்டுக் கொண்டனர். (உ.ம்.) இத்தாலி, ஹாலந்து, பெல்ஜியம் இவ்வாறு தேசிய உணர்வு, ஜனநாயகம் ஆகிய தாராளக் கொள்கைகள் நசுக்கப்பட்டன. சிறிய நாடுகளின் தேசிய உணர்வுகள் கண்டு கொள்ளப்படவே இல்லை.

**4. பழக்கவழக்கங்கள், மதம், மக்களின் உணர்ச்சிகள் கவனிக்கப்படவில்லை**

வியன்னா மாநாடு கத்தோலிக்க பெல்ஜியத்தை பிராட்டஸ்டாண்டு ஹாலந்துடன் இணைத்தது. இந்த இரண்டு நாட்டு மக்களிடையே பழக்கவழக்கம், மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் ஒற்றுமை கிடையாது. 1830-ல் பெல்ஜியத்தில் புரட்கி ஏற்பட்டது. அதனால் அது விடுதலையடைந்தது. 1905-ல் நார்வேயில் புரட்சி ஏற்பட்டு அது சுதந்திரம் அடைந்தது. ரஷியாவுடன் இணைக்கப்பட்ட பின்லாந்து 1917-ல் விடுதலையடைந்தது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் ஒற்றுமை இயக்கங்கள் தோன்றின.

**5. சுதந்திரம் ஜனநாயகம் ஆகிய கொள்கைகள் நசுக்கப்பட்டன**

வியன்னா ஏற்பாட்டை உருவாக்கியவர்கள் எதேச்சதிகாரிகள் பிற்போக்குவாதிகள் ஆவர். சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய சக்திகளைப் பற்றி அறியாதவர்கள். எனவே நிரந்தரமாக அவற்றை நசுக்க முடியவில்லை. 1830, 1848-ம் ஆண்டுகளில் பிரான்சிலும் மற்ற நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. இதனால் வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக தோல்வியடைந்தன

**6.பகற்கொள்ளை**

வியன்னா மாநாட்டின் தோல்விக்கு பெரிய நான்கு நாடுகளின் பேராசையே காரணம் தோற்றவர்கள் நாட்டின் செல்வத்தையும், பிரதேசங்களையும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டனர். போலந்தை பங்கு போட்டது பகற்கொள்ளைக்கு சமமானது. எனவே வியன்னா மாநாட்டு தீர்மானங்கள் அதிக காலம் நிலைத்து நிற்க முடியவில்லை.

## ஐரோப்பிய அரசர்களின் கூட்டு மாநாடுகள்

பிரெஞ்சு அரசர் நான்காம் ஹென்றி (1589-1610) எலிசபெத் அரசியின் அரசியல் கொள்கையின் தாக்கத்தினால் **மாபெரும் திட்டம்** என்ற அமைப்பை அமைத்தார். பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 66 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஐரோப்பாவில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து அமைதியை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதுபற்றி நான்காம் ஹென்றியின் அமைச்சரும், அவரது நெருங்கிய நண்பருமான சல்லி கூறியதாவது ‘‘ஐரோப்பாவில் அடிக்கடி ஏற்படும் ரத்தக்களரியை நிரந்தரமாக தடுப்பதும், ஐரோப்பிய அரசர்களை சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக வாழச்செய்வதும் மாபெரும் திட்டத்தின் நோக்கமாகும்’’ என்றார். ஆனால் 1610-ல் நான்காம் ஹென்றி இறந்ததும் இத்திட்டம் முழுமையடையாமலும் செயல்படுத்த முடியாமலும் ஆகியிட்டது.

இதன்பிறகு ஒரு நூற்றாண்டு கழித்து 1713-ல் மீண்டும் இந்த மாதிரியான திட்டம் ஒன்று Abbe de st.Pierre என்பவரால் ஐரோப்பிய கழகம் என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இக்கழகத்தில் சேர்ந்த உறுப்பினர்கள் ‘‘ஒருவருக்கொருவர் போர்புரியும் உரிமையை விட்டு விட வேண்டும். துங்களுக்குள் எழும் பிரச்சினைகளை நிரந்தர காங்கிரஸ் என்ற அமைப்பின் மூலமே தீர்த்துக் கொள்ளவேண்டும்.’’ இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட வேண்டும் என்ற எண்ணம் ஏற்கனவே தோன்றியிருந்தது.

அடுத்த நூற்றாண்டில் அதாவது 1815-ல் இதே கருத்தின் அடிப்படையில் தான் ரஷியா சார் முதலாம் அலெக்சாந்தர் ‘‘புனித கோட்பாட்டைத் துவக்கி வைத்தார். முதலாம் அலெக்சாந்தர் நெப்போலியனுக்கு பின் ஐரோப்பாவில் செல்வாக்குடன் விளங்கினார். ஐரோப்பாவில் சிக்கல்களை தீர்ப்பதிலும், கிருத்துவ சமயத்தை பரப்புவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவர் 1815-ல் ஆரம்பித்த **புனிதக் கோட்பாட்டில்** ரஷியா, ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற நாடுகள் கையெழுத்திட்டன. துருக்கியும், பிரிட்டனும் கையெழுத்திடவில்லை. ஐரோப்பிய நாடுகள் கிருத்துவ சமயத்தின் அடிப்படையில் இணைந்து செயல்படவேண்டும் எனவும் தர்மம், நீதி அமைதி ஆகியவற்றை காப்பாற்ற வேண்டும் என்பதும் இப்புனித கோட்பாட்டின் குறிக்கோளாக இருந்தது. 1825-ம் ஆண்டு முதலாம் அலெக்ஸ்சாந்தர் இறந்தவுடன் அவரது புனித கூட்டணியும் மாய்ந்து விட்டது.

**நால்வர் கூட்டணி**

1815-ம் ஆண்டு நவம்மபர் மாதம் இங்கிலாந்து ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் சேர்ந்து நால்வர் கூட்டணி உருவாக்கப்பட்டது. ஐரோப்பாவில் அமைதியை நிலை நாட்டவும், வியன்னா மாநாட்டின் தீர்மானங்களை செயல்படுத்துகிறார்களா? ஏன்பதை கவனிக்கவும், சர்வாதிகார மன்னர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் நால்வர் கூட்டணியில் முடிவு எடுக்கப்பட்டன. வியன்னா மாநாட்டின் உடன்பாட்டை குறைந்தது 20 வருடங்களுக்காவது பாதுகாக்கவேண்டும் என்று இக்கூட்டணி கூறியது.

1.எய்-லா-ஷப்போல்-மாநாடு

நால்வர் உடன்பாட்டின் படி எய்லா-ஷப்பேல் என்ற இடத்தில் 1818-ம் ஆண்டு ஒரு மாநாடு நடைபெற்றது. புல தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவைகளின் படி

a) பிரான்சு இழப்பீட்டு தொகை கொடுத்தால் கூட்டணியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி பிரான்ஸ் இழப்பீட்டுத் தொகையைக் கொடுத்தது. இதன்பின் இது ஐவர் கூட்டணி என்று அழைக்கப்பட்டது. அன்னிய படைகள் பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டன. தன்னுடைய மக்களுக்கு சீர்திருத்தங்களை கொடுக்க வேண்டுமென்று **மொனோகாவின் மன்னர்** வற்புறுத்தப்பட்டார்.

b) ஸ்பெயினுக்கு சொந்தமான தென் அமெரிக்க குடியேற்றங்களில் நடைபெற்ற கிளர்ச்சிகளைப் பற்றி விவாதிக்கப்பட்டன.

c) மத்திய தரைக்கடலில் வட ஆப்பிரிக்க பார்பரீக் கொள்ளைக்காரர்கள் தொல்லை கொடுத்து வந்தார்கள். இவர்களின் கொளைள்ளைகளை தடுப்பதற்கு அனைத்து நாட்டு படைகளை அனுப்ப வேண்டுமென ரஷ்யா கோரியது. இதற்கு இங்கிலாந்து மறுப்பு தெரிவித்தது.

“எய்லா-ஷப்பேல் மாநாட்டைப் போல ஒரு அழகிய மாநாட்டை நான் இதுவரை கண்டதில்லை” என்று மெட்டர்னிக் கூறியுள்ளார்.

**2.த்ரோபா மாநாடு**

இம்மாநாடு ஆஸ்திரியாவிலுள்ள த்ரோபா என்ற இடத்தில் 1820-ல் நடந்தது. ஸ்பெயின், போர்ச்சுக்கல், நேப்பிள்ஷஸ் போன்ற நாடுகளில் புரட்சிக் கருத்துக்கள் தோன்றின. ஜனநாயகத்தை விரும்பியும், தாராள கொள்கைகளை நிலைநிறுத்தவும் மக்கள் புரட்சி செய்தனர். இதை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பதில் உறுப்பு நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடு எழுந்தது. ரஷ்யா தன்னுடைய படைகளை புரட்சியாளர்களை அடைக்குவதற்கு ஸ்பெயினுக்கு அனுப்பியது. இதை ஆஸ்திரியாவின் மெட்டர்னிக் கடுமையாக எதிர்த்தார். கிளர்ச்சியை அடைக்குவதற்கு கூட்டணிப் படைகளை அனுப்ப வேண்டுமென மெட்டர்னிக் கூறினார். ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது கூடாது என்று இங்கிலாந்து எதிர்ப்பு தெரிவித்தது. இதன் விளைவாக ஐவர் கூட்டணியில் பிளவு ஏற்பட்டது. ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஒரு பக்கமும் பிரான்சு, இங்கிலாந்து மற்றொரு பக்கமும் பிரிந்து நின்றன. பின்னர் மூன்று நாடுகளும் சேர்ந்து த்ரோபா ஒப்பந்தத்தில் கையெமுத்திட்டன. இரண்டாவது அணியிலுள்ள இரண்டு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. இவ்வாறு ஐவர் கூட்டணி இரண்டாக பிரிந்தது.

**3. லெய்பாக் மாநாடு**

இந்த மாநாடு லெய்பாக் என்ற இடத்தில் 1821-ம் ஆண்டில் கூடியது. இதில் பிரிந்த ஐந்து நாடுகளும் மீண்டும் ஒன்று கூடின. பீட்மண்டுவிலும், நேப்பிள்சிலும் புரட்சிகள் தோன்றின. இந்த புரட்சியை தடுக்க ஆஸ்திரியா தன்னுடைய படைகளை அனுப்ப வேண்டுமென்று மற்ற நான்கு நாடுகளும் கேட்டுக் கொண்டது. இதன்படி நேப்பிள்ஸ் பெர்டினண்டு என்பவர் மன்னராக்கப்பட்டார்.

### 4. வொரோனா மாநாடு

ஐவர் கூட்டணியின் நான்காவது மாநாடு 1822-ம் ஆண்டு இத்தாலியிலுள்ள **வொரோனா** என்ற இடத்தில் நடந்தது. கிரேக்கர்கள் துருக்கி சுல்தானுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். இந்த கிளர்ச்சியை ஒடுக்குவதற்கும், துரக்கி சுல்தானுக்கு ஆதரவாகவும் ரஷியா தன்னுடைய படையை அனுப்ப விரும்பியது. இதற்கு மெட்டர்நிக் எதிர்ப்பு தெரிவித்தார். மேலும் இங்கிலாந்தும் மெட்டர்நிக்கை ஆதரித்தது. இதனால் கிரேக்கர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. இந்த பிரச்சினை வெரோனா மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

வெரோனா மாநாடு ஸ்பெயினில் 1820-ல் ஏற்பட்ட புரட்சியை பற்றி விவாதித்தது. ஸ்பெயின் மன்னர் ஏழாம் பெர்டினாண்டு தன் மக்களுக்கு எதிராக பிரான்சின் உதவியை கோரினார். எனவே தான் ஸ்பெயினில் தலையிட்ப போவதாக வெரோனா மாநாட்டில் பிரான்சு கூறியது. மற்ற நாடுகளின் தார்மீக ஆதரவையும் பிரான்ஸ் கோரியது. இங்கிலாந்தை தவிர மற்ற மூன்று நாடுகளான பிரஷ்யா, ரஷ்யா, ஆஸ்திரியா பிரான்சை ஆதரித்தன. கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் பிரான்ஸ் தன் விருப்பத்தை விடவில்லை. இதனால் இங்கிலாந்து வொரோனா மாநாட்டிலிருந்து வெளிநடப்பு செய்தது. இங்கிலாந்தின் எதிர்ப்பையும் மீறி 1822-ம் ஆண்டு ஸ்பெயின் மீது பிரான்ஸ் தன் படைகளை ஏவி முடியாட்சியை நிலைநாட்டியது. தாராள கருத்துக்களை விரும்பிய ஸ்பெயின் மக்களின் ஆசை நிராசையானது.

### கூட்டணி நாடுகளின் தோல்விக்கு காரணங்கள்

a) ஐந்து கூட்டணி நாடுகளில் ஆஸ்திரிய, ரஷ்யா, பிரஷ்யா பிரான்சு நாடுகள் தாராளெ கோட்பாட்டை வெறுத்தன. சுதந்திரம், சமத்துவம் ஆகிய கொள்கையை அறவே வெறுத்தனர். எதிர்த்தனர். ஆனால் மாறாக இங்கிலாந்து தாராள கோட்பாட்டை வலியுறுத்தியது. இவ்வாறு கூட்டணி நாடுகளில் மாறுபட்ட கருத்துக்கள் தோன்றின.

b) ஐந்து நாடுகளைக் கொண்ட இவ்வணி, மற்ற நாடுகளை பற்றி எள்ளளவும் எண்ணிப் பார்த்ததில்லை. பொருளாதாரத்தில் பின்தங்கிய எத்தனையோ நாடுகளை பற்றி இவ்வணி கண்டு கொள்ளவில்லை. இதனால்இவ்வணிக்கு பிற ஐரோப்பிய நாடுகள் ஆதரவு கொடுக்கவில்லை.

c) கூட்டணி நாடுகளுக்கிடையில் ஒற்றுமை இல்லை. உதாரணமாக துருக்கிக்கு எதிராக கிளர்ச்சி செய்த கிரேக்கர்களை அடக்க ரஷியா விரும்பியது. ஆனால் இங்கிலாந்து அதை எதிர்த்தது. ஸ்பெயின், போர்ச்சுக்கல் நேப்பிள்ஸ் ஆகிய நாடுகளில் தாராளக் கொள்கைக்காக மக்கள் புரட்சியை ஏற்படுத்திய போது, அப்புரட்சியை அடக்க ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் கூட்டணிப் படையை அனுப்ப வேண்டும் என கூறியது. பிரான்சும், பிரிட்டனும் கூட்டணி படைகளை அனுப்பக்கூடாது என எதிர்த்தது. இதனால் ஐவர் கூட்டணியில் இரு பிளவுகள் ஏற்பட்டது.

d) இந்த நாடுகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் பின்னால் தோன்றிய சர்வதேச சங்கம், ஐக்கிய நாட்டுசபை இவைகளுக்கு முன்னோடியாக கூட்டணி நிகழ்நதது.

e) மாநாடு தோல்விக்கு முக்கிய காரணம் இங்கிலாந்து மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டது. உள்நாட்டு விவகாரங்களில் பிறநாடுகள் தலையிடுவதை இங்கிலாந்து வெறுத்தது. எனவே மாநாட்டில் ஒத்த கருத்துக்கள் உருவாகவில்லை.

f) இந்த மாநாடு மக்களுடைய உரிமைகளை நசுக்குவதையே முக்கிய குறிக்கோளாக செயல்பட்டது. இதை இங்கிலாந்து எதிர்த்தது. சிறிய நாடுகளும் எதிர்த்தன. எனவே இவைகள் எந்த வேகத்தில் மறையத் தொடங்கின.

## மெட்டர்னிக் (1773-1859)

இளவரசர் மெட்டர்னிக் 1773-ல் ஒரு ராஜதந்திர குடும்பத்தில் பிறந்தார். ஒரு ராஜதந்தரி என்பதை தனக்கு வயது வந்தபொழுது நிரூபித்தார். ஆஸ்திரிய நாட்டு மரியதெரசாவின் புகழ்மிக்க அமைச்சராகிய **கவுண்ட் கவுநிட்ஸ்**என்பவரின் பேத்தியை மணந்தார். இவர் தம்முடைண திறமையால் ஆஸ்திரியாவின் சான்சலராக (முதலமைச்சர்) 1809-ல் பதவியேற்று அதிலேயே நாட்டைவிட்டு 1848-ல் வெளியேறும் வரை தொடர்ந்து பணியாற்றினார். பிரான்சுக்கு எதிராக 1813-ல் நான்காவது கூட்டை அமைப்பதிலும், லீப்சிக் போரில் நெப்போலியனை தோற்கடிப்பதிலும் இவர் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்.

1815-லிருந்து 1848 வரையிலான ஐரோப்பிய வரலாறு மெட்டர்னிக் சகாப்தம் எனப்படுகிறது. இக்கால கூட்டத்தில் மாபெரும் ராஜதந்திரியாக அவர் திகழ்ந்தார். இவர் ராஜதந்திரத்தில் ஒரு மன்னர். ஐரோப்பிய அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் மாபெரும் பொறுப்பை தாம் சுமந்து கொண்டிருப்பதாக நினைத்தார்.

### மெட்டர்னிக்கின் கொள்கைகள்

1. ‘‘ஐரோப்பிய மக்கள் இப்போது விரும்புவது சுதந்திரத்தை அல்ல. அமைதியைத்தான்’’ என்று உறுதியாக நம்பிய மெட்டர்னிக் அமைதியை நிலை நாட்டுவதைக் தம் முதல் குறிக்கோளாக கொண்டார்.
2. பிரெஞ்சு புரட்சியினால் ஏற்பட்ட குழப்பங்களையும் படுகொளைகளையும், போர்களையும் நேரில் கண்ட மெட்டர்னிக் அரசியல் புரட்சிகளை அறவே வெறுத்தார். புரட்சி என்பது ‘‘ஒழிக்கப்பட வேண்டிய நோய், அணைக்கப்பட வேண்டிய எரிமலை, சமுக அமைப்பை விழுங்கத் தடைகளை அகலவிரிக்கும் அசுரப்பிறவி’’ என்று கருதினார். எனவே அரசியல் புரட்சியை ஒடுக்குவதை தன்னுடைய இரண்டாவது முக்கியகொள்கையாக கொண்டார்.
3. அமைதியை நிலைநாட்ட, இன்றைய நிலையே என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும். பழைமைப் பண்பாடுகளைப் போற்ற வேண்டும். மாறுதல்களே வேண்டாம் என்பது அவரது மூன்றாவது கொள்கையாக இருந்தது.
4. தாராள முற்போக்கு சீர்திருத்தங்கள் புரட்சிக்கு வழிவகுக்கும், ஆதலால் அவைகள் கைவிடப்பட வேண்டும் என்பது அவருடைய நான்காவது கோட்பாடாக இருந்தது.
5. பலமொழி இன தேசிய மக்களை கொண்டிருந்த ஆஸ்திரிய பேரரசின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவது அவரது இறுதி கொள்கையாக இருந்தது. எனவே தேசிய இனங்களின் எழுச்சியை ஒடுக்குவது தம் கடமையாக கருதினார்.
6. நாட்டுப்பற்று, தாராளகொள்கை ஆகிய இரட்டைக் கொள்கைகளின் மீது இரட்டை தாக்குதல் நடத்துவது தான் நடைமுறையில் ‘‘மெட்டர்னிக் முறை’’ எனப்படும். மேலும் புரட்சிக்கரமான மேற்கு, பிற்போக்கான கிழக்கு என ஐரோப்பா இரு பிரிவுகளாக பிரிந்து இருப்பதையும் கண்ணுற்றார் மெட்டர்னிக். பிற்போக்கு கொள்கையின் காவலன் என்ற முறையில் ஆஸ்திரியாவை அதிகப்படியான பழங்காலப் பற்றுகளடங்கிய பிற்போக்கு தன்மையின் இருப்பிடமாக மாற்றினார்.
7. வியன்னா மாறாட்டு அரசியல் தந்திர வல்லுநர்களை பொறியிலிட்டு அடைக்க வலைவிரித்தார். அந்த வலையில் பல நாட்டு தலைவர்கள் விழுந்தனர்.
8. வியன்னா மாநாட்டிற்கு பிறகு ஐரோப்பிய பொதுசங்கத்தை நிறுவினார்.
9. தன்னுடைய திறமைமிக்க அரசியல் தந்திரத்தால் புரட்சிபாங்கான பிரான்சிடமிருந்து பிற்போக்குப் பற்றுடைய ஆஸ்திரியாவிற்கு ஐரோப்பிய தலைமை பீடத்தை மாற்றினார்.

### மெட்டர்னிக்கும்- வியன்னா மாநாடும்

நெப்போலியன் வீழ்ச்சிக்கு பிறகு ஐரோப்பிய ராஜதந்திரிகள் கூடிய வியன்னா மாநாட்டிற்கு தலைமை தாங்கும் தகுதியும் பெருமையும் பெற்றார். ‘‘மின்னும் வியன்னா நீர்கழலில் மீனைப் போல லாவகமாக நீந்தினார்.’’ அவரது சாதுரியமான பேச்சுக்களும், நெகிழ்ந்து கொடுக்கும் போக்கும் மாநாட்டை வெற்றிகரமாக்கியது. புரட்சிக்கு முன்பிருந்த பழைமை நிலையையே மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என தாம் விரும்பியதை செயல்படுத்திக் காண்பித்தார்.

இம்மாநாடு ஐரோப்பிய அரசியல் நோய்க்கு மருந்தாக அமையவில்லை என்றாலும் மெட்டர்னிக் ஆஸ்திரிய நலன்களைப் பாதுகாத்துக் கொண்டார். எல்லாவற்றின் மேலாக ஆஸ்திரியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட வியன்னா மாநாட்டில் இராஜதந்தந்திரத்துடன் செயல்பட்டார். அதன்பயனாக

1.தொலைவிலுள்ள தொல்லை மிகுந்த பெல்ஜியத்தை ஹாலந்துக்கு இழப்பீடாக கொடுத்துவிட்டு அருகிலுள்ள வளமான லம்பார்டியையும் வனப்பு மிகுந்த வெனிஷியாவையும் ஆஸ்திரியா பெற்றது.

2.டுஸ்கனே, பார்மா, மொடினா ஆகியவற்றின் அரியணைகளில் ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் மரபை சார்ந்த கோமகன்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்.

3.ஹேப்பினஸ், சிசிலி அரியணையில் போர்போன் மரபைச் சேர்ந்த பெர்டினாண்டு அமர்த்தப்பட்டார். அவருடன் அமட்டர்னிக் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார்.

4. ஜெர்மனியில் ரைன் கூட்டமைப்பு ஜெர்மன் கூட்டமைப்பாக மாற்றப்பட்டு, ஆஸ்திரியா தலைமையின் கீழ் கொண்டு வந்தார்.

5. இத்தாலியின் ஒற்றுமையை கலைப்பதற்கு இவர் மேலும் இத்தாலியை பல பிரிவுகளாக பிரித்து அதை வெறும் ‘‘நிலவியல்’’ சொல்லாக்கினார்.

6. ஜேர்மனியில் ஆஸ்திரியாவின் செல்வாக்கை மேலும் ஓங்கச் செய்தார்.

இவ்வாறு தமக்கே உரிய ராஜதந்திரத்துடன் செயல்பட்டு இத்தாலியிலும், ஜெர்மனியிலும் ஆஸ்திரிய ஆதிக்கச் செல்வாக்கை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றார்.

**மெட்டர்னிக்கும் ஐரோப்பிய பொதுசங்கமும் (1815)**

மெட்டர்னிக் நாட்டுப்பற்று, தாராளக்கொள்கைஆகிய சக்திகளை நசுக்குவதற்கு நான்குபேர் கொண்ட பொதுசங்கத்தை நிறுவி அதை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டார். புரட்சிக் கருத்துக்கள் புதுப்பிக்கபடுவதையும், பரசுவதையும் தடுக்க நான்கு பெரிய வல்லரசுகள் (ஆஸ்திரியா, ரஷியா, பிரஷியா, இங்கிலாந்து) அடங்கிய ‘‘நால்வர் உடன்பாட்டை’’ மெட்டர்நிக் தலைமையின் கீழ் 1815-ல் ஏற்படுத்தினார். துங்களுக்குள் ஏற்படும் பொது பிரச்சினைகளை அலசி ஆராய ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும் என்றும் அந்த நால்வர் உடன்பாட்டு அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒப்புதல் அளித்தனர். இவ்வாறாக ஐரோப்பிய பொதுசங்கம் தோன்றியது.

எய்-லா-சப்பேல் என்ற இடத்தில் கூடிய முதல் மாநாட்டிலேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இம்மாநாட்டில் பிரான்ஸ் சேருவதை மெட்டர்னிக் ஆதரித்தார். அதே சமயம் பிரான்சிற்கு எதிராக நால்வர் கூட்டை வலுப்படுத்தவும் தவறவில்லை. இம்மாநாட்டில் நாடுகளின் எல்லைக் கோடுகள் பற்றிய முன் நிலைமையை ஆதரிக்கும்

எந்த திட்டத்தையும் பிரிட்டன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு நாட்டில் புரட்சி வெடித்து கிளம்பினால் அந்நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் வல்லரசுகள் தலையிடுவது நியாயம் என அறிவிக்கும் **டிராப்பா சாசனம்** டிராப்பாவில் நடந்த இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. உள்நாட்டு விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடுவது தவறு என பிரிட்டன் வன்மையாக எதிர்த்தது. பிரிட்டன் எதிர்த்த போதிலும் ஏனைய வல்லரசுகள் அதை ஒத்துக் கொண்டன. நேப்பிள்ஸில் ஏற்பட்ட கலகத்தை அடக்க மெட்டர்னிக் இக்கொள்கையை கடைபிடித்தார். வொரானாவில் கூடிய இறுதி மாநாட்டில் பிரிட்டன் இதிலிருந்து விலகியதால் பொதுசங்கமு் சிதறுண்டது.

**மெட்டர்னிக்கும் - ஜெர்மனியும்**

ஐரோப்பிய அரசியலில் ஒப்பற்ற தலைவராக 1815 முதல் 1848 வரை மெட்டர்நிக் விளங்கியதால் இவரை **ஐரோப்பாவின் தலைமை அமைச்சர்** என அழைத்தது முற்றிலும் பொருத்தமே. இவர் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார். ஏனைய நாடுகளிலும் தம் செல்வாக்கு ஏற்பட வழிவகை செய்தார். ஈஸ்திரியாவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் ஜெர்மானிய இணைவை வியன்னா மாநாடு கொண்டு வந்தது. புரட்சி போராட்டம்ஜெர்மனியில் தோன்றுவதற்கான அறிகுறிகள் விரைவில் தென்பட்டன. இப்புரட்சி போராட்டம் ஜெர்மனியில் ஒரு மாணவப் பிரிவால் உருவாக்கப்பட்டது. இப்பிரிவு ஜெர்மனியில் பல அட்ரூழியங்களைச் செய்தது. இதன் விளைவாக பவேரியா, பேடன், பூட்டம்பர்க் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்கள் தம் மக்களுக்கு தாராள தன்மைக் கொண்ட அரசியல் அமைப்புகளை வழங்கினார். ஜெர்மானிய இளவரசர்கள் கூட்டம் ஒன்றை 1819-ல் கால்பர்டில் கூட்டி கால்பர்ட் ஆணைகளை வரைந்து அதனை ஜெர்மானிய சபையில் நிறைவேற்றினார். புரட்சிக்கு காரணமாக இருந்த மாணவர் பிரிவை அவ்வாணை சட்டவிரோதம் என அறிவித்தது. அரசாங்க அனுமதியின்றி மாணவர்கள் கழகங்கள் அமைப்பது தடுக்கப்பட்டது. பத்திரிக்கைகள் கடுமையாக தணிக்கை செய்யப்பட்டன. பல்கலைகழகங்கள் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு ஜெர்மானிய விவகாரங்களை மெட்டர்னிக் தம்முடைய முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

**மெட்டர்னிக்கும் - இத்தாலியும்**

மெட்டர்னிக்கின் தலைமையின் கீழ் இயங்கிய வியன்னா மாநாடு இத்தாலிய ஒருமைப்பாட்டை சீர்குலைத்தது. இத்தாலியிடமிருந்து லம்பார்டி, வெனிஷியா ஆகியவற்றை பறித்துக் கொண்டார். டஸ்கனே, பார்மா, மொடினா ஆகிய நாடுகளின் அரியணைகளில் ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் அரசு குடும்பத்தினரை அமர்த்தினார். 1820-ல் நேபிள்ஸில் ஒரு கலகம் மூண்டது. மெட்டர்னிக் நேப்பிள்ஸின் அரசரான முதலாம் பெர்டினண்டுக்கு அந்த கலகத்தை அடக்க உதவிபுரிந்து அவரை மீண்டும் பதவியில் அமர்த்தினார். 1821-ல் பீட்மண்டிலும் கலகம் ஏற்பட்டது. நேப்பிள்சில் இருந்து திரும்பிய ஆஸ்திரியப் படைகள் அந்த கலகத்தையும் அடக்கின. மேட்டர்னிக்கின் பிற்போக்கு கொள்கையின் விளைவாக இத்தாலி இவர் கரங்களில் வீழ்ந்தது. ‘‘வெற்றியுடன் திகழ்ந்த பிற்போக்கு தன்மை கொண்ட ஆஸ்திரிய ரதத்தின் பின்னால் இத்தாலி கை, கால்கள் கட்டுண்டு கிடந்தது’’ என்று ஹேயஸ் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

**மெட்டர்னிக்கும் - ஸ்பெயினும்**

வியன்னா ஒப்பந்தம் ஏழாம் பெர்டினாண்டை 1815-ல் ஸ்பானிய அரியணையில் மீண்டும் அமர்த்தியது. அவர் 1812-ல் ஏற்பட்ட தாராளத்தன்மை கொண்ட அரசியலமைப்பில் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். அவரது சர்வாதிகார ஆட்சி 1820-ல் ஒரு கலகம் ஏற்படுவதற்கு வழிகோலியது. ஸ்பெயின் நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்துவதற்கு வெரோனா மாநாட்டில் மெட்டர்னிக் பிரெஞ்சு நாட்டு 18-ம் லூயியைத் தூண்டினார். பிரான்சின் உதவியால் ஸ்பெயினில் அமைதி ஏற்படுத்தப்பட்டது.

**மெட்டர்னிக்கும் - பிரான்சும்**

புரட்சிக்கரமான பிரான்சின் மீது கபட ராஜதந்திரியாகிய மெட்டர்னிக் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருந்தார். பிரான்ஸ் மறுபடியும் கிளர்த்தெழுவதை தடுக்க, இவர் வியன்னா மாநாட்டு அங்கத்தினர்களை வற்புறுத்தி பிரான்சின் எல்கை நாடுகளைப் பெரிதாகவும், வலிமை மிக்கதாகவும் மாற்றினார். இவரது செல்வாக்கினால் தான் ஹாலந்து பிரஷியா, சுவிடர்லாந்து, பீட்மண்ட் ஆகிய வலுவுள்ள நாடுகள் உருவாகின. நூல்வர் உடன்பாட்டில் பிரான்சையும் இவர் சேர்த்ததால் அது ஐவர் உடன்பாடாக மாறியது.

**மெட்டர்னிக்கும்-ரஷியாவும்**

சார் முதலாம் அலெக்சாந்தர் முதலில் தாராளக் கொள்கையுடையவராக இருந்தார். ஆனால் வெகு சிரையில் மெட்டர்னிக்கின் வசீகர வார்த்தைகளுக்கு வசப்பட்டு தாராள தன்மைக் கொண்ட சீர்திருத்தங்களை பின்வாங்கி கொண்டார். கிரேக்கர்கள் துருக்கியரின் கொடுமைகளுக்கு எதிராக கலகம் செய்தபோது அந்த வசிய சக்தியே சார் மன்னர் உதவி புரிவதை தடுத்து நிறுத்தியது.

**மெட்டர்னிக்கும் - பிரிட்டனும்**

நெப்போலியனை தேற்கடிக்க மெட்டர்னிக்கும் பிரிட்டனின் **காசில்ரீயும்** இணைந்தனர். இந்த இணைவு வியன்னா மாநாட்டில் மேலும் இறுக்கமாயிற்று. இதனால் நால்வர் உடன்பாட்டில் பிரிட்டன் ஓர் அங்கத்தினராகியது. கருத்து வேறுபாடு முதலில் கூடிய எய்-லா-சப்பேலில் தோன்றியது. நாடுகளின் எல்லைக் கோடுகள் பற்றிய முன்னிலையை ஆதரிக்கும் திட்டத்தை பிரிட்டன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு நாட்டில் புரட்சி ஏற்பட்டால் அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடுவது நியாயம் என அறிவிக்கும் **டிராப்பா சாசனம்** ரொப்பாவில் நடந்த இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இதை பிரிட்டன் கடுமையாக எதிர்த்த போதிலும் ஏனைய வல்லரசுகள் அதை ஒத்துக் கொண்டன. நேப்பிள்ஸ் ஏற்பட்ட கலகத்தை அடக்க மெட்டர்னிக் இக்கொள்கையை கடைபிடித்தார். ஸ்பெயினில் பிரான்சின் ஆயுதமேந்திய தலையீட்டை வொரானாவில் கூடிய மாநாடு அனுமதித்ததால் பிரிட்டன பொதுசங்கத்திலிருந்து விலகியது. இவ்வாறு பொதுசங்கம் காகித ஓடத்தின் கதிபோல் ஆனது.

**மெட்டர்னிக்கும் - ஆஸ்திரியாவும்**

ஆஸ்திரிய ஹங்கேரியில் மெட்டர்னிக் கொரூரமான பிற்போக்கு கொள்கையைப் பின்பற்றினார். தன்னுடைய நாட்டில் தாராளத்தன்மை நாட்டுப்பற்று ஆகிய சக்திகளை நசுக்கினர். புத்திரிக்கை சுதந்திரம் தணிக்கை செய்யப்பட்டது. இவர் திறமைமிக்க

ஒற்றர்படை ஒன்றை வைத்திருந்தார். புரட்சி கருத்துக்கள் பிரான்சிலிருந்து ஊடுருவதை தடுக்க இவர் அதிக காப்பு வரிகளை விதித்தார். இக்கொள்கையால் ஆஸ்திரியாவின் வணிகத்தையும், தொழிலையும் மிகவும் பாதித்தது. ஆஸ்திரியாவை பிற்போக்காளர்களின் கோட்டையாக மாற்ற வேண்டும் என்ற ஆசையில் இவர் சுதந்திரத்தை நசுக்கினார். மனசாட்சியை மூடி மறைத்தார்.

**மெட்டர்னிக்கின் வீழ்ச்சி**

1848 பிப்ரவரியில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சி ஆஸ்திரியாவிலும் எதிரொலித்தது. வியன்னா நகரில் பல்கலைகழக மாணவர்களும், தொழிலாளர்களும் கிளர்த்தெழுந்தனர். தாராள அரசியலமைப்புக் கோரியும் மெட்டர்னிக்கை பதவி நீக்கம் செய்யக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அது கண்டு அதிர்ச்சியடைந்த மெட்டர்னிக் பதவியை துறந்து லண்டனுக்கு ஓட்டம் பிடித்தார்.

## 9.1830-ம் ஆண்டு புரட்சி

சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் கோரி பிரான்ஸ் மக்கள் 1789-ல் புரட்சி செய்தனர். தங்கள் கோரிக்கைகளில் வெற்றிப் பெற்றனர். நெப்போலியன் ஆட்சிவ ீழ்ச்சியுற்றபின் 1815-ல் வியன்னாவில் மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டின் முடிவின்படி மீண்டும் போர்பான் வம்ச மன்னரான 18-ம் லூயி மன்னராக்கப்பட்டார். அவரது காலத்தில் மக்கள் விருப்பத்தை நிறைவேற்ற பட்டயச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் அவரை பின்பற்றி ஆட்சிக்கு வந்த 10-ம் சார்லஸ் 1824-30) சர்வாதிகாரத்தை கடைபிடித்தார். அதனால் பிரான்சில் மீண்டும் பெரும்குழப்பம் நிலவியது. இதனால் புரட்சி வெடித்தது.

**வியன்னா மாநாடு எதிர்நோக்கிய பிரச்சினைகள்**

வாட்டர்லூ போரின் இறுதியில் கூட்டப்பட்ட வியன்னா மாநாட்டில் பிரான்சில் மீண்டும் போர்பான் வம்சமே ஆட்சி புரிய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பிரெஞ்சு புரட்சியின் போது தப்பி ஓடிய 18-ம் லூயி திரும்ப அழைக்கப்பட்டு பிரான்சில் மன்னராக்கப்பட்டார்.

**பதினெட்டாம் லூயி**

பிரெஞ்சுப் புரட்சியின் பொழுது பிரான்ஸ் இருந்த நிலை வேறு. பிரெஞ்சு புரட்சியின் பொழுது தங்கள் உடைமைகளை விட்டு சென்ற பிரபுக்கள், செல்வந்தர்கள் முதலானோர் மன்னரை ஆதரித்தனர். அவர்கள் தங்கள் உடைமைகளை மீண்டும் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் மன்னருடன் திரும்பி வந்தனர். ஆனால் அவர்கள் திரும்பி வரும்பொழுது கிளர்ச்சி செய்தோர் அவர்களின் நிலங்களையும், இல்லங்களையும் கைப்பற்றி இருந்தனர். அவற்றை தங்களது உடைமை என்று கூறித் திரும்ப அளிக்க மறுத்தனர். ஆனால் அவற்றை தங்களுக்கே திரும்பத் தரவேண்டும் என்று மன்னருடன் வந்தோர் கூறினர். முன்னர் செய்வதறியாது திகைத்தார்.

**புதிய அரசியலமைப்பு சாசனம்**

புதிய சீர்திருத்தங்களை மன்னர் புகுத்துவதன் மூலம் நிலைமையை சமாளிக்கலாம் என்று பலர் கூறினர். ஆதன்படி 1817 ஜீன் 4-ல் புதிய அரசியலமைப்பு சாசனம் வெளியிடப்பட்டது.

1. பிரான்சிற்கு ஒரு பாராளுமன்றம் அமைக்க வழிசெய்யப்பட்டது. அதில் இரண்டு சபைகள் இருக்கும். **பிரபுக்கள் சபை, மக்கள் சபை.**
2. பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களை மன்னரேநியமனம் செய்வார். இரண்டாம் சபையின் உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும். ஆணினும் 94000செல்வந்தர்களுக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆண்டுக்கு 1000 பிராங்குகள் நேர்முக வரிசெலுத்துவோர் மட்டுமே பொதுமக்கள் சபைக்கு தேர்தலில் நிற்க முடியும். 300 பிராங்குகள் நேர்முக வரி செலுத்துவோர் மட்டுமே தேர்தலில் வாக்களிக்க முடியும் என்று இந்த சாசனம் கூறியது.
3. அனைத்து சட்டங்களும் அரசாலே கொண்டு வரப்படும் அவற்றை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோமட்டுமே சட்டமன்றத்துக்கு உரிமையுண்டு. அதே சமயம் சட்டத்தின் அனுமதியின்றி வரி எதுவும் விதிக்கப்படாது.
4. மக்கள் அனைவரும் சமம் என்று அறிவிக்கப்பட்டது. விசாரணையின்றி யாரையும் சிறையில் அடைக்கப்பட மாட்டார்கள்.
5. பிரபுக்களுக்கு எவ்வித சிறப்புரிமைகளும் கிடையாது.
6. அதிகாரிகளை நியமிப்பது, வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வது, தேவையற்றோரை நீக்குவது, அவசர சட்டங்களை வெளியிடுவது போன்ற அதிகாரங்கள் மன்னரிடமே இருந்தன.
7. மக்களுக்கு சமத்துவம் கொடுக்கப்பட்டதோடு எழுத்து சுதந்திரமும் கொடுக்கப்பட்டது.
8. பிரான்சில் அப்பொழுது பல கட்சிகள் தோன்யிருந்தன. அவற்றின் கோரிக்கைகளும் பலவாக இருந்தன.

1. **மிதவாத பிரபுக்கள் கட்சி**
   பிரான்சில் தாராள நோக்கங்களை கொண்ட ஆட்சியை ஏற்படுத்துவதில் மிதவாதக்கட்சி குவனும் சேுலதுதீயுத. மக்களின் உரிமைகளை நசுக்கும் அரசின் அதிகாரத்தை எதிர்த்து இக்கட்சியினர் புரட்சி செய்ய துடித்தனர்.
2. **குடியரசு கட்சி**
   இக்கட்சி மக்கள் சக்திக்கு உரிமை கொடுத்து குடியாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றது. மன்னர் ஆட்சியை அகற்ற வேண்டும் என்றும் கூறியது.
3. **தீவிரவாத கட்சியினர்**
   இவர்கள் மன்னரை ஆதரித்தனர். இக்கட்சியில் பிரெஞ்சு புரட்சியின் போது தலைவெட்டு பொறிக்கப்படாமல் தப்பி ஓடிய பிரபுக்கள், குருமார்கள் மற்றும் பலர் இருந்தனர். பதினெட்டாம் லூயின் தம்பியான **அர்தவா பிரபு** இக்கட்டசியின் தலைவராக இருந்தார். இதனை முடியரசு கட்சி என்றும் கூறுவர்.
4. **தாராளக் கட்சியினர்**
   முடியாட்சியை விரும்பினர். ஆனால் அரசியலமைப்பின் அடிப்படையில் முடியாட்சி இருக்கும்படி அமைக்க விரும்பினர்.
5. **போனபார்ட் கட்சி**
   இக்கட்சியினர் நெப்போலியனின் புகழ்பாடி அவரை நினைவு கூர்ந்தனர். நெப்போலியனின் சாதனைகளை பறைசாற்றினர். மேற்கூறப்பட்ட கட்சியினர் இருபிரிவுகளாகப் பிரிந்து மக்களுக்கு உரிமை கோரியும், பழைமையை நிலைநாட்டக் கூறியும் போராட ஆரம்பித்தனர். இவர்களில் முடியாட்சி கட்சியினர் வெற்றிப் பெற்றனர். ஆனால் இத்தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக பிற கட்சியினர் குழப்பம் விளைவித்தனர். கிளர்ச்சிகள் நாடு முழுவதும் பரவியதால் படுகொலைகள் நடந்தன. இதனை **வெண்மைப்புரட்சி** அல்லது **வெண்மை பயங்கர ஆட்சி** என்று கூறுவர். குழப்பம் உச்சநிலையை அடைந்தால் மீண்டும் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் மிதவாத பிரபுக்கள் கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தனர். ரீசல்யூ தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்த மிதவாதிகளின் ஆட்சிக் காலத்தில் (1816-1820) பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. வணிகம் மேன்மையுற்றது. வியன்னா மாநாட்டில் விதிக்கப்பட்ட போர் நஷ்ய ஈட்டுத் தொகை முழுவதும் செலுத்தப்பட்டது. கூட்டணி நாட்டு படைகள் திரும்ப சென்றன. கருவூலத்தில் அதிக அளவு பணம் சேர்ந்தது. வெளிநாட்டு உறவில் பிரான்சின் மதிப்பு உயர்ந்திருந்தது. இராணுவம் மேன்மையுற்றிருந்தது. 1818-ல் கட்டாணத்தின் பேரில் தலைமை அமைச்சர் **ரிசல்யூ** இராஜினமா செய்தார்.

**வில்லேலி**

டிகாசலைப் பின்பற்றி வில்லேலி என்பவர் தலைமை அமைச்சரானார். பதினெட்டாம் லூயிக்கு அப்போது 66 வயது. தள்ளாத வயதில் 27 வயது நிரம்பிய மங்கை ஒருவளிடம் காதலில் கட்டுண்டார். அதிகாரம் அனைத்தையும் அவளது காலடியில் கிடத்தி கிடத்தி ஆட்சி பொறுப்பை மறந்தார். 16-ம் லூயி போல அந்தபுரத்திலே காதலில் மயங்கி கிடந்தார். அவளது சொல்லை கேட்டுதான் வில்லேலை லூயி தலைமை அமைச்சராக்கினார். வில்லேல் ஒரு தீவிரவாதி. புழமையை மீட்க விரும்பினார். புரட்சிகர சீர்திருத்தங்களை செய்து பிரான்சின் பெருமையை உயர்த்தினார். 1824-ல் நடந்த தேர்தலில் தீவிரவாதிகள் பெரும் வெற்றி பெற்றனர். 430 இடங்களில் 15 இடங்களை மட்டும் மிதவாதிகள் கைப்பற்றினர். இந்த நேரத்தில் 18-ம் (1824) லூயி மரணம் அடைந்தார்.

**பத்தாம் சார்லஸ் (1824-1830)**

18-ம் லூயியை பின்பற்றி அவரோட சகோதரான ஆர்த்தாயிஸ் பிரபு **பத்தாம் சார்லஸ்** என்ற பட்டத்தோடு அரசரானார். புரட்சிக்கு முந்திய பூர்போன் எதேச்சதிக்காரத்தை மீண்டும் நிறுவ வேண்டும் என்ற நோக்குடையவர் இவர். வில்லேல் தொடர்ந்து தலைமை அமைச்சராக இருந்தார். இவர் ஆட்சிக்கு வந்ததும் ஆடம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார். குருமார்களின் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்தார். அதனால் தான் குருமார்களால் குருமார்களின் மூலமாக குருமார்களுக்காக நடத்தப்படும் அரசு என்று சார்லஸ் ஆட்சியை வெலிங்டன் குறிப்பிடுகிறார்.

திருச்சபைக்கு அதிக அதிகாரம் கொடுக்கபட்டது. புரட்சியின் போது உடைமைகளை விட்டுச் சென்ற பிரபுக்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு அரசாங்க பணத்தை கொடுத்தார். ஆனால் பிரபுக்கள் அதோடு திருப்தி அடையவில்லை. தங்களிடமிருந்து திருடப்பட்ட பொருள்கள் திரும்ப அளிக்கப்பட வேண்டும் என்றனர். ஏனெனில் தேசியக் கடன் மீதான வட்டி 5% லிருந்து 3% ஆக குறைக்கப்பட்டது. இவ்வாறு செய்து பிரபுக்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதை சமதர்மம் நீதிநிலை நிறுத்தப்பட்டது என்று சார்லஸ் கூறினார். ஆனால் மக்கள் கடைத்தேங்காயை எடுத்து வழியில் போறவனுக்கு கொடுத்ததாகக் கூறினர்.

நெப்போலியனின் சிவில் சட்டத்தை மாற்றியமைத்து மூத்த மகனுக்கே தந்தையின் சொத்து முழுவதும் கொடுக்கப்பட வேண்டும் என்று வில்லேல் மாற்றியமைத்தார். ஆனால் இச்சட்டம் பாராளுமன்றத்தின் கீழ் சபையில் தோற்கடிக்கப்பட்டது. வில்லேல் மீது மக்கள் வெறுப்பு கொண்டனர். 1828-ல் அமைச்சரவை கலைக்கப்பட்டது. 1830-ம் ஆண்டு நடந்த தேர்தலில் முடியாட்சியை மட்டும் விரும்பும் தாராளக் கட்சியினர் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றனர்.

**ஜீலை பிரகடனங்கள்**

மிதவாதிகள் பெரும்பான்மை பலத்துடன் இருந்த மேல்சபையை மன்னர் கலைத்து விட்டார். பட்டய சட்டத்தின் 15-வது பிரிவை பயன்படுத்தி தனக்குள்ள தனி

அதிகாரத்தின் மூலம் 1830 ஜீலை 25-ல் நான்கு அவசரச் சட்டங்களை வெளியிட்டார். அதன்படி,

1. புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்சபை (மக்கள் சபை) கலைக்கப்பட்டது.
2. தேர்தல் முறையில் மாற்றங்களை புகுத்த வாக்காளர் எண்ணிக்கை குறைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது.
3. ஆரசாங்கத்தை குறை கூறி எழுவதைத் தவிர்க்க பத்திரிக்கைத் தணிக்கை முறை கொண்டு வரப்பட்டது.
4. சுட்ட சபையின் ஆயட்காலம் 7 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

**தீயர்ஸ்** என்ற பத்திரிக்கை இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்று உடனடியாக கூக்குரலிட்டது. அதைத் தொடர்ந்து மற்ற பத்திரிக்கைகளும் இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தது. மாணவர்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் போராட்டம் பல இடங்களில் நடைபெற்றது. தெருச்சண்டைகள் நடந்தன. தெருக்களில் போராட்டம் பரவாமல் இருக்க தடுப்பு சுவர் கட்டப்பட்டன. ஆனால் அவை உடைத்தெறிக்கப்பட்ட போதிலும் புரட்சி கட்டுக்கடங்கவில்லை. தேசிய பாதுகாப்பு படையும், இராணுவமும் புரட்சியாளர்களின் பக்கம் சேர்ந்து கொண்டது.

மீண்டும் எதேச்சதிக்காரத்தை தோற்றுவிக்க இவ்வாறு முயற்சிகள் செய்யப்படுவதைக் கண்டு மக்கள் கொதித்தனர். ஓய்வுப் பெற்ற படைவீரர்கள், தொழிலாளிகள், குடியரசுக்காரர்கள், போனாபர்ட் கட்சியை சார்ந்தவர்கள், கார்பொனாரி சங்கத்தினர் முதலிய பலரும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர். 1830 ஜீலை மாதத்தில் இப்புரட்சி ஏற்பட்டதால் ஜீலை புரட்சி என்றும் அழைக்கின்றனர். புரட்சி பிரான்ஸ் நாடு முழுவதும் பரவியதால் பாரிஸ் நகரின் தெருக்களில் மூன்று நாட்கள் சண்டை நடந்தது. இராணுவமும் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டதால் சார்லசுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் தத்தளித்தார்.

### சார்லஸ் மன்னர் முடிதுறத்தல்

நிலைகுலைந்த மன்னர் ஜீலை பிரகடனத்தை நிரும்பப் பெறுவதாக அறிவித்தார். ஆனால் நிலைமை மோசமானதால் மக்கள் அவர் பேச்சை கேட்கவில்லை. அதனால் பத்தாம் சார்லஸ் முடிதுறந்து இங்கிலாந்துக்கு தப்பி ஓடினார். ஏந்த இங்கிலாந்தை முன்பு இழிவாக பேசினாரோ அந்த இங்கிலாந்துக்கு இப்பொழுது சென்று அவர் அடைக்கலம் புக வேண்டியதாயிற்று. மக்கள் முடியாட்சியை அகற்றி குடியரசை நிறுவ வேண்டுமென்று பலர் கோரினார். இறுதியில் சட்டமன்றம் **லூாயி பிலிப்பை** அடுத்த மன்னராக்கியது. இவ்வாறு மறுபடியும் போர்போன் எதேச்சதிகார முடியாட்சியை நிறுவுவதற்காக செய்யப்பட்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டது. பிற்போக்கு எண்ணம் கொண்ட பிரபுக்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

### 1830-ம் ஆண்டு புரட்சியின் விளைவுகள்

முக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டால் அதனை கண்டு பிரான்ஸ் மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள் என்ற உண்மையை பிறநாடுகள் அறிந்தன. மக்களின் நலன் காக்கும் நாடு என்ற பெயரை பிரான்ஸ் பெற்றது. இப்புரட்சியின் விளைவாக பிரான்சின் அரசியலமைப்பில் வியத்தகு மாற்றங்கள் உடனடியாக ஏற்பட்டன. போர்பான் வம்சம் மறைந்தது. ஆர்லியன்ஸ் வம்சம் ஆட்சி பொறுப்பை ஏற்றது. நீண்டகாலமாக பறந்த போர்போன் வம்சத்தினரின் கொடி இறக்கப்பட்டது. ஆர்லியன்சின் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்க ஆரம்பித்தது.

கத்தோலிக்க சமயம் நாட்டின் பொதுசமயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டது. பத்திரிக்கை உரிமை மீட்கப்பட்டது. மன்னர் மக்களின் உரிமைகளை காப்பவராக இருக்க வேண்டும் என்று இப்புரட்சி வலியுறுத்தியது. மன்னர் சட்டம் இயற்றும் அதிகாரத்தை இழந்தார். பிரபுக்களின் சபையும், மக்கள் பிரதிநிதிகள் சபையும் அவ்வதிகாரத்தைப் பெற்றன. 1830-ம் ஆண்டு புரட்சி போலந்து, பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் பரவியது. இவ்வாறு 1830-ம் ஆண்டு நடந்த புரட்சி பிரான்சில் மட்டுமில்லாமல் பிற ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தது.

## 1848-ம் ஆண்டு புரட்சி

### லூயி பிலிப்

1830-ம் ஆண்டு ஜீலை புரட்சிக்குப் பிறகு ஆர்லியன்ஸ் கோமகனாக லூயி பிலிப் பிரான்சின் மன்னரானார். போர்போன் வம்சத்தின் ஆட்சி பிரான்சில் முடிவுற்றது. **ஆர்லியன்ஸ்** வம்ச முடியரசு என்று லூயி பிலிப்பின் ஆட்சி அமைக்கப்பட்டது. இந்த ஆர்லியன்ஸ் குடும்பமும் போர்போன்களோடு சகோதர உறவு கொண்டது தான். புகழ்மிக்க 14-ம் லூயின் (1643-1715) தம்பியான ஆலியன்ஸ் கோமகன் பிலிப் என்பவரது பேரரான லூயின் மகனே இந்த லூயி பிலிப். இவர் பிரெஞ்சு புரட்சி காலத்தில் ஆஸ்திரியாவுக்கு ஓடிப்போனார்.

அதன்பிறகு சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வாழ்நதபின் நெப்போலியனது வீழ்ச்சிக்குபின் பிரான்ஸ் திரும்பி தனது பெரும் பண்ணைகளையும் மற்ற சொத்துகளையும் மீண்டும் பெற்று பிரபுக்கள் சபையில் உறுப்பினர் ஆனார். ஏவ்வித திறமையும் இல்லாத லூயி பிலிப் 10-ம் சார்லஸ் முடிதுறந்த பிறகு மன்னராக நியமிக்கப்பட்டார். 1830 முதல் 1848 வரையில் நீடித்த இவரது ஆட்சி **“ஜீலை முடியரசு”**என்று குறிப்பிடப்படுகிறது.

போர்போன் மன்னர்களைப் போலல்லாமல் தான் ஓரளவு முற்போக்கு கொள்கை உடையவர் என்று மக்களை நம்பச் செய்யும் நோக்கத்துடன் சில நடவடிக்களை லூயி பிலிப் மேற்கொண்டார். King of France by the Grace of God என்ற போர்போன் அரசர்களின் பட்டத்தை கைவிட்டு King of the French by the will of the Nation என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார்.

### பிலிப்பின் தாராளக் கொள்கை

அவர் தன்னை மக்களில் ஒருவராகவே மக்கள் மதிக்க வேண்டும் என்றார். அரசருக்குரிய ஆடம்பரமான செங்கோலை விலக்கினார். வெண்குடைகளை நீக்கினார். தன் மனைவியை காய்கறி வாங்க தனியே கடைவீதிக்கு அனுப்பினார். துன் புதல்வர்களை பொதுமக்கள் படிக்கும் பள்ளயில் சேர்த்து பலருடன் பழகியே படிக்கச் செய்தார். அவரும் மக்களிடம் நெருங்கி பழகினார். மக்களின் அன்பு மனங்களில் இன்பத்தேன் சொரிந்தார்.

### பிலிப்பின் சீர்திருத்தங்கள்

1. சொத்தின் அடிப்படையில் வாக்களிப்பதை நீக்கினார். அதனால் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.
2. எழுத்துரிமை வழங்கப்பட்டது. பத்திரிக்கை தணிக்கை நீக்கப்பட்டது-
3. 1814-ம் ஆண்டு சாசனம் திருத்தி அமைக்கப்பட்டு மேலும் பல சலுகைகளை மக்களுக்கு வழங்கினார்.
4. 1833-ல் ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு ஆரம்பக் கல்வியை திருச்சபையின் வசம் கொண்டு வந்தார்.

5. 12 வயது வரை கட்டாய கல்வி முறை புகுத்தப்பட்டது. எட்டு வயது வரை உள்ள சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டது.
6. மேலும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் நேரம் குறைக்கப்பட்டு சீர்படுத்தப்பட்டது.
7. போப்புடன் பிலிப் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு சமயத்தின் மீதான கருத்து வேறுபாடுகள் பேச்சின் மூலமாகவே தீர்த்துக் கொண்டனர். எல்லா கட்சியை சார்ந்தவர்களுக்கும் பல புதிய பதவிகளை வழங்கினார்.

**ஜீலை புரட்சிக்கான காரணங்கள்**

**1.** ஜீலை மன்னர் என அழைக்கப்பட்டலூயி பிலிப் அவரது பதினெட்டு ஆண்டுகால ஆட்சி சாதனை மாட்சிகள் எதுவுமற்ற வெற்றுக் காகிதமாகவே காட்சியளித்தது. விறுவிறுப்பான தீவிர அரசியலில் பழகிபோன பிரெஞ்சு மக்களோடு லூயி பிலிப்பின் அரசியல் சோர்வையே அளித்தது. பிரெஞ்சு சமுதாயத்தின் அனைத்து பிரிவினரும் அதிருப்தி அடைந்தனர்.

**2.** தொழிலாளர்கள், கத்தோலிக்கர்கள், குடியரசுவாதிகள், போனாபார்டிஸ்டிகள், போர்போன் ஆதரவாளர்கள் சீர்திருத்தவாதிகள் ஆகிய அனைவரும் பிலிப்பின் ஆட்சியை வெறுக்க தொடங்கினர். அவரது உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகள் பிரான்சுக்கு பெருமை சேர்ப்பதாக இல்லை.

**3.** பெல்ஜிய சுதந்திரத்துக்குப் பேருதவி புரிந்து பெருமை பெற்றார். ஆனால் பெல்ஜியம் மக்கள் தங்கள் நாட்டு மணிமுடியை லூயி பிலிப்பின் மகனுக்கு அளிக்க முன்வந்தபோது பிரிட்டிஷ் எதிர்ப்பிற்கு அஞ்சி அதனை ஏற்றுக் கொள்ளாமல் பின்வாங்கினார். பிரிட்டிஷ் எதிர்க்கவில்லை என்றால் லூயிபிலிப்பின் மகன் பெல்ஜியத்தின் மன்னராகியிருப்பார். இந்நிகழ்ச்சி அவரது சுயநலத்தை காண்பிக்கிறது.

**4.** எகிப்து **பாஷா மெஹ்மத் அலிக்கு** பிரான்ஸ் ஆதரவளித்து வந்தது. ஆனால் அதனை பிரிட்டன் எதிர்த்த போது பிரெஞ்சு பிரதமர் தாயாஸின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாது அவரைப் பதவி நீக்கம் செய்து பிரிட்டிஷ் நிர்பந்தத்திற்கு பணிந்து மெஹ்மத் அலியை கைவிட்டார்.

**5.** ஸ்விட்சர்லாந்து உள்நாட்டு போரில் கத்தோலிக்க காண்டன்களுக்கு (மாநிலங்களுக்கு) ஆதரவாக ஐரோப்பிய மாநாடு ஒன்று கூட்டுவதிலும் தோல்வியுற்றார்.

**6.** உள்நாட்டுக் கொள்கையில் தாராள கோட்பாட்டினராக தம்மை காட்டிக் கொள்ள முயன்றார். போர்போன்களின் வெள்ளைக் கொடியை அகற்றிவிட்டு புரட்சியாளர்களின் மூவண்ணக் கொடியை தேசியக் கொடியாக்கினார். பத்திரிக்கை கட்டுப்பாட்டை நீக்கினார். வாக்குரிமை சற்று பரவலாக்கப்பட்டது. எனினும் அவரது ஆட்சி அவரை ஆட்சியில் அமர்த்திய பூர்ஷீவாக்களுக்கே (நடுத்தர வர்க்கத்தினருக்கே) சாதகமாகயிருந்தது.

**7.** முதலில் தொழில்புரட்சி காரணமாக பிரெஞ்சு சமுதாயத்தில் தோன்றிய தொழிலாளர் வர்கத்தின் நலன்கள் புறகணிக்கப்பட்டன. எனவே தொழிலாளர் மத்தியில் அதிருப்தி நிலவியது. தங்கள் உரிமைகளை பாதுகாக்க தொழில்சங்கங்களை நிறுவினர். வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். ஆனால் அரசு கடும் நடவடிக்கை எடுத்தது.

**8.** காலம் செல்ல செல்ல லூயி பிலிப்பின் பகல் வேடம் கலைந்தது. தன் கொள்கைகளை சிறிது மாற்ற ஆரம்பித்தார். மக்களின் நேசன் போல் வேடமிட்டவர் மக்களின் செய்கைகள் ஒவ்வொன்றையும் குறை கூற ஆரம்பித்தார்.

**9.** அவர் புகுத்திய அரசியலமைப்புச் சட்டங்கள் பெயரளவுக்குத்தான் நன்மை அளிப்பது போல இருந்தது. பிலிப்பின் முதல் அமைச்சரான குயிசோவின் போக்கு மன்னரின் ஆட்சியை பாதாளத்திற்கு தள்ளியது. அவரது போக்கு பிற்போக்கு கொள்கையுடையதாக இருந்தது. அவரது செய்கைகளுக்கு மன்னர் தலையசைத்தார். ஆனால் மக்களோ பெரும் புரட்சிக்கு தயாராயினர்.

**10.** 1840 முதல் 1848 வரை நாட்டின் முதலமைச்சராக இருந்த குயிசோ பல ஊழல்கள் மூலம் தனது பதவியை தக்க வைத்திருந்தார். 1845-47ல் விளைச்சல் குன்றி உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் உணவுக்காக அங்கும், இங்கும் அலைந்தது மிகவும் பரிதாபமாக இருந்தது.

**11.** 1847-ல் ஏற்பட்ட தொழில் மந்தம் ஆயிரக்கணக்கான ஏழை தொழிலாளிகளை வேலை இல்லாதவராக்கியது. விவசாய துறையில் பஞ்சம், தொழில் துறையில் மந்தம் ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் ஏற்பட்டதால் விலைகள் அளவுக்கு அதிகமாக உயர்ந்தன. அதே நேரத்தில் வேலையின்மையும் பெருகி கூலிகள் குறைந்தன. இக்கொடிய நிலையில் அல்ஜீரியாவில் பிரான்சின் ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து நடைபெற்றன. 1827 முதல் அந்த நாட்டை பிடிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றது. அப்துல்காதர் என்பவரின் தலைமையில் அல்ஜீரியா தொடர்ந்து போர் செய்தது. இறுதியில் நயவஞ்சகமாக அவரை பிடித்து பிரெஞ்சு தளபதிகள் இறுதி வெற்றிப் பெற்றனர். இருப்பினும் 20 ஆண்டுகள் நீடித்த இந்த ஆக்கிரமிப்புப் போரினால் பிரான்சுக்கு பெரும் செலவு ஏற்பட்டது. இதனால் அதிக வரிகளை மக்கள் மீது மன்னன் திணித்தார். அரசாங்கத்தில் நிதிநிலையும் பாழ்பட்டது. அதிக வரிவிதிப்பால் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார் மன்னர் லூயி பிலிப்.

நாட்டில் 21/2 லட்சம் மக்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. இதை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக நாட்டில் இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்தை குயிசோ எதிர்த்தார். இந்த இயக்கமானது பத்திரிக்கை மூலம் மக்களின் ஆதரவை பெருக்கியது. வாக்குரிமை சீர்திருத்தம் கோரி நாடு முழுவதும் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. 1848-ல் பெப்ரவரி மாதம் 22-ம் நாள் அணிவகுப்பு போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. அக்கூட்டத்திற்கு அரசு தடைவிதித்தது. ஆனால் அன்று ஏராளமான மாணவர்களும், தொழிலாளர்களும் மற்றும் பல குடியானவர்களும் ஒன்று கூடினர். குலவரம் தொடங்கிற்று. தெருக்களில் சண்டை துவங்கிற்று. இராணுவ வீரர்களும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். லூயி பிலிப் இங்கிலாந்துக்கு தப்பி ஓடினர்.

**குடியரசு**

இரும்பு மனிதர் என்று பாராட்டப்பட்ட முதலமைச்சர் குயிசோ பெண்ணுடை அணிந்து மாறுவேடத்தில் அந்நகரிலிருந்து தப்பி ஓடினர். லூயி பிலிப்பின் பேரனாகிய ஒரு சிறுவனை அரியணையில் அமர்த்தவும் அவனது தாயை பகர ஆட்சியினராக நியமிக்கவும், பிரதிநிதிகள் அவை முயன்றது. ஆனால் ஆயுதம் ஏந்திய தொழிலாளர்களும், அவர்களை ஆதரித்த சில படையினரும் அங்குவரவே அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. சிம்மாசனத்தை தெருவில் போட்டு எறிந்தது மக்கள் கூட்டம். ஜீலை முடியரசை இவ்வாறு எரித்து சாம்பலாக்கினர் பாரீஸ் நகரத்து ஏழை தொழிலாளர்கள்.

பிரான்சில் குடியரசை நிறுவ வேண்டும் என்று பிப்ரவரி 25-ந் தேதி மாபெரும் தொழிலாளர் கூட்டம் ஒன்று கூடி கோரியது. அதன்படியே பிரான்சு ஒரு குடியரசு என அறிவிக்கப்பட்டது. இதுவே பிரான்சின் இரண்டாவது குடியரசு ஆகும்.

**ஜீலை புரட்சியின் விளைவுகள்**

**1.** ஐரோப்பா முழுவதும் இதுபோன்ற புரட்சிகள் தோன்றுவதற்கு இப்புரட்சி வழிகோலியது.

**2.** இப்புரட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு ஆஸ்திரியாவாகும். ஆஸ்திரியாவில் ஜெர்மானியர்கள், செக் இனத்தவர்கள், இத்தாலியர்களும், மக்யார்களும் என பல இனத்தவர்கள் வாழந்து வந்தனர். ஏற்கனவே தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. வாய்ப்பான வேளையும் வந்தது. பிரான்சில் ஏற்பட்ட புரட்சியை பார்த்து ஆஸ்திரியாவிலும் 1848-ல் புரட்சி வெடித்தது. மெட்டர்னிக்கும், ஆஸ்திரிய பேரரசரும் நாட்டை விட்டு தப்பி ஓடினர்.

**3.** ஹங்கேரி, பொஹீமியா, இத்தாலி ஆகிய நாடுகளிலும் இதுபோன்ற புரட்சிகள் தோன்றின.

**4.** ஜேர்மனியில் 1848-ல் பிரஷ்ய மன்னரைத் தலைவராகக் கொண்டு பெர்லின் நகரில் புரட்சிக்கனல் தெறித்தது. இதனால் ஜெர்மானிய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் பிராங்பர்ட்டில் கூடி ஜெர்மானிய அரியணையை பிரஷ்ய மன்னருக்கு அளிப்பதாக முடிவு செய்தது.

5. ஆச்சுறுத்தல்களாலும், அடக்கு முறையாலும் புரட்சியை பிற்போக்கு சக்திகள் அடக்க எண்ணினாலும் காலப்போக்கில் தாராளத் தன்மை, தேசிய உணர்ச்சி ஆகிய அரும்பெரும் சக்திகள் பெருமளவில் வளரலாயின.
6. பிரான்சில் முடியாட்சி நீங்கியது. இரண்டாவது குடியரசு உதயமாயிற்று.
7. இப்புரட்சிகள் வேகம் இங்கிலாந்தையும் எட்டியது. அங்கு சார்டிஸ்டு இயக்கம் ஆழமாக வேரூன்றியது.

பிரான்ஸில் நடைபெற்ற 1789, 1830, 1848-ம் ஆண்டு புரட்சிகள் பிரான்ஸிலும், ஐரோப்பாவிலும் மட்டுமில்லாமல் உலக நாடுகள் அனைத்திலும் புரட்சி இயக்கங்கள் தோன்ற வழிவகுத்தன. பிற்காலத்தில் சர்வாதிகாரம், காலனி ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல் போன்ற அநீதிகள் புரட்சி போர்களின் மூலம் முடிவுக்கு கொண்டு வர இந்த புரட்சிகள் முன்னோடியாகத் திகழ்ந்தது என்று கூறலாம்.

## மூன்றாம் நெப்போலியன் 1850-1870

### இளமை பருவம்

மாவீரன் நெப்போலியனின் சகோதரர் லூயி போனபார்டின் மக்ன லூயி நெப்போலியன். இவர் 1808-ம் ஆண்டு பாரீஸ் நகரில் பிறந்தார். இவரது மூத்த சகோதரர் இத்தாலியில் பிறந்தார். மாவீரர் நெப்போலியனின் மகன் இரண்டாம் நெப்போலியன் 1832-ல் இறந்தார். இதனால் போனபார்ட் வம்சத்தின் ஒரே வாரிசாக இவர் திகழ்ந்தார். இளமையில் சுவிட்சர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்றார். 1848-ம் ஆண்டு நடந்த புரட்சி மக்களாட்சிக்கு வழிவகுத்தது. அதன்படி 1850-ல் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் லூயி நெப்போலியன் வேட்பாளராக நின்று அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். குடியரசு தலைவரான நெப்பொலியன் பேரரசராக வரவேண்டும் என்ற ஆசையில் பல பணிகளை செய்தார். லூயி நெப்போலியன் தான் மூன்றாம் நெப்போலியன் என அழைக்கப்படுகிறார்.

### பேரரசர் ஆதல்

லூயி நெப்போலியன் என்ற மூன்றாம் நெப்போலியன் குடியரசு தலைவர் ஆனதும் நாடு முழுவதும் சுற்றுபயணம் மேற்கொண்டார். மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார். 1852-ல் நடந்த தேர்தல் மூலம் தன்னுடைய தலைவர் பதவியை மாற்றி பேரரசர் என்று அறிவித்துக் கொண்டார். 1852 முதல் 1870 வரை பிரான்சின் பேரரசராக இருந்தார். பேரரசரின் நோக்கம் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது, போரில் இறங்குவதில்லை என்ற தன்னுடைய கருத்தை பேரரசர் ஆனவுடன் அறிவித்தார்.

### உள்நாட்டு கொள்கை

1. ஊள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், குழப்பத்தை நீக்குவதும் அவரது முதல் குறிக்கோளாக இரந்தது. உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை சமாதான வழியில் நீக்கனார்.
2. நாட்டின் போக்குவரத்து துறையை வளர்க்க வேண்டும் என அவர் நினைத்தார். அதனால் கிராமசாலைகளும், பெருநகர் சாலைகளையும் அமைத்தார். உள்நாட்டு கால்வாய்களை இணைத்தது மூலம் நீர்போக்குவரத்தை முன்னேற்றினார். இரயில் பாதைகள் பெருநகரங்களை இணைப்பதற்கும், துறைமுகங்களிலிருந்து இறக்குமதி பொருட்களை உள்நாட்டிற்கு கொண்டு வருவதற்கும், ஏற்றுமதிப் பொருட்களை துறைமுகத்திற்கு கொண்டு செல்வதற்கும் வசதியாக அமைத்தார்.

இதனால் பயணிகள் குறைந்த கட்டணத்தில் பல இடங்களுக்கும் செல்வதற்கு வசதியாக இருந்தது.

3. நிலவள வங்கிகள் அதிகமாக கிராமங்களில் அமைத்தார். இதன்மூலம் வேளாண்மை, வாணிபம், தொழில் ஆகிய துறைகளுக்கு கடன் வழங்கப்பட்டது.
4. திராட்சைத் தோட்டங்களுக்கும், கோதுமை பயிர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு கடன் வழங்கப்பட்டது.
5. வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் நாடெங்கும் அமைக்கப்பட்டது. அதன்மூலம் வேளாண்மை முன்னேற்றத்திற்காக இரசாயண உரங்கள், தரமான விதைகள், தொழில்நுட்பக் கருவிகள் மானியம் மூலம் வழங்கப்பட்டது.
6. தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டன. சதுப்பு நிலங்கள் விவசாயம் உற்பத்தி செய்வதற்கு வசதியாக நல்ல நிலங்களாக மாற்றப்பட்டன. இதனால் வேளாண்மை உற்பத்தி அதிகரித்தது. வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளுக்கு தங்கு தடையின்றி கச்சாப் பொருட்கள் தாராளமாக கிடைத்தன.
7. கால்நடை வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டது. பால் உற்பத்தியை பெருக்க அதிகம் செலவிடப்பட்டது. குதிரைகள் வளர்ப்பதில் உற்சாகம் காட்டப்பட்டது.
8. தலைநகர் அழகு நகரமாக மாற்றப்பட்டது. அழகு மாளிகைகள், பூங்காக்கள், சாலைகள் அமைத்து சொர்க்க நகரமாக காணப்பட்டது.
9. ‘‘தொழலாளர்களின் நலனே என் நலன்’’ என்றார். தொழிலாளர்களுடன் உணவு உண்டார். அடிக்கடி கலந்து உரையாடினார். தெருக்களில் அவர்களுடன் சென்றார். இவ்வாறு நடந்து கொண்டதால் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.
10. தொழிலாளர்களுக்கு உதவிதொகை அளித்தார். விடுமுறை நாட்கள் அறிவித்தார். தொழிற்சங்கம் வைத்துக் கொள்ளவும் வேலைநிறுத்தம் செய்யவும் உரிமைகள் தொழிலாளர்களுக்கு கொடுத்தார்.
11. தொழிலாளர் நலன் பேண கூட்டுறவு சங்கங்களை அமைத்தார். தொழிலாளர்களின் வித்துக்கு பாதுகாப்பு நிதிகொடுக்க அனுமதியளித்தார்.
12. தடையில்லா வாணிபத்தை ஊக்குவித்தார். இறக்குமதியை குறைத்து, ஏற்றுமதியை பெருக்கினார். இறக்குமதி பொருட்கள் மீது காப்புவரி போடப்பட்டது.
13. நவீன இயந்திரங்களையும், தொழில் நுட்ப திறனையும் தொழில் நிறுவனங்களில் புகத்தினார்.
14. பிரான்ஸ் நாடு இங்கிலாந்துடன் 1860-ல் வணிக உடன்பாடு செய்தக் கொண்டது. இதற்கு காரணம் மூன்றாம் நெப்போலியனே. இதனால் பிரான்ஸ் மக்களுக்கு தேவையான எல்லா பொருட்களும் கிடைத்தது.
15. தொழில் நுட்பங்களை மக்கள் அறிந்திட ஒரு மாபெரும் பொருட்காட்சி ஒன்றை பாரீசில் 1855-ல் நடத்தினார்.
16. மூன்றாம் நெப்போலியன் கத்தோலிக்கர்களை இனிய முறையில் நடத்தினார். படைகள் கொடுத்து போப்பாண்டவருக்கு உதவினார்.

இவ்வாறு நல்ல சீர்திருத்தங்களையும், பல முற்போக்கு திட்டங்களையும் நாட்டில் அமுல்படுத்தினார்.

**வெளிநாட்டுக் கொள்கை**

அமைதி ஒன்றே தன் குறிக்கோள் என்று மூன்றாம் நெப்பொலியன் கூறினார். ஆயினும் முதலாம் நெப்போலியனினி புகழைப் போல் தன் புகழ் வளர வேண்டும். பிரான்சின் பெருமை உலகறிய வேண்டும் என்று எண்ணினார். மேலும் கத்தோலிக்க சமயத்தின் பாதுகாவலன், தேசிய இயக்கத்தின் நண்பன் என்றும் உலகுக்கு எடுத்துக்காட்ட பேராவலாக இருந்தார்.

**குடியேற்றங்களை நிறுவுதல்**

புல குடியேற்றங்களை அமைத்து பிரான்சின் பெருமையை நிலைநிறுத்த விரும்பினார் மூன்றாம் நெப்போலியன். ஆல்ஜீரியா என்ற ஆப்பிரிக்க நாட்டை வென்று பிரன்சின் குடியேற்றங்களை அமைத்தார். இங்கிலந்தின் சலுகைகளை காட்டி சீனாவில் பல வாணிய சலுகைகளை பெற்றுக் கொண்டார். 1863-ம் ஆண்டில் கம்போடியாவில் பிரெஞ்சு காப்பரசு ஒன்றை ஏற்படுத்தினார்.

**கிரிமியப் போர் (1854)**

முதலாம் நெப்போலியன் 1812-ம் ஆண்டு ரஷியா மீது படையெடுத்து அதனால் வரலாற்றில் மறக்க முடியாத பெரும் தோல்வியை அவர் பெற்றார். அந்த தோல்வி பிரெஞ்சு மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. எப்படியாவது ரஷியாவை பழி தீர்க்க வேண்டும் என்றும், பிரான்சுக்கு 1812-ல் ஏற்பட்ட அவமானத்தை துடைத்தெறிக்க வேண்டும் என்றும் மூன்றாம் நெப்போலியன் விரும்பினார்.

1854-ல் நடந்த கிரிமியப் போர் பாலஸ்தீனத்தில் கத்தோலிக்க கிருத்துவர்களுக்கும், பிராட்டஸ்றண்டு கிருத்துவர்களுக்கும் இடையே ஏற்பட்டது.ரஷியா பிராட்டஸறண்டு கிருத்துவர்களை ஆதரித்து போரில் இறங்கியது. பிரான்ஸ் கத்தோலிக்கழள ஆதரித்து போரில இறங்கியது. இப்போரில் மூன்றாம் நெப்போலியன் ரஷியாவை படுதோல்வியடையச் செய்தார். 1855-ல் பாரிஸில் நடந்த மாநாடு மூலம் பிரான்ஸ் பெற்ற அவமானத்தை துடைத்தெறிந்தார். இதனால் ஐரோப்பாவில் மூன்றாம் நெப்போலியன் புகழ் பரவியது.

**மூன்றாம் நெப்போலியனும் இத்தாலியும்**

1815-ல் நடந்த வியன்னா ஒப்பந்தம் படி இத்தாலியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா, அல்ஜீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவுக்கு கொடுக்கப்பட்டது. மேலும் ஆஸ்திரிய வம்சத்தை சார்ந்தவர்களே பர்மா, மடானா, டஸ்கனே ஆகிய இத்தாலிய பகுதிகளில் அரசர்களாக நியமிக்கப்பட்டனர். சுருங்க சொன்னால் அனேகமாக வட இத்தாலி முழுவதுமே ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இத்தாலியில் ஏற்பட்ட ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை அகற்ற மூன்றாம் நெப்போலியன் விரும்பினார்.

இதற்காக இயங்கி வந்த கார்போனாரி இயக்கத்தில் மூன்றாம் நெப்போலியன் உறுப்பினராக சேர்ந்தார். மேலும் ஆஸ்திரியாவின் பிடியில் இருந்த சார்டீனியாவை மீட்க வேண்டும் என்று எண்ணி இத்தாலி இணைவுக்கு பாடுபட்டுக் கொண்டிருக்கும் கவூருடன் **பிளாம்பியர்ஸ்** என்னும் இடத்தில் 1858-ம் ஆண்டு இரகசிய உடன்படிக்கை செய்துக் கொண்டார். ஆஸ்திரியாவுக்கும், சார்டீனியாவுக்கும் இடையில் போர் ஏற்பட்டது. சார்டினியாவுக்காக மூன்றாம் நெப்போலியன் போரில் இறங்கி சால்பரினோ, மாஜெண்டா ஆகிய இடங்களில் ஏற்பட்ட போரில் ஆஸ்திரிய படைகளை தோற்கடித்தார்.

ஆனால் மூன்றாம் நெப்பொலியன் திடிரென்று போரிலிருந்து விலகி ஆஸ்திரியாவுடன் **வில்ல பிராங்கோ** (1859) என்ற இடத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துக் கொண்டார். இதனால் மூன்றாம் நெப்பொலியனுக்கு நீஸ், சவாய் பகுதிகள் கிடைத்தது. இத்தாலியின் வெறுப்பையும் சம்பாதிக்க நேர்ந்தது.

### மூன்றாம் நெப்போலியனும் - ரோமும்

ரோமில் குடியாட்சியை விரும்பி அங்குள்ள மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். மூன்றாம் நெப்போலியன் புரட்சியை அடக்க ஒரு படையை போப்பாண்டவருக்கு ஆதரவாக அனுப்பினார். ஆதன் காரணமாக புரட்சிஅ டக்கப்பட்டது. குடியாட்சி அகற்றப்பட்டு போப்பின் ஆட்சி மீண்டும் துவங்கியது. பிரான்சின் படைகள் போப்பிற்கு ஆதரவாக 1849 முதல் 1870 வரை ரோமில் இருந்தது. இச்செயலால் மூன்றாம் நெப்பொலியன் கத்தோலிக்கர்களின் காவலன் என்று அழைக்கப்பட்டார்.

### ருமேனியாவும் மூன்றாம் நெப்போலியனும்

மூன்றாம் நெப்போலியனின் தலையீட்டால் துருக்கி சுல்தானுக்கு உட்பட்ட ருமேனியா மாநிலங்கள் சுயாட்சி பெற்றன. பின்பு இரு மாநிலங்களான மால்டேவியா, வாலேச்சியா ஒன்றாக இணைந்து தங்களுக்கென்று பாராளுமன்றத்தையும், அரசர்களையும் அமைத்துக் கொண்டது. இவ்வாறு ருமேனியாவின் இணைவிற்கு அரும் பணிபுரிந்தார்.

### போலந்து

ருமேனியாவுக்கு மூன்றாம் நெப்போலியன் உதவியது போல் போலந்துக்கு உதவி புரிவார் என்று எண்ணி அங்குள்ள மக்கள் விடுதலை போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் மூன்றாம் நெப்பொலியன் உதவி செய்யவில்லை. இதனால் போலந்தின் புரட்சி கொடூரமாக ஒடுக்கப்பட்டது.

### மெக்சிகோவும் - மூன்றாம் நெப்போலியனும்

மெக்சிகோ ஐரோப்பிய நாடுகளான பிரான்சு, பிரிட்டன், ஸ்பெயின் நாடுகளிடம் கடன் பெற்றிருந்தது. மெக்சிகோவில் பொருளாதார சிக்கல் ஏற்பட்டதால் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. இதனால் கோபம் கொண்ட மூன்றாம் நெப்போலியன் தனது படைகளை அனுப்பி மெக்சிகோவை பிடித்தார்.அந்நாட்டு மன்னனை நீக்கி விட்டு அவரது தம்பியான **மாக்சிமிலியனுக்கு** அரச பதவியை கொடுத்தார். இச்செயலை கண்டித்த மெக்சிகோ மக்கள் பிரான்சுக்கு எதிராக புரட்சியை ஆரம்பித்தனர். மன்றோ கொள்கைபடி அன்னியர்கள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டுமென அமெரிக்கா கூறியது. உடனே மூன்றாம் நெப்போலியன் பிரெஞ்சு படைகளை மெக்சிகோவிலிருந்து விலக்கினார்.

### ஆஸ்திரிய – பிரஷ்ய போர் (1866)

ஜெர்மானிய மாநிலங்களில் மிகுந்த செல்வாக்கும், சக்தியும், படைபலமும் அதிகம் பெற்றது பிரஷ்யாவாகும். ஆந்த பிரஷ்யாவுக்கும், ஆஸ்திரியாவுக்கும் இடையில் 1866-ல் போர் ஏற்பட்டது. இப்போரில் பிரஷ்யா ஆஸ்திரியாவை ஏழு வாரங்களில் தோற்கடித்தது. இந்நிகழ்ச்சி மூன்றாம் நெப்பொலியனின் எண்ணத்தை மண்ணாக்கியது. இப்போர் நீண்ட நாட்கள் நடைபெறும். இதில் தான் தலையிட்டு பிரஷ்யாவை ஒழித்து விடலாம் என்று

மூன்றாம் நெப்போலியன் நினைத்திருந்தார். இதனால் மூன்றாம் நெப்போலியனின் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது.

## பிராங்கோ – பிரஷ்ய போர் (1870-71)

**காரணங்கள்**

1. ஜேர்மனி (பிரஷ்யா) வலிமை பெற்று வருவதை விரும்பாத மூன்றாம் நெப்போலியன் அந்த வலிமையை தகர்த்தெறிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.
2. 1866-ல் நடைபெற்ற ஆஸ்திரிய – பிரஷ்ய போருக்கு பின் பெல்ஜியத்தை பிரான்சுக்கு இழப்பீடாக தரவேண்டும் என்றார். மூன்றாம் நெப்போலியனின் இக்கோரிக்கையை பிரஷ்யா ஏற்கவில்லை.
3. 1866-ம் ஆண்டு ஆஸ்திரிய – பிரஷ்ய போரின் போது ரைன் ஆற்றங்கரையில் சில பகுதிகளை பிரான்சுக்கு கொடுப்பதாக ஜெர்மனியின் முதலமைச்சர் பிஸ்மார்க் வாக்களித்தார். ஆனால் போருக்கு பிறகு இப்பகுதிகளை பிஸ்மார்க் வாக்களித்தார். கொடுக்க மறுத்தார். இதனால் மூன்றாம் நெப்போலியன் பிரஸ்யாவை பழிவாங்க விரும்பினார்.
4. பிராங்கோ பிரஷ்ய போருக்கு உடனடி காரணம் ஸ்பெயினின் வாரிசுரிமை போராகும.இ ஸ்பெயின் அரசில் இஸபெல்லா என்பவர் குழப்பத்தின் உறைவிடமாகவும், சதிகாரர்களின் ஆதரவாகவும், எதேச்சதிகாரத்தின் எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்தார். எனவே இவளை எதிர்த்து ஸ்பெயின் நாட்டு மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சி ஸ்பெயின் முழுவதும் பரவியதால் இசபெல்லா 1868-ல் நாட்டைவிட்டு ஓடினார். உடனே பிரஷ்ய மன்னரின் உறவினரான லியோபோல்டு என்பவருக்கு ஸ்பெயினின் ஆட்சி பொறுப்பு கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியைக் கண்ட மூன்றாம் நெப்போலியன் ஆத்திரம் அடைந்தார்.

   பிரஷ்யாவின் ஆதிக்கம் ஐரோப்பாவில் ஏற்பட்டால் ஐரோப்பாவின் வல்லமை சமநிலை பாதிக்கப்படும் என பிரெஞ்சு பத்திரிக்கைள் பிரசுரித்தன. இம்முடிவை பிரஷ்யா மாற்றிக் கொள்ள தன் தூதுவர் **பெனடெட்டி** என்பவரை பிரஷ்யாவுக்கு மூன்றாம் நெப்போலியன் அனுப்பினார். ஆச்சமயத்தில் பிஸ்மார்க் தலைநகரில் இல்லை. மன்னர் முதலாம் வில்லியம் எம்ஸ் நகரில் இருந்தார். பிற அதிகாரிகள் இது ஹோகன் சோலன் அரச குடும்ப விவகாரம் (ஜெர்மானிய மன்னர் ஹோகன் சோலன் வம்சத்தை சார்ந்தவர்) என்று பிரெ'சு தூதுவரிடம் கூறினார். தூதுவர் மன்னரை (முதலாம் வில்லியம்) எம்ஸ் நகரில் சந்தித்து வந்த விபரத்தை கூறினார். தூதுவர் கூறியதை கேட்டு ''மூன்றாம் நெப்போலியனின் விருப்பத்திற்கு இணங்கி லியோபோல்டுவின் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு தந்தி ஒன்றை மன்னர் தமது முதலமைச்சர் பிஸ்மார்க்கு அனுப்பினார்'' தந்தியை பிஸ்மார்க் பெற்றுக் கொண்டார்.

ஜெர்மனி முழுமையாக இணைய வேண்டும் என்றால் பிரான்ஸிடம் இருக்கும் ஜெர்மானிய பகுதியான அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை மீண்டும் ஜெர்மனியே அடைய வேண்டும். அதற்கு முட்டுக் கட்டையாக இருக்கும் மூன்றாம் நெப்போலியனை தோற்கடித்தே ஆக வேண்டும் என்று முடிவுக்கு வந்தார் பிஸ்மார்க்.

ஆதனால் மூன்றாம் நெப்போலியனை போரில் இழக்க வேண்டும் என்பதற்காக மன்னன் அடித்த தந்தியை மாற்றியமைத்தார் பிஸ்மார்க். அதாவது பிரெஞ்சு தூதுவர் நமது மன்னரை அவமதித்துவிட்டார் என தந்தியின் வாசகம்

சிலவற்றை கூட்டி குறைத்து பத்திரிகைகளுக்கு நெப்பொலியன் கொடுத்தார். தங்கள் மன்னரை அவமதித்துவிட்டதாக ஜெர்மன் மக்கள் எண்ணும்படி பத்திரிகையில் செய்தி வந்தது. செய்தியை படித்ததும் ஜெர்மானிய மக்கள் கொதிப்படைந்தனர். அதேப்போல் தனது தூதுவர் சொல்லாததை சொன்னதாக தந்தி அடித்த மன்னரையும், முதலமைச்சர் பிஸ்மார்க்கையும் தண்டிக்கும் நோக்கத்தோடு கோபத்துடன் பிரஷ்யா மீது மூன்றாம் நெப்போலியன் போர் தொடுத்தார்.

**பிரான்ஸ் தனித்து விடப்படல்**

1. இப்போரில் இத்தாலி பிரான்சுக்கு உதவவில்லை. இத்தாலியின் தலைநகரமான ரோமில் பிரான்ஸ் படைகள் இருந்ததால் இத்தாலி உதவவில்லை.
2. குிரிமியப் போரில் நெப்போலியன் தலையிட்டதால் ரஷியா தோல்வியடைந்தது. இதனால் ரஷியாவும் உதவவில்லை.
3. ஆஸ்திரியா பிரான்சுக்கு உதவினால் ரஷியாவின் கோபத்திற்கு உள்ளாகுவோம் என்று நினைத்து ஆஸ்திரியாவும் பிரான்சுக்கு உதவ முன்வரவில்லை.
4. பிரான்ஸ் பெல்ஜியத்தை கைப்பற்ற வேண்டும் என்று எண்ணியதால் பெல்ஜியத்திற்கு ஆதரவு நாடான இங்கிலாந்தும் பிரான்சுக்கு உதவ முன்வரவில்லை.

**பிராஹ்கோ – பிரஷ்ய போர்**

பிரஷ்ய தளபதி மோல்ட்கே தலைமையில் பிரஷ்யப் படையும், நெப்போலியன் மற்றும் நெப்போலியனின் போர் தளபதி **மக்மோகன்** தலைமையில் பிரெஞ்சு படையும் போரில் இறங்கின. இப்போர் 1870-ம் ஆண்டு நடைபெற்றது. போரின் போது பிரெஞ்சு படைக்கு போதுமான போர் கருவிகள் இல்லை. அதோடு போர் திறமையும் இல்லை. பிரஷ்ய படைகள் அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை கைப்பற்றின. மேலும் பிரஷ்ய படைகள் பிரெஞ்சுப் படைகளை வெய்சன் பர்க் **ஸ்பிகிரன் வொர்த் கிரேவிலோதோ** ஆகிய இடங்களில் தோற்கடித்தன. 1870-ம் ஆண்டு செப்டம்பரில் **சடான்** என்ற இடத்தில் நெப்போலியனை ஜெர்மானிய படைகள் சுற்றி வளைத்தன. நெப்போலியன் சரணடைந்தார். பிரான்சில் நெப்போலியனின் ஆட்சி வீழ்ந்தது.

நெப்போலியனுக்கு பிறகு லியான் காமபெட்டா என்பவர் பிரான்சில் குடியரசை ஏற்படுத்தினார். இவர் போரை தொடர்ந்தார். பிரெஞ்சு மக்கள் அனைவரும் போரில் இறங்கினர். 1871-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் நாள் பாரீஸ் முற்றுகையிடப்பட்டது. பிரெஞ்சு மக்கள் வீரத்துடன் போரிட்டாலும் இறுதியில் பாரீஸ் நகரம் பிடிப்பட்டது.

**பிராங்பர்ட் உடன்படிக்கை**

பிராங்கோ -பிரஷ்ய போர் பிராங்பர்ட் உடன்படிக்கையின் படி போர் முடிவடைந்தது.

**உடன்படிக்கை சரத்துக்கள்**

1. பிரான்சின் அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகள் ஜெர்மனிக்கு கொடுக்கப்பட்டது.
2. ஜேர்மனிக்கு பிரான்ஸ் நஷ்டஈட்டுத் தொகையாக 5000 மில்லியன் பிரான்சு நாணயம் கொடுக்க ஒப்புக் கொண்டது. நஷ்ட ஈட்டு தொகை கொடுக்கும் வரை ஜெர்மனியின் படைகள் பிரான்சில் தங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

**மதிப்பீடு**

ஜெர்மனியிலிருந்து கைப்பற்றப்பட்ட அல்சேஸ், லொரைன் பகுதிகள் மீண்டும் ஜெர்மனி பிரான்சிடமிருந்து பெற்றுக் கொண்டது. இது பிரெஞ்சு மக்களின் வெறுப்பை ஏற்படுத்தியது. இதனால் ஜெர்மனியில் தேசிய உணர்வு ஏற்பட்டது. பிரஷ்ய மன்னர்

முதலாம் வில்லியம் ஜெர்மனியின் பேரரசரானார். பிரான்சின் தோல்வி இத்தாலியின் ஐக்கியத்திற்கு உதவியது. பிஸ்மார்க் தன்னுடைய **குருதியும்** (இரத்தமும்) **இரும்பும்** என்ற கொள்கை மூலம் ஜெர்மனியின் ஐக்கியத்தை உருவாக்கி **"இரும்பு மனிதர்"** என்ற பெயரைப் பெற்றார். பிராங்பர்ட் உடன்படிக்கையின் படி பிரான்சு தன் அவமானத்தை ஒரு போதும் மறக்கவில்லை. மன்னிக்கவும் இல்லை.

# அலகு – II

## இத்தாலிய இணைவு – 1870

### 1815-ல் இத்தாலியின் நிலைமை

ஆதியில் ரோம பேரரசை நிறுவி 300 ஆண்டு காலம் மத்திய தரைக்கடல் பிரதேசத்தின் மையமாக விளங்கி, இடைக்காலத்தில் சிறு சிறு அரசுகளாக துண்டுப்பட்டு தாழ்வுற்றுக் கிடந்தது இத்தாலி. இந்த அவலநிலையிலும் கூட கிழக்கிந்திய வாணிபம் காரணமாக செல்வத்தில் சிறந்து விளங்கி,**மறுமலர்ச்சி இயக்கத்தை** ஐரோப்பாவில் ஆரம்பித்து வைத்தது இத்தாலி. இந்த சிறப்பான நாட்டை ஓரளவு ஒன்றுபடுத்தி ஆண்டு, அங்கு தேசிய இயக்கம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தவர் நெப்போலியன். பிரெஞ்சு புரட்சி போர்களின் போது இத்தாலியைக் கைப்பற்றிய பிரெஞ்சு படைகள் மூன்று குடியரசுகளை அங்கு நிறுவின. வடக்கு பகுதி சிசாலப்பைன் குடியரசு என்றும் மத்திய பகுதி ரோமன் குடியரசு என்றும் தென்பகுதி பார்த்தினோப்பியன் குடியரசு என்றும் அழைக்கப்பட்டன. நெப்போலியன் இத்தாலியை நான்கு பகுதிகளாக பிரித்து ஒரு பகுதியை பிரான்சுடன் சேர்த்து தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்துக் கொண்டு மற்றப் பகுதிகளை இத்தாலிய அலசு, நேப்பிள்ஸ் அரசு, சிசிலி அரசு என பெயரிட்டு தனது கையாட்களைக் கொண்டு ஆண்டு வந்தார். இவ்வாறு பழைய சர்வாதிகார அரசர்களை ஒழித்து புதிய நிர்வாக அமைப்புகளும், சட்டங்களும், சீர்திருத்தங்களும் இத்தாலியில் புகுத்தப்பட்டன. இத்தாலிய தேசிய உணர்வை இவை அனைத்தும் தூண்டிவிட்டன. மேலும் வியன்னா மாநாடு இத்தாலியை மறுபடியும் துண்டாடி பழைய சர்வாதிகார அரசர்களிடமே ஒப்படைத்தது.

வியன்னா மாநாட்டு திட்டத்தின் படி இத்தாலியின் வடக்கேயிருந்த வெனிஷியாவும், லம்பார்டியும ் ஆஸ்திரியாவுக்கு கொடுக்கப்பட்டன. அதற்கு தெற்கே இருந்த டஸ்கனே, பார்மா, மொடினா, லூகா என்ற நான்கு அரசுகளும் ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் வம்சத்தை சேர்ந்தவர்களால் ஆளப்பட்டு வந்தன. இவ்வாறு வட இத்தாலி முழுவதும் மெட்டர்னிக்கின் இரும்பு பிடியில் சிக்கியிருந்தது. தெற்கே மத்திய இத்தாலியில் இருந்தது போப்பின் அரசு அதில் **மார்ச்சஸ் அம்பிரியா ரோமக்னா** ஆகிய மூன்று மாநிலங்கள் இருந்தன. இம்மூன்றையும் போப்பாண்டவர் ஆட்சி புரிந்து வந்தார். தெற்கு இத்தாலியில் நேப்பிள்சும், சிசிலியும் சேர்த்து போர்போன் மன்னர் முதலாம் பெர்டினண்டு என்பவரால் ஆளப்பட்டு வந்தன. இது இரட்டை சிசிலி அரசு என்றும் அழைக்கப்பட்டது. சார்டீனியா தீவும், ஜினோவா, பீட்மண்டு நீஸ் சேவாய் ஆகியவையும் ஒன்று சேர்த்து **சேவாய் வம்சத்து** முதலாம் விக்டர் இம்மானுவேல் என்ற மன்னரால் ஆளப்பட்டு வந்தன. இது சார்டீனியா அரசு எனப்பட்டது. இந்த அரசின் தலைநகரம் வடமேற்கே பீட்மண்டில் இருந்த **டூரின்** என்பதாகும். இந்த ஒரு அரச வம்சம் தான் இத்தாலியில் தோன்றி இத்தாலிய மொழியை பேசியது. எனவே இத்தாலிய ஐக்கியத்துக்கு பாடுபட்டு, பின்னர் ஐக்கிய இத்தாலியோடு இணைந்தது இது மட்டும் தான்.

இவ்வாறு இத்தாலியில் இருந்த எட்டு அரசுகளில் சார்டீனியா அரசு மட்டுமே ஆஸ்திரியாவுக்கு எவ்விதத்திலும் அடிமைப்படாமல் சுதந்திரமாக இருந்தது எனலாம். போப்பின் அரசு உட்பட மற்ற ஏழு அரசுகளுமே ஆஸ்திரியாவின் படைவலிமையை நம்பியும் அதன் ஆதிக்கத்துக்குப் பெரிதும் கட்டுப்பட்டும் இருந்தன. நெப்போலியன் காலத்தில் இத்தாலி ஓரளவு பெற்றிருந்த ஐக்கியமானது முற்றிலும் அளிக்கப்பட்டது மட்டுமின்றி அவரது காலத்தில் புகுத்தப்பட்ட திறமையான நிர்வாக அமைப்பு, முற்போக்கான சட்டத்திட்டங்கள் போன்றவை இத்தாலிய மக்கள் பெற்றிருந்த உரிமைகள் அனைத்தும் 1805-க்குப் பின் ஒழித்துக் கட்டப்பட்டன. எல்லா அரசுகளிலும் சர்வாதிகார ஆட்சியே நடைபெற்றது. பத்திரிக்கைத் தணிக்கையும், அடக்குமுறை சட்டங்களும் எங்கும் நிலவின. இந்நிலையில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை இத்தாலியிலிருந்து அகற்றினால் தான் நாடு ஐக்கியம் அடையும் என்பதை தேசியவாதிகள் உணர ஆரம்பித்தனர். கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் என்ற முறையில் மிகுந்த செல்வாக்கோடும், பிற்போக்கு சக்திகளின் தூணாகவும் விளங்கிய போப்பாண்டவரும் இத்தாலிய ஐக்கியத்துக்கு ஒரு பெரும் பகை என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

### தேசிய உணர்வின் எழுச்சி

இவ்வாறு வடக்கில் ஆஸ்திரியாவாலும், தெற்கில் பிரெஞ்சு நாட்டு போர்போன்களாலும், நடுவில் அன்னிய துருப்புகளின் உதவியோடு போப்பாண்டவராலும் ஆளப்பட்டு அடிமைப்பட்டுக் கிடந்த இத்தாலியில் பிரெஞ்சு புரட்சியின் விளைவாகவும், நெப்போலியன் ஆட்சியாலும் தேசிய உணர்வு தலைதூக்கியது. அன்னிய ஆதிக்கத்தை அகற்றி நாட்டை ஒன்றுபடுத்துவதற்கென பல ரகசிய இயக்கங்கள் தோன்றின. ஆவற்றில் முக்கியமானது **கார்பொனாரி** 1815 ல் மீண்டும் போர்போன் வம்சம் நேப்பிள்ஸின் அரியணையில் இமர்த்தப்பட்டதைக் கண்டு மனங்கொதித்த தேசியவாதிகள் சிலரால் துவக்கப்பட்ட இச்சங்கம் நேப்பிள்ஸில் ஒரு குடியரசை ஏற்படுத்தி நாடு முழுவதும் ஐக்கியப்படுத்த விரும்பியது.முதலில் நேப்பிள்ஸில் ஆரம்பிக்கப்பட்ட இதன் கிளைகள் விரைவிலேயே நாடு முழுவதும் துவக்கப்பட்டன. லூாயி நெப்போலஜயன் இதன் உறுப்பினர்களில் ஒருவர்.

### முதல் முயற்சிகள் (1820-21)

இந்த ரகசிய சங்கங்களின் முயற்சியால் இத்தாலியின் பல அரசுகளில் கிளர்ச்சிகள் தோன்றின. 1820-ல் நேப்பிள்ஸில் கார்பெனாரிகள் கிளர்ந்தெழுந்து ஒரு புதிய அரசியல் அமைப்பையும் பல உரிமைகளையும் தன் மன்னர் பெர்டினண்டிடமிருந்து பறித்தனர். இதையடுத்து பீட்மண்டிலும் லம்பார்டியிலும் 1821-ல் கிளர்ச்சிகள் தேனா்றின. ஆனால் மெட்டர்னிக்கின் துரப்புகள் கிளர்ச்சிகளை முறியடித்தது. நேப்பிள்சிலும், லம்பார்டியிலும் சர்வாதிகார ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்தின. பீட்மண்டில் ஏற்பட்ட கிளர்ச்சியின் விளைவாக முதலாம் விக்டர் இம்மானுவேல் பதவியிழந்து அவரது தம்பியான சார்லஸ் பெலிக்ஸ் )ஊாயசடநள குநடலை) அரசராக்கப்பட்டார். அப்பொழுது அவர் அயல்நாட்டில் இருந்ததால் அவரது தம்பியான சார்லஸ் ஆல்பர்ட் பகர ஆட்சியாளராக அமர்ந்து மக்களுக்கு ஒரு அரசியலமைப்பை நல்கினார். ஆஸ்திரியாவை இத்தாலியிலிருந்து விரட்டியடித்து பல முன்னேற்றங்களை செய்ய வேண்டும் என்று எண்ணிய இவரை மக்கள் ஆதரித்தனர். ஆயினும் சார்லஸ் பெலிக்ஸ் விரைவிலேயே நாடு திரும்பி ஆஸ்திரிய துரப்புகளை அழைத்து மக்களை அடக்கினார். இவ்வாறு முதல் முயற்சி முறியடிக்கப்ட்டன.

### 1830-ல் புரட்சி

சுமார் 10 ஆண்டுகள் கழித்து பாரிஸில் வெடித்த **ஜீலை புரட்சி** ஆல்ப்ஸ் மலைகளுக்கு அப்பாலும் எதிரொலித்தது. ரொமக்னா, மார்ச்செஸ், பார்மா,

மொடினா,பீட்மண்டு ஆகிய அரசுகளில் தமது கொடுங்கோல் மன்னர்களுக்கு எதிராக மக்கள்கிளர்ந்தெழுந்தனர். ஆஸ்திரிய துருப்புகள் வரவழைக்கப்பட்டு எல்லா இடங்களிலும் எதிர்ப்பு நசுக்கப்பட்டது.

**மாசினி (1805-72)**

இத்தாலிய மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சியை தட்டெழுப்பிய எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர் மாசினி. முாசினி உடற்கூறு பேராசியராக ஜெனோவாவில் பணியாற்றி வந்தார். இத்தாலிய புரட்சி இயக்கத்திற்கு தூண்டுதலாக இருந்தவர் இவரே. எழுத்தாளர் மட்டுமின்றி புரட்சியாளராகவும் இவர் திகழ்ந்தார். ஜெனோவாவில் ஒரு மருத்துவரின் மகனாகப் பிறந்த மாசினி கார்பொனாரி சங்கத்தில் உறுப்பினராகவும் இருந்தார். 1830-ம் ஆண்டு புரட்சியில் பங்கெடுத்ததால், கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். 1831-ல் **இளம் இத்தாலி** (Young Itally) என்ற ஒரு புது இயக்கத்தை **மார்சேல்ஸ்** நகரில் தோற்றுவித்தார். இரண்டே ஆண்டுகளில் இச்சங்கத்தில் 60,000 பேர்கள் உறுப்பினராக சேர்ந்தனர். இத்தாலியிலிருந்து அன்னிய ஆட்சியாளர்களை விரட்டிவிட்டு, அதை ஒன்றுபடுத்தி ஒரு குடியரசை நிறுவ வேண்டும் என்பது தான் அவரது குறிக்கோள். இளம் இத்தாலியர் 1832-ல் பீட்மண்டில் ஒரு புரட்சியை துவக்க திட்மிட்டனர். ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்டு நசுக்கப்பட்டது.

புரட்சி மூலம் தான் இத்தாலியை ஐக்கியப்படுத்த முடியும் என்று எழுதினார் மாசினி. அவரது நூல்களும், கட்டுரைகளும் இத்தாலிய இளைஞர்களின் உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோல் பதிந்தது. சிந்தனைத் துறையில் இத்தாலிய ஐக்கியத்திற்கு அவர் ஆற்றிய பணிகள் மகத்தானது. எனினும் தன்னாட்டு அரசுகளால் விரட்டப்பட்டு அயல்நாடுகளிலேயே வசித்த மாசினியால் மக்களை திரட்டி வெற்றி பெற இயலாமற் போய்விட்டது.

1849-ல் டூரின் பாராளுமன்றத்தில் உறுப்பினரான **கவூர்** அடுத்த ஆண்டிலேயே விவசாய, தொழில், வணிக அமைச்சரானார். 1852 நவம்பரில் முதலமைச்சராக மன்னரால் நியமிக்கப்பட்டார். தன் நாட்டில் விவசாய தொழில் புரட்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தார் கவூர். பல நாடகளோடு வியாபார ஒப்பந்தங்களை செய்துக் கொண்டார். திருச்சபையின் தலையீடுகளை குறைத்து தெு அனுபவித்து வந்த சலுகைகளை அகற்றி மடாலயங்களின் சொத்துக்களைப் பறித்து, ஜெசூட்டுக்களை விரட்டியடித்து அரச அதிகாரத்தை அவர் வலுப்படுத்தினார். 90,000 பேர்களை கொண்ட ஒரு படை திரட்டப்பட்டது. இத்தாலிய ஐக்கியத்தில் தனக்கு உதவுவதற்கு என ஆஸ்திரியர்களையும், போப்பையும் அகற்றி விடுதலையும் ஐக்கியமும் பெற வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்ட **தேசிய சங்கம்** (National Society) ஒன்றை நிறுவினார் கவூர். பல இத்தாலியர்களை இது கவர்ந்தது.

**கிரிமியப் போர் (1854)**

1854-ல் கிரிமியப் போர் ஏற்பட்ட போது ரஷியாவிற்கு எதிராக இங்கிலாந்தையும், பிரான்சையும், துருக்கியையும் ஆதரிக்கும்படி கவூர் இம்மானுவேலுக்கு அறிவுரை கூறினார். ஐரோப்பிய வல்லரசுகளிடையே மதிப்பு ஏற்பட் வேண்டும் என்பதற்கும், ஆஸ்திரிய ஆதிக்கத்தை ஒழிப்பதற்கும் இந்நாடு முயலும்போது இங்கிலாந்தும், பிரான்சும் தேவைப்படுகின்ற உதவியைத் தரும் அளவிற்கு அவர்களின் நல்லெண்ணத்தை பெற வேண்டும் என்ற இரு நோக்கங்களுடன் சார்டினியா இப்போரில் கலந்து கொண்டது. இந்த போரில் ரஷியா தோல்வியுற்றது. இத்தாலிய ஒன்றிப்பு அமைவதற்கான வாய்ப்பினை இப்போர் ஏற்படுத்தியது.

கிரிமியப் போரில் 15000இத்தாலிய வீரர்கள் கிரிமியாவுக்கு சென்று நோயில் துவண்டு மடிந்தனர். மேலும் அப்போரின் முடிவில் செய்துக் கொள்ளப்பட்ட **பாரீஸ் உடன்படிக்கையிலும்** பீட்மண்டுவுக்கு ஒன்றும் கிடைக்க வில்லை. ஆயினும் ஐரோப்பிய அரசியல் வட்டாரங்களில் இத்தாலிய ஐக்கிய பிரச்சனைப் பற்றி பேசப்பட்டது.

**கரிபால்டி (1807-82)**

பீட்மண்டின் பகுதியாக இருந்த நீஸில் என்ற இடத்தில் பிறந்த ஜோசப் கரிபால்டி மாசினியின் இளம் இத்தாலி இயக்கத்தில் சேர்ந்து அவரது சிறந்த தொண்டர்களில் ஒருவராக இறுதிவரை திகழ்ந்தார். இவரது புரட்சி நடவடிக்கைகளுக்காக 1834 –ல் மரண தண்டனை இவருக்கு வழங்கப்பட்டது. இவர் தென் அமெரிக்காவிற்கு தப்பி சென்றார். இத்தாலியில் 1848-ல் புரட்சி தோன்றிய போது இவர் இத்தாலிக்கு திரும்பி வந்தார். 3000 பேர்கள் கொண்ட செஞ்சட்டை படை ஒன்றை அமைத்து ஆஸ்திரியாவுக்கு எதிராக படையெடுத்த சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவினார். பின்னர் பிரெஞ்சு படைகளின் முற்றுகைக்கு எதிராக மாசினியின் ரோமபுரி குடியரசை இரண்டு மாதம் காத்து தோல்வியை தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து படைகளை வீரத்துடன நடத்தி பின்வாங்கி அமெரிக்காவிற்கு தப்பி ஓடினார். இவர் மீண்டும் 1854-ல் தாணகம் திரும்பினார். இறுதியில் தான் பிறந்த நீஸை மூன்றாம் நெப்போலியன் எடுத்துக் கொண்டதால் மனமுடைந்திருந்த வேளையில் சிசிலியிலிருந்து ஒரு அழைப்பு அவருக்கு வந்தது.

**சிசிலி கைப்பற்றப்படுதல்**

இரட்டை சிசிலி அரசை நேப்பிள்சிலிருந்து ஆண்டு வந்த இரண்டாம் பிரான்சிஸ் மன்னரை எதிர்த்து சிசிலி தீவில் மக்கள் கிளர்ச்சி செய்து, உதவிக்கு கரிபால்டியை அழைத்தனர். 1860-ம் ஆண்டு மே மாதத்தில் தனது ஆயிரம் செஞ்சட்டை வீரர்களுடன் கரிபால்டி ஜீனோவாலிருந்து புறப்பட்டு சிசிலியில் மார்சாலாவில் இறங்கினார். இது ஒரு பைத்தியக்கார செயல் என்றும் படுதோல்வியிலேயே இது முடியும் என்றும் கவூர் போன்ற அரசியல்வாதிகள் நம்பினர். ஆனால் சிசிலி இளைஞர்கள் 20000 பேர்கள் கரிபால்டிக்காகவே காத்திருந்தனர். இப்பெரும் படையுடன் மூன்றே மாதத்தில் சிசிலி முழுவதையும் கரிபால்டி கைப்பற்றினார். தமது மன்னரை மக்கள் எவ்வளவு தூரம் வெறுத்தனர் என்பதை இது நன்கு புலப்படுத்திற்று.

**நேப்பிள்ஸ் கைப்பற்றப்படுதல்**

பின்னர் கடலை கடந்து தென் இத்தாலியில் கரையிறங்கி நேப்பிள்ஸ் நகரை நோக்கி முன்னேறினர். போர்போன் மன்னர் நாட்டை விட்டு ஓடவே, நேப்பிள்ஸ் மக்கள் ஆரவாரித்து வாழ்த்துக் கூற கரிபால்டியின் செஞ்சட்டை படை ஆற்றுக்கு அருகில் நுழைந்தது. அடுத்தபடியாக போப்பின் அரசையும் தாக்க எண்ணினார் கரிபால்டி. ஆனால் ரோம் நகரில் பிரெஞ்சுபடை ஒன்றும், அன்னிய படைகளும் இருந்ததால் கவூர் ரகசிய திட்டம் தீட்டினார். இதனால் மூன்றாம் நெப்போலியனுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ரோம் நகரில் தன்னுடைய படையுடன் நுழைந்தார். ரோம் நகரை விட்டு விட்டு மற்ற எல்லா பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டார்.

**ஆஸ்திரிய – சார்டீனியப் போர் (1859 -60)**

**க**ிரிமியப் போரினால் கவூருக்கு பிரான்சின் மூன்றாம் நெப்போலியனின் நட்பு கிடைத்தது. இவர் இவ்வாய்ப்பை பயன்படுத்தி மூன்றாம் நெப்போலியனோடு உடன்பாடு

ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார். நெப்போலியனும் நைஸ், சவாய் ஆகிய இடங்களைத் தமக்கு தருவதாயிருந்தால் ஆஸ்திரியாவிற்கு எதிராக சார்டீனியாவுக்கு உதவுவதாக வாக்களித்தார். லம்பார்டியையும், வெனிஷியாவையும் சார்டீனியா கைப்பற்ற வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. பிரெஞ்சு உதவி கிடைக்கும் எனக் கருதி கவூர் ஆஸ்திரியாவை வலுச்சண்டைக்கு இழுத்தார். மேலும் கவூர் சார்டீனியப் படையை பெருக்கினார். சார்டீனியாவின் வலிமை ஓங்குவதைக் கண்டு ஆஸ்திரியா கலகமுற்றது. தனது படைவீரர்களின் எண்ணிக்கையை சார்டீனிய குறைக்காவிடில் அதன்மீது போர் தொடுக்கும் என ஆஸ்திரியா அச்சுறுத்தியது. கவூர் ஆஸ்திரியாவின் அறைகூவலை ஏற்றுக் கொள்ளாததின் விளைவாக ஆஸ்திரிய சார்டீனியா போர் 1859-ல் ஏற்பட்டது.

சார்டீனியாவின் உதவிக்கு பிரெஞ்சு படை ஒன்றை மூன்றாம் நெப்போலியன் நடத்தி சென்றார். ஆஸ்திரியப் படை மகென்டா, சால்பரீனோ ஆகிய போர்களில் தோற்கடிக்கப்பட்டது. ஒன்றிணைந்த இத்தாலியின் வலிமை ஓங்குவதைக் கண்ட மூன்றாம் நெப்போலியன் தம் படைகளை திரும்ப பெற்றுக் கொண்டார். இவர் வில்லிபிரபாங்கா என்னும் இடத்தில் 1859-ல் ஆஸ்திரியாவுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தம் படி (1859) ஆஸ்திரியா வெனிஷியாவை தன்னிடம் வைத்துக் கொண்டு லம்பார்டியின் பெரும் பகுதியை சார்டீனியாவுக்கு கொடுத்தது. மூன்றாம் நெப்போலியன் சார்டீனியாவுக்கு துரோகம் செய்த போதிலும் இவருக்கு நைசும், சேவாயும் கிடைத்தன.ஆனால் இப்போர் இத்தாலிக்கு நன்மையாகவே முடிந்தது. ஏனெனில் டஸ்கனே, பார்மா, மொடீனா, ரோமாக்னா ஆகிய பகுதிகள் தங்களது பழைய ஆட்சியாளர்களை துரத்தி விட்டு சார்டீனியாவுடன் இணைந்து கொண்டார்.

**சிசிலி நேப்பிள்ஸ் போப் பகுதிகள் இணைத்தல் (1860)**

சிசிலியை ஆண்டு வந்த இரண்டாம் பிரான்சிஸ் மன்னரை எதிர்த்து கரிபால்டி கைப்பற்றிய நேப்பிள்ஸ் பகுதிகளை இரண்டாம் இம்மானுவேலிடம் ஒப்படைத்தார். அதோடு போப்பின் படைகளை தோற்கடிக்க விக்டர் இம்மானுவேல் தாமே ஒரு படைக்கு தலைமை தாங்கி போப்பின் படைகளை காஸ்டல் பிடார்டோவில் தோற்கடிக்கப்பட்டன. இவரது வருகையில் போப்பாண்டவரது பகுதி வாழ் மக்களிடையே ஏற்பட்ட ஆரவாரத்தால் சார்டீனியாவுடன் இணைய வேண்டும் என்று மக்கள் வாக்கெடுப்பின் மூலம் விருப்பம் தெரிவித்தனர். ரோமை தவிர ஏனைய போப்பின் பகுதிகளை இவர் தமது நாட்டுடன் இணைத்துக் கொண்டார். இவர் கரிபால்டியை தெற்கில் சந்தித்த போது கரிபால்டி தான் கைப்பற்றிக் கொண்ட எல்லா பகுதிகளையும் மன்னரிடம் ஒப்படைத்து விட்டு மன்னரின் தலைமையை ஏற்றுக் கொண்டார். மேலும் இணைக்கப்பட வேண்டிய பகுதி வெனிஷியாவும் ரோமுமே.

**வெனிஷியா இணைப்பு (1866)**

ஆஸ்திரிய – பிரஷியப் போரில் இரண்டாம் இம்மானுவேல் பிரஷியாவிற்கு துணைநின்றார். பிரஷ்யாவின் அமைச்சர் பிஸ்மார்க், வெனிஷியாவை இத்தாலிக்கு விட்டு தருவதாக ஆஸ்திரியாவை வற்புறுத்துவதாக வாக்களித்தார். ஆஸ்திரிய பிரஷ்யப் போரில் பிரஷ்யா வெற்றி பெற்றது. போர் முடிவில் தமக்கு உதவியமைக்கு பரிசாக பிஸ்மார்க் ஆஸ்திரியாவை வற்புறுத்தி வெனிசியாவை இத்தாலிக்கு வழங்குமாறு செய்தார். இதனால் வெனிஷியாவும் சார்டீனியாவுடன் இணைக்கப்பட்டது.

**ரோம் இணைப்பு (1870)**

பிரான்சை ஆண்ட மூன்றாம் நெப்பொலியனின் ஆதரவைப் பெற்ற போப்பாண்டவரிடம் ரோம் இன்னமும் இருந்து வந்தது. மேலும் ரோமில் பிரெஞ்சு படை ஒன்று போப்பாண்டவருக்கு ஆதரவாக முகாமிட்டிருந்தது. ரோம் தமது அரசின் தலைநகரமாக இருக்க வேண்டும் என்றும் இம்மானுவேல் விரும்பிய போதிலும்

பிரான்சுடன் போர் தொடுக்க இவர் விரும்பவில்லை. எனவே சில காலம் வரை டூரினும் பின்னர் பிளாரன்சும் இவரது தலைநகரமாய் இருந்தன. பிரான்சுக்கும், பிரஷ்யாவுக்கும் இடையே 1870-ல் போர் மூண்டது. இதனால் ரோமிலிருந்து பிரான்ஸ் தனது படையைத் திரும்பப் பெற்றது. இந்நிகழ்ச்சியை தொடர்ந்து **"அழியா நகர்"** (Eternal City) என்ற ரோமிற்குள் இம்மானுவேல் அணிவகுத்து சென்று ரோமை கைப்பற்றினார். பின்னர் ரோம் 1870-ல் இத்தாலியின் தலைநகர் என பேரறிக்கை வெளியிடப்பட்டதுடன் இத்தாலிய இணைவு இறுதிப் பொலிவு பெற்றது.

இத்தாலிய இணைவிற்கு விக்டர் இம்மானுவேல் தலைமையில் மசினியின் தொண்டும், கபூரின் இராஜதந்திரமும், கரிபால்டியின் செயல் திறனும் சிறந்த முறையில் செயலாற்றியது என்றால் அது மிகையாகாது.

## ஜெர்மானிய இணைவு (1871)

## (UNIFICATION OF GERMANY)

ஜெர்மானிய இணைவு தேசிய சக்திகளால் உருவாக்கப்பட்டதென்று: ஒரு இயக்கத்தாலோ, பல தலைவர்களின் கூட்டு முயற்சியாலோ, வல்லரசுகளின் சக்தியினாலோ உருவாக்கப்பட்டதன்று. ஒரு தனி மனிதனின் ராஜதந்திர திட்டத்தினால் அது உருவாக்கப்பட்டது. அந்த தனி மனிதன் தான் ஆட்டோவான் பிஸ்மார்க்.

பிஸ்மார்க் ஜெர்மனி இணைவிற்கென மாபெரும் இயக்கம் எதையும் தொடங்கவில்லை. பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், பிரச்சாரக் குழுக்கள், எதனையும் அவர் நம்பவில்லை. அவர் நம்பியது '**குருதியும் இரும்பும்**' என்ற கொள்கையை தான். குருதியும் இரும்பும் தான் அவரது கோட்பாடாயின. ஆக்கோட்பாடுகளை செயல்படுத்த மூன்று போர்களை பிஸ்மார்க் நடத்தினார். அவை 1) டென்மார்க்குடன் போர் 2) ஆஸ்திரியாவுடன் போர் 3) பிரான்சுடன் போர்.

மேலே உள்ள மூன்று போர்களுக்கான காரணங்களும் அவரால் உருவாக்கப்பட்டன. போருக்கான உடனடி காரணங்களும் அவரால் தான் செயற்கையாக உருவாக்கப்பட்டது. எல்லாமே அவரது ராஜதந்திர மூளையில் உருவான முன்னேற்பாட்டு திட்டங்கள் தான். போருக்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்திருந்தார். போரின் முடிவுகளையும், விளைவுகளையும் கூட முன் கூட்டியே அறிந்திருந்தார். எனவே எண்ணியதை எண்ணியவாறே செய்து முடித்தார்.

### இணைவிற்கு முன் ஜெர்மனியின் நிலை

ஜெர்மனி 300-க்கும் மேற்பட்ட சிற்றரசுககளாக சிதறுண்டு கிடந்தது. 1806-ல் நெப்போலியன் அவற்றை 39 அரசுகளாகசுருக்கி "ரைன் கூட்டமைப்பு" என்ற ஒரு கூட்டமைபபை உருவாக்கினார். வியன்னா ஒப்பந்தம் படி இந்த கூட்டமைப்பு ஆஸ்திரியா தலைமையின் கீழ் வந்தது. ஜெர்மனியிலுள்ள சிற்றரசுகள் சேர்ந்து ஒரு நாடாக உருவாக இருந்ததை ஆஸ்திரியா விரும்பவில்லை. இதனால் ஜெர்மானிய இணைவிற்கு முதல் எதிரியாக இருப்பது ஆஸ்திரியா என்பதை ஜெர்மனி உணர்ந்தது.

### ஜெர்மானிய இணைவிற்கு முந்திய முயற்சிகள்

1. 1842-ல் பிரஷ்யா (ஜெர்மானிய மாநிலங்களில் வலுவான ஒன்று) வடக்கு ஜெர்மனியில் உள்ள சிற்றரசுகளுடன் சேர்ந்துக் கொண்டு "சுங்க வரிகூட்டு" (Zollverein) என்ற கூட்டை வர்த்தக ரீதியில் ஏற்படுத்திக் கொண்டது. இக்கூட்டு அரசியல் ரீதியாக ஜெர்மானிய இணைவிற்கு முன்னோடியாக அமைந்தது.

2. 1848-ம் ஆண்டு பெப்ரவரி புரட்சியின் காரணமாக ஜெர்மன் தேசியவாதிகள் பிராங்பர்ட் என்ற இடத்தில் கூடி ஜெர்மானிய இணைவிற்கான ஏற்பாடகளை செய்தனர். இது ஐக்கிய ஜெர்மானிய அரசியலமைப்பை உருவாக்கியது.
3. ஜெர்மானிய இணைவு தேவை என்பதை அரசியல்வாதிகள் மட்டுமின்றி ஜெர்மனி இளவரசர்களும் உணர தலைப்பட்டனர். பிரஷ்ய மன்னர் பிரடரிக் வில்லியம் ஜெர்மன் இளவரசர்கள் அடங்கிய கூட்டிணைவு ஒன்றை தமது தலைமையில் அமைக்க முயற்சி செய்தார். ஆனால் ஆஸ்திரிய மட்டும் தொடக்கம் முதலே இக்கூட்டை எதிர்த்து வந்தது. ஆஸ்திரியா ஜெர்மனி கூட்டை எதிர்த்ததால் பலவிளைவுகள் ஏற்பட்டது.

**விளைவுகள்**

1. ஜெர்மன் இணைத் தன் தலைமையில் ஏற்படுத்தி தீர வேண்டும் என்று பிரஷிய நோக்கம் உறுதிப்பட்டது.
2. ஜெர்மன் இணைவிற்கு முதல் எதிரி ஆஸ்திரியா, வயன்னா ஒப்பந்தம் படி ஜெர்மானிய ரைன் கூட்டரசு ஆஸ்திரியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.
3. ஆஸ்திரியா செல்வாக்கை ஜெர்மனஜ அரங்கிலிருந்து அடியோடு ஒழிக்க வேண்டுமென்றால் பிரஷ்யாவின் படை வலிமையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டது.

**பிஸ்மார்க்கின் வருகை**

இச்சமயத்தில் 1858-ல் பிரஷ்ய மன்னர் பிரடெரிக் வில்லியம் மூளைக் கோளாறு காரணமாக பதவி விலகி முதலாம் வில்லியம் ஆட்சி பொறுப்பை ஏற்றார். இவர் ஜெர்மனி இணைவிற்கு பிரஷிய தலைமையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். அதற்காக பிரஷ்ய படை வலுவை அதிகரிக்க திட்டமிட்டார். போர் அமைச்சராக ஆல்பிக்வான்ரூன் என்பவரை நியமித்தார். மன்னரும், போர் அமைச்சரும் இணைந்து படைப் பெருக்கத்திற்கான திட்டங்கள் வகுத்தனர். இத்திட்டங்களை நிறைவேற்ற பெரும் தொகை தேவைப்பட்டது. இத்தொகையினை வழங்க பிரஷ்ய பாராளுமன்றம் தடை விதித்தது. இதனால் தமது நோக்கம் நிறைவேற்ற முடியாது என்பதை நினைத்து தவித்தார் பிரஷ்ய மன்னர். தமது திட்டத்தை டிசயல்படுத்த தகுதியும், திறமையும் வாய்ந்த புதிய பிரதம அமைச்சர் ஒருவரை நியமிக்க எண்ணினார். ஆதன் விளைவாக ஆட்டோவான் பிஸ்மார்க் பிரஷ்ய சான்ஸலராக (பிரதமராக) நியமிக்கப்பட்டார். ஜெர்மனி இணைய வேண்டும், அதுவும் பிரஷ்யாவின் தலைமையின் கீழ் தான் இணைய வேண்டும் என்று அசைக்க முடியாத நம்பிக்கையை பிஸ்மார்க் கொண்டிருந்தார்.

பிரஷ்யாவின் பாராளுமன்றம் ஏற்படுத்திய தடை, ஆஸ்திரியாவின் எதிர்ப்பு ஆகியவை பிஸ்மார்க்கின் மனதில் தெளிவான சிந்தனை கருத்துக்களை ஏற்படுத்தியிருந்தன. ‘‘குருதியும், இரும்பும்’’ என்ற கொள்கை மூலம் தான் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்க முடியும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இவருக்கு பாராளுமன்றத்தின் மீதோ, தாராளக் கொள்கை மீதோ அறவே நம்பிக்கை வைத்திருந்தார். பிரஷ்யாவின் தலைமையின் கீழ் தான் ஜெர்மனி இணைவு ஏற்பட முடியும் என இவர் உறுதியாக நம்பினார். ஆஸ்திரியாவிடமிருந்து தலைமையை பறிப்பது தான் இப்பிரச்சினைக்கு ஒரே வழி என பிஸ்மார்க்கிற்கு தோன்றவே, அதற்கான வலிமைமிக்க படையையும், பொருளாதார வசதியையும் ஏற்படுத்த வேண்டும் என நினைத்தார். பாராளுமன்றத்தின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் புதிய வரிகளை விதித்து நாட்டின் பொருளாதார வலிமையை பெருக்கினார். இராணுவத்தை வலிமைப்படுத்தினார். இந்நடவடிக்கைக்கு எதிராக தோன்றிய எதிர்ப்புகளை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். ‘‘நம் நாட்டுச் சிக்கல்கள் அனைத்தும் பேச்சுவார்த்தைகளினாலோ அல்லது பெரும்பான்மையினரின் தீர்மானங்களினாலோ தீர்க்க கூடியவைகள் அல்ல, மாறாக யாருக்கும் அடிபணியாமல் குருதி கொட்டுவதின் மூலம் தீர்வு காண்பது தான் சிறந்த வழி’’ என்ற தமது கருத்தை இவர் மதலமைச்சர் ஆனதும் வெளியிட்டார். இதற்காக டென்மார்க், ஆஸ்திரியா, பிரான்ஸ் ஆகிய

நாடுகளுடன் போர் செய்து அந்தந்த நாட்டில் இருக்கும் ஜெர்மானிய பகுதிகளை இணைக்க வேண்டும் என்று நினைத்தார்.

**பல்கலை கழகங்களில் நாட்டுப்பற்று**

ஜெர்மானிய நாட்டு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த பல்கலை கழக மாணவர்களின் சங்கங்கள் தங்களது பிரச்சாரத்தை ஆரம்பித்தனர். நாட்டு மக்களுக்கு ஒற்றுமை, நீதி, விடுதலை ஆகியவற்றின் அவசியத்தை இம்மாணவர் சங்கங்கள் வலியுறுத்தின. இதனை முளையிலேயே கிள்ளி எறிய திட்டமிட்ட ஆஸ்திரிய முதலமைச்சர் மெட்டர்னிக் ஜெர்மன் சிற்றரசர்களின் கூட்டத்தை **கால்பர்க்** என்ற நகரில் கூட்டினார். இக்கூட்டத்தில் மாணவர் சங்கங்களை அழிக்க பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இதற்கு **கால்பர்க் ஆணைகள்** என்று பெயர். குால்பர்க் ஆணையின்படி மாணவர் சங்கங்கள் தடை செய்யப்பட்டன. மேலும் மாணவர் சங்கங்களில் உறுப்பினராக இருந்த அனைவருக்கும் அரசுப் பணி வாய்ப்புகள் கொடுக்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

**சுங்க ஐக்கியம்**

ஜெர்மனியில் பல்வேறு தொழில்களும் பெருக ஆரம்பித்தது. ஒவ்வொரு மாநில அரசம் அதன் எல்லையில் சுங்க வரிகளை வசூலித்தது. இது தொழில் வளர்ச்சிக்கும், வாணிகத்திற்கும் பெரும் இடையூறாக இருந்தது. இதனால் ஜெர்மனியின் பொருளாதாரம் பாதித்தது. இந்நிலையை தீர்க்க 1818-ல் பிரஷ்யாவின் தலைமையில் அனைத்து ஜெர்மானிய மாநிலங்களும் ஒன்று சேர்ந்து ‘சுங்க ஐக்கியம்’ (Customs Union) ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. இதன்படி உள்நாட்டு சுங்கவரிகள் நீக்கப்பட்டன. ஜெர்மானிய மாநிலங்கள் உன்றுபட்டு பிரஷ்யா ஏற்பாடு செய்த சுங்க ஐக்கியத்தோடு இணைந்தன. இதனால் பிரஷ்யா தலைமையை எல்லா ஜெர்மானிய நாடகளும் ஏற்றுக் கொண்டன. முதலில் இதில் அக்கரை ஏதும் காட்டாத ஆஸ்திரிய பிரதமர் மெட்டர்னிக் பின்னர் இதில் சேர விரும்பியதை பிரஷ்யா மறுத்தது. இவ்வாறு முதன் முறையாக ஒரு முக்கியமான ஜெர்மனி நிறுவனத்திலிருந்து ஆஸ்திரியா ஒதுக்கி வைக்கப்பட்டது.

**டென்மார்க்குடன் போர் (1864)**

ஐக்கிய நாடுகளாகிய ஷெல்ஸ்விக், ஹோல்ஸ்டின் ஆகிய ஜெர்மானிய பகுதிகள் டென்மார்க் மன்னரின் கீழ் இருந்தது. இங்கு வாழந்தவர்கள் பெரும்பாலோர் ஜெர்மானியர்கள், இவ்விரண்டு பகுதிகளையும் எக்காரணத்தைக் கொண்டும் டென்மார்க்குடன் இணைக்கக் கூடாது என ஜெர்மானியர்கள் எதிர்த்தனர். 1863-ம் ஆண்டு ஒன்பதாம் கிறிஸ்டியன் (1863-1906) என்ற டென்மார்க் மன்னர் ஷெல்ஸ்வழக்கை டென்மார்க்குடன் இணைத்தும், ஹோல்ஸ்டினுக்கு சுயாட்சி வழங்கியும் ஒரு புதிய அரசியலமைப்பை வெளியிட்டார். இவ்விரண்டு பகுதிகளும் டென்மார்க் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு ஜெர்மனியோடு இணைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் எழுந்தது.

இப்பிரச்னை பிரஷ்யாவிற்கும் டென்மார்க்கும் இடையே போர் ஏற்பட காரணமாயிற்று. வியன்னா ஒப்பந்தம் படி ஆஸ்திரிய ஜெர்மனியின் மீது மேலாதிக்கம் பெற்றிருந்தாலும் பிரஷ்யா டென்மார்க்குடன் போர் செய்தால் பிரஷ்யாவுக்கு ஆதரவு கொடுக்க முடிவு செய்தது. டென்மார்க்குடன் பிரஷ்யா போர் தொடுத்ததும் ஆஸ்திரியா

பிரஷ்யாவுக்கு ஆதரவாக தனது படைகளை அனுப்பியது. பிரஷ்யா-ஆஸ்திரியா ஒருங்கினைற்த படைக்கு டென்மார்க்கால் ஈடு கொடுக்க முடியாமல் போரில் தோலிவியுற்றது. **வியன்னா** என்ற இடத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் படி ஷெல்ஸ்விக்கையும், ஹோல்ஸ்டினையும் தந்துவிட டென்மார்க் மன்னர் இணங்கினார். சிறிது காலம் அவற்றை ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும் சேர்ந்து நிர்வகிக்க ஏற்பாடாயிற்று.

**ஆஸ்திரிய – பிரஷ்ய போர் (1866)**

இப்போருக்கு முக்கிய காரணம் பிஸ்மார்க்காகும். பிரஷ்யாவின் வலிமை ஓங்குவதைக் கண்டு ஆஸ்திரியா பொறாமையடைந்தது. ஆஸ்திரியாவிற்கும், பிரஷ்யாவிற்கும் இடையே ஒரு போர் தவிர்க்க முடியாததாயிற்று. ஆஸ்திரியாவிற்கு மற்ற நாடுகள் எக்காரணத்தைக் கொண்டும் உதவக்கூடாது என்பதற்கு பல முன்னேற்பாடுகளை பிஸ்மார்க் செய்து கொண்டார்.

முதலாவதாக போலந்து புரட்சியின் போது ரஷியாவிற்கு பிரஷ்யா உதவியதால் ரஷியா நடுநிலைமையை வகிக்க வேண்டும் என்ற உறுதிமொழியைப் பெற்றார். இத்தாலிக்கு வெனிசியாவை தருவதாக பிஸ்மார்க் கூறியதால் இத்தாலியும் நடுநிலைமை வகித்தது. பிரான்ஸ் மன்னர் மூன்றாம் நெப்போலியன் புதிய நாடுகளை கைப்பற்றும் முயற்சியில் இறங்கியதால், அதற்கு உதவி செய்வதாக கூறி மூன்றாம் நெப்போலியின் ஆதரவையும் பெற்றுக் கொண்டார். இவ்வளவு ஏற்பாடையும் பிஸ்மார்க் செய்துவிட்டு, ஆஸ்திரியா மீது பிஸ்மார்க் போர் தொடுத்தார்.

1. முதலில் ஹோல்ஸ்டிங்கில் கிளர்ச்சி நடக்கிறது என்கிற போலி காரணத்தைக் காட்டி ஹோல்ஸ்டினை ஆஸ்திரிய யிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார். ஆஸ்திரியா இதை எதிர்த்ததால் போர் தீவிரம் அடைந்தது. ஆஸ்திரியா படை பிரஷ்ய படையை விட இரு மடங்கு வலிமை பெற்றதாக இருந்தது. இப்போர் ஏழு வாரங்கள் நடந்தது. சடவோ என்னும் இடத்தில் பிஸ்மார்க் ஆஸ்திரிய படையை படுதோல்வியடைய செய்தார். இறுதியாக இப்போர் 1866-ல் ஏற்பட்ட பிரேக் உடன்படிக்கை படி முடிவுக்கு வந்தது. இதன் படி ஹனோவர், ஹெசிகாசல், நாசா, பிராங்பர்ட், ஷெல்ஸ்விக், ஹோல்ஸ்டின் ஆகிய இடங்களை பிரஷ்யா இணைத்துக் கொண்டது.
2. ஆஸ்திரியாவிடமிருந்து இத்தாலிக்கு வெனிசியா கிடைத்தது.
3. ஜெர்மானிய கூட்டிலிருந்து ஆஸ்திரியா வெளியேற்றப்பட்டது.
4. பழைய ஜெர்மன் நாட்டிணைவு கலைக்கப்பட்டு, புதிய வட ஜெர்மானிய நாட்டிணைவு பிரஷ்யாவின் தலைமையின் கீழ் நிறுவப்பட்டது.
5. நான்கு நாடுகளாகிய பேடன், வூட்டெம்பர்க் பவோரியா,ஹெசி-டாம்ஸ்டாட் என்பவை நடுநிலைமையாக இருந்தது.

இவை அனைத்தும் பொது இனத்தைச் சார்ந்த பகுதிகள் என்பதை வலியுறுத்தி பிஸ்மார்க் விடுவித்த வேண்டுகோள் அப்பகுதிகளில் தேசிய உணர்வை துாண்டிற்று. இதன் விளைவாக இவர் விரும்பிய பலன் ஏற்பட்டது. ஏதாவது போர் நிகழுமேயானால் தாங்கள் பிரஷ்யாவுடன் தான் சேருவோம் என இந்நாடுகள் உறுதியளித்தன.

**பிராங்கோ – பிரஷ்யப்போர் (1870-71)**

மேலும் பிஸ்மார்க்கால் முறியடிக்கப்பட வேண்டியவா மூன்றாம் நெப்போலியன் மட்டுமே. பிரஷ்யாவின் புதிய எழுச்சியை மூன்றாம் நெப்போலியனால் பொறுத்துக் கொள்ள முடியவல்லை. வெவ்வேறு சமயங்களில் பால்ட்டினேட், லக்ஸம்பர்க், பெல்ஜியம் போன்ற பகுதிகளோடு ஏற்பட்ட போர்களில் பிரான்ஸ் நடுநிலைமை வகித்தற்காக அப்பகுதிகள் தனக்கு தரவேண்டும் என்று அவ்வப்போது மூன்றாம் நெப்போலியன் கோரி வந்தார். ஆனால் எதையும் சொடுப்பதற்கு பிஸ்மார்க் தயாரில்லை. பிரான்சின் வலிமையை நசுக்குவதற்கேற்ற வாய்ப்பை பிஸ்மார்க் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். விரைவிலேயே அவ்வாய்ப்பும் கிட்டியது.

ஸ்பெயினில் 1869-ல் ஒரு புரட்சி ஏற்பட்டது. ஸ்பானிய அரியணை ஜெர்மானிய வம்சத்தைச் சார்ந்த ஹோகன் சோலன் குடும்பத்தை சேர்ந்த லியோபோல்டு என்பவருக்கு அளிக்கப்பட்டது. ஹோகன் சோலன் குடும்பத்தின் கீழ் ஸ்பெயினும், பிரஷ்யாவும் இணையும் வாய்ப்பு இருந்ததால் ஐரோப்பாவின் வல்லமை சமநிலை சீர்கெடும் எனக் கூறி இதனை பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியன் எதிர்த்தார். தாம் ஸ்பானிய அரியணைக்கு ஹோகன் சோலன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை ஆதரிப்பதில்லை என ஸ்பெயினிடமிருந்து வாக்குறுதியை பெறுவதற்று தமது தூதர் **பென்டிட்டி** என்பவரை ஸ்பெயினுக்கு அனுப்பினார்.

அந்த தூதர் முதலில் பிஸ்மார்க்கிடம் சென்றார். பிஸ்மார்க் அங்கே இல்லாததால் பிரஷ்ய மன்னரை சந்திப்பதற்கு எம்ஸ் என்ற இடத்திற்கு சென்றார். பிரெ'சு தூதருக்கும், பிரஷ்ய மன்னருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை விளக்கி பிஸ்மார்க்கிற்கு மன்னர் தந்தி கொடுத்தார். பிரான்சுடன் போர் தொடுக்க தகுந்ததொருவாய்ப்பினை எதிர்நோக்கியிருந்த பிஸ்மார்க், தமக்கே உரித்தான ராஜதந்திர முறையில் தந்தியை மாற்றியமைத்தார். “எங்கள் நாட்டு மன்னரை அவமதித்து விட்டார்” என பிரெஞ்சு மக்கள் நம்பும் அளவிற்கு தந்தியை மாற்றியமைத்து ஜெர்மன் பத்திரிகைகளுக்கு செய்தியை கொடுத்தார் பிஸ்மார்க். புத்திரிக்கையில் செய்தியை பார்த்ததும் இருநாட்டு மக்களும் ஆவேசம் கொண்டனர். பிரெஞ்சு மக்கள் ஒட்டு மொத்தமாக ஜெர்மனிக்கு எதிராக போர் தொடுக்க வேண்டும் என்று மூன்றாம் நெப்போலியனை வேண்டினர். வேறு வழியின்றி மூன்றாம் நெப்போலியன் பிரஷ்யா மீது தொடுத்தார்.

போர் ஜெர்மானிய மக்களின் நாட்டுப்பற்றை தூண்டியது. இதனால் ஜெர்மானிய மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு பிரான்சை எதிர்த்தனர். இறுதியாக செடான் என்ற இடத்தில் நடந்த போரில் பிரஷ்யா வெற்றி பெற்றது. பிரான்ஸ் படுதோல்வியடைந்தது. மூன்றாம் நெப்போலியன் கைது செய்யப்பட்டார். வெற்றி பெற்ற ஜெர்மன் படை பாரிசுக்குள் நுழைந்தது. பாரிஸ் முற்றுகைந டந்து கொண்டிருந்தபோது **பேடன், வூட்டெம்பர்க், பவேரியா, ஹெஸி-டாம்ஸ்டாட்** ஆகிய தென் ஜெர்மானிய மாநிலங்கள் வட ஜெர்மானிய நாட்டிணைவில் சேர்ந்து கொண்டன. பாரீஸ் வீழ்ச்சியுற்றதை தொடர்ந்து 1871-ல் பிராங்பர்ட்டில் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. பிரான்ஸ் ஜெர்மனிக்கு அல்சேசையும், லொரைனையும் விட்டுக் கொடுத்தது. மேலும் பிரான்ஸ் 200 மில்லியன் பவுன்களை நஷ்ட ஈடாக கொடுக்க நேர்ந்தது.

வெர்சே நகரிலுள்ள புகழ்பெற்ற கண்ணாடி மண்டபத்தில் முதலாம் கெய்சர் வில்லியம் ஒன்றினைந்த ஜெர்மனியின் முதல் பேரரசராக பதவி ஏற்றுக் கொண்டார். முதலாம் கெய்சர் வில்லியம் பேரரசராக அறிவித்தவுடன் ஜெர்மானிய இணைவு இறுதி பொலிவுப் பெற்றது. “இரும்பு மனிதர்” என அழைக்கப்பட்ட பிஸ்மார்க் “நவீன ஜெர்மானியை உருவாக்கியவர்” எனக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமே.

## பிஸ்மார்க்கின் சாதனைகள் (1815-1898)

## (ACHIVEMENTS OF BISMARK)

### இளமை பருவம்

புபிஸ்மார்க் 1815-ல் ஓர் உயர்குடியில் பிறந்தார். பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியத்தால் ஜெர்மனியின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் ரஷியாவிலும், பிரான்சிலும் அயல் நாட்டு தூதுவராக பணியாற்றியவர். 1862-ல் பிரஷியாவின் முதலமைச்சரானார்.

### ஜெர்மானிய இணைவில் பிஸ்மார்க்கின் பங்கு

பிஸ்மார்க் 'குருதியும் இரும்பும்' என்ற கொள்கையை நம்பினார். ஜனநாயகம், தாராளக் கொள்கை, அகிம்சை இவைகளில் நம்பிக்கை கிடையாது. இவர் முதலமைச்சரான போது ஜெர்மனியின் பல பகுதிகள் டென்மார்க், பிரான்ஸ், ஆஸ்திரியா போன்ற நாடுகளிடம் இருந்தது. இவர் தனது திறமையாலும், இராஜதந்திரத்தாலும் டென்மார்க், பிரான்ஸ், ஆஸ்திரியா ஆகிய நாடுகளை தோற்கடித்து சிதறி கிடந்த ஜெர்மன் பகுதிகளை இணைத்து, ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கினார். ஐக்கிய ஜெர்மனி உருவாக பிஸ்மார்க் கீழ்கண்ட போர்களை நடத்தினார்.

1. டென்மார்க்குடன் போர்
2. ஆஸ்திரிய – பிரஷிய போர்
3. பிராங்கோ – பிரஷியா போர்

## உள்நாட்டு கொள்கை

### 1.அரசியல் நிர்ணய சீர்திருத்தங்கள்

1862-ல் சான்சலராக (முதலமைச்சராக) நியமிக்கப்பட்ட பிஸ்மார்க் 1890-ல் தனது பதவியை ராஜினமா செய்வது வரை அப்பதவியை வகித்து வந்தார். அரசியல் நிர்ணய சீர்திருத்தங்களே இவர் கவனத்தை முதலில் ஈர்த்தது. 1871-ல் ஏற்பட்ட புதிய ஜெர்மானிய இணைவுக்கு ஒரு கூட்டாட்சி தோற்றத்தை அளித்தார். மாநில சுய ஆட்சி வழங்கப்பட்டதன் மூலம் மாநிலங்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன. பேரரசருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் ஜெர்மனியின் தேசிய ஒருமைப்பாடு காக்கப்பட்டது. சான்சலர், பேரரசருக்கு பொறுப்பு உள்ளவராக்கப்பட்டார்.

### 2.பொதுப்பணித்துறை பணிகளை நிறைவேற்றுதல்

பிரஷ்யாவில் ஒரே சீரான நிர்வாக முறையினைக் கைக்கொள்ள சட்டம், நாணயம், இருப்பு பாதை, வங்கி ஆகிய துறைகளை பிஸ்மார்க் சீர்திருத்தினார். வெவ்வேறு மாநிலங்களில் நிலவிய வேறுபட்ட சட்ட முறைகளை நீக்கிவிட்டு அவற்றிக்கு பதிலாக பிஸ்மார்க் ஜெர்மானிய பேரரசுக்கு ஒரே சீரான சட்டதிட்டத்தை கொண்டு வந்தார். நாட்டின் வெவ்வேறான இருப்பு பாதைகளை இணைப்பதற்கு 1873-ல் ஓர் இருப்பு பாதை **பேரலுவலகத்தை** நிறுவினார். தபால் தந்தி இராணுவத் துறைகளோடு இருப்புபாதை திட்டமும் இணைக்கப்பட்டது. அரசு வங்கிகள் துவக்கபட்டது.

### 3.பிஸ்மார்க்கும் - திருச்சபையும்

**க**த்தோலிக்க திருச்சபை ஆஸ்திரிய – பிரஷிய போரில் வெளிப்படையாக ஆஸ்திரியாவை ஆதரித்ததால் திருச்சபையின் மீது வெறுப்பு கொண்டார். திருச்சபையின் சட்டங்கள் சில அரசியல் சட்டங்களுக்கு புறம்பாக இருந்ததால் பிஸ்மார்க் திருச்சபையோடு போராட ஆயத்தமானார். இப்போராட்டத்தை **கல்டர் கேம்ப்ஃ.** (Kultur-kampt) அல்லது **'நாகரீகத்துக்காக போர்'** என்று அழைப்பர். துங்கள் நலநன பாதுகாக்கவும், திருச்சபையை எதிர்த்து போராடவும் ஜெர்மனியிலுள்ள கத்தோலிக்கர்கள் "மையம்" என்ற கட்சியினை தோற்றுவித்தனர்.

கத்தோலிக்க திருச்சபையை பேரரசின் கீழ் கொண்டுவர பல ஆணைகளை பிஸ்மார்க் பிறப்பித்தார். 1872-ல் ஜெஸ்யூட்டுக்களை இவர் நாட்டிலிருந்து வெளியேற்றியதுடன் போப் ஆண்டவருடன் தம்முடைய துாதரக தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டார். இதை தொடர்ந்து 1873, 1874, 1875 –ம் ஆண்டு **மே சட்டங்கள்** அல்லது **பாக் சட்டங்கள்** கத்தோலிக்கர்களை அடிபணிய வைக்கும் பொருட்டு இயற்றப்பட்டன. (மே மாதத்தில் இயற்றப்பட்டதால் இதற்கு மே சட்டங்கள் என்றும் பிரஷ்ய கல்வி அமைச்சர் பாக் பெயரால் பாக் சட்டம் என்றும் பெயர் பெற்றது.) கல்வி நிர்வாகம் மத சார்பாளர்களிடமிருந்து பறிக்கப்பட்டு அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. சமுக திருமணம் கட்டாயமாக்கப்பட்டது. போப்பாண்டவர் மே சட்டங்களை காரசாரமாக எதிர்த்தார்.

### பிஸ்மார்க்கும் - சோஸலிசமும்

ஜனநாயககொள்கைகளில் நம்பிக்கை இல்லாததா் பிஸ்மார்க் சோஷலிசக் கருத்துக்களை அடக்கி ஒடுக்க முயன்றார். மக்களில் பெரும்பான்மையோர் சோசலிச கருத்துக்களை விரும்பினார். இதனால் மக்களின் தணியா சோசலிசத் தாகத்தை தணிப்பதற்கு பிஸ்மார்க் சில சோசலிசச் சட்டத்திட்டங்களை இயற்ற கட்டாயப்படுத்தப்பட்டார். சோசலிஸ்டுகளுக்கு எதிராக தடைச் சட்டங்கள் 1878-ல் நான்கு ஆண்டு காலத்திற்கு இயற்றப்பட்டு 1890 வரை அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டன. சோசலிச கருத்துக்களை விளம்பரப்படுத்த முயன்ற பேச்சாளர்களையும், கழகங்களையும் இலக்கிய வெளியீடுகளையும் சட்டங்கள் மூலம் தடுத்தார். சட்டத்திற்கு புறம்பான நோக்கங்கள் கொண்டவர்களை தண்டிக்க காவல்படை உஷார்படுத்தப்பட்டது. தொழிலாளர்களை திருப்திப்படுத்த சோஷலிச கருத்துக்கள் அடங்கிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வயதான காலத்தில் ஓய்வு ஊதியத்திற்கு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது.

### பொருளாதார திட்டங்கள்

பிஸ்மார்க்கின் பொருளாதார திட்டங்கள் நாட்டினுடைய வளத்திற்கு அதிகம் உதவியது. இரும்பு எஃகு நெசவு ஆகிய தொழில்களுக்கு ஊக்கம் தரப்பட்டது. நாடெங்கிலும் இருப்பு பாதைகள் போடப்பட்டன. இறக்குமதி பொருட்கள் மீது அதிக சுங்கவரிகளை சுமத்தினார். அதே சமயம் உள்நாட்டில் தடையில்லா வாணிகத்தை ஊக்கப்படுத்தினார். உற்பத்தியில் அனைத்து நாட்டு அங்காடியிலும் ஜெர்மானியப் பொருட்கள் வந்து குவிந்தன.

### காலனி ஆதிக்கம்

நாட்டில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் காரணமாக கச்சா பொருட்களின் தேவை அதிகரித்தது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைவிற்பதற்கு ஏற்ற அங்காடிகளின் தேவையும்அதிகமாயின. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப புதிய இடமும் தேவைப்பட்டது. ஆதலால் புதிய காலனிகளை நிறுவ வேண்டும் என்று பிஸ்மார்க்

எண்ணினார். ஆதன் காரணமாக ஆப்பிரிக்கா கண்டத்தில் டோகோலாந்து, காமரூன்ஸ்,கிழக்கு ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஆப்பிரிக்கா, கினியின் ஒரு பகுதியான மார்ஷல் தீவுகள், பிஸ்மார்க் தீவுகள் ஆகியவற்றில் ஜெர்மனி காலனிகளை நிறுவியது.

## ஜெர்மானிய இணைவுக்குப்பின் வெளிநாட்டுக் கொள்கை

ஜெர்மனி ஒன்றுபட்ட பிறகு பிஸ்மார்க் குருதியும் இரும்பும் என்ற கொள்கையை கைவிட்டார். ஆனால் ஐரோப்பா கண்டத்தில் பிரான்சையும், ஆஸ்திரியாவையும் கொடூரமாக நடத்தியதை அவர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். அதே சமயம் பிரான்ஸ் காலனிகளை நிறுவும் முயற்சியை ஊக்குவித்ததின் மூலம் பிரான்சுடன் நட்பு வைத்துக் கொண்டார். ஆஸ்திரியாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டதின் மூலம் அந்நாட்டை தன்பால் ஈர்த்துக் கொண்டார். ஆனால் அவரது உள்மனதில் பிரான்சை தனித்து ஒதுக்க வேண்டும் என்றே எண்ணினார்.

ஜெர்மனிக்கு எதிராக உருவாகும் கூட்டை தடுப்பதும், ஐரோப்பாவில் அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்பதும் தான் 1871-க்குப் பிறகு பிஸ்மார்க் கடைபிடித்த வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு கூறாகும்.

## மூவேந்தர் கழகம் (1872)

ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷியா ஆகிய மூன்று நாட்டு மன்னர்களைக் கொண்ட மூவேந்தர் கழகத்தினை 1872-ல் பிஸ்மார்க் உருவாக்கினார். மூன்று மன்னர்களும் ஐரோப்பாவில் முன்னிலை வகிக்க வேண்டும் என்பதற்காகவும் கிழக்கு பிரச்சினை சம்பந்தப்பட்டவற்றை தீர்க்கவுமே ஏற்பட்ட ஒரு தளர்ச்சியான அமைப்பாக இக்கூட்டுறவு இருந்தது. பிரான்சை தனித்து ஒதுக்குவது, ஆஸ்திரியாவை பழைய கசப்புணர்வை மறக்கச் செய்வது, ஐரோப்பாவில் திடீர் கிளர்ச்சியை முறியடிக்க ஒரு புதிய கூட்டாளியை (ரஷியா) ஈர்ப்பது ஆகியவையே பிஸ்மார்க் ஏற்படுத்திய இக்கழகத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அக்கூட்டுறவு நீடித்து நிலைபெறும் தன்மையை பெற்றிருக்கவில்லை. ஏனெனில் பால்கன் பகுதிகளில் ரஷியாவுக்கும், ஆஸ்திரியாவுக்கும் எதிரும் புதிருமான நோக்கங்கள் இருந்தன. 1877-ல் **ரஷிய-துருக்கி போர்** ஏற்பட்டது. இப்போர் **சான்ஸ்டெபானோ** என்ற ஒப்பந்தம் படி முடிவடைந்தது. இவ்வொப்பந்தம் வல்லரசுகளுக்கு ஒவ்வாததால் 1878-ல் பிஸ்மார்க்கின் தலைமையில் நடந்த பெர்லின் மாநாட்டில் அவ்வுடன்படிக்கை திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி ரஷ்ய-துருக்கி போரில் பங்குபெறாத ஆஸ்திரியாவுக்கு பாஸ்னியா, ஹர்சிகோவினா ஆகிய இரண்டு நாடுகள் கிடைத்தது. இப்புதிய ஏற்பாடு ரஷியாவை வெகுண்டெழச் செய்தது. இதனால் இக்கழகம் வலுக்குன்றினது.

## ஆஸ்திரிய – ஜெர்மானிய உடன்பாடு (1879)

1879-ல் ஆஸ்திரியாவுக்கும், ஜெர்மனிக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் படி இந்த இரு நாடுகளில் ஏதாவது ஒன்று ரஷியாவினால் தாக்கப்பட்டால் அதனுடைய உதவிக்கு மற்ற நாடு முன் வரவேண்டும். அதோடு ரஷியா தன்னுடைய உதவியை எதிரிக்குக் கொடுத்தால் இரண்டு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என்பது தான் இந்த உடன்பாட்டின் முக்கிய நோக்கமாக இருந்தது.

## முக்கூட்டுறவு (1882)

பிரான்சிற்கும், இத்தாலிக்கும் இடையே ஏற்படவிருந்த ஒப்பந்தத்தைக் தவிர்க்க பிஸ்மார்க் சூழ்ச்சி ஒன்றை செய்தார். இவர்கள் நட்புணர்வு நலியும் பொருட்டு **டூனிசை** பிரான்ஸ் கைப்பற்றுவதற்கு பிஸ்மார்க் ஊக்கம் கொடுத்தார். டூனிசை பெற ஆவலுடன்

காத்திருந்த இத்தாலிக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. சினமுற்று இத்தாலி ஆஸ்திரிய – ஜெர்மன் உடன்பாட்டில் 1882-ல் சேர்ந்ததுடன் இது முக்கூட்டுறவாக மாறியது.

### மூவேந்தர் கழகம் புதுப்பிக்கப்படல்

1881-ல் ரஷியாவில் மன்னரா பதவியேற்ற சார், அலெக்சாண்டர் பிரான்சின் குடியரசு தோற்றமுடைய அரசை வெறுத்தார். மிகவும் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுவதை உணர்ந்த பிஸ்மார்க் இதை நன்கு பணன்படுத்தி 1881-ல் மூவேந்தர் கழகத்தை புதுப்பித்தார். இதன்படி மூன்று பேரரசர்களில் யாராவது ஒருவர் நாலாவது நாட்டினரால் தாக்குண்டால் உடன்பாட்டில் உள்ள மற்ற இரு பேரரசர்களும் நடுநிலை வகிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

### பிஸ்மார்க்கின் வீழ்ச்சி

1888-ல் இரண்டாம் வில்லியம் ஜெர்மனியின் புதிய கெய்சரானார். (மன்னரானார்) இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக பிஸ்மார்க் 1890-ல் தனது பதவியை ராஜினமா செய்தார். ‘‘நாடு என்ற கப்பலை அனேக புயல்களுக்கும், திட்டுக்களுக்கும் இடையே நல்ல முறையில் செலுத்திய கப்பல் தலைவன் கைவிடப்பட்டார்’’. 1898-ல் தனது 83வது வயதில் இவர்உயிர் நீத்தார்.

### மதிப்பீடு

பிஸ்மார்க் ஜெர்மனியிர் தோன்றிய மிகப்பெரும் நிர்வாகிகளில் ஒருவராவார். துன்னுடைய ‘குருதியும் இரும்பும்’ என்ற கொள்கையினால் ஜெர்மனியை ஒன்றுபடுத்தினார். தன்னுடைய தொழில் மயமாக்கும் திட்டத்தால் ஜெர்மனியை அகில உலகம் போற்றும் முறையில் உற்பத்தியில் சிறந்த நாடாக்கினார். இவர் ஒரு கை தேர்ந்த ராஜதந்திரி ஆவார். நெஞ்சிலே உறுதியும் செயலிலே தீவிரமும் உடையவர். விடாக்கண்டனான பிரிட்டிஷ் நாயை இக்கட்டான மனநிலையில் வைத்தும், ரஷிய கரடியை ஏய்த்தும்,ஈஸ்திரிய ஓநாயை தம் குகைக்குள் மயக்கி அழைத்தும், காயம் அடைந்த இத்தாலியப் பறவையை பொறியிலிட்டும், அடிப்பட்ட பிரெஞ்சு வேங்கையை தாஜா செய்வதுமான பல அரிய செயல்களை புரிந்ததினால் இவரை நவீன ஜெர்மனியை உருவாக்கியவர் என்றும், இரும்பு மனிதர் என்றும் அழைப்பது பொருத்தமே.

## கிரிமியப் போர் (1854-56)

### காரணங்கள்

1. துருக்கிப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காண விரும்பிய ரஷிய மன்னர் சார் முதலாம் நிக்சோலஷ் 1844-ல் பிரிட்டனுக்கு சென்று அரசாங்கத்திடம் தனது திட்டத்தை கூறினார். துருக்கியின் விவகாரத்தில் யாரும் தலையிடக் கூடாது என்பதும், தனது பேரரசில் வாழும் கிருத்துவர்களுக்கு பல உரிமைகள் அளிக்குமாறு துருக்கிய சுல்தானை தூண்டவேண்டும் என்பது தான் பிரிட்டனின் திட்டமாகும் என்று பதில் கூறப்பட்டது. ரஷியாவை பொதுவாக வெறுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் வீணே காலம் கடத்தியது. பின்னர் பிரிட்டனின் அயல்நாட்டு அமைச்சரான **‘பாமர்ஸ்டன்’** என்பவர் **‘பசிபிகோ’** என்ற யூதரின் கடையை சில கிரேக்கர்கள் தாக்கி சேதப்படுத்தி விட்டார்கள் என்ற சிறிய விஷயத்தைப் பெரிதுப்படுத்தி கிரீசை முற்றுகையிட்டார் இவர். (1850) இது ரஷியாவின் நட்பை முறித்தது.

2. மேலும் ஒரு சம்பவமும் இங்கே கருதத்தக்கது. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பாலஸ்தீனத்திலிருந்த புனித தலங்களை கத்தோலிக்கர்கள் நிாவகித்து வந்தனா். அவா்கள் அதை சாிவர நிா்வகிக்காததால் கிரேக்க வைதீக திருச்சபையிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தாா் துருக்கி சுல்தான். வைதீக திருச்சபைக்கு ஆதரவாக ரஷிய மன்னா் சாா் நிக்கோலஸ் மேலும் 1774-ம் ஆண்டு ஏற்பட்ட **குட்சுக் - கெய்னாா்ஜி** உடன்படிக்கை படி துருக்கியில் வாழும் கிருத்துவா்களைபாதுகாக்கும் உாிமை தன்னை மட்டுமே சோ்ந்தது என்றும், இதில் பிரான்ஸ் தலையிட முடியாது என்றும் கூறினாா். இந்த சமயத்தில் பல்கோியா, செர்பியா, மாசிடோனியா, ருமேனியா மாநிலங்கள் ஆகியவை துருக்கி சுல்தானின் அடக்குமுறைக்கு எதிராக ரஷியாவின் உதவியை கோாின. இதுதான் சமயம் என்று ரஷிய படைகள் துருக்கி கைப்பற்றிய ருமேனிய பகுதிக்குள் 1853 ஜீலை மாதம் நுழைந்தது.
உடனே பிரிட்டன், பிரன்ஸ், ஆஸ்திரியா ஆகியவை **ஆகஸ்டில்** வியன்னாவில் மாநாடு நடத்தி துருக்கியில் வாழ்ந்த கிருத்துவர்களின் பாதுகாவலனாக ரஷியாவின் உரிமைகளை (குட்சுக் - கெய்னார்ட்ஜி உடன்படிக்கை படி) தாம் ஏற்றுக் கொள்வதாகவும், ரஷிய படைகள் உடனே ருமேனியாவை விட்டு அகல வேண்டும் என்றும் அதன் பின்னர் தான் கிருத்துவ மக்களுக்கு உரிமைகள் அளிக்க துருக்கிய சுல்தான் இணங்குவார் என்றும் ஒரு குறிப்பினை ரஷியாவிற்கு அனுப்பியது. ரஷியா உடனே சம்மதித்தது. ஆனால் 1852 முதல் 1855 வரை பிரிட்டனில் பதவியிலிருந்த **ஆபர்டீன் மந்திரிசபை** குள்ளநரி தந்திரங்களை எல்லாம் மேற்கொண்டது. பிரிடடிஷ் தூதரின் இரகசிய ஆலோசனையின் பேரில் துருக்கி இதை ஏற்க மறுத்தது.

இச்சமயத்தில் பிரிட்டிஷ் பிரெஞ்சு போர் கப்பல்கள் 1841-ம் ஆண்டின் ‘ஜல சந்தி ஒப்பந்தத்தை’ மீறி டார்டனெல்ஸில் நுழைந்து ருமேனிய மாநிலத்தில் இருந்து ரஷிய துருப்புகள்ள பதினைந்தே நாட்களில் வெளியேற வேண்டுமென்று போர் எச்சரிக்கை உன்றை செய்தது. உடனே துருக்கியும் ரஷியாவிற்கு எதிராக போர் செய்ய தயாரானது. சர்வதேச ஒப்பந்தத்தை மீறி பிரிட்டிஷ் - பிரெஞ்சு போர் கப்பல்கள் டார்டனெல்ஸில் நுழைந்ததே ஒரு போர் நடவடிக்கை தான் என்று ரஷியா அறிவித்தது. முன்பு பணிந்து போக விரும்பிய ரஷியா, இப்போது அதன் கொள்கையை மாற்றிக் கொண்டது. உடனே நவம்பர் 23-ல் ரஷியாவின் மீது துருக்கி போர் தொடுத்தது.

**போர் நிகழ்ச்சிகள்**

சீனோப் (Sinope) என்ற இடத்தில் துருக்கிய கப்பல்களை 1853 நவம்பர் 30-ல் சின்னாபின்னப்படுத்தியதோடு, அந்நகரையும் வேறு பல பகுதிகளையும் ரஷியர்கள் கைப்பற்றினார்கள். உடனே பிரிட்டிஷ் பிரெஞ்சு போர் கப்பல்கள் ரஷியர்களை ருமேனிய பகுதியிலிருந்து உடனே வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இதற்கு ரஷியா மறுத்தது. பிரஷ்யாவையும், ஆஸ்திரியாவையும் இக்கூட்டணியில் சேருமாறு கேட்டுக் கொண்டது. அதற்று பிரஷ்யா மறுத்தது. ஆனால் ஆஸ்திரியா ஒத்துக் கொண்டதோடு உரு பெரும்படை ஒன்றை திரட்டி **டான்யூப்** என்ற நதிக்கரையில் குவித்தது. உரியவேளைக்காக காத்திருந்தது.

பிரிடடிஷ் பிரெஞ்சுப் படைகள் வார்னா (Varna) என்ற இடத்தில் கரையிறக்கப்பட்டன. ‘‘ரஷ்ய துருப்புகள் உடனே கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேற வேண்டும்’’ என்று ஆஸ்திரியா ரஷியாவிற்கு ஒரு இறுதி எச்சரிக்கை விடுத்தது. மேலும் பகைவர்களை தேடிக் கொள்ள விரும்பாத ரஷியா அதற்கு இணங்கியது. உடனே துருக்கிய சுல்தானின் அனுமதியோடு அம்மாநிலங்களை ஆஸ்திரியப் படைகள் எடுத்துக் கொண்டன.

கிருமி(Crime) தீபகற்பத்திலிருந்த ரஷியக் கடற்படைத் தளமான செவஸ்டாபோலை (Sevastapol) கைப்பற்றி அழிக்குமாறு பிரிட்டிஷ் பிரெஞ்சுப்

படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உடனே பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகள் கிரிமியாவில் இறங்கின. ஆல்மா என்ற இடத்தில் ரஷிய படை தோற்கடிக்கப்பட்டது. செவஸ்டாபோல் முற்றுகையிடப் பட்டது. **பாலகிளாவா** (Blaclava) என்ற இடத்திலும் **இங்கர்மான்** (Inkerman) என்ற இடத்திலும் பிரிட்டிஷ் படைகள் சிறுசிறு ரஷிய படைகளைத் தோற்கடித்தன. ஆயினும் முடிவு ஏதும் ஏற்படவில்லை. தங்களின் போர் நோக்கங்கள் நான்கு என்று ரஷியாவிற்கு ஒரு குறிப்பினை பிரிட்டனும், பிரான்சும் அனுப்பின. அவை,

1. ருமேனிய மாநிலங்கள், செர்பியா ஆகியவற்றின் பாதுகாவலன் என்ற முறையில் தான் பெற்றுள்ள உரிமைகளை ரஷியா விட்டு விட வேண்டும்.
2. டூன்யூப் நதியில் செல்ல அனைத்து நாட்டு கப்பல்களுக்கும் உரிமை உண்டு.
3. 1841-ல் ஏற்பட்ட ஜலசந்தி ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் கருங்கடலில் எல்லா நாட்டு படைகளும் வைக்க உரிமை கிடையாது.
4. துருக்கி பேரரசில் வாழும் கிருத்துவர்களின் பாதுகாவலனாக ரஷியா பெற்றுள்ள உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும்.

இந்த நான்கையும் ஆஸ்திரியா ஆதரித்தது. ஆனால் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. இதனால் போர் தொடர்ந்தது. ரஷியர்களின் தாக்குதல், பனி, மழை, நோய் முதலியவற்றால் ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ், பிரெஞ்சு போர் வீரர்கள் மாதந்தோறும் மடிந்தனர். இதனால் பிரிட்டனில் ஆபர்டீன் என்பவரின் தலைமையில் இருந்த மந்திரி சபை ராஜினமா செய்ய வேண்டியதாயிற்று. **பாமர்ஸ்டன்** (1855-58) என்பவர் அடுத்த பிரதமர் ஆனார். இப்போரின் போது தான் **பிளாரன்ஸ் நைட்டிங்கேல் ஸ்குட்டாரியில்** தனது மருத்துவ பணியை துவக்கினார். ரஷிய எழுத்தாரான லியோடால்ஸ்டாய் ஆயுதமேந்தி தன்னாட்டுக்காக போரிட்டதும் இப்போது தான். ரஷிய தரைப்படை துருக்கிய படையை பல இடங்களிலும் தோற்கடித்தது.

1855-ல் சார்டீனியாவும் 15000 பேர்களை அனுப்பி கிருமியப் போரில் இறங்கியது. இதே ஆண்டு மார்ச் மாதம் ரஷிய மன்னர் முதலாம் நிக்கோலஸ் இறந்து இரண்டாம் அலெக்சாந்தர் (1855-81) ரஷிய மன்னரானார். போர் முடிவின்றி நீண்டு கொண்டே சென்றதும் அதனால் ஏற்பட்ட பெருத்த சேதமும் பிரிட்டனிலும், பிரான்சிலும் அதிருப்தியை ஏற்படுத்தின. இந்நிலையில் ரஷியாவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தன. இதற்காக வியன்னாவில் மார்ச் 1855-ல் மாநாடு கூட்டப்பட்டது. டாட்டனெல்ஸ், பாஸ்பரஸ் ஆகிய ஜலசந்திகளில் அனைத்து நாட்டு போர்கப்பல்களும் போரும் உரிமை உண்டு என்று கூறிய ரஷியாவின் வாதத்தை மேற்கு அரசுகள் நிராகரித்தன. இதனால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

போர் தொடர்ந்து நடந்தது. இருதரப்பினரும் சிறுசிறு வெற்றிகளை அங்கும் இங்கும் பெற்றனர். 1855 டிசம்பரில் பிரிட்டிஷ் தளபதி ஒருவரின் தலைமையில் வந்த துருக்கிய படைகளை ரஷியா தோற்கடித்து ஆர்மீனியாவில் கார்ஸ் (Kars) கோட்டையை ரஷியர்கள் கைப்பற்றினர். இதற்கிடையில் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் தோன்றின. பிரிட்டனிலிருந்து பிரான்சை பிரிப்பதற்கு ஆஸ்திரியாவும் முயன்றது. பிரிட்டனும், பிரான்சும் போர் நிறுத்தத்தை விரும்பின். இறுதியிலி வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்த ரஷிய மன்னரும் அதற்கு இணங்கினார்.

**பாரீஸ் உடன்படிக்கை (1854)**

**1856 மார்ச்சில் பாரீஸ் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.** துருக்கி, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரியா, சார்டீனியா ஆகியவை அதில் கையெழுத்திட்டன. அதன் கூறுகள்

1. கருங்கடலிலும், டார்டனெல்ஸிலும் எந்நாட்டின் போர் கப்பல்களும் நுழையக்கூடாது.
2. மால்டேவியா, வலேச்சியா, செர்பியா ஆகியவை பெயரளவில் துருக்கி சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்று சுய ஆட்சிப் பெற்ற அரசுகளாக இயங்கும். அவற்றின் சுயாட்சியை பாதுகாக்கும் உரிமை அனைத்து வல்லரசுகளுக்கும் பொதுவானது.
3. குட்சுக் கெய்னார்ட்ஜி உடன்படிக்கையின் படி தான் பெற்ற துருக்கிப் பேரரசில் வாழும் கிருத்துவர்களின் பாதுகாவலன் என்ற சிறப்புரிமையை ரஷியா விட்டுக் கொடுத்தது. துருக்கி பேரரசின் உள்விவகாரத்தில் எந்த அரசும் தலையிடக் கூடாது.
4. கிருமியப் போரின் போது தாங்கள் கைப்பற்றிய பகுதிகள் அனைத்தும் அனைவரும் கைவிட்டு விடவேண்டும்.
5. டான்யூப் நதியிலி கப்பல் செலுத்தும் உரிமை எல்லா நாடுகளுக்கும் உண்டு.
6. தனது பேரரசில் வாழும் கிருத்துவர்களை நல்ல முறையில் நடத்துவதாகவும், அவர்களது நிலைமையை மேம்படுத்தி முணலுவதாகவும் சுல்தான் உறுதிக் கூறினார்.

**மதிப்பீடு**

கிழக்கு பிரச்சனையின் உச்சக்கட்டம் தான் கிருமியப்போர் என்று கூறலாம். ரஷ்யா ஒரு பக்கத்திலும் பிரான்ஸ், பிரிட்டன், துருக்கி மறுபக்கத்திலிருந்தும் செய்யப்பட்ட கிருமியப்போர் ஐரோப்பிய நாடுகளின் நிலையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. போரினால் ரஷ்யா உயிர் இழப்புகளையும், பண இழப்புகளையும் அதிகமாகவே சந்தித்தது. போரில் காயப்பட்ட அனைவருக்கும் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் ஆற்றிய அரும்பணிகளை உலக நாடுகள் அனைத்தும் பாராட்டின.

## ரஷ்ய – துருக்கிய போர் (1877-78)

## (RUSSO – TURKISH WAR)

துருக்கி கைப்பற்றிய பகுதிகளில் வாழும்ஸ்லாவ் இன மக்களிடம் துருக்கி கடுமையாக நடந்து கொண்டதால் டான்யூப் மாநிலங்களான மால்டேவியாவும் வல்லேச்சியாவும் ஒன்றுபட்டு ஒரே அரசாய் அமைவதை பாரீஸ் மாநாட்டில் (1856) பிரிட்டனும், பிரான்சும் எதிர்த்தது. இந்த எதிர்ப்பை முறியடிக்கும் நோக்கத்தோடு அவை ஒரே மாதிரியான அரசியலமைப்பையும், தம்மை ஆள்வதற்கு ஒரே ஒரு அரசரையும் தேர்ந்தெடுத்தன. கடைசியில் 1862-ல் இணைந்து ருமேனியா என்ற புதிய அரசு உருவாயிற்று. 1866-ல் சார்லஸ் என்ற ஹோகன் சோலர்ன் பிரபு ஒருவர் அதன் அரசரானார்.

**தேசிய இயக்கங்கள்**

புால்கன் பகுதிகளில் நெடுநாட்களாகவே குமுறிவந்த தேசிய உணர்வு இத்தாலியும், ஜெர்மனியும் ஐக்கியம் அடைந்த பின்பு தீவிரம் அடைந்து பெருங்கிளர்ச்சிகளாக உருவெடுத்தது. பாரீஸ் உடன்படிக்கையின் போது துருக்கி சுல்தான் அளித்த உறுதிமொழிகள் அனைத்தும் வெறும் ஏட்டளவிலேயே நின்று பொயின என்பதை மக்கள் கண்டனர். கிளர்ந்தெழுவதை தவிர வேறுவழியில்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர். இவ்வாறு வெளிப்பட்ட தேசிய உணர்வே **பான்சிலாவிசம்** Pan-silavism) எனப்படுகிறது.**ஹெர்சிகோவினா** (Herzegovina) **போஸ்னியா** (Bosnia) ஆகிய மாநிலங்களைச் சார்ந்த ஸ்லாவ் மக்களே இவ்வாறு முதலில் 1875-ல் புரட்சியை துவக்கினர். தும்மை கொடுமைப்படுத்திய துருக்கிய நிலபிரபுக்களையும், அதிகாரிகளையும் அவர்கள் விரட்டியடித்தனர். பல மாதங்கள் இக்கிளர்ச்சி நீடித்தது. துருக்கிய மேல் வகுப்பினர் இஸ்லாமிய சமயத்தை தழுவியோர் அனைவரும் ஒன்றாக நின்று போராட வேண்டும் என்று சொல்லி பான் இஸ்லாமிசம் (Pan – Islamism) என்ற பிற்போக்கு அமைப்பை உருவாக்கி ஸ்லாவ் மக்களுக்கு எதிராக படுகொலைகளை புரிந்தனர். இந்த அமைப்பின் கொடுமைகள் தேசிய இயக்கத்தை மேலும் தீவிரப்படுத்தின.

ஆஸ்திரிய பேரரசின் கிழக்கு பகுதியிலும் ஸ்லாவ் இன மக்கள் வாழ்ந்தனர். இக்கிளர்ச்சிஅ ங்கும் பரவக்கூடும் என்று அஞ்சிய ஆஸ்திரியாவின் முதலமைச்சர் **ஆந்திரசி** என்பவர் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாட்டையும் கரந்து ஆலோசனைசெய்து 1876 ஜனவரியில் துருக்கி சுல்தானுக்கு குறிப்பு ஒன்றை அனுப்பினார். இது **ஆந்திரசி குறிப்பு** என்று அழைக்கப்படுகிறது. (யுனெசயளளல ழேவந) தனது கிருத்துவக் குடிமக்களுக்கு அவர் சமய சுதந்திரம், வரிச்சலுகை முதலியன தரவேண்டும் என்பது போன்ற உப்பு சப்பற்ற விஷயங்களே அதில் அடங்கியிருந்தன. இருப்பினும் பாரீஸ் உடன்படிக்கையை மீறி தனது உள்விவகாரத்தில் தலையிடுவதாகும் இது என்று அதை நிராகரித்தார் துருக்கி சுல்தான்.

விரைவிலேயே பல்கேரியாவுக்கு கிளர்ச்சி பரவியது. இதை அடக்க முனைந்த துருக்கியர்கள் வழக்கம் போலப் படுகொலைகளில் ஈடுபட்டனர். சலோனிகா (Salonika) நகரிலிருந்த பிரெஞ்சு, ஜெர்மன் கான்சல்களை மே 7-ல் சில துருக்கியர்கள் கொலை செய்தனர். அச்சமயத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகியவற்றின் பேரரசர்கள் பெர்லின் குறிப்பு (Berlin Memorandum) சில ஆலோசனைகளை துருக்கி சுல்தானுக்கு கூறியது. இருதரப்பினரும் கைகலப்புகளை இரண்டு மாதம் நிறுத்தி வைக்க வேண்டும். முன்பு பலமுறை வாக்களித்தபடி பால்கனில் சீர்திருத்தங்களை சுல்தான் உடனே மேற்கொள்ள வேண்டும். இரண்டு மாதங்களுக்குள்சுல்தானுக்கும் புரட்சிகாரர்களுக்கும் இடையில் உடன்பாடுஎதுவும் ஏற்படாமற் போனால் வல்லரசுகள் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அந்த குறிப்பு கூறியது. பிரான்சும், இத்தாலியும் இதை ஆதரித்தன. ஆனால் போர் வெறியரான பிரிட்டிஷ் பிரதமர் **டில்ரேலி** (Disraeli) தன்னை கலக்காமல் வரையப்பட்ட இக்குறிப்பை கண்டனம் செய்ததோடு நில்லாமல் போர் கப்பல்களையும் அனுப்பி மிரட்டினார்.

**இளம் துருக்கியர் கலகம்**

இந்நிலையில் துருக்கிய பேரரசுக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இஸ்லாமிய வெறியை கருவியாக பயன்படுத்தி வந்த பான்-இஸ்லாமிய பிற்போக்குவாதிகள் கான்ஸ்டாண்டிநோபிளில் கலகத்தை துவக்கி

சுல்தானாக இருந்த **அப்துல் அஜீஸ்** நிலைமையை சமாளிக்கும் ஆற்றல் அற்றவர் என்று சொல்லி 1876 மே மாதம் 30-ம் தேதி அவரை நீக்கிவிட்டு அவரது உடன்பிறந்தவர் மகனான **ஐந்தாம் மூரத்** என்பவரைப் பதவியில் அமர்த்தினார். ஆனால் அவரும் ஆகஸ்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது சகோதரான **இரண்டாம் அப்துல் ஹமீத்** (1876-1909) அடுத்த சுல்தானாக்கப்பட்டார். அரசாங்க படையில் பல மாறுதல்களை செய்து இவர் தனது பதவியை பலப்படுத்தினார்.

இதற்கிடையில் போஸ்னியா, ஹெர்சிகோவினா, பல்கோரியா ஆகியவற்றில் நடைபெற்ற தேசிய போராட்டத்தை ஆதரித்து துருக்கியின் மீது போர் தொடுத்தது செர்பியா. (ஜீன் 1876) துருக்கிய பேரரசுக்கு உட்படாமல் இருந்து வந்த ஒரே பால்கன் அரசரான **மாண்டினீக்ரோவும்** சில நாட்களில் அதேப் போல் துருக்கிக்கு எதிராக போர் தொடுத்தது. ஆனால் இவ்விரு நாடுகளின் படைகளும் துருக்கியின் புதிய படைகளால் தோற்கடிக்கப்பட்டன. ரஷிய மன்னர் இரண்டாம் அலெக்சாந்தர் ஸ்லாவ் தேசியவாதிகளுக்கு உதவ முன் வந்தார். துருக்கிக்கும், ரஷியாவுக்கும் போர் மூண்டால் ஆஸ்திரியாவை நடுநிலை வகிக்க செய்ய வேண்டும் என்று ரஷியா திட்டமிட்டு, ஆஸ்திரிய பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்புடன் ரஷிய மன்னர் 1876-ல் ஒரு உடன்பாட்டை செய்து கொண்டார். போரில் நடுநிலைமை வகித்து அதற்கு வெகுமதியாக போஸ்னியாவையும், ஹெர்சிகோவினாவையும் தற்காலிகமாக ஆஸ்திரியா எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**பிரிட்டனின் தலையீடு**

ரஷ்யாவும், ஆஸ்திரியாவும் இவ்வாறு திட்டங்கள் வகுப்பதைக் கண்டு பிரிட்டனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. மேலும் செர்பியாவிலும், பல்கேரியாவிலும் துருக்கியப் படைகள் புரிந்த கொடுமைகளை கேள்விப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரான **கிளாஸ்டன்** போன்றோர் பிரதமர் டிஸ்ரேலி உடனே தலையிட வேண்டும் என்று கோரினார். துருக்கிய படைகள் பல்கேரியாவில் 12000 பேர்களை கொன்றன என்பதை பிரிட்டிஷ் குழுவினர் கண்டனர். இந்த பல்கேரியப் படுகொலை பற்றி பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் தலைப்பு செய்தியாக வெளியிட்டன. இதை அறிந்த பிரிட்டிஷ் அரசு கீழ்வரும் யோசனைகளை தெரிவித்தது.

1. போஸ்னியா, ஹெர்சிகோவினர், பல்கேரியா ஆகியவற்றுக்கு உள்விவகாரங்களில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.
2. செர்பியாவிலிருந்தும், மாண்டினீக்ரோவிலிரந்தும் துருக்கிய படைகள் விலக வேண்டும்.
3. கிருத்துவ குடிமக்களுக்கு அதிக உரிமைகள் வழங்க வேண்டும்.

1876 –ல் அக்டோபர் மாதம் 30-ம் நாள் ரஷியா கான்ஸ்டாண்டிநோபிளுக்கு ஒரு தூதுவரை அனுப்பி செர்பியாவில் 48 மணி நேரத்தில் துருக்கியின் படைகள் போர் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று இறுதி எச்சரிக்கையை விடுத்தது. உடனே துருக்கி இதற்கு பணிந்தது. **கான்ஸ்டாண்டிநோபிளில்** மாநாடு கூட்டப்பட்டது. 1876 செப்டம்பர் மாதம்பிரிட்டன் வெளியிட்ட யோசனைகளைத் துருக்கி ஏற்று செயல்படுத்த வேண்டும் என வல்லரசுகள் வற்புறுத்தின. ஆனால் துருக்கி வெறும் வார்த்தைகள் பேசி காலம் கடத்தியது. பொறுமையிழந்த ரஷ்யா 1877 ஜனவரியில் மாநாட்டிலிருந்து வெளியேறி போருக்குத் தயாரானது.

**போர்**

ரஷியா போருக்கு தயாராயிற்று. ருமேனியாவின் வழியாக ரஷ்ய படைகள் செல்வதை அனுமதிக்கும் ஒரு உடன்படிக்கையை ரஷ்யாவும், ருமேனியாவும் செய்து கொண்டன. 1877 ஏப்ரல் 24-ம் தேதி ரஷியா துருக்கி மீது போர்தொடுத்தது. ருமேனியாவும் மாண்டினீக்ரோவும் ரஷியாவோடு சேர்ந்துக் கொண்டது. 1877 டிசம்பர் மாதம் செர்பியாவும் துருக்கிக்கு எதிராக போர் தொடுத்தது. 1876-ம் ஆண்டு உடன்படிக்கை படி ஆஸ்திரியா நடுநிலை வகித்தது. ரஷியா பிளவ்னா (ீடடரஎயெ) சோபையா (ளுழகயை) ஏட்ரியாநோப்பிள், கார்ஸ், (முயசள) ஆகியவற்றை கைப்பற்றியது. 1878-ம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி துருக்கி போர் நிறுத்தத்திற்கு இணங்கியது. நீண்ட பேச்சு வார்த்தைக்கு பிறகு **சான்ஸடிபானோ** (Sanstefano) என்ற இடத்தில் மார்ச் 3ம் தேதி ஒரு உடன்படிக்கை கையொத்திடப்பட்டது.

**சான்ஸ்டிபானோ உடன்படிக்கை**

1. இந்த உடன்படிக்கையின் படி மாண்டினீக்ரோ, செர்பியா, ருமேனியா ஆகியவற்றின் சுதந்திரத்தை துருக்கி ஏற்றுக் கொண்டது.
2. முாண்டினிக்ரோகவுக்கும், செர்பியாவுக்கும் கூடுதலாக சில பிரதேசங்கள் கொடுக்கப்பட வேண்டும.
3. டான்யூபிலிருந்து ஈஜியன் கடல் வரையில் அகண்ட பலகேரியா (Greater Bulgania) ஒன்று உருவாக்கப்பட்டு துருக்கியின் மேற்பார்வையில் வைக்கப்படும்
4. போஸ்னியாவிலும, ஹெர்சிகோவினாவிலும் பல சீர்திருத்தங்களை ரஷியாவின் மேற்பார்வையில் அமுல் நடத்த சுல்தான் இணங்கினார்.
5. ரஷியாவிற்கு பாதும் (Batum) கார்ஸ், பெசரேபியாவின் (Bessarabia) ஒரு பகுதி ஆகியவை கிடைத்தன.

ரஷ்ய-துருக்கியப் போரின் விளைவாக ரஷ்யாவிற்கு சில புதிய இடங்கள் கிடைத்தன. துருக்கி சுல்தான் அவர் கீழ் உள்ள பல பகுதிகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்தார். சில நாடுகளின் உள்விவகாரங்களில் சுயாட்சி ஏற்பட ரஷ்ய துருக்கியப் போர் வழிவகுத்தது.

## பெர்லின் மாநாடு
## (CONGRESS OF BERLIN)

ரஷிய – துருக்கிய போர் சான்ஸ்டிபானோ உடன்படிக்கை படி முடிவடைந்தது. இந்த உடன்படிக்கையில் ரஷியாவின் செல்வாக்கு பெருகி விடும் என்று கருதிய பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி அதை ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஆஸ்திரியாவும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி தனது கடற்படையையும், 7000 பேர் அடங்கிய இந்திய துருப்புகளையும் மால்டாவுக்கு அனுப்பினார். எதிர்நடவடிக்கையாக கான்ஸ்டாண்டி நோபிளை கைப்பற்ற ரஷிய படைகள் தயாராயின. பின்னர் துருக்கியின் வேண்டுகோளுக்கு இணங்கி பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் வெளியேறின. ஆஸ்திரியா ஒரு மாநாடு கூட்டி சிக்கலை தீர்க்க யோசனை தெரிவித்தது.

**பெர்லின் மாநாடு கூடுவதற்கான காரணங்கள்**

**1. ஸ்லாவ் இனமக்களின் தேசிய எழுச்சி**

பால்கன் பகுதியில் வாழும் அனைத்து ஸ்லாவ் இன மக்களையும் இணைத்து ஒரே ஸ்லாவ் தேசிய அரசை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதை ரஷியா மறைமுகமாக ஊக்கம் கொடுத்தது. ஆஸ்திரிய கடுமையாக எதிர்த்தது. இதனால் பால்கன் பகுதியில் வல்லரசுகளின் தலையீடு நீடித்தன.

**2. பாஸ்னியா, ஹெர்சிகோவினா கலவரங்கள் (1875)**

1874-ல் பால்கனின் துருக்கியர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்த பாஸ்னியா, ஹெர்சிகோவினா பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் கிருத்துவ குடியானவர்கள் முஸ்லீம் நிலக்கிழார்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். இந்த இரு மாநிலங்களிலும் கிளர்ச்சியை அடக்குவதற்கு சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என ஆஸ்திரிய முதலமைச்சர் **ஆன்டிரஸ்ஸி** துருக்கி சுல்தானுக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். பிற சீர்திருத்த முயற்சி போலவே இதுவும் செயல்படுத்தவில்லை.

**3. பல்கேரியப் படுகொலைகள் (1876)**

குடியானவர் கிளர்ச்சி பல்கேரிய பகுதிகளுக்கும் பரவியது. ஆங்கு ஸ்லாவ் நெப்போலியன்'' என்பவரின் தலைமையின் கீழ் குடியானவர்கள் கிளர்ந்தெழுந்தனர். முஸ்லீம் சில பிரபுக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த துருக்கி சுல்தானின் படையினர் பல்கேரியர்களை பழிவாங்க முனைந்தனர். கொலை, கொள்ளை, இளம்பெண் கற்பழிப்பு, தீவைத்தல் போன்ற கொடுமைகள் தலைவிரித்தாடின. புடக் என்ற கிராமத்தில் கோவிலினுள் நுழைந்து தப்பிக்க எண்ணிய 1200 பல்கேரியர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். அவர்களுள் பெரும்பாலோர் பெண்களும் சிறுவர்களும் ஆகும். அட்டில்லா செங்கிஸ்கான், தைமூர் இழைத்த கொடுமைகளை மிஞ்சிய இந்த காட்டுமிராண்டித்தனமான செயல்கள் ''டெய்லி நியூஸ்'' என்ற இலண்டன் செய்திதாளில் வெளிவந்த போது ஐரோப்பிய கிருத்துவ உலகம் கொதித்தெழுந்தது.

**4. செர்பிய-மாண்டிநிக்ரோ அரசுகள் துருக்கி மீது போர் தொடுத்தல் (1876)**

தங்கள் இனத்தை சார்ந்தவர்கள் பல்கேரியாவில் படுகொலை செய்யப்பட்டது கண்டு மனம் பொறுக்காத செர்பியா, மாண்டிநிக்ரோ அரசுகள் துருக்கி மீது போர் தொடுத்தன. இதற்கிடையில் கிருத்துவர்களுக்கு எதிராக முஸ்லீம்கள் கிளர்ந்தெழுந்தனர். அக்காலத்தில் சமய வெறிபிடித்த முஸ்லீம்கள் **சலோனிக்காவில்** பிரெஞ்சு, ஜெர்மன் தூதர்களை கொலை செய்தனர்.

**5. பெர்லின் குறிப்புகள் (1876)**

செர்பியா, மண்டிநிக்ரோ போரை நிறுத்தவும், கிளர்ச்சியை ஒடுக்கவும், சீர்திருத்தங்களை புகுத்தவும் வல்லரசுகள் சார்பாக ஆஸ்திரிய ''பெர்லின் குறிப்பு'' ஒன்றை தயாரித்து துருக்கி சுல்தானுக்கு அனுப்பின. இதை சுல்தான் நிராகரித்து விட்டார்.

**6. கான்ஸ்டாண்டி நோபிள் மாநாடு (1876)**

பால்கன் கிருத்துவர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு என்னென்ன சீர்திருத்தங்களை புகுத்தலாம் என்பதைப் பற்றி முடிவு செய்ய வல்லரசு பிரதிநிதிகள் கான்ஸ்டாண்டி நோபிளில் கூடினர். மாநாடு நடந்து கொண்டிருக்கும் போது சுல்தான் புதியதொரு சீர்திருத்தத்தை அமுல் நடத்த போவதாக அறிக்கை வெளியிட்டார். இதில் சமய சார்பின்றி அனைத்து மக்களுக்கும் சமஉரிமை வாய்ப்பு அளிக்கும் பிரதிநிதித்துவ அரசுக்கான திட்டங்கள் அதில் இருந்தது. வல்லரசு பிரதிநிதிகள் தங்கள் பணி எளிதாகிவிட்டது என்று எண்ணி அவர்களும் சீர்திருத்தத்திற்கான சில திட்டங்களை சுல்தானிடம் சமர்ப்பித்துவிட்டு திரும்பினர். ஆனால் சுல்தான் தம் இறைமைக்கு ஊறு விளைவிப்பவை எனக்கூறி அத்திட்டங்களை ஏற்க மறுத்து விட்டார்.

**7. ரஷியதுருக்கி போர் (1877)**

துருக்கியின் பிரதிநிதி சபை சுல்தானால் கலைக்கப்பட்டது. சுல்தான் உண்மையில் சீர்திருத்தங்களை கிருத்துவ இனமக்களுக்கு செய்வதை விரும்பவில்லை எனக் கண்ட ரஷியா மீண்டும் பிற வல்லரசுடன் சேர்ந்து சீர்திருத்தங்களுக்கான புதிய திட்டம்

ஒன்றைத் தயாரித்து சுல்தானிடம் கொடுத்தது. அதனையும் சுல்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனவே ரஷிய – துருக்கி போர் ஆரம்பமானது.

போர் தொடங்கும் முன் ஆஸ்திரியாவின் நடுநிலைக்கு உத்திரவாதம் பெற்று ரஷியா ருமேனிய அரசின் அனுமதியுடன் அந்நாட்டு வழியாக படையை நடத்தி சென்றதுஇ செர்பியாவும், மாண்டிநிக்ரோவும் உறுதுணையாய் நின்றன. பல்கேரியா மக்கள் ரஷிய படையை "**தங்கள் விடுவிக்க வந்த வீரர்கள்**" என்று எண்ணி வரவேற்றனர். 1877-ல் சான்ஸ்டபானோ உடன்படிக்கையின் படி ரஷிய துருக்கிய போர் முடிந்தது.

இதன் விளைவாக பிஸ்மார்க்கின் தலைமையில் பிரிட்டன்,பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷியா, துருக்கி ஆகிய நாடுகள் கலந்து கொண்ட பெர்லின் மாநாடு ஜீலை 1878-ல் கூடியது. அம்மாநாட்டில் சான்ஸ்டிபானோ உடன்படிக்கையில் கீழ்வரும் மாறுதல்கள் இம்மாநாட்டில் செய்யப்பட்டன.

1. அகன்ற பல்கேரியா மூன்றாக பிரிக்கப்பட்டது. அதன் வடபகுதியானது பல்கேரியா என்ற பெயருடன் சுயாட்சி பெற்று சுல்தானின் மேற்பார்வையில் விடப்பட்டது. மற்ற இரு பகுதிகளான கிழக்கு ருமேனியாவும் (East Rumenia) மாசிடோனியாவும் துருக்கியாலேயே ஆளப்பட்டன. இப்பகுதிகள் சுல்தானால் நியமிக்கப்பட்ட ஒரு கிறிஸ்துவ ஆளுநரால் ஆளப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மாசிடோனியாவும் துருக்கியின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.
2. ருமேனியா, செர்பியா, மாண்டினிக்ரோ ஆகியவற்றின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. அவற்றிற்கு கூடுதலாக சில பிரதேசங்கள் கொடுக்கப்பட்டன.
3. ரஷியாவிற்கு பெசரேபியா, கார்ஸ், பாதும் முதலிய பகுதிகள் கிடைத்தன.
4. போஸ்னியாவும், ஹர்சிகோவினாவும் ஆஸ்திரியாவின் பாதுகாப்பில் வைக்கப்பட்டன.
5. பிரான்சுக்கு டூனிசும், இத்தாலிக்கு டிரிபோலியும் கிடைத்தன.

(இந்த மாநாட்டுக்கு முன்பே ஜீனில் துருக்கியுடன் ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்துக் கொண்டு சைப்ரஸ் தீவை பிரிட்டன் எடுத்துக் கொண்டது.)

சான்ஸ்டிபானோ உடன்படிக்கை பால்கன் தீபகற்பத்தில் துருக்கியின் ஆதிக்கத்துக்கு முடிவாக முற்றுப்புள்ளி வைக்க முயற்சி செய்தது. ஆனால் பெர்லின் காங்கிரஸ் அம்முயற்சியை முறியடித்து துருக்கியின் ஆதிக்கம் அப்பகுதியில் மேலும் சிறிது காலம் நீடிப்பதற்கு வகை செய்தது. பல்கேரியாவின் ஐக்கியத்தை தடுத்து அதை மூன்றாக பிரித்து மீண்டும் துருக்கிக்கு அடிமைப்படுத்தியது மற்றொரு பெரிய தவறாகும் தன்னைப் போலவே ஸ்லாவுகள் இன மக்கள் வாழ்ந்த மாநிலங்களான போஸ்னியாவையும், ஹர்சிகோவி னாவையும் ஆஸ்திரியாவிற்கு கொடுத்தது அநீதி என்று செர்பியா கருதியது.

ரஷியாவின் செல்வாக்கை அப்பகுதியில் வளர விடாமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன. இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிய பிஸ்மார்க் மட்டுமே நேர்மையான தரகர் (Honest Broker) என்று தன்னைக் கூறிக் கொண்டு எந்த பிரதேசத்தையும் எடுத்துக் கொள்ளாமல் இருந்தார். இதனால் ஜெர்மனியின் மேல் துருக்கியின் நம்பிக்கை அதிகரித்தது. இரு நாடுகளும் பின்னர் நெருங்கி உறவுக்கொள்ளலாயின. பின்னர் பலபோர்களுக்கும், பூசல்களுக்கும் இந்த உடன்படிக்கை வழிவகுத்தது.

பால்கன் பகுதியில் வளர்ந்து வந்த ரஷிய ஆதிக்கத்தை பெர்லின் காங்கிரஸ் தடுத்தது. எனவே மஞ்சூரியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகியவைகளின் பக்கம் ரஷியா தனது கவனத்தை திருப்பியது. ஆயினும் பால்கன் பிரச்சனை தீர்ந்தபாடில்லை.

துருக்கியின் ஆட்சியை அறவே முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஸ்லாவ் தேசியவாதிகள் பாடுபட்டனர். இம்முயற்சி முதல் உலகப்போர் வரை தொடர்ந்தது.

பெர்லின் மாநாட்டு முடிவில் ரஷ்யாவின் பால்கனில் ஓரளவு குறைந்தது. அதே நேரத்தில் போஸ்னியா ஹெர்சிகோவினா ஆகிய பகுதிகளில் ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ரஷ்யாவின் ஆதிக்கத்தைவிட மிக மோசமாக இருந்தது. போஸ்னியா மக்கள் ஆஸ்திரியாவை வெறுத்தனர். நாளடைவில் ரஷ்யா பிரான்சுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டது. பெர்லின் மாநாட்டின் போது ஆஸ்திரியாவுக்கு சாதகமாக இருந்த காரணத்தினால் ரஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் இருந்த உறவு முறிந்தது. வல்லரசுகளுக்கிடையே இம்மாநாட்டினால் பொறாமையும், போட்டியும் வளர்ந்தது. துருக்கி தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால் ஆசியப் பகுதியில் துருக்கி சுல்தானின் ஆட்சி வெறுக்கப்பட்டது. பால்கன் பகுதியில் உள்ள சிறிய நாடுகளும் தங்களுக்குள் பல பிரச்சினைகளை தோற்றுவித்தன. இதனை வாய்ப்பாக பயன்படுத்தி துருக்கி மறுபடியும் பால்கன் விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தது. ஐரோப்பாவில் மீண்டும் துருக்கி தலைதூக்கியது என்பதை விட கீழை பிரச்சனை மறுபடியும் ஆரம்பித்தது என்று கூறினால் மிக பொருத்தமாக இருக்கும்.

**மதிப்பீடு**

பெர்லின் மாநாடு மூலம் பல்கேரியா மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு துண்டாடப்பட்டபின் அதன் வலிமை குறைந்து விடும் என வல்லரசுகள் எதிர்பார்த்தன. ஆனால் பல்கேரியாவோ 18 85-ல் கிழக்கு ருமேனியாவை ஆக்கிரமைத்து தன்னுடைய பலத்தை கூட்டியது. ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. இது வல்லரசுகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இருந்தது. இச்சூழ்நிலையில் பல்கேரியாவின் மன்னராக பொறுப்பேற்பதற்கு எந்த அரச குடும்பமும் முன்வரவில்லை. இறுதியில் 1888—ல் பெர்டினாண்ட் என்பவர் மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை ரஷியா கடுமையாக எதிர்த்தது. பெர்டினாண்டைத் தவிரவேறு யார் மன்னரானாலும் பரவாயில்லை. பெர்டினாண்டு மட்டும் கூடாது என்று கூறிய ரஷியா பின் பல்கேரிய மன்னருடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொண்டது.

## இளம் துருக்கிய இயக்கம் (Young Turk movement)

துருக்கி சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீது (1876-1909) காலத்தில் தலைமை அமைச்சராக இருந்த கியமில்பாஷா (kiamil Pasha) நாட்டில் சீர்திருத்தங்களை புகுத்த முயற்சி எடுத்தார். ஆனால் அவர் 1896 –ல் சுல்தானால் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். போரரசில் தாராளக் கொள்கை கொண்டவர்கள் அவரைப் பின்பற்றினார்கள். ஆப்போதுததான் தீவிரவாத துருக்கிய இளைஞர்களும், தேசியவாதிகளான இளைஞர்களும் சேர்ந்து 'இளம்துருக்கியர் இயக்கம்' ஒன்று ஆரம்பித்தனர். இவர்கள் துருக்கியை ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து காப்பாற்ற நினைத்தனர். துருக்கயிப் பேரரசு சிதைந்து வருவதையும், பால்கனில் தேசிய உணர்வு பரவிவருவதையும் கண்ட அவர்கள் நிறைய சீர்திருத்தங்களைப் புகுத்தினாலொழிய பேரரசை கட்டிக்காப்பது கடினம் என்று உணர்ந்தார்கள். மேலும் துருக்கியை ஒரு ஜனநாயக நாடாக்கவும் விரும்பினர். "The empire was to be regenerated, not by humanizing it, but by ottomanizing it" என்பது தான் இளம்துருக்கியர் கொள்கையாக இருந்தது.

இளம்துருக்கியர் இயக்கத்தின் முக்கியத் தலைவர் 'என்வர்பே' (Enver Bay) (1882-1922) என்பவராவார். அவர் சலோனிக்காவிலிருந்த ஒரு சிறிய படையின் தளபதி ஆவார். அவர் இளம் துருக்கியர் இயக்கத்தை வழி நடத்த 'ஒற்றுமை

முன்னேற்றக்குழு’ (Committee of Union and progress) என்ற குழுவை அமைத்தார். 1908-ஜீலை மாதம் 24-ம் தேதி இளம் துருக்கியர் சலோனிக்காவில் புரட்சியை ஆரம்பித்தனர். 1876-ம் வருட அரசியலமைப்பின் படி ஆட்சி நடத்துமாறு சுல்தானை எச்சரித்தனர். பயந்துபோன சுல்தான் டிஸ்மிஸ் செய்யப்பட்ட கியமில்பாஷாவை மீண்டும் அழைத்து தாராள சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டார். ஆனால் அப்போது பேரரசு முழுவதிலும் குழப்பம் நிலவி வந்தது. அரேபியா மெசபட்டோமியா, அல்பேனியா, மாசிடோனியா ஆகிய பகுதிகளில் புரட்சி வெடித்தது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு 1908, அக்டோபர் 7-ம் தேதி போஸ்னியா-ஹெர்சிஹோவினாவை ஆஸ்திரியா தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டது. பல்கேரியா கிழக்கு ருமேனியாவை சேர்த்துக் கொண்டு தனி நாடாக பிரகடனப்படுத்திக் கொண்டது.

எனவே 1909, ஏப்ரலில் இளம் துருக்கியர் புரட்சி செய்து ராணுவத்தின் ஆதரவுடன் இரண்டாவது கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டனர். சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமிது கைது செய்யப்பட்டார். அவரது சகோதரர் ஐந்தாம் முகமது (Mohamed V) சுல்த்தானானார். அவர் கியமில் பாஷா தலைமையில் ஒரு மந்திரி சபையை அமைத்தார். அது ‘இளம்துருக்கியர் மந்திரிசபை’ போன்றே காணப்பட்டது. 1909 முதல் 1918 வரை துருக்கியப் பேரரசு இந்த இளம்துருக்கியர் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் தான் செயல்பட்டு வந்தது. இந்த அரசில் என்வர்பாஷா (என்வர்பே) மதிப்புமிக்க தலைவராக இருந்தார்.

இந்த அரசாங்கம் பேரரசை ‘துருக்கிய மயமாக்க’ பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. துருக்கி மொழி தேசீய மொழியாக்கப்பட்டது. பல புதிய துருக்கிய தேசீய பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. துருக்கியப் படையில் அராபியர்கள், துருக்கியர்கள் முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் கட்டாய ராணுவ சேவை கொண்டுவரப்பட்டது. இந்த சீர்திருத்தங்களை ராணுவத்தின் ஆதரவுடன் செயல்படுத்தினார்கள். இந்த துருக்கியமயமாக்குதல் கொள்கை துயரத்தில் தான் முடீவடைந்தது. காரணம் பேரரசில் துருக்கியர் அல்லாதவர்கள் அதிகமாக இருந்தனர். அவர்கள் இளம்துருக்கியர் அரசை எதிர்த்தனர். முக்கியமாக பால்கன் பகுதிகளில் அதிக எதிர்ப்பு ஏற்பட்டது. துருக்கிக்கு எதிராகப் பால்கன் நாடுகள் ஒன்றுப்பட்டு சேர்ந்து போர் தொடுத்தன. இவ்வாறு முதல் பால்கன் போர் ஆரம்பமானது.

## பால்கன் போர்கள்

## (Balkan Wars)

மாசிடோனியாவை துருக்கி ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக பால்கன் போர்கள் தொடங்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட மாசிடோனியாவை எவ்வாறு பங்கு வைத்து இணைத்து கொள்வதில் இழுபறி வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்டது. இறுதியில் இது துருக்கி பேரரசின் அழிவுப் போராக முடிவுற்றது. அது மட்டுமன்று, இன்னொரு பேரழிவுப் போருக்கும் காரணமாயிருந்தது.

### போரின் அடிப்படை காரணங்கள்

#### 1.மாசிடோனியச் சிக்கல்

துருக்கிய பேரரசில் ஐரோப்பிய பகுதிகளுள் மாசிடோனியா தவிர அனைத்தும் சுதந்திரம் அடைந்தன. எஞ்சி நின்றது மாசிடோனியா மட்டும் தான். சுற்றிலும் கிருத்துவ அரசுகளால் சூழப்பட்ட அப்பகுதி சான்ஸ்பிபானோ உடன்படிக்கையின் படி பல்கோரியாவிற்கு கொடுக்கப்பட்டது. பின்னர் பெர்லின்

மாநாட்டின் படி அது மீண்டும் துருக்கியர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அங்கு வாழ்நத மக்களில் பெரும்பாலோர் கிருத்துவர்கள். 500 ஆண்டுகளாக துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இப்பகுதி பிற்போக்கு நிலையில் இருந்தது. அம்மாநிலத்தில் முஸ்லீம் ஆளுநரும் அதிகாரிகளும் லஞ்சம் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். பாதுகாப்பிற்கு அனுப்பப்பட்ட முஸ்லீம் படை கிராமங்களை கொள்ளையடித்தனர். துருக்கி எந்தவித சீர்திருத்தமும் இங்கு கொண்டுவரவில்லை. அண்மையில் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைப் பெற்ற கிரீஸ், செர்பியா, பல்கேரிய அரசுகள் முன்னேற்றம் பெற்று வளமும், நலமும் பெற்று வாழ்ந்ததை கண்ட மாசிடோனியர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு ஒரே வழி துருக்கியின் ஆதிக்கத்தை உடைத்தெறிவது தான் என்ற முடிவிற்கு வந்தனர்.

### அல்பேனியக் கலகம்

ஏட்ரியாட்டிக் கரையிலுள்ள துருக்கிய மாநிலத்திலும் துருக்கியருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் பெற்ற வெற்றியும், அடைந்த சலுகைகளும் அருகில் இருந்த மாசிடோனியர்களை கிளர்ச்சியில் இறங்க தூண்டியதில் வியப்பில்லை. மேலும்அல்பேனியர்கள் மாசிடோனியப் பகுதிகள் சிலவற்றை கைப்பற்றிக் கொள்ளும் அபாயமும் இருந்தது.

### இளம் துருக்கியர் ஆட்சி

இளம் துருக்கிய இயக்கத்தினர் மாசிடோனியாவில் பிற சமயத்தினருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படும் என கூறினர். ஆனால் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது முஸ்லீம் கொள்கையை தீவிரமாக கடைபிடித்து அக்கொள்கையை மக்களிடம் திணித்தனர். இதனால் அதிருப்தியுற்ற மாசிடோனிய கிருத்துவர்கள் தங்கள் சமய சமுகப் பண்பாடுகளை காப்பாற்றிக் கொள்ள விரும்பினர்.

### வல்லரசுகளின் கூட்டணிகள்

அண்மைக்காலம் வரை ரஷியா பால்கனில் வாழும் கிருத்துவ குடிமக்களுக்கு நல்லாட்சி வழங்குமாறு துருக்கி சுல்தானைத் தூண்டினர். ஆனால் இப்போது வல்லரசுகளின் போட்டி, பொறாமை காரணமாக மூவர் கூட்டுறவு, மூவர் நட்புறவு இரு இராணுவ கூட்டுகளாக பிரிந்து ஒருவரை ஒருவர் அழிக்க போர் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதனால் பால்கன் சிக்கல்களில் தலையிட அவர்களுக்கு நேரமும், வாய்ப்பும் இல்லை. ஆனால் பால்கனில் புதிதாக விடுதலைப்பெற்ற செர்பியர், பல்கேரியா போன்ற அரசுகள் தங்களின் எல்லைப் புறத்தில் வாழும் தங்கள் இனத்தவர் மீது அநீதி இழைக்கப்படுவதைக் கண்டு பேசாமல் இருக்கவில்லை. எனவே எல்லைப்புற நாடுகள் தங்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டனர்.

### பால்கன் கூட்டு உருவாகுதல்

கிரேக்க அரசியல் வல்லுநர் வெனிஸலாஸ் என்பவர் பால்கன் அரசுகளின் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முதலில் பல்கேரியாவுடன் பின்னர் செர்பியாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பயனாக கிரீஸட, செர்பியா, பல்கேரியா, மாண்டிநீக்ரோ போன்ற நாடுகள் தங்கள் பொது எதிரியான துருக்கிக்கு எதிராக இராணுவ கூட்டை உருவாக்கின. அதன் உள்நோக்கம் துருக்கியை தோற்கடித்து அதன் பிடியிலுள்ள மாசிடோனியாவை விடுவித்து அதனை தங்களுக்குள் பங்கிட்டு கொள்ள வேண்டும் என்பதாகும். ஆதன்படி பங்கீட்டு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. போர் தொடங்கும் முன்னர் மாசிடோனியாவில் தாங்கள் கூறும் அரசியல் சீர்திருத்தங்களை அமுல் நடத்தி சுய ஆட்சி வழங்க வேண்டும் என

வேண்டுகோள் விடுத்தனர். இறுதி எச்சரிக்கை போன்ற இந்த வேண்டுகோளை சுல்தான் புறக்கணித்தார். உடனே மாண்டிநிக்ரோ துருக்கி மீது தாக்குதல் தொடுத்தது.

**முதலாவது பால்கன் போர் (1912-13)**

1909 முதல் 1918 வரை துருக்கியில் ஆட்சியைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தினர் **இளம் துருக்கியர்**. தனது பேரரசில் எஞ்சியுள்ள பகுதிகள் அனைத்தும் துருக்கி மயமாக்க இவர்கள் முனைந்தனர். துருக்கிய கலாச்சாரமும், துருக்கிய மொழியும் அனைவர் மீதும் கட்டாயமாக திணிக்கப்பட்டன. இதற்கு எதிராக பால்கன் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனை நசுக்க வழக்கமான அடக்கு முறையை இளம் துருக்கியினர் மேற்கொண்டனர். கிளர்ச்சியாளர்கள் பலரைஇளம் துருக்கியர்கள் கொன்று குவித்தார்கள். இந்நிலையில் துருக்கியின் ஆதிக்கத்தில் இருக்கும் பால்கன் பகுதியான மாசிடோனியாவை மீட்கும் நோக்கத்தோடு செர்பியா, கிரீஸ், பல்கேரியா, மாண்டிநீக்ரோ ஆகியவை 1812-ல் பால்கன் லீக்கை அமைத்தன.

துருக்கியிமிருந்து பால்கன் பகுதிகளை வென்று தமக்குள் பங்கிட்டு கொள்வதென்று முடிவு செய்து நான்கு நாடுகளும் அக்டோபர் 1912-ல் துருக்கியோடு போர்தொடுத்தன. இரண்டே மாதங்களில் பல வெற்றிகளைப் பெற்று வேகமாக முன்னேறின. பால்கன் படைகள், மாசிடோனியா முழுவதும் கைப்பற்றப்பட்டது. ஏட்ரியாட்டி கரையிலிருந்த சில துறைமுகங்களை கிரிசும் மாண்டிநீக்ரோவும் தாக்கிய பொழுது அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ள எண்ணிய ஆஸ்திரியாவும், இத்தாலியும் ஆத்திரங்கொண்டன. அவற்றை ஆதரித்த பிரிட்டனும், பிரான்சும் தலையிட்டு போரை முடிவுக்கு கொண்டுவர முயன்றன.

போர் ஓய்வு ஒப்பந்தம் 1912 டிசம்பரில் ஏற்பட்டது. சமாதானத்துக்கான பேச்சு வார்த்தைகள் லண்டனில் துவங்கின. ஆனால் அச்சமயத்தில் (ஜனவரி 1913-ல்) **என்வர்பே** (Enverbey) என்ற இளந்துருக்கியத் தளபதி காண்ஸ்டாண்டி நோபிளில் ஆட்சியைக் கைப்பற்றிப் போரைத் தொடர்ந்து நடத்த போவதாக அறிவித்தார். இவ்வாறு மீண்டும் தொடங்கிய போரிலும் துருக்கி படுதோல்வி அடைந்தது. 1913 மார்ச் 26-ல் ஏட்ரியாநேப்பிளையும் பகைவர்கள் கைப்பற்றினார்கள். துருக்கி பணிந்து லண்டன் உடன்படிக்கையில் மே 1913-ல் கையொப்பமிட்டது. ஐரோப்பாவில் காண்ஸ்டான்டி நோபிளும் அதைச் சுற்றியிருந்த சிறு பகுதிகளை தவிரமற்ற எல்லா பிரதேசங்களையும் துருக்கி இழந்தது. மாசிடோனியவை செர்பியா, பல்கேரியா, கிரீஸ் ஆகியவை பங்கிட்டு கொண்டன. அல்பேனியா (Albania) என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**இரண்டாவது பால்கன் போர் (1913)**

ஆல்பேனியாவைத் தான் பெறலாம் என்று எண்ணியிருந்த செர்பியா ஏமாந்து பல்கேரியாவை நிந்தித்து நஷ்டஈடு கேட்டது. மாசிடோனியப் பங்கீட்டில் கிரீசும், பல்கேரியாவும் அதிருப்தி அடைந்தன. இப்படி வேற்றுமைகள் முற்றி இறுதியில் செர்பியா, கிரீஸ், ருமேனியா ஆகியவை பல்கேரியாவிற்கு பகையாகின. புல்கேரியா செர்பியாவை தாக்கி தோற்றது. ருமேனியாவும், துருக்கியும் பல்கேரியாவை வேறு பக்கங்களிலிருந்து தாக்கவே, அது பணிந்து சமாதானம் செய்துக் கொள்ள முன்வந்தது. **சமாதான புகாரஸ்ட்** உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ருமேனியாவுக்கு கிழக்கு மாசிடோனியாவும், திரேஸீம் (Thrace) கிடைத்தன. செர்பியாவிற்கு வடமத்திய மாசிடோனியாவும், கிழக்கு நோவிபாசாரும் (East Novi Bazar) கிடைத்தன. (செர்பியாவிற்கும் மாண்டினீக்ரோவிற்கும் இடையில் இருந்த ஒரு சிறு பகுதியே நோவி

பசார் ஆகும்)தெற்குமாசிடோனியா, சலோனிகா, எப்ரைஸ் ஆகியவை கிரீசுக்கு கிடைத்தன. மாண்டினீக்ரோவுக்கு மேற்கு நோவி பசார் கிடைத்தது.

**விளைவுகள்**

1. செர்பியா விரிவதைந்தது. ஆயினும் கடலோடு தொடர்பு கொள்ள முடியாததால் பாஸ்னியாவைகட கைப்பற்ற எண்ணிய செர்பியாவுக்கும், ஆஸ்திரியாவுக்கும் பகை வளர்ந்தது.
2. பால்கன் போர்கள் துருக்கியின் ஐரோப்பிய நிலப்பகுதிகளை முற்றிலும் பறிமுதல் செய்துவிட்டது.
3. பால்கன் போரினால் ஏற்பட்ட இழப்புகள்இருவகையில் துருக்கியருக்கு நன்மையில் முடிவடைந்தது. முதலாவதாக கிருத்துவர்கள் வாழ்ந்த மாநிலங்கள் எல்லாம் பறிபோய்விட்டதால் கிருத்து சிறுபான்மைத் தொல்லையில் இருந்து துருக்கி விடுதலையடைந்தது. அதனை ஒரு காரணம் காட்டி, துருக்கியர் உள்நாட்டு பிரச்சனையில் தலையிடும் வாய்ப்பு ஐரோப்பிய வல்லரசுக்கு இல்லாது போயிற்று. இரண்டாவதாக துருக்கியர்கள் வாழும் நிலப்பகுதி தான் எஞ்சி நின்றதால் துருக்கிய தேசிய உணர்ச்சிகள் வளருவதற்கு வழிபிறந்தது. தங்கள் முழு ஆற்றலையும், செல்வத்தையும் துருக்கிய வளர்ச்சிக்கே செலவிடும் வாய்ப்பும் கிட்டியது.
4. துருக்கிய அரசியலில் இளம் துருக்கியர் ஆதிக்கம் வலுப்பட ஏதுவாயிற்று.
   ‘‘எந்தொரு நிகழ்ச்சியையும் விட 1912-13 ம் ஆண்டு பால்கன் போர்களே 1914-ல் உலகப்போர் ஏற்படுவதற்கு காரணமாயின’’ என ஆசிரியர்கள் கிரான்ட் - டெம்பர்லி கூறியது உண்மையாயிற்று. பால்கன் போர்களினால் ஆதாயம் பெறாத அரசுகள் இன்னொரு போரை விரும்பின.

## அலகு - III
## முதல் உலகப் போர் (1914 – 1918)

**போருக்கான காரணங்கள்:**

**1. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கைகள்**

முதலாம் உலகப்போருக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் ரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டன. 1871-ம் வருடம் முடிவடைந்த பிராங்கோ பிரஷ்யப் போருக்குப் பின்பு இவ்வித உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் முறை வளர்ச்சியடைந்தது. இதுவே முதல் உலகப்போருக்கான முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் முக்கூட்டு உடன்படிக்கையை 1882-ல் ஏற்படுத்திக் கொண்டன. இந்த உடன்படிக்கைக்கு எதிராக பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் சேர்ந்து ‘மூவர் நேச ஒப்பந்தம்’ ஒன்றை 1907-ல் ஏற்படுத்திக் கொண்டன. இவ்விதம் ஐரோப்பாவானது இரண்டு இராணுவப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவைகளுக்கிடையே ஏற்பட்ட விரோதமே முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமாக விளங்கியது.

**2. ஏகாதிபத்திய உணர்வு**

ஏகாபத்திய உணர்வு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அளவுக்கு அதிகமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தன்னைத்தானே செழிப்புடையதாக்கவும், வலிமைமிக்கதாக்கவும், தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்பவும் முயற்சித்தது. இதனாலேயே உலகப்போர் மூண்டது என்று கூறலாம். ‘‘ஜெர்மானியர்கள் உலகை ஆளப்பிறந்தவர்கள்’’ என்றும் ‘‘ஜெர்மானியப் பண்பாடு உலகமெங்கும் பரவ நாகரிகக்

காப்புப் போராட்டம் (முரடவரவ ஊயஅிக) நடத்துவதே தங்கள் கடமை' என்றும் ஜெர்மானியர்கள் கூறினார்கள்.அதே போன்றுபிற்போக்கான நாடுகளில் நாகரிகத்தைப் பரப்புவது வெள்ளையர் பொறுப்பு'' என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. இப்படி ஏகாபத்திய ஆதிக்கத்தைப் பரப்ப ஒவ்வொரு நாடும் நினைத்தது. அதில் போட்டி ஏற்பட்டு இறுதியில் அது போராக முடிந்தது.

### 3. ஐரோப்பிய நாடுகளிடையே காணப்பட்ட படைபெருக்கம்

1870-ம் ஆண்டிற்குப் பிறகு, போர்க்கருவிகளைச் சேகரிப்பதிலும் படைபலத்தைப் பெருக்குவதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே கடும் போட்டி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கைகள் இப்போட்டியை மேலும் அதிகரித்தன. ஒவ்வொரு நாடும் தனது வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவிற்கு அதிக அளவு பணம் ஒதுக்கியது. கெய்சர் வில்லியம் பல போர்க் கப்பல்களை தயார் செய்தார். கப்பற்படையை வலிமையாக்கினார். இவரது நோக்கத்தைப் புரிந்து கொண்ட இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் பெருமளவில் ராணுவ உபயோகத்திற்காக ரஷ்யாவுடன் சேர்ந்து பல புதிய ரயில் பாதைகளை அமைத்தார். துப்பாக்கிகளைத் தயாரிப்பதிலும் எரி பொருட்களைச் சேமித்து வைப்பதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. இவ்வித ஆயுத உற்பத்திப் போட்டி முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமானது.

### 4. குறுகிய தேசிய உணர்வு

ஒரு நாட்டின் மீதுள்ள பற்றானது பிறநாட்டின் மீது பகைமையை ஏற்படுத்தியது. ஜெர்மனி மீதுள்ள அன்பானது ஜெர்மானிய மக்கள் பிரான்சை வெறுக்கவும், இதே போன்று பிரான்ஸ் ஜெர்மனியை வெறுக்கவும் காரணமானது. குறுகிய தேசப்பற்றின் விளைவாக மக்கள் தங்கள் நாடுகளின் மீது அளவு கடந்த பக்தி வைத்தார்கள். 'உலகத்தின் மையமாக விளங்குவதே இங்கிலாந்துதான்' என்று ஆங்கிலேயோர்களும் உலகத்திலேயே புனிதமான நாடு பிரான்ஸ்தான் என்று பிரெஞ்சு மக்களும்,''கடவுளின் உலகப்படத்தின் மையமே ஜெர்மனிதான்' என்று ஜெர்மனியர்களும் கருத்துக கொண்டிருந்தார்கள் இது நாடுகளுக்கிடையே பகைமையை வளர்த்தது.

### 5. இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் ஏகாதிபத்திய வெறி

ஜேர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் ஆணவம் மிக்க ஏகாபத்திய வெறி கொண்டவர். ஜெர்மனியை உலக வல்லரரசாக்கத் திட்டம் தீட்டினார். 'ஜெர்மானிய இனமே உலகை ஆளப்பிறந்தது' என்றும் 'உலகை ஆள்வது அல்லது வீழ்வது' என்றும் கொக்கரித்தார். ஆங்கிலேயரின் வலிமையைத் தப்புகணக்கிட்டு இங்கிலாந்தை வீழ்த்தக் கனவு கண்டார். உலக விவகாரங்கிளல் அதிகமாக தலையிட்டு புதிய ஜெர்மனியின் புகழைப் பரப்ப நினைத்தார். இதற்காக ஜெர்மனியின் ராணுவ வலிமையை அதிகப் படுத்தினார். இவரது ஏகாபத்திய வெறியே முதல் உலகப்போருக்கு வழி நடத்தியது.

### 6. மக்களின் எண்ணத்தை மாற்றிய செய்தித்தாள்கள்

செய்தித்தாள்கள் மக்களின் உணர்ச்சிகைளத் துாண்டி, பிற நாட்டின் மீது வெறுப்பை வளர்த்தன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிக்கைகள் உலகச் செய்திகளை திரித்துக் கூறி மக்களை தவறாக வழி நடத்தின. சுதந்திரமாக செயல்பட்ட பிரெஞ்சுப் பத்திரிக்கைகளோ, ஜெர்மனியின் மீதான வெறுப்பை அள்ளித் தெளித்தன. காலையில் வெளிவந்த செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளை மையமாக வைத்துதான்

உலகமே சுழல்வது போன்ற நிலை ஏற்பட்டது. திரித்துக் கூறப்பட்ட செய்திகள், அடிப்படையற்ற வதந்திகள், முழுப்பொய்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டு மக்களிடையே பகைமை உணர்ச்சியை வளர்த்தன செய்தித்தாள்கள்.

**7. அமைதியை ஏற்படுத்த சமாதான ஸ்தாபனம் இல்லாமை**

போரிடுவதற்காக ஐரோப்பாவில் பல அமைப்புகள் இருந்தன. ஆனால் பகைமையைக் கட்டுபடுத்தவும், நாடுகளுக்கிடையே ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் மனநிறைவு ஏற்படுத்தும் நிலையில் ஒரு அகில உலகச் சமாதான ஸ்தாபனம் இல்லாதது முதல் உலகப்போருக்குக் காரணமானது. 1898-ல் ரஷ்ய மன்னர் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஐரோப்பிய வல்லரசுகளைப் படைக்குறைப்பு பற்றி விவாதிக்க ஹேகுவில் கூட்டப்படும் மாநாட்டில் கலந்துக் கொள்ள அழைத்தார். அந்த மாநாடு தோல்வியடைந்தது. 1907-ல் மாநாடு மீண்டும் கூடினாலும் பயனேதும் ஏற்படவில்லை. ஒரு அகில உலக சமாதான ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் மனநிலை ஐரோப்பிய அரசுகளிடம் காணப்படவில்லை. இது போருக்குக் காரணமானது.

**8. அல்சேஸ், லொரைன் பிரச்சனை**

1871-ல் முடிவடைந்த பிராங்கோ-பிரஷ்யப் போரின் இறுதியில் ஏற்பட்ட பிராங்பர்ட் ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் நாட்டின் வளமிக்க அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனி பெற்றது. இப்பகுதிகளை மீண்டும் பெற பிரான்ஸ் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. காரணம் லொரைன் பகுதி அதிகமாக இரும்புத்தாது வளங்களை கொண்டது. 1871-க்குப் பிறகு ஜெர்மனியின் தொழில் வளர்ச்சிக்கு லொரைன் இரும்புச் சுரங்கங்களே காரணம் என பிரான்ஸ் நம்பியது. எனவே அல்சேஸ்-லொரைனை மீண்டும் பெற பிரான்ஸ் துடித்தது. இப்பிரச்சினை ஜெர்மனிக்கும் பிரான்ஸ்சுக்குமிடையே பகைமையை வளர்த்தது. இதுவே உலகப் போருக்கு காரணமானது.

**9. குடியேற்றங்களை அமைப்பதில் போட்டி**

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவவும் கடல் கடந்த வாணிகத்திலும், குடியேற்றங்களை நிறுவுவதிலும், உயர்ந்த இடத்தை பெறவும், ஜெர்மனிக்கும் பிரெஞ்சு-பிரிட்டிஷ் கூட்டுக்குமிடையே ஏற்பட்ட போட்டியே போராக வடிவெடுத்தது. குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப்பொருட்களை அனுப்புவதோடு மட்டுமில்லாமல், தாய் நாட்டின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைத் தளங்களாகவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்கும் இடங்களாகவும் இருந்ததால் குடியேற்ற நாடுகளைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன.

1871-ல் முடிவடைந்த ஜெர்மானிய ஐக்கியத்திற்குப் பிறகு ஜெர்மனி தொழில் உற்பத்தியில் அதிக வளர்ச்சியடைந்து. நாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதற்கும் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் பொருளாதாரச் சிக்கல்களைக் குறைப்பதற்கும் தனக்கு குடியேற்ற நாடுகள் அவசியம் தேவை என்பதை ஜெர்மனி உணர்ந்தது. அதனால் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய ாநடுகளுடன், புதிய உலகு ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில், குடியேற்றங்களை நிறுவுவதில் ஜெர்மனி போட்டியிட்டது. ஆனால் இங்கிலாந்து தனது குடியேற்றங்களை விட்டுக் கொடுக்கவோ, புதிய குடியேற்றங்களை ஜெர்மனி பெற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. இந்தக் குடியேற்றப் போட்டியே முதல் உலகப்போருக்குக் காரணமாக அமைந்தது.

**10. மொராக்கோ பிரச்சனை (அகாடிர் பிரச்சனை)**

மொராக்கோ வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஓர் சுதந்திரமான நாடு. அதன் அருகில் இருந்த அல்ஜீரியா பிரெஞ்சுப்பகுதி ஆகும். எனவே மொராக்கோ உள்நாட்'டு விவகாரத்தில் பிரான்ஸ் அடிக்கடி தலையீட்டு வந்தது. இதைக்கணட கெய்சர் வில்லியம்,''மொராக்கோ ஓர் சுதந்திர நாடென்றும், மற்ற நாடுகளைப் போலவே ஜெர்மனிக்கும் மொராக்கோவில் சலுகைகள் பெற உரிமை உண்டு'' என்றும் வாதாடினார்.

மொராக்கோவிலிருந்த பிரெஞ்சு பொருளாதார நலன்களைப் பேணும் பொருட்டு மொராக்கோ சுல்தானிடம் பிரான்ஸ் அதிக சலுகைகளைக் கேட்டது. இதற்கு இங்கிலாந்து ஆதரவு அளித்தது. ஆனால் ஜெர்மனி எதிர்ப்பு தெரிவித்து மொராக்கோவின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போவதாகக் கூறியது. பிரச்சனையைத் தீர்க்க 1906-ல் ஸ்பெயினிலுள்ள அல்ஜிசரஸில் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாநாட்டு முடிவின்படி, மொராக்கோ ஓர் சுதந்திர நாடு என்று மீண்டும் அங்கீகரிக்கப்பட்டது. எல்லா வல்லரசு நாடுகளிலிருந்தும் வியாபாரிகள் முதலீட்டார்கள் இங்கு வந்து போகலாம். ஆனால் மொராக்கோவின் துறைமுகப்பட்டினங்கள் பிரெஞ்சு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

1911-ல் மொராக்கோவில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அங்கு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தை அடக்க பிரான்ஸ் தனது கப்பற்படையை அனுப்பியது. இதனை வன்மையாகக் கண்டித்த ஜெர்மனி, தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டும் மொராக்கோவின் ஜெர்மானிய நலன்களைப் பாதுகாக்கவும் 'பேன்தார்' என்ற யுத்தக்கப்பலை மொராக்கோவிலுள்ள அகாடிர் துறைமுகத்திற்கு அனுப்பியது. இதனால் பதட்ட நிலை ஏற்பட்டது. ஐரோப்பாவை போர் அபாயம் சூழ்ந்தது. இந்தப் பிரச்சனையில் பிரான்சுக்கு ஆதரவாகச் செயல்பட்டது இங்கிலாந்து. எனவே போரைத் தவிர்ப்பதில் நாட்டம் கொண்டது ஜெர்மனி. பிரெஞ்சுக்காரர்களின் கொள்கைகளை தான் எதிர்க்கவில்லை என்று ஜெர்மனி கூறியது. பிரான்சும், ஜெர்மானிய வியாபாரிகளை முன்பு போல் மீண்டும் அனுமதிக்க ஒத்துக் கொண்டது.

இந்த அகாடிர் பதட்டநிலை மூன்று முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. அவை பின்வருமாறு:

a) இந்த நிகழ்ச்சி ஜெர்மானியர்கட்கு எதிரான உணர்வை பிரான்ஸில் தோற்றுவித்தது.
b) பிரான்சுக்கும், இங்கிலாந்துக்குமிடையே உறவு வலுவடைந்தது.
c) மோராக்கோவில் தனக்குள்ள ஆர்வத்தை இங்கிலாந்து பங்கப்படுத்திவிட்டதாக கருதி அதன் மீது பகைமை கொண்டது ஜெர்மனி இவை உலகப்போரை நோக்கி இரண்டு நாடுகளையும் நேராக வழிநடத்திச் சென்றது.

**11. பால்கன் பகுதியில் ஏகாபத்தியப் போட்டி:**

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியான பால்கன் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவ ஸ்லாவிய மக்களுக்கும், டியூட்டானிக் இன மக்களுகளுக்குமிடையில் ஏற்பட்ட போட்டியே உலகப்போராக மாறியது எனலாம். 1878-ம் வருட பெர்லின் உடன்படிக்கைப்படி பால்கன் பகுதியிலிருந்த போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகிய நாடுகளின் பாதுகாப்பாளராக மட்டுமே இருக்குமாறு ஆஸ்திரியா கேட்டுக்கொள்ளப் பட்டது. ஆனால் 1908-ல் ஜெர்மனியின் ஆதரவுடன் அந்த இரண்டு நாடுகளையும் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது ஆஸ்திரியா.

இந்த ஆக்கிரமிப்பு பால்கன் பகுதியிலிருந்த செர்பியாவுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் போஸ்னியா ஹெர்சிஹோவினாவிலுள்ள மக்கள் செர்பியாவிலுள்ள ஸ்லாவ் இனத்தை சார்ந்தவர்கள். இந்த இரண்டு பகுதிகளை இணைத்துக்கொள்ள எண்ணம் கொண்டிருந்தது. செர்பியா. எனவே தான் ஆஸ்திரியாவின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. பால்கன் பகுதியில் தனது

செல்வாக்கை நிலைநாட்ட முயற்சி செய்த ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவளஜத்தது. ஆனால் அணிமையில் நடந்த ரஷ்ய-ஜப்பானியப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து பலவீனமடைந்ததால் செர்பியாவுக்கு படையுதவி செய்யும் நிலையிலில்லை ரஷ்யா. ரஷ்யாவின் ஆதரவில்லாமல் ஆஸ்திரியாவை ஜெயிக்க முடியாது என்று உணர்ந்த செர்பியா எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாததால் நெருக்கடி தணிந்தது. ஆனால் செர்பியாவும் ரஷ்யாவும், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீது வெறுப்புற்று பழி தீர்த்துக் கொள்ள வழி தேடியது. இத்தகைய பழிவாங்கும் உணர்வும், பதட்டநிலையும் முதல் உலகப்போர் ஏற்படுவதற்கு ஏற்றதாக இருந்தது. மேற்கண்ட பதினொரு காரணங்களை ஆராயும்போது ‘முதல் உலகப்போர் வல்லரசுகளின் சமநிலைப்போர் என்று நாம் கருத்தில் கொள்ளலாம்.

**உடனடிக் காரணம்**

**12. சராஜிவோ படுகொலை**

1908-ல் ஆஸ்திரியா போஸ்னியாவை இணைத்துக் கொண்டதிலிருந்து, அங்கிருநத ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆஸ்திரியாவின் ஆட்சியை அகற்றவும், சகோதர நாடான செர்பியாவுடன் ஒன்றுபடவும் கிளர்ந்தெழுந்தனர். இந்த தேசிய உணர்வினை அடக்க ஆஸ்திரியா-ஹங்கேரி எதிர் நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இச்சூழ்நிலையில் தான்ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரும், பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பின் மருமகனுமான ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்டு தனது மனைவியுடன் போஸ்னியாவிலுள்ள சராஜிவோ என்ற நகருக்கு 1914 ஜீன் 28-ம் தேதி விஜயம் செய்தார். அப்போது கவ்ரில்லோ பிரின்ஸீப் (Cavrilo Princip) என்ற 24 வயது செர்பிய இளைஞனால் ஆர்ச்டியூக் கெர்டினாண்டும் அவர் மனையியும் காலை 10.15 மணிஅளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த படுகொலைதான் ஐரோப்பாவை உடனடியாகப் போரில் தள்ளிய நிகழ்ச்சியாகும்.

இந்த படுகொலையைப் பயன்படுத்தி செர்பியாவை நசுக்க நினைத்தார். ஆஸ்திரியாவின் வெளியுறவு அமைச்சர் கவுண்ட்லியோ போல்ட்பெர்ச்சோல்ட் (Count Eopold Berchold) போஸ்னியாவில் ‘கறுப்புக் கை’ (Black hand) என்ற ரகசிய பயங்கரவாத இயக்கம் ஒன்று செயல்பட்டு வந்தது. இதில் செர்பிய தீவிர தேசியவாதிகள் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்த இயக்கத்தினர் செர்பியாவிடமிருந்து பயிற்சியும், படைக்கருவிகளையும் ரகசியமாகப் பெற்றார்கள். பெர்டினாண்டைக் கொல்லுவதற்கு இந்த கருப்புக்கை இயக்கத்தினர் செர்பிய உயர் ராணுவ அதிகாரிகள் உதவிகளைப் பெற்றார்கள். செர்பியாவுக்கு இப்படுகொலையில் பங்குண்டு என்பதில் எவ்விதச் சந்தேகமும்இல்லை. ஆனால் அதனை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க முடியாது.

1914 ஜீலை 5-ம் தேதி பெர்சோல்ட் ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியமை ரகசியமாகச் சந்தித்தார். பேரரசர், ஆஸ்திரியாவின் எல்லா நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவு தெரிவித்தார். ஜீலை 23-ம் தேதி செர்பியாவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்தது ஆஸ்திரியா. ஆதன்படி ‘செர்பியாவில், ஆஸ்திரியாவுக்கு எதிரான பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும். செர்பியாவிலுள்ள ஆஸ்திரியா விரோத அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்ய வேண்டும் செர்பியப் பள்ளிக் கூடங்களில் உள்ள ஆஸ்திரிய விரோதப் பாடப் புத்தகங்களை ஒழிக்க வேண்டும். இந்தப் படுகொலையைப் பற்றி விசாரிக்க ஆஸ்திரிய அதிகாரிகளை செர்பியாவினுள் நுழைய அனுமதிக்க வேண்டும். செர்பியாவில் செயல்படும் ஆஸ்திரிய விரோத இயக்கங்களை நசுக்க ஆஸ்திரியாவுக்கு செர்பியா ஒத்துழைப்பு தர வேண்டும்’ போன்ற நிபந்தனைகளை வைத்து 48மணி நேரத்திற்குள் இந்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று கெடு வைத்தது ஆஸ்திரியா.

ஜீலை 25-ம் தெதி செர்பிய அரசு பதிலளித்தது. செர்பிய ஒற்றுமைக்கும், சுதந்திரத்திற்கும், ஆளுமைக்கும் பாதகமில்லாத நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகவும், பிரச்சனைக்குரிய நிபந்தனைகளை ஹேகுவிலுள்ள பன்னாட்டு

நீதிமன்றத்திற்கு விட்டுக் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தனது பதிலில் செர்பியா கூறியது. அதே நேரம் படைத்திரட்டுவதற்கான உத்தரவையும் செர்பிய அரசாங்கம் பிறப்பித்தது. 'செர்பியாவின் பதில்கள் ஏற்றுக் கொள்ள முடியாதது ஏமாற்றமளிக்கிறது' என்று ஆஸ்திரியா கூறி செர்பியாவுடனான உறவைத் துண்டித்தது. அத்துடன் படை திரட்டுவதற்கான ஏற்பாடுகளையும் ஆரம்பித்தது.

நிலைமை மோசமாகவே 1914 ஜீலை 26-ல் இங்கிலாந்தின் வெளியுறவு மந்திரி சர்.எட்வர்ட்கிரே (ளுசை. நுனறயசன புசநல) இப்பிரச்சனையைப் பற்றி விவாதிக்க மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு இத்தாலி பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் கேட்டுக் கொண்டார். இந்த யோசனையை ஜெர்மனி உறுதியாக மறுத்தது. ஜெர்மனியின் உறுதியைக் கண்ட ஆஸ்திரியா ஜீலை 28-ல் செர்பியா மீது போர் தொடுத்தது. இவ்வாறு முதல் உலகப்போர் மூண்டது.

### போரின் போக்கு (Course of the war)

ஆஸ்திரியா செர்பியா மீது படையெடுத்ததும், ரஷ்யசார் இரண்டாம் நிக்கோலஸ் செர்பியாவுக்கு ஆதரவாக ஜீலை 3-ல் படை திரட்ட உத்தரவிட்டார். இதைக்கண்ட ஜெர்மனி 12 மணி நேரத்திற்குள் ரஷ்யா படைதிரட்டுவதை நிறுத்த வேண்டும் என்று கெடு விடுத்தது. ரஷ்யா இந்த கெடுவை நிராகரித்தது. அதே நேரம் ரஷ்யா போரில் இறங்கி விட்டால் பிரான்சும் கட்டாயம் போரில் இறங்கிவிடும் என்பதை உணர்ந்த ஜெர்மனி 18 மணி டீநேரத்திற்குள் பிரான்ஸ் நடுநிலை வகிப்பதாக அறிவிக்க வேண்டும் என்று கெடு விதித்தது. அதனை மீறி பிரான்சும் படை திரட்ட உத்தரவிட்டது. எனவே ஆகஸ்ட் 3-ம் தேதி ஜெர்மனி பிரான்சின் மீது போர் தொடுத்தது. இவ்வாறு ஆஸ்திரிய-செர்பியப்போர் ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள்ளாக ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய பெரிய நாடுகள் போரில் இறங்கின.

### இங்கிலாந்து போரில் இறங்குதல்

''ஜெர்மானியக் கப்பல்கள் பிரெஞ்சுக் கப்பல்களையோ, பிரெஞ்சுத் துறைமுகங்களையோ தாக்குவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.'' என்று ஆங்கில வெளியுறவு அமைச்சர் எட்வர்ட்கிரே ஆகஸ்ட்-2-ல் கூறினார். ஜெர்மனி பெல்ஜியம் வழியாக பிரான்சுக்குள் சென்று தாக்க திட்டமிட்டது. எனவே பெல்ஜியத்தின் வழியாக நுழைய பெல்ஜியத்திடம் அனுமதி கேட்டது. பெல்ஜிய அரசர் முதலாம் ஆல்பிரட் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அனுமதி மறுக்கப்படவே ஆகஸ்ட் 4-ல் ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தினுள் நுழைந்தன. பெல்ஜியத்தின் நடுநிலையைக் காக்கும் பொருட்டு ஜெர்மனி மீது இங்கிலாந்து போர் தொடுத்தது.

சீனாவில் தனது ஆதிகத்தை ஏற்படுத்த விரும்பிய ஜப்பான் சீனக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜெர்மானியப் போர்க் கப்பல்களை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும், கியாசௌ பகுதியை 1914, செப் 15க்குள் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் ஜெர்மனிக்கு கெடு விதித்தது. இதனை ஜெர்மனி ஏற்றுக்கொள்ள மறுக்கவே ஜெர்மனி மீது போர் தொடுத்தது ஜப்பான்.

பால்கன் பகுதியில் தன்னை பலவீனப்படுத்திய ரஷ்யா மீது பழிவாங்கும் பொருட்டு துருக்கி ஜெர்மனியுடன் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு, 1914 அக்டோபர் மாதம் 29-ம் தேதி ரஷ்யா மீது போர்தொடுத்தது. இதற்கிடையில் முக்கூட்டு உடன்படிக்கை நாடான இத்தாலி போர் ஆரம்பித்தபோது நடுநிலை வகித்தது. ஆனால் இப்போது ஜெர்மனியையும் ஆஸ்திரியாவையும் கைவிட்டு விட்டு நேச நாடுகள் பக்கம் சேர்ந்து கொண்டது. 1915-ல் செய்து கொள்ளப்பட்ட ரகசிய உடன்படிக்கைப்படி நேச நாடுகள் இத்தாலிக்கு டிரஉட்டினோ, டிரிஸ்டி, பிரன்னர் கணவாய், டால்மீஷியன் கரையோரம் ஆகிய பகுதிகளைப் போர் முடிந்தபின் கொடுப்பதாக வாக்களித்தன.

இவ்வாறு 1914 ஜீலை 28-ல் ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்குமிடையே ஆரம்பமான போர் அக்-29க்குள் ஒரு உலகப்போராக உருவெடுத்தது.

## மார்ன் போர் 1917 செப்-6 (The Battle of the Marne)

பிரான்சை தாக்குவதற்காக பெல்ஜியம் வழியாக ஜெர்மன் படைகள் செல்வதற்கு, ஏதுவாக, பெல்ஜியத்தின் மீது தாக்குதல் நடத்தினார். கெய்சர், மிக எளிதில் ஜெயித்து விடலாம் என்ற அவரது எண்ணம் ஈடேறவில்லை. முதலில் சிறு நாடான பெல்ஜியத்திக் வீரத்துடன் கூடிய எதிர்த்து நிற்கும் தன்மையையும், எதிர்பாராத வலிமையானது தடை செய்வதையும் ஜெர்மன் படைகள் எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. ஜெர்மன் தளபதி வான்கிளக் ஆகஸ்ட் 20-ம் தேதியன்று புருசலவ்ஸ் நகரைப் பிடித்தார். பெல்ஜியம் சரணடைந்தது.

பெல்ஜியத்தின் எதிர்ப்பால் ஜெர்மனியர்கள் தாமதப்படுத்தப்பட்டார்கள். மேலும் இங்கிலாந்தும் போரில் இறங்கியது. அதன் படைகள் பிரான்சுக்கு அனுப்பப் பட்டன. அப்படைகளை பிரெஞ்சு ஜனாதிபதி பாயின்கரேயும், பிரதமர் விவியானியும் வரவேற்றனர். இதற்கிடையில் அஜர்மானியப் படைகள் பிரான்ஸ் நாட்டின் வடமேற்கு பகுதியில் முன்னேறின. நாமூர் நகரம் வீழ்ந்தது. பின் சார்லீராய் என்னுமிடத்தில் பிரெஞ்சுக்காரர்கள் படுதோல்வியடைந்தனர். மானஸ் என்ற நகரத்திலிருந்து பிரெஞ்சுப் படைகள் பின்வாங்கியது. பாரிசின் வீழ்ச்சி முன்னறிவிக்கப்பட்டது. பாரிசு நகரத்திலிருந்து 20மைல் துாரத்திலிருந்த மார்ன் நதிக்கரையில் ஜெர்மானியப் படைகள் குவிக்கப்பட்டிருந்தன. அவசரம் அவசரமாகத் தலைநகர் பாரிசிலிருந்து போர்டோவிற்கு மாற்றப்பட்டது.

பாரிசு நகரைக் காப்பாற்ற பிரெஞ்சு பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் வந்தன. கடும் தாக்குதல் நடைபெற்றது. இப்போரில் ஜெர்மனியின் திட்டம் நிறைவேறவில்லை. அதன் முன்னேற்றம் தடைப்பட்டது. பிரெஞ்சு ஆட்சிப்பகுதியில் ஒரு பெரிய நிலப்பரப்பு பகைவரிடமிருந்து மீட்கப்பட்டதுடன் வெற்றியும் ஏற்பட்டது. இது போரில் உறுதியான எதிர்பாராத நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.

இதன்பின் ஜெர்மனி தனது திட்டத்தை மாற்றிக் கொண்டு ஆங்கிலக் கால்வாய்ப் பகுதியிலுள்ள துறைமுக நகர்களான டன்கர்க், கலே, ஆஸ்டெண்டு ஆகிய நகரங்களை பிடித்து, இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே உள்ள போக்குவரத்தை துண்டித்துவிட முடிவு செய்தது. இதன்படி, முதலில் ஆன்ட்வெர்ப் என்ற நகர் ஜெர்மபனியர்வசம் வீழ்ந்தது. ஆனால் தொடர்ந்து முன்னேறவிடாமல் ஆங்கிலப்படைகள் தடுத்தன. யெப்ரஸ் என்ற இடத்தில் நடந்த கடும் மோதலில் ஜெர்மானியப் படை எந்த வெற்றியையும் அடைய முடியவில்லை.

## அகழ்ப்போர் முறை (Trench Warfare)

அகழிப்போர் முறை முதல் உலகப் போரின் புதுமையான போர் முறையாகும். நேச நாடுகள் கடலிலிருந்து ஆல்ப்ஸ் மலைவரை நீண்ட அகழிகளை வெட்டினார்கள். ஜேர்மானியர் எளிதில் ஊடுருவி வராமல் இந்த அகழிகள் தடுத்தது. விமானச் சண்டையின் காரணமாக படைவீரர்கள் இந்தப் பதுங்கு குழிகளில் மறைந்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. அகழிப்போர் முறை நான்கு ஆண்டுகள் நீடித்தது. இக்குழிகளில் பதுங்கி சண்டையிட்ட வீரர்கள் கற்பனை எல்லைகளையும் கடந்த துன்பங்களைத் தாங்கிக் கொண்டார்கள். ஆகழிப்போர் முறையின் விளைவாக பிரான்சை எளிதில் வென்றுவிடலாம் என்ற ஜெர்மனியின் ஆசை பலிக்கவில்லை.

## ரஷ்யாவின் தோல்வி

பிரெஞ்சுப் போர் மனைக்கு ரஷ்ய வீரர்கள் அனுப்பப்பட்டனர். துிறமையாகப் போரிட்டு கிழக்கு பிரஷ்யா வரை முன்னேறி வந்தனர். ஆனால் ஜெர்மானியத் தளபதியான ஹிண்டன்பர்க் 1914 ஆகஸ்ட் 26-ம் தேதி டான்னன்பர்க் என்னுமிடத்தில் ரஷ்யர்களைத் தோற்கடித்தார். ரஷ்யர்களுக்கு அளவு கடந்த சேதம் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் தான் துருக்கி ஜெர்மனி பக்கம் சேர்ந்து கொண்டது.

இதற்கிடையில் ஜெர்மனிக்குச் சொந்தமான பல குடியேற்றப்பகுதிகளை நேசப்படைகள் கைப்பற்றின. மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள டோகாலாந்து, கேமரூன்ஸ் ஆகியவை நேசப்படை வசமாயின. ஜப்பான் சீனாவில் கியாசௌ பகுதியையும் பசிபிக் கடலில் பல ஜெர்மானிய தீவுகளையும் கைப்பற்றியது. நியுசிலாந்து ஸ்மோவையும், ஆஸ்திரேலிய நியுகினியாவையும் கைப்பற்றியது.

1915 மே மாதத்தில் ஜெர்மானியப் படை போலந்தின் மீது படையெடுத்தது. ஆகஸ்ட் 4-ம் தேதி போலந்து தலைநகரான வார்சா சரணடைந்தது. அதன்பின் லிதுவேனியா கைப்பற்றப்பட்டது. கலிப்போலி, மெசபடோமியா ஆகிய இடங்களில் துருக்கி வெற்றி பெற்றது.

### சோம் நதிப்போர்

இந்தப்போரில் ஜெர்மனிக்குத் தோல்வி ஏற்பட்டது. சோம் நதியின் மேற்குப் பகுதிகளில் அரீராஸ் என்னுமிடத்தில் முதலில் பிரெஞ்சுப் படையும் பின்னர் பிரிட்டிஷ் படையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 1916 ஜீலையில் நடைபெற்ற பெரிய போருக்குப் பின்னர், ஜெர்மானியப் படைகள் பின்வாங்கின. ரீம்ஸ் நகரைப் பிடிக்க ஜெர்மனி எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை.

மியூஸ் நதிக்கரையிலிருந்த வெர்டன் நகரம் பாரிசுக்குச் செல்லும் வழிகளில் முக்கியமானது. எனவே அந்த நகர் மீது ஜெர்மானியர்கள் கடும் தாக்குதல்களை நடத்தினார்கள் ஆனால் ஆங்கில பிரெஞ்சு வீரர்கள் பல வீரச்செயல்கள் புரிந்து அந்த நகரைப் பாதுகாத்தனர்.

### ஜட்லந்துப் போர்: Battle of Jutland 1916 மே 31 ஜீன்1

முதல் உலகப் போரில் பெருமளவில் கடற்போர்கள் நடைபெறவில்லை. ஆனாலும் சில இடங்களில் நடைபெற்ற போர்களில் இருதரப்பிலும் அழிவை ஏற்படத்தியது. ஜெர்மனி தனது நீர் மூழ்கிக் கப்பல்களின் வலிமையால் பல ஆங்கில வியாபாரக் கப்பல்கழள மூழ்கடித்தது. போரின் ஆரம்பத்தில் பாக்லாந்து தீவுகட்கு அருகேஆங்கிலக் கப்பற்படைத் தலைவர் அட்மிரல் ஸ்டர்டி என்பவர் நான்கு ஜெர்மன் யுத்தக் கப்பல்களை நாசமாக்கினார். 1916 மே மாதத்தில் நடைபெற்ற ஜட்லாந்துப் போரில் இருதரப்பினருக்கும் அழிவு ஏற்பட்டாலும் ஆங்கிலக் கப்பற்படைத் தளபதி ஜெலிகோவின் திறமையால் ஜெர்மானியர்கள் தோல்விகண்டு ஓடினார்கள். ஆதன்பின் நடைபெற்ற பல போர்களில் ஜெர்மனியின் கடல் வலிமைகுன்றியது. நேசநாட்டினரின் வலிமை பெருகியது.

### போரிலிருந்து ரஷ்யா விலகல்

ஜெர்மனியின் கிழக்குப்பகுதிகளில் ரஷ்யா நேசப்படைகளுடன் சேர்ந்து போரிட்டது. ஜெர்மானிய ஆஸ்திரியக் கூட்டுப்படைகளை பல இடங்களில் தோற்கடித்தது. பின்னர் பல இடங்களில் தோல்வியடைந்தது. உள்நாட்டில் பல பிரச்சனைகள் தீர்க்கப்படாததாலும் பல இடங்களில் தோல்வியடைந்ததாலும் ரஷ்யாவில்புரட்சி ஏற்பட்டது. லெனின் தலைமையில் புதிய கம்யூனிச அரசாங்கம் ஏற்பட்டது. நாட்டைச் சீர்திருத்தி அமைக்கும் பொருட்டு போரிலிருந்து விலக ரஷ்யா விரும்பியது. எனவே ஜெர்மனியுடன் பிரஸ்ட்லிட்டோவ்ஸ்க் என்ற உடன்படிக்கையை

1918-ல் செய்து கொண்டு விலகியது ரஷ்யா. போரிலிருந்து விலகியதும் ஜெர்மனி வலிமை பெற்றது. போரின் எல்லா நெறிமுறைகளையும் மீறி கட்டுப்பாடற்ற போரில் ஈடுபட்டது ஜெர்மனி.

**முதல் உலகப்போரில் அமெரிக்கா இறங்குதல்** (முதல் உலகப்போரில் உட்ரோவில்சனின் பங்கு)

முதல் உலகப்போர் தொடங்கியதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி உட்ரோவில்சன், அமெரிக்கா போரில் நடுநிலை வகிக்கும் என்று பிரகடனப்படுத்தினார். ஆனால் அமெரிக்க மக்களில் பெரும்பாலோர் இங்கிலாந்து தலைமையிலான நேச நாடுகளிடம் அனுதாபம் காட்டினர். போரில் பன்னாட்டு சட்டங்களுக்கோ பிற நாடுகளின் உரிமைகளுக்கோ ஜெர்மனி மதிப்புத்தர மறுத்ததாலும், அதன் பயங்கரத் தன்மையாலும் அமெரிக்கா நடுநிலை தொடர்ந்து வகிப்பது இயலாத காரியமாயிற்று.

1915-ம் ஆண்டு ஜெர்மனி, நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி போரினை ஆரம்பித்தது. உடனே வில்சன் 'அமெரிக்க மக்கள் உயிரிழக்க நேரிட்டாலோ' அதற்கு முழுப் பொறுப்பினையும் ஜெர்மனி ஏற்க வேண்டுமென' எச்சரிக்கை விடுத்தார். அதற்கு ஜெர்மனி இணங்கி செயல்பட்டது. ஆனால் 1915 மார்ச் 28-ம் தெதி 'பலபா' என்ற அமரிக்கக் கப்பல் தாக்கப்பட்டதால் ஒரு அமெரிக்கர் இறந்தார். அடுத்து மே மாதம்7-ம் தேதி ஆங்கில பயணிகள் கப்பலான 'லூசிட்டானியா' (Lusitania) மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த ஆண், பெண் குழந்தைகள் உட்பட 1,198 பேர் உயிரிழந்தனர். அதில் 128 பேர் அமெரிக்கர்கள்.

இச்செய்தியை கேள்விப்பட்ட அமெரிக்க மக்கள் கடுங்கோபம் அடைந்தனர். ஜெர்மனி மீது உடனே போர் தொடுக்க வேண்டினர். ஜேர்மனி பிழையை ஒப்புக் கொண்டு திருந்துவதாக வாக்களித்ததால் வில்சன் நாட்டைச் சாந்தப்படுத்தி வைத்தார். ஆனால் அமெரிக்கா போரில் கலக்கத்தான் வேண்டும் என்று நினைக்கும் அமெரிக்கர்களின் எண்ணிக்கையும் தீவிரமும் அதிகரித்தது. ஈவிரக்கமின்றி மக்கள் கொல்லப்படுவதைக் தடுத்து நிறுத்தவும், போரை முடிக்கவும், நேச நாடுகளுக்கு உதவ வேண்டும் என்று அமெரிக்க மக்கள் கருதினர்.

1916-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வில்சன் மீண்டும் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். வேற்றி பெற்றதும் போரினை நிறுத்திச் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கான வழி முறைகளை ஆராயலானார். ஏந்தத் தரப்பினருக்கும் "வெற்றியின்றி அமைதி"(Peace without victory) காண்பதே வில்சனின் குறிக்கோளாக இருந்தது.

1917 ஜனவரி 31-ம் தேதி இங்கிலாந்தை எப்படியாவது கடுந்துன்பத்துக்குள்ளாக்கி பணியவைக்க வேண்டுமென்று திட்டமிட்ட ஜெர்மனி, கட்டுப்பாடற்ற நீர்மூழ்கிக் கப்பற்போரில் ஈடுபடப் போவதாக அறிவித்தது. உடனே அமெரிக்கா ஜெர்மனியுடன் கொண்டிருந்த அரசியல் உறவை முறித்துக் கொண்டது. போர் ஆரம்பித்த சில வாரங்களுக்குள் எட்டு அமெரிக்கக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அமெரிக்க வணிகக் கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களிலேயே நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் சரக்குகள் தேங்கின. நேச நாடுகளும் அமெரிக்க உதவியின்றி தவித்தன. இதற்கிடையே மெக்சிகோவை அமெரிக்கா மீது போர் தொடுக்க ஜெர்மனி துாண்டிய சதியும் தெரிய வந்ததால், பொறுக்க முடியாத வில்சன் 1917 ஏப்ரல் 2-ம் தேதி ஜெர்மன் மீது போர் தொடுப்பதற்குக் காங்கிரசின் அனுமதியைக் கேட்டது. நடுநிலை உரிமைகளைப் பாதுகாக்கவும், பன்னாட்டு சட்டதிட்டங்களைப் பாதுகாக்கவும், எதேச்சதிகாரத்தின் அடக்குமுறைக்கெதிரான பாதுகாப்பிற்காகவுமே அமெரிக்கா போரில் இறங்குவதாகப் பேசினார். குாங்கிரஸ் உடனே ஒப்புதல் தந்தது. 1916- ஏப்ரல், 6-ம் தேதி கிறிஸ்தவர்கள் புனித நாளாகிய

புனித வெள்ளிக்கிழமையன்று (Good Friday) ஜெர்மனி மீது அமெரிக்கா போர் தொடுத்தது.

யுத்த காலத்தில் ஜனாதிபதி வில்சன் யுத்த காரியங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் கவனித்து வந்தார். உள்நாட்டிலும், வெளியிலும் மக்களின் மனஉறுதி கெடாமல் பார்த்துக்கொண்டார். நாடு போரில் ஈடுபட்டதின் லட்சியங்களை அவர் மறக்கவில்லை. தாம் ஜெர்மானிய அரசின் மீது தான் போர் தொடுப்பதாகவும், ஜெர்மானிய மக்கள் மீது அல்ல என்றும், அவர்கள் மீது அன்பும் நட்பும் கொண்டுள்ளதாகவும் அறிவித்தார்.

அமெரிக்காவில் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. கட்டாய ராணுவசேவை புகுத்தப்பட்டது. 1917ஜீன் மாதம் அமெரிக்கா ராணுவத்தின் முதல் பகுதி பிரான்சில் கரையிறங்கியது. இது நேச நாடுகளுக்கு அதிக தைரியத்தை ஊட்டியது. அமெரிக்கப் படைவந்த பின் நடைபெற்ற பல போர்களில் ஜெர்மனி தோற்கடிக்கப்ட்டது. 1918-ம் ஆண்டு துவக்கத்தில் ஜெர்மனி, பிரான்சைத் தாக்க துவங்கியது. ஆனால் அமெரிக்கப்படையினரின் உதவியால் நேச நாடுகள் ஜெர்மனியைப் பலமுனைகளில் தாக்கிப் படைகளைப் பின்வாங்கச் செய்தனர்.

**வில்சனின் 14 அம்சக் கோட்பாடுகள்**

போரில் வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்த வில்சன், உலக அமைதிக்காக தனது குறிக்கோளை வரையறை செய்து 1918 ஜனவரி 8-ம் தேதி அமெரிக்க காங்கிரசில் தனது அமைதித் திட்டங்களைச் சமர்ப்பித்தார். அவைதான் புகழ்பெற்ற ‘‘வில்சனின் 14 அம்ச கோட்பாடுகள்’’ என்று கூறப்படுகிறது. ஆவை பின்வருமாறு:

1. உலக நாடுகளுக்கிடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் வெளிப்படையாகவே செய்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மறைமுக ஒப்பந்தங்கள் அமைதிக்குக் கேடு விளைவிப்பவை ஆகும்.
2. அமைதிக் காலத்திலும் போர்க்காலத்திலும் கடலில் கப்பல்களைச் செலுத்திட எல்லா நாடுகளுக்கும் முழு உரிமை அளிக்கப்படவேண்டும்.
3. அமைதிக்கு இணங்கும் நாடுகளின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரக் தடைகள் இயன்றவரை நீக்கப்படவேண்டும்.
4. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டும் குறைந்த அளவு போர்க்கருவிகளை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.
5. குடியேற்ற ஆதிக்கம் செலுத்த விரும்பும் நாடுகள், குடியேற்ற நாடுகளை அங்கு வாழும் மக்களின் விருப்பத்திற்கிணங்க சார்பற்ற வகையில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.
6. ரஷ்யாவிடமிருந்து கைப்பற்றிய அனைத்துப் பகுதிகளையும் ஜெர்மனி திருப்பித் தரவேண்டும்.
7. பெல்ஜியத்தின் சுதந்திரத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். அங்கிருந்து ஜெர்மானியப் படைகள் வெளியேற வேண்டும்.
8. பிரான்சிடமிருந்து கைப்பற்றிய அனைத்துப் பகுதிகளையும் ஜெர்மனி திருப்பித்தர வேண்டும். 1871-ல் ஜெர்மனி பெற்ற அல்சேய்ஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சிற்கு அளிக்கப்பட வேண்டும்.
9. தேசிய உணர்வின் அடிப்படையில் இத்தாலியின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.
10. ஆஸ்திரிய ஹங்கேரி நாட்டு மக்களுக்குத் தன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
11. புால்கன் நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும். ருமேனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ ஆகிய நாடுகளிலிருந்து பிற நாட்டினது

வெளியேற வேண்டும். கடல்பகுதியை அடைய செர்பியாவுக்கு வழி ஒன்று அமைத்துத் தரப்பட வேண்டும்.

12. துருக்கியைச் சார்ந்த துருக்கிப் பேரரசின் பகுதிகளில் இறைமைத் தன்மை அப்பேரரசுக்கு அளிக்கப்பட வேண்டும். பிற பகுதிகளில் மக்கள் தன்னுரிமை பெற வழி செய்யப்பட வேண்டும். டார்டனல்லஸ் நீர் சந்திப்பு உலக நாடுகளின் வாயிபத்திற்குத் திறந்துவிடப்பட வேண்டும்.
13. தன்னுரிமை பெற்ற போலந்து நாட்டை உருவாக்கி, அதற்குக் கடல் பகுதியினை அடைய வழி உன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.
14. உலக நாடுகள் அனைத்தும் எவ்விதப் பாகுபாடுமின்றி தங்கள் நாடுகளின் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளவும், பிற நாடுகளின் தன்னுரிமையை மதித்து நடக்கவும், தங்களிடம் தோன்றும் எல்லைப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும்,'சர்வதேச சங்கம்' ஒன்று நிறுவப்பட வேண்டும்.

**போரின் முடிவு**

நேச நாடுகளின் தாக்குதலால் நலிவடைந்த ஜெர்மனி தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்துக் கொண்டு, வில்சனின் 14 அம்சத் திடடத்தின் அடிப்படையில் அமைதி ஒப்பந்தம் செய்துஅகாள்வதாக 1918, செப்டம்பரில் அறிவித்தது. இதற்கிடையயே ஜெர்மனியின் நட்பு நாடுகள் ஒவ்வொன்றாகப் பணிந்தன. 1918-செப்டம்பரில் பல்கேரியாவும் துருக்கியும் பணிந்து அமைதியை நாடின. நவம்பர் மாதம் ஆஸ்திரிய பணிந்தது.

ஜேர்மானியப் பேரரசிலிருந்த செக், ஸ்லாவோக், போலந்து யூகோஸ்லாவ், ஹங்கேரிய இன மக்கள் தங்களது நாடுகளை சுதந்திர நாடுகளாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். துவறான வழியில் தங்களை நடத்தி சென்றுவிட்டதாகக் கெய்சர் வில்லியத்தின் மீது ஜெர்மானிய மக்கள் கோபம் கொண்டனர். ஆக்டோபர் 3-ம் தேதி புதிய ஜெர்மானிய சான்சலர் இளவரசர் மாக்ஸ் (Prince Max of Baden) அமைதி ஒப்பந்தத்தில் ஜெர்மனி கையெழுத்திடுவதாகக் கூறினார். நவம்பர் 9-ம்தேதி கெய்சர் வில்லியம் தான் முடிதுறப்பதாக அறிவித்து, மறுநாள் நெதர்லாந்துக்குச் செல்வதற்காக ரயிலேறினார். இவ்வாறாக 1871-ல் முதலாம் வில்லியத்துடன் ஜெர்மனியில் ஆட்சியலமர்ந்த கோகன் சோலர்ன் வம்சம் 1918-ல் இரண்டாம் வில்லியத்துடன் முடிவடைந்தது.

1918 நவம்பர் 11-ம் தேதி நேச நாடுகளுடன் ஜெர்மனி, பாரிசுக்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. இதன்படி முதல் உலகப்போர் முடிவடைந்தது. 1918-ம் வருடம் 11வது மாதத்தில் காலை 11 மணியளவில் முதல் உலகப்போர் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

**முதல் உலகப் போரின் விளைவுகள்**

1. முதல் உலகப் போர் மனிதகுலத்திற்கு ஏற்பட்ட பேராபத்து ஆகும். ஏராளமான ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டன. 1565 நாட்கள் நடைபெற்ற போரில் ஒரு கோடி பேர் கொல்லப்பட்டனர். போர்க்களத்தில் அமெரிக்க வீரர்கள் ஒரு லட்சம் பேர், ரஷ்ய வீரர்கள் பதினேழு லட்சம் பேர், ஜெர்மானிய வீரர்கள் பதினெட்டு லட்சம் பேர், இங்கிலாந்து வீரர்கள் ஒன்பது லட்சம் பேர் காயமடைந்தனர். கிழக்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இழப்பு காணப்பட்டது.

2. ஏராளமான கட்டிடங்கள், தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. இரண்டாயிரம் கோடி டாலர் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இதனால் ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது. போரில் எல்லா நா:களும் மொத்தத்தில் 1900 கோடி டாலர் போருக்காக செலவு செய்தன.

3. ஒவ்வொரு நாடும்போரை நடத்துவதற்காக மக்களிடம் பெருந்தொகையைக் கடனாக வாங்கின. சேதீயக்கடன் உலக உற்பத்தியைப் பெரிதும் பாதித்தது. பசி, பட்டினி வேலையில்லா திண்டாட்டத்தினால் மக்கள் பெரிதும் இன்னலடைந்தனர்.

4. முதல் உலகப் போரின் விளைவாக ஐரோப்பிய அரசியலில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டது. இஜர்மனி ஆஸிரியா, துருக்கி, ரஷ்யா ஆகிய பேரரசுகள் அழிவுற்றன. இதன் விளைவாக பல புதிய நாடுகள் சுதந்திமடைந்தன. இது பன்னாட்டு அரசியலில் புதிய சூழ்நிலையை உருவாக்கியதுடன் பன்னாட்டுப் பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கியது.

5. நாடுகளிடையே தேசிய உணர்ச்சியை முதல் உலகப்போர் வளர்த்தது. அந்நியர்களின் ஆட்சியை எதிர்த்து பல நாடுகளில் கிளர்ச்சி ஏற்பட்டது. ஐரோப்பிய வல்லரசர்கள் பலர் முடிதுறந்தனர். பல நாடுகளில் மக்களாட்சி ஏற்பட வழி வகுத்தது. அயர்லாந்தில் தேசிய இணக்கம் வலுவடைந்து 1921-ல் அயர்லாந்து சுதந்திரமடைந்தது. சீனா, துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளில் தேசிய உணர்வு வளர்ச்சியடைந்தது. இந்தியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் அமைதியின்மையை ஏற்படுத்தியது.

6. தேசிய இனம் சார்ந்த புதிய நாடுகள் தோன்றின. போலந்து, பின்லாந்து, செக்கோஸ்லோவியா, யூகோஸ்லோவியா, எஸ்தோனியத, லாட்வியா, விதுவேனியா போன்ற புதிய நாடுகள் தோன்றின.

7. ஊலகத்தில் இனிமேல் போர் ஏற்படாமல் தடுக்கவும் ஜனநாயகத்தை காக்கவும் அமைதியை நிலைநாட்டவும், சர்வதேச சங்கம் என்ற அகில உலக அமைதி ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது.

8. முதல் உலகப்போர் உலக அரசியலில் ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்து வைத்தது. புதிய தலைமுறையினரிடையே புதிய நம்பிக்கையும், புதிய எண்ணங்களும் ஏற்பட்டன. அனைத்து சமூக வாழ்வையும், சிந்தனையோட்டங்களையும் இந்தப் போர் புரட்சிகரமாக்கியது.

9. முதல் உலகப்போரின் விளைவாக தூரக் கிழக்குப் பகுதியில் ஜப்பான் வலிமை பெற்ற வல்லரசாக உருவானது. ராணுவ வல்லரசான ஜப்பான் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமரிக்காவுக்கும் ஒரு சவாலாக விளங்கியது. அதுவே பின்னர் பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது.

10. முதல் உலகப் போரில் தோல்வியடைந்ததாலேயே ரஷ்ய அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது. அங்கே புரட்சி ஏற்பட்டு சார் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு கம்யூனிச அரசு நிறுவப்பட்டது. அது உலக அளவில் பெரும் பிள் விளைவுகளை ஏற்படுத்தியது.

11. ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பான உலகத்தை உருவாக்கும் வில்சனின் முயற்சி வீணாகப் போய்விட்டது. ஐரோப்பாவில் முதல் உலகப்போரின் விளைவாக ஜனநாயகத்திற்கு எதிராக, இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் தோன்றின. இந்த சர்வாதிகார அரசுகள் உலக அமைதிக்கு ஊறு விளைவித்தன.

12. முதல் உலகப் போரின் இறுதியில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளை நடத்திய விதமும், அந்த நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட இரக்கமற்ற உடன்படிக்கைகளும் இரண்டாவது உலகப்போருக்கான காரணங்களாக மாறின.

13. முதல் உலகப்போரின் விளைவாக ‘சக்தி சமநிலைக் கோட்பாடு’ புதிய பரிணாமத்தைப் பெற்றது. அரசியல், ராணுவ பொருளாதார செல்வாக்கு மையம் (Centre of gravity) ஐரோப்பாவிலிருந்து நீங்கி அமெரிக்காவிடம் சென்றது. ஐரோப்பிய நாடல்லாத அமெரிக்க உலக அரசியல் நடவடிக்கைகளின் மையமாகியது.

14. முதல் உலகப்போர் மக்களின் சமுதாய வாழ்க்கையில் பெரும் புரட்சியையே ஏற்படுத்திவிட்டது. சமுதாயத்தில் தொழிலாளர் பிரிவினரிடம் அரசியல் உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. அவர்களது அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்ததால் ஐரோப்பிய நாடுகளில் பல சமுதாயச் சீர்திருத்தங்கள் ஏற்படலாயின. தொழிலாளர் நலன்களைப் பேணுவதற்காகவே சர்வதேச சங்கத்தின் கீழ் உலக தொழிலாளர் நிறுவனம் உருவாக்கப்பட்டது.

15. தொழிலாளர்களைப் போலவே விவசாயிகளும் அதிக நன்மையடைந்தனர். அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. விலை குறியீடு அதிகரித்ததால் அவர்கள் அதிக லாபம் பெற்றனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. ரஷ்யாவில் நிலப்பரப்புகளின் நிலங்கள் நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. பால்டிக் நாடுகளிலும் இதே நிலை காணப்பட்டது.

16. முதல் உலகப்போரின் போது ஆண்கள் போரில் ஈடுபட்டதால் பல நாடுகளில் உள்நாட்டு நிர்வாகத்தில் பெண்கள் ஈடுபட்டார்கள். இதன்விளைவாக சமுதாயத்தில் பெண்களின் முக்கியத்துவம் அதிகரித்தது.

17. முதல் உலகப்போரின் விளைவாக பன்னாட்டியல் (internationalism) வளர்ச்சியடைந்தது. இதன் அடிப்படையிலேயே சர்வதேச சங்கம் செயல்பட ஆரம்பித்தது. உலகப்போரின் தொடர்ச்சியாக 1929-ல் உலகப்பொருளாதார மந்தநிலை ஏற்பட்டது. இதன் விளைவாக வேலையில்லா திண்டாட்டம், ஏழ்மை, பணமந்தம், தொழில் மற்றும் வாணிப வீழ்ச்சி, பல நாடுகளுக்கிடையே நேரடிப்போர்கள் ஆகியவை ஏற்பட்டன.

18. முதல் உலகப்போர் அறிவியல் தொழில் நுட்பத்தில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தியது. போரின்போது பல புதிய அழிவை ஏற்படுத்தும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. விமானத்தொழில், மருத்துவம், கப்பல்கட்டும் தொழில் ஆகியவற்றில் பல புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

## பாரிஸ் அமைதி மாநாடு

# வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை (TREATY OF VERSAILIES, 1919)

முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியுடன் அதன் கூட்டு நாடுகளுடனும் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசுக்கு அருகிலுள்ள 14-ம் லூயி கட்டிய புகழ்பெற்ற வெர்செய்ல்ஸ் மாளிகையில் உள்ள புகழ்பெற்ற கண்ணாடி மாளிகையில்' மாநாடு ஒன்று 1919 ஜனவரி 18-ம் தேதி கூட்டப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் கிளமன்சோ தலைமை வகித்தார். அதில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள. 1817-ம் ஆண்டு இதே நாளான ஜனவரி 18-ல் வெர்செய்ல்ஸிலுள்ள இதே கண்ணாடி மாளிகையில் தான் பிராங்கோ பிரஷ்யப் போரில் பிரான்சைத் தோற்கடித்தபின் அரசர் முதலாம் வில்லியம் ஜெர்மானியப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். பிரான்சுக்கு எதிராக பிஸ்மார்க் அப்போது பல முடிவுகளை எடுத்தார். 48 வருடங்களுக்குப் பிறகு அதே நாளில், அதே கண்ணாடி மாளிகையில் பிஸ்மார்க் எடுத்த முடிவுகளையெல்லாம்' மாற்றியமைக்கவும் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனிக்கு எதிராக பல முடிவுகளை எடுக்கவும் மாநாடு ஆரம்பமானது.

போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள் அமைதி மாநாட்டின் கலந்து கொள்ள அழைக்கப்படவில்லை. ரஷ்யப்புரட்சிக்குப் பிறகு ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்ட ரஷ்யா மாநாட்டிற்கு வரவில்லை. மாநாட்டில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டாலும் கிளமன்ஸோ, லாயிட் ஜார்ஜ், உட்ரோவில்சன் ஆகியோரே முக்கிய முடிவுகளை எடுத்தார்கள். சுமார் ஆறு மாதங்கள் விவாதித்து உடன்படிக்கையின் நகலை தயாரித்தனர். 1919 மே மாதம் 7-ம் தேதி உடன்படிக்கையின் நகலை ஜெர்மனியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த வெய்மார் குடியரசின் பிரதிநிதிகளிடம் காண்பித்தனர்.

ஊடன்படிக்கை நகலைப் படித்துப் பார்த்த பிரதிநிதிகள் அதிர்ச்சியடைந்தனர். வில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையிலேயே அமைதி உடன்படிக்கை அமைந்திருக்கும் என்று நினைத்திருந்த அவர்கள், மிகக் கடுமையான ஷரத்துக்களை எதிர்பார்க்கவே இல்லை. கடுமையான ஷரத்துக்களை சிறிது மாற்றியமைக்கும்படி கேட்டனர். ஆனால் நேசநாடுகள் அதை ஏற்றுக் கொள்ளாது மட்டுமல்ல, கையெழுத்திட மறுத்தால் மீண்டும் போரை ஆரம்பித்து பெர்லினை முற்றுகையிடுவோம் என்று பயமுறுத்தினர். வேறு வழியில்லாமல் ஜெர்மானியப் பிரதிநிதிகள் 1919 ஜீன் 28-ம் தேதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வாறு ஆர்ச்ட்யூக் பெர்டிணான்டு கொல்லப்பட்ட சரியாக ஐந்தாவது வருட தினத்தில் முதல் உலகப் போர் முடிவடைந்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை 400 ஷரத்துக்களைக் கொண்டது. 80,0000 வார்த்தைகளைக் கொண்டது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் பின்வருமாறு:

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் வித்துக்கள்**

1. **நிலப்பகுதிகள் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:**

1. 1871-ம் ஆண்டு இழந்த அல்சேஸ் லொரைன் பகுதிகளைப் பிரான்ஸ் பெற்றுக் கொண்டது. யூபென், மால்மடி ஆகிய பகுதிகளைப் பெல்ஜியம் பெற்றது. போஸனில் பெரும்பகுதியும், மேற்கு பிரஷ்யாவும், கேஷ்யூப்ஸ் மாவட்டமும் போலந்துக்குக் கொடுக்கப்பட்டது.
2. பால்டிக்கடல் பகுதியிலுள்ள டான்சிக் துறைமுகம் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப்பட்டு சுதந்திர நகரமாக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

3. ஜெர்மனியின் வளமிக்க சார் சமவெளி (Saar Valley) பிரான்சிங்கு கொடுக்கப்பட்டது. பிரான்ஸ் போரில் தான் இழந்த சுரங்களுக்கு ஈடாக சார்பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களை பதினைந்து ஆண்டுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். புதினைந்தாவது ஆண்டு முடிவில் அங்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஜெர்மனியுடன் இணைக்கப்பட வேண்டுமா அல்து பிரான்சுடன் இணைக்கப்பட வேண்டுமா என்பது முடிவு செய்யப்பட வேண்டும்.

4. மேல் பகுதியை முதலில் தேச நாடுகள் பெற்றுக் கொண்டன. ஆனால் 1921-ல் மேமல் லிதுவேனியாவிற்குக் கொடுக்கப்பட்டது.

5. பேல்ஜியம் ஒரு நடுநிலை நாடாக அறிவிக்கப்பட்டது. போலந்து, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

6. ஜேர்மனியின் குடியேற்றப் பகுதிகள் அனைத்தும் பறித்து கொள்ளப்பட்டது. சர்வதேச சங்கம் அந்தப்பகுதிகளை இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நியுசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் விருப்பம் போல் பிரித்து ஒப்படைத்து, அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த பகுதிகளுக்கு ‘‘மாண்டேட்டுகள்’’ என்று பெயர். காமரூன் டோகோலாந்து டங்கனிகா ஆகியவை இங்கிலாந்திடமும், ஜெர்மனியின் தென்மேற்கு ஆப்பிரிக்கப் பகுதிகள் தென்ஆப்பிரிக்காவிடமும், சாமோவன் தீவுகள் நியூசிலாந்திடமும், மார்ஷல் தீவுகள் ஜப்பானிடமும், நியுகினியாத் தீவுகள் ஆஸ்திரேலியாவிடமும் ஒப்படைக்கப்பட்டன.

7. கீல் (Kiel) கால்வாய் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக்கப்பட்டது.

மேற்கண்ட மாற்றங்களின் விளைவாக, இஜர்மனி 60 லட்சம் மக்கள் தொகையையும், இருபத்தைந்தாயிரம் சதுர மைல் பரப்பளவு உள்ள நிலப்பகுதிகளையும் இழந்தது. 10,27,000 சதுர மைல் பரப்பளவு குடியேற்றப் பகுதிகளையும் ஜெர்மனி இழந்தது.

## II) பொருளாதார சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:

1. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கிய நோக்கமே பொருளாதார ரீதியாக ஜெர்மனியைப் பலவீனப்படுத்துவதே ஆகும். உடன்படிக்கையின் 231வது பிரிவின்படி ஜெர்மனி மீது 5000,000,000 கோடி டாலர் நஷ்டஈடு விதிக்கப்பட்டது. இது ஜெர்மனியால் தாங்க முடியாத தொகையாகும்.

2. எஞ்சியிருந்த ஜெர்மனியின் பெரிய கப்பல்கள் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கொடுக்கப்பட்டது. மேலும் நஷ்டஈடாக தனது சொந்த செலவில் புதிய கப்பல்களை அடுத்த ஐந்து வருடங்களுக்குள் கட்டிக் கொடுக்கவேண்டும்.

3. அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு 70 லட்சம் டன் நிலக்கரியை பிரான்சிற்கும், 80 லட்சம் டன் பெல்ஜியத்திற்கும், 77 லட்சம் டன் இத்தாலிக்கும் ஜெர்மனி கொடுக்க வேண்டும்.

4. அடுத்த ஐந்து ஆண்டு காலம் வரை ஜெர்மனியின் ஏற்றுமதி இறக்குமதி வாயிபத்தில் நேச நாடுகள் அதிக உரிமையையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வார்கள். வேளிநாட்டிலுள்ள ஜெர்மன் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.

5. ஜெர்மனியின் வல்ப், ஓடர், தீமென், டான்யூப் நதிகள் பன்னாட்டுக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. கீல் கால்வாயில் எல்லா நாடுகளின் வியாபார மற்றும் போர்க்கப்பல்கள் சென்று வர உரிமையளிக்கப்பட்டது.

## iii) இராணுவ சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:

**1.** ஜெர்மனியின் ராணுவபலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. ரைன் நதியின் இருபுறங்களிலும் 50 கிலோ மீட்டர் வரையில் ஜெர்மனி ராணுவத்தை வைத்துக்

கொள்ளக்கூடாது. நுதியின் மேற்குப் பகுதியை நேசநாடுகள் 15 ஆண்டுகள் தங்கள் வசம் வைத்திருக்கும்.

**2.** ஜெர்மனியின் படைவீரர்களின் எண்ணிக்கை ஒரு லட்சமாகக் குறைக்கப்பட்டது. உள்நாட்டுச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க மட்டுமே இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஜெர்மனி கேட்டுக் கொள்ளப்பட்டது.

**3.** ஜெர்மனி, நச்சுவாயு, டாங்கிகள், ராணுவ ஊர்திகள் ஆகியவைகளை தயாரிக்கக் கூடாது. போர்த் தளவாடங்களை ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ கூடாது.

**4.** ஜோ்மனியின் எல்லா நீர் முழ்கிக் கப்பல்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெர்மானியக் கப்பற்படை 15 ஆயிரம் வீரர்களையும் சில போர்க்கப்பல்களையும் மட்டுமே கொண்டதாகக் குறைக்கப்பட்டது.

### iv) சட்ட சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:

உடன்படிக்கையில் 231வது பிரிவுப்படி பன்னாட்டுச் சட்டதிட்டங்களையும், உடன்பாடுகளையும் மீறியமற்காகவும், போரை ஆரம்பித்து பேரழிவை ஏற்படுத்தியதற்காகவும், ஜெர்மனி குற்றவாளி என்று கூறப்பட்டது. ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டார். ஆனால் பேரரசர் நெதர்லாந்தில் தஞ்சம் அடைந்துவிட்டதால் அந்த நாடு அவரை விசாரணைக்கு அனுப்ப மறுத்துவிட்டது. சுமார் நூறு குற்றவாளிக்ள மட்டும் லீப்சிக் நகரில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

### v) உடன்படிக்கையின் பிற ஷரத்துக்கள்

போலந்து, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவோக்கியா ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. 1871-ம வருட பிராங்கோ பிரஷ்யப் போரின்போது, பிரான்சிலிருந்து ஜெர்மனி எடுத்துச் சென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பொருட்கள், வெற்றி கேடயங்கள், கலைப்பொருட்கள், அரசியல் ஆவணங்கள் ஆகியவற்றை ஆறு மாதத்திற்குள் பிரான்சிடம் கொடுத்துவிட வேண்டும். இந்த உடன்படிக்கையை செயல்படுத்தவும், பன்னாட்டு அமைதியை நிலைநாட்டவும் சர்வதேச சங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

### வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைப் பற்றிய மதிப்பீடு

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனி மீது மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்தது. அவைகள் மிகக் கொடூரமானதாகவும் ஜெர்மனியை அவமானப்படுத்துவதாகவும் அமைந்தன. ஜெர்மனியின் மதிப்பு, பெருமை, புகழ் ஆகியவை அழிந்தது. அதன் இறைமை கட்டுப்படுத்தப்பட்டது. எனவே தான் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஜெர்மானியப் பிரதிநிதி ஸ்கிடமான் ‘‘இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடும் எனது கை அழியட்டும்’’ என்று கூறினார். உடன்படிக்கையின் ஷரத்துக்களைப் பின்னர் ஒவ்வொன்றாக ஹிட்லர் மீறிய போது தான் இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்தது. எனவே இரண்டாம் உலகப்போருக்கு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை அடிப்படைக் காரணம் என்று கூறலாம்.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி பலமற்ற நாடாக ஆக்கப்பட்டது. மேற்கிலும் வடக்கிலும் தனது எல்லைகளை ஜெர்மனி இழந்தது. 25 ஆயிரம் சதுரமைல் நிலப்பரப்பையும் 70 லட்சம் மக்களையும் இழந்தது. ஐந்தில் இரண்டு பங்கு நிலக்கரி வளத்தையும்மூன்றில் இரண்டு பங்கு இரும்புத்தாது வளத்தையும் இழந்தது. இது ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி, வியாபாரம் ஆகியவற்றை வெகுவாக ப் பாதித்தது. மேலும் குடியேற்ற நாடுகள் அனைத்தையும் இழந்தது. ஜெர்மனியின்ராணுவ வலிமை ஒடுக்கப்பட்டது.

கடற்படை அழிக்கப்பட்டது. அதன் விமானங்களும், கப்பல்களும் பறித்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு ஜெர்மனி படைவலிமையில் முடக்கப்பட்டு, பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டு, அரசியலில் அவமானப்படுத்தப்பட்டு ரத்தமில்லா மனிதனைப் போல பாரிசு மாநாட்டிலிருந்து வெளியேறியது.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஒரு ''திணிக்கப்பட்ட உடன்படிக்கை'' என்றும்'' என்றும்,''முரண்பட்ட உடன்படிக்கை'' என்றும்,''பெரும் திருட்டு'' என்றும், ஜெர்மானிய மக்களால் குற்றம் சாட்டப்பட்டது. உடன்படிக்கையில் ஜெர்மனி மக்களால் குற்றம் சாட்டப்பட்டது. உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்துப் போடுவதற்குக் காலக் கெடு விதிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையை ஜெர்மனி ஏற்றுக் கொண்டிருந்தால் அது ஐரோப்பிய வரையடத்திலிருந்தே மறைந்து போயிருக்கும். எனவே தான் ஜெர்மனி தனது வருங்கால முன்னேற்றத்தைசி சர்வாதிகாரத்தில் கண்டது. மக்களின் மனநிலையை உணர்ந்து ஹிட்லர் மக்களின் ஆதரவுடனே உடன்படிக்கையின் ஷரத்துக்களை ஒவ்வொன்றாக மீறினார். உலக வரலாற்றில் வேறு எந்த உடன்டிக்கையும் இதைப் அபோல மீறப்பட்டது கிடையாது. ஊட்ரோவில்சனின் கற்பனைத்திறனும், பிரெஞ்சு அதிபர் கிளமனடசோவின் தேசியமும், இங்கிலாந்துப் பிரதமர் லாயிட் ஜார்ஜின் சந்தர்ப்பவாதமும் இந்த உடன்படிக்கையில் காணப்பட்டன. ஜெர்மனி தன் மீது விதிக்கப்பட்ட தாங்கமுடியாத போர் இழப்பீட்டுத் தொகையைத் திரும்பச் செலுத்த முடியாமல் தத்தளித்தது. 1933-ல் ஹிட்லர் அதிபர் ஆனதும் போர் இழப்பீட்டுத் தொகையை செலுத்த முடியாது என்று அறிவித்தார். அப்போது தான் இரண்டாம் உலகப் போருக்கான போர் மேகங்கள் தென்பட்டன.

இவ்வாறு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஒரு நிரந்தர அமைதியை ஏற்படுத்த தவறிவிட்டது. அமைதி ஒரு குறுகிய காலமே நீடித்தது. நேச நாடுகளின் கொள்கைகளும், ஜெர்மனியின் மீறுதல் நடவடிக்கைகளும் இரண்டாம் உலகப்போருக்கு இழுத்துச் சென்றது. எனவே தான் ''இரண்டாம் உலகப்போருக்கான மூலக் காரணங்கள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலேயே விதையாகத் துாவப்பட்டது'' என்று கூறலாம்.

**பிற உடன்படிக்கைகள்:**

**1. சேயின்ட் ஜெர்மன் உடன்படிக்கை**

(Treaty of St. Germain) செப் 10, 1919

நேச நாடுகள் தோற்கடிக்கப்பட்ட ஆஸ்திரியாவுடன் செயின்ட் ஜெர்மைன் என்ற இடத்தில் 1919 செப்டம்பர் 10-ம் தேதி உடன்படிக்கை செய்து கொண்டன. இதன்படி ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் தனித்தனி நாடுகளாக பிரிக்கப்பட்டன. உடன்படிக்கையின் 88வது பிரிவின்படி அவை திரும்ப இணைவது தடுக்கப்பட்டது. மேலும் நேச நாடுகளுக்கு ஏற்படுத்திய இழப்புகளுக்கு ஆஸ்திரியா பொறுப்பேற்க வேண்டும். மூன்று இயந்திரப் படகுகள் தவிர ஆஸ்திரியாவின் கப்பற்படைமுழுவதும் பறித்துக் கொள்ளப்பட்டது. ஆஸ்திரிய படைகளின் எண்ணிக்கை முப்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. புதிதாக படையில் வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது. ஆஸ்திரியாவின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் அதனிடமிருந்து எடுக்கப்படட்து. ஆஸ்திரிய நேச நாடுகளுக்குப் பூர்த்தி செய்யப்படாத காசோலையை போர் இழப்பீடாக அளித்தது. மேலும்ஆஸ்திரியப் போர்க் கைதிகளை விசாரணை செய்யவும் அனுமதியளித்தது. செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கையின் விளைவாக ஆஸ்திரியாவுக்கு பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. தனது வளமான பகுதிகளை இழந்து பிற நாடுகளிடம் கடன் வாங்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டது. தனது பழைய பேரரசின் பாதிப்பகுதிகளை ஆஸ்திரியா இழந்தது.

**2. டிராயனான் உடன்படிக்கை (Treaty of Trianon) ஜீன் 4, 1920**

நேசநாடுகள் ஹங்கேரியுடன் வெர்செய்ல்ஸிலுள்ள டிரணனான் மாளிகையில் உடன்படிக்கை ஒன்று 1920, ஜீன் 4-ம் தேதி செய்து கொண்டன. ஆஸ்திரியாவைப் போன்றே ஹங்கேரியும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. ஹங்கேரி ஆஸ்திரியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. 1,25,000 சதுர மைலும், 22 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட ஹங்கேரி 30,000 சதுர மைல் கொண்டதாகவும் எட்டு மில்லியன் மக்கள் தொகை கொண்டதாகவும் குறைக்கப்பட்டது. அதன் பிரான்ஸில்வேனியாப் பகுதி ருமேனியாவிற்கும், குரேஷியா யுகோஸ்லேவியாவிற்கும், ஸ்லோவேக்கியா, செக்கோஸ்லேவியாவிற்கும் கொடுக்கப்பட்டது. ஹங்கேரியப் படைவீரர்களின் எண்ணிக்கை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் போர்க் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. இவை தவிர ஹங்கேரி போர் இழப்பீட்டுத் தொகையும் நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**3. நியுலி உடன்படிக்கை (Treaty of Neuilly) ஜீன் 27, 1919**

பாரிசு அமைதி மாநாட்டில் பலகேரியா ஒரு வேண்டுகோள் விடுத்தது. போரில் பல்கேரியா இறங்குவதற்கு முடிதுறந்து ஓடிய மாஜி அரசர் பெர்டினாண்டுதானட காரணம் என்றும், எனவே பல்கேரியா தண்டிக்கப்படக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டது. அதை நேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1919 நவம்பர் 27-ம் தேதி பல்கேரியாவுடன் நியுலி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பல்கேரிய பெரும் நிலப்பரப்பை இழந்தது. பல்கேரியர்கள் அதிகமாக வாழ்ந்த மேற்குப்பகுதி யூகோஸ்லேவியாவிற்கும், மேற்கு திரேஸ்,ஈஜியன் கடற்கரைப்பகுதிகள் கிரிஸீக்கும் கொடுக்கப்பட்டது. பல்கேரியப் படைகளின் எண்ணிக்கை இருபது ஆயிரமாக குறைக்கப்பட்டது. அதன் கடற்படை ஒழிக்கப்பட்டது. பல்கேரியா மீது பெருமளவில் போர் இழப்பீட்டுத் தொகை விதிக்கப்பட்டது. இவ்வாறு நியுலி உடன்படிக்கை பல்கேரியாவை பால்கன் பகுதியில் ஒரு வலிமையற்ற நாடாக்கியது.

**4. செவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Serves) ஆகஸ்ட் 20, 1920**

தோற்கடிக்கப்பட்ட துருக்கியுடன் உடன்படிக்கை செய்து கொள்வதில் நேச நாடுகளுக்குப் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. எனவே பேச்சு வார்த்தை நீடித்து இறுதியாக 1920, ஆகஸ்ட் 20-ம் தேதி துருக்கியுடன் செவ்ரஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி சிரியா, பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய நாடுகளையும் எகிப்தின் மீது கொண்டிருந்து ஆதிக்கத்தையும் துருக்கி இழந்துவிட்டது. ஆசியாமைனர், திரேஸ் அட்ரிளநோபிள், கலிபோலி ஆகியவை கிரிஸ் நாட்டிற்குக் கொடுக்கப்பட்ன. துருக்கியப் படைகளின் எண்ணிக்கை ஐம்பது ஆயிரமாக குறைக்கப்பட்டது. அதன் விமானப்படை முழுவதையும் நேசநாடுகள் எடுத்துக் கொண்டன. கான்ஸ்டாண்டி நோபிள், அலெக்ஸாண்டிரியா ஆகிய நகரங்கள் பன்னாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டன.

**5. சிறுபான்மையோர் பற்றிய உடன்படிக்கைகள் (ஆைழெசவைல வசயவநைள)**

முதல் உலகப்போரின் விளைவாக போலந்து, செக்கோஸ்லோவேகியா, ருமேனியா, கிரிஸ் போன்ற பல புதிய சுதந்திர நாடுகள் தோன்றின. ஆந்த நாடுகள் தங்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்த சிறுபான்மை மக்களின் இன, சமய, மொழி அரசியல் சுதந்திரங்களைக் காக்கும் பொருட்டு நேச நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலும் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனாலும், போலந்து செக்கோஸ்லோவியா, யுகாஸ்லேவியா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்த சிறுபான்மை ஜெர்மானியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இது இரண்டாம் உலகப்போர் ஏற்படும் சமயம் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது.

## சர்வதேச சங்கம்

சர்வதேச சங்கம் “உட்ரோ வில்சனின் சிந்தனையில்’ பிறந்த குழந்தை” (Brain child of Woodrow Wilson) என்று சொல்லப்படுகிறது.

**சர்வதேச சங்கத்தின் நோக்கம்**

சர்வதேச சங்கத்தஜன’ சாசனம் பாரிசு அமைதி மாநாட்டில் உருவாக்கப்பட்டது. அதன்நோக்கங்கள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் முதல் ஆறு ஷரத்துக்களுடன் இணைக்கப்பட்டது. 1920 ஜனவரி 10-ம் தேதி பாரிஸ் நகரில் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. இதன் அலுவலகம் ஷ்விடசர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்ட போது 42 நாடுகள் உறுப்பினராக இருந்தன. 1935-ல் அதன் உறுப்பினர் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்தது. இச்சங்கம் 1936-ம் ஆண்டு வரைதான் செயலாற்ற முடிந்தது. சர்வதேச சங்கம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டது.

1. உலக நாடுகளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்ந்து உலக சமாதானத்தை நிலைநாட்டியது.
2. உலக நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை தீர்ப்பதற்குப் போரில் ஈடுபடாமல் சமாதான துறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.
3. வலுச்சண்டைக்குச் செல்லும் நாட்டுடன் உறுப்பினர் நாடுகள் வாணிபத் தொடர்பை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
4. உறுப்பினர் நாடு ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டால் அது பிற உறுப்பு நாடுகளையும் ஆக்கிரமித்தது போன்றே எண்ணப்படும். ஆக்கிரமிப்பு நாட்டுக்கு விரோதமாக படைபலம் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.
5. உறுப்பினர்கள் நாடுகள் ஒன்றுக்கொன்று மரியாதையுடனும், நட்பு மனப்பான்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். உலகின் பின்தங்கிய நாடுகளை முன்னேற்ற வேண்டும்.

**சர்வதேச சங்கத்தின் அமைப்பு**

சர்வதேச சங்கத்தில் கீழ்க்கண்ட ஐந்து முக்கி அமைப்புகள் செயல்பட்டு வந்தன.

### பொதுச்சபை (General Assembly)

பொதுச்சபைக்கு அங்கத்தினர் நாடுகள் ஒவ்வொன்றும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பும். ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு தான் உண்டு. இச்சபை ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் முதல் திங்கட்கிழமை கூடும். அங்கத்தினர் நாடுகளின் அரசியல், சமுக அரசியலமைப்பு, மற்றும் பொதுவான பிரச்சனைகள் பற்றி விவாதித்து முடிவெடுக்கும். பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் பொதுச்சபையே தேர்ந்தெடுக்கும்.

### பாதுகாப்பு சபை (Security Council)

இதுதான் சர்வதேச சங்கத்தின் நிர்வாக சபையாகும். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். நிரந்தரமற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 1936-ல் பதினொன்று ஆக்கப்பட்டது. இந்த சபை ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை கூடி உலக அமைதியையும் பாதுகாப்பையும் பற்றி விவாதிக்கும் சங்கத்தின் பொதுச் செயலரை நியமனம் செய்வது பாதுகாப்பு சபையே ஆகும். சங்கத்தின் சட்டங்களை மீறி நடக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும்

உரிமை பாதுகாப்பு சபைக்கு உண்டு. பொதுவாக தீர்மானங்கள் அனைத்தும் ஏகமனதாக எடுக்கப்பட வேண்டும்.

### சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice)

ஒரு நிரந்தர சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்திலுள்ள ஹேக்நகரிலுள்ள 'அமைதி மாளிகையில' நிறுவப்பட்டது. இதில் 15 நீதிபதிகள் பணியாற்றினார்கள். அவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். உறுப்பினர் நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, பாரிசு மாநாட்டில் செய்யப்பட்ட உடன்படிக்கைகளுக்கு விளக்கம் அளித்து அவை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பது, பன்னாட்டுச் சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பது மனிதாபிமானத்துடன் கூடிய நேர்மைக்கு புகலிடம் கொடுப்பது போன்ற முக்கிய நோக்கங்கைள கொண்டிருந்தது. இது சுமார் 65 வழக்குகளை விசாரித்து அதில் 32 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கியது. மேலும் 200 ஆணைகளைப் பிறப்பித்தது. இருபத்தி ஏழு ஆலோசனைக் கருத்துக்களை வழங்கியது.

### தலைமைச் செயலகம் (Secretariat)

சர்வதேச சங்கத்தின் தலைமைச் செயலகம் ஒரு பொதுச் செயலரையும், மற்றும் 600 பன்னாட்டு அதிகாரிகளையும் கொண்டிருந்தது. சர்வதேச சங்கத்தின் முதல் பொது செயலர் எரிக்ட்ருமாண்ட் என்பவராவார். சுங்கத்தின் நிர்வாக அலுவல்கள் முழுவதும் தலைமைச் செயலகமே செய்து வந்தது. மாண்டேட்டுகளின் நிர்வாகம், சிறுபான்மையோர் பிரச்சனைகள், படைக்குறைப்பு ஆகிய அலுவல்களைச் கவனித்து வந்தது. மேலும் பொதுச்சபை பாதுகாப்பு சபை செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், அதன் முடிவுகளைச் செயல்படுத்துவதும் இதன் முக்கயிப்பணிகளாகும்.

### பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO)

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பை ஏற்படுத்துவதற்கான பாரிசு அமைதி மாநாட்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை 1919 ஏப்ரல் 28-ல் மாநாடு ஏற்றுக் கொண்டு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் 13வது பிரிவில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது ஒரு பொதுக்குழுவையும், நிர்வாக குழுவையும் பன்னாட்டு தொழிலாளர் அலுவலகத்தையும் கொண்டது. இது ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. உலகதொழிலாளர்களின் நலன், ஊதியம், உழைப்பு மற்றும் அவர்களின் நலன்களைப் பேணும் சட்ட திட்டங்களை இயற்றும். 1940-ல் இதன் தலைமையிடம் ஜெனிவாவிலிருந்து மாண்ட்ரீல் நகருக்கு மாற்றப்பட்டது. பின்னர் தோன்றிய ஐ.நா.சபை இதனை தனது அங்கமாக அப்படியே ஏற்றுக் கொண்டது.

### மாண்டேட்டுகள் (Mandates)

ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளும், துருக்கியிடமிருந்து மீண்ட பாலஸ்தீனம் உட்பட சில பகுதிகளும் மாண்டேட்டுகள் என்று அழைக்கப்பட்டன. அவை தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்தியக்கிழக்கு மற்றும் பசிபிக் கடற்கரைப் பகுதியிலும் இருந்தன. இந்த குடியேற்ற நாடுகள் அனைத்தும் நேச நாடுகளின் பாதுகாப்பில் பிரித்து வைக்கப்பட்டன. இதுவே 'மாண்டேட்' முறையாகும். நேச நாடுகள் இவைகளைப் பராமரிக்கும் உரிமை பெற்றிருந்தனவே தவிர அப்பகுதிகளைச் சொந்தமாக வைத்துக் கொள்ள அனுமதியில்லை. அவை ஆண்டுதோறும் தங்கள் நிர்வாகம் பற்றிய அறிக்கையை சர்வதேச சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதில் அந்தப்பகுதிகள் எப்படி

ஆளப்படுகிறது. ஆரசியல், பொருளாதார சமூக முன்னேற்றம் எப்படி உள்ளது எனக்குறிப்பிட வேண்டும். சரியான நேரம் வருகின்ற போது, இந்த நாடுகளுக்கு சுயாட்சி வழங்கப்படும். இந்த மாண்டேட்டுகள் முறை சங்கத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வந்தது.

### சர்வதேச சங்கத்தின் சாதனைகள் (Achievements)

சமாதானத்தைக் சுட்டிக்காக்கும் பெரும் நோக்கத்துடன், போரைதடுக்கும் எண்ணத்துடன் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. முதல் உலகப்போர் முடிவடைந்த பிறகு நேச நாடுகளிடம் காணப்பட்ட போர்க்கால ஒற்றுமை மறைந்தது. அவைகளிடம் பல பிரச்சனைகள் தோன்றின. சர்வதேச சங்கம் சுமார் நாற்பது அரசியல் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது. பல பொருளாதார சமுதாய மனிதாபிமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

1. யூபென், மால்மெடி ஆகிய பகுதிகள் பெல்ஜியத்துடன் இணைவதை எதிர்த்து, சங்கத்திடம் முறையிட்டது ஜெர்மனி. இதனை விசாரித்து இறுதியாக, பெல்ஜியத்துடன் இரண்டு பகுதிகளும் இணைவதை சங்கம் அங்கீகரித்தது.
2. 1920-ல் ஆலந்து தீவுகள் மீது ஆளுகை செலுத்துவதில் பின்லாந்திற்கும், ஸ்வீடனுக்கும் சர்ச்சை ஏற்பட்டது. இதுபற்றி விசாரிக்க சங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு நேரடி விசாரணை செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. அதன்படி, ஆலந்து தீவுகள் மீதான பின்லாந்தின் உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதே சமயம் அங்கு வாழ்ந்து வந்த ஸ்வீடன் மக்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இதனை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன.
3. 1920-ல் லிதுவேனியாவிற்கும் போலந்திற்குமிடையே வில்னா என்ற பகுதியைக் குறித்து பிரச்சனை வலுத்தது. வில்னா போலந்துக்குரியது என்று நேசநாடுகள் அங்கீகரித்தன. ஆனால் ரஷ்யாவின் ஆதரவுடன் லிதுவேனியா, போலந்து மீதான போர் நடவடிக்கையில் ஈடுபட்டது. 1927-ல் லிதுவேனியர்கள் வில்னாவிலிருந்து விரட்டப்பட்டனர். இதனை சர்வதேச சங்கம் விசாரித்து, இரண்டு நாடுகளுக்கிடையிலான பதட்ட நிலையை தணித்து.
4. 1923-ல் இத்தாலிக்கும் கிரிசுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை காணப்பட்டது. எல்லைப்புற நடவடிக்கைகளில் எந்த நாடும் பிரச்சனை குறித்து முறையிட்டால்தான் சங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். எது ஆக்கிரமிப்புப் போர், எது தற்காப்புப் போர் என்று தெளிவாக சங்கவிதி முறைகள் வரையறுத்துக் கூறவில்லை. மேலும் ஏந்த நாடும் எந்த நேரத்திலும் சங்கத்திலிருந்து விலகலாம் போன்ற விதிகள் சங்கத்தின் அழிவுக்கு வழிவகுத்தது.

### ஆயுதக் குறைப்பை ஏற்படுத்துவதில் தோல்வி

சர்வதேச சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகள் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்வதைக் குறைத்து விடுகிறோம் என்று உறுதிமொழிப் பத்திரத்தின் மூலம் வாக்குறுதியளித்தன. ஆனால் இந்த வாக்குறுதியை எல்லா நாடுகளும் கடைப்பிடிக்க வில்லை. 1921 முதல் 1934-ம் ஆண்டு வரை நடைபெற்ற எல்லா ஆயதக் குறைப்பு மாநாடுகளும் தோல்வியடைந்தன. எனவே மீண்டும் ஆயுத உற்பத்திப் போட்டி ஏற்பட்டது.

### 5.முடிவுகளைச் செயல்படுத்த படை வலிமை இல்லை

சர்வதேச சங்கத்திடம" தனது முடிவுகளைச் செயல்படுத்த தற்கால ஐ.நா. சபையிடம் உள்ளது போல பன்னாட்டு ராணுவமோ கப்பற்படையோ இல்லை. மேலும் அப்படி செயல்படுத்த உறுப்பினர் நாடுகள் ஒத்துழைத்தால் தான் முடியும் என்ற நிலையிருந்ததால் சங்கத்தினரால் தனது முடிவுகளை செயல்படுத்த முடியவில்லை.

**6.ஜெர்மனியின் வெறுப்புணர்வு**

சர்வதேச சங்கத்தில் ஜெர்மனி 1926-ல் தான் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தன்னைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதே சர்வதேச சங்கம் என்று கருதி அதன் புனிதமான சட்டதிட்டங்களை மதிக்காமல் தனது மனம் போனபடி செயல்பட்டது. ஜெர்மனியின் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஹிட்லர் ஒவ்வொன்றாக மீறிய போது சர்வதேச சங்கத்தினால் கண்டிக்க முடியவில்லை. ஹிட்லிரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சங்கத்திற்கு சாவுமணி அடித்தது.

7.**அனைத்து நாடகளின் சங்கமாகக் காணப்படவில்லை**

சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அமெரிக்கா அதில் சேரவில்லை. 1926-ல் ஜெர்மனழ சேர்ந்தது. ஆனால் 1933-ல் சங்கத்திலிருந்து விலகியது. ஜப்பான் 1937-ல் மஞ்சூரியப் படையெடுப்பிற்கு பின் விலகியது. இத்தாலி 1937-ல் விலகியது. ரஷ்யா 1934-ல் தான் சேர்ந்தது. ஆனால் பின்லாந்தை ஆக்கிரமித்ததாக சங்கத்திலிருந்து அது விலக்கப்பட்டது. இவ்வாறு அனைத்து நாடுகளும் ஒரே நேரத்தில் சங்கத்தில் அங்கம் வகிக்காதது அதன் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.

**8.ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சிகளின் தோற்றம்**

முதல் உலகப்போருக்குப் பின்னர் இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளில் தோன்றிய எதேச்சதிகார அரசுகள் ஐரோப்பியக் கூட்டு பாதுகாப்பு முறை செயல்படாமல் செய்துவிட்டன. இந்த நாடுகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. ஜெர்மனி ஹிட்லரின் தலைமையிலும், இத்தாலி முசோலினியின் தலைமையிலும் ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டன. 1936-ல் ஸ்பெயினிலும் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து பிராங்கோ தலைமையில் ராணுவ ஆட்சி ஏற்பட்டது. ஜப்பான் துாரக்கிழக்குப் பகுதியில் வலிமையடைந்தது. அது கைப்பற்றியது. இந்த நிகழ்ச்சிகள் சர்வதேச சங்கத்தின் வலிமையின்மையையும், அதன் தோல்வியையும் காட்டுகின்றன.

**9.பலம் பொருந்திய நாடுகளின் ஆதிக்கம்**

சர்வதேச சங்கம் பெரும்டபாலும் பலம் பொருந்திய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகளை நம்பியே இருந்தது. ஆனால் அந்த நாடுகள் அதிகமான குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்ததால் சங்க நடவடிக்கைகளில் அதிக அக்கரை காட்டவில்லை. மேலும் சீனா, எத்தியோப்பியா, அல்பேனியா போன்ற நாடகள் உதவியற்ற நிலையிலிருந்தன. சிறிய நாடுகளுக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே தான் சர்வதேச சங்கம் ‘‘League of Victors’ என்றும்,‘An Association of Satisfied’ என்றும்,‘a conspiracy of the west against Russia’ என்றும் பலவாறாக குற்றம் சாட்டப்பட்டது.

**10.அகில உலக நட்பு மனப்பான்மை இல்லாமை**

சுங்கத்தின் உறுப்பினர் நாடுகளிடையே அகில நட்பு மனப்பான்மை காணப்படவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய உணர்வு மேலோங்கி இருந்தது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தன்னலம் கருதியே சங்கத்தில் செயல்பட்டன. எனவே சர்வதேச சங்கம் அகில உலக நட்பு மனப்பான்மையை உறுப்பினர் நாடுகளிடையே ஏற்படுத்தத் தவறிவிட்டது.

மேற்கண்ட பல காரணங்களால் சர்வதேச சங்கம் 1938-க்கு முன்பே செயலற்று, இதயமற்ற உடலாகக் காட்சியளித்தது. இரண்டாம் உலகப்போருக்கு முன்பாகவே அது

வீழ்ச்சியடைந்தது எனலாம். சர்வதேச சங்கம் தோல்வியடைந்தாலும் 1945-ல் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்படுவதற்கு அது வழி கோலியது.

## லொக்கார்னோ உடன்படிக்கை

### லொக்கார்னோ உடன்படிக்கை ஏற்பட்ட சூழ்நிலை

பிரான்ஸ் நாடு தனக்குப் பாதுகாப்புத் தேடும் முயற்சியைத் தீவிரப்படுத்தியது. பன்னாட்டு அரசியலில் கூட்டுப் பாதுகாப்பு முறை தோல்வியடையவே, வட்டார அளவில் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. 1922-ல் ஜெர்மனியும் ரஷ்யாவும் 'ராபெல்லா என்ற உடன்படிக்கை செய்து கொள்ளவே, ஜெர்மனியையும் ரஷ்யாவையும் பிரிக்கவும், பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையே ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தவும் இங்கிலாந்து முயற்சித்தது. இதுவே லொக்கார்னோ ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் காரணமாகியது.

1925-ம் ஆண்டு அக்டோபரில் ஜெர்மனி, இத்தாலி, போலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து, பெல்ஜியம், செக்கோஸ்லோவியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஸ்வீட்சர்லாந்து நாட்டிலுள்ள மாகியோர் (Maggire) ஏரிக்கரையிலுள்ள லொக்கார்னோ என்ற இயற்கையழகு நிறைந்த இடத்தில் கூடி பேச்சு வார்த்தைகள் நடத்தினர். 1925 டிசம்பர் 1-ம் தேதி லண்டனில் ஒப்பந்தங்களின் நகல் கையெழுத்தானது. லொக்கார்னோ ஒப்பந்தங்களின் முக்கிய விதிமுறைகள் வருமாறு

1. பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிக்கும், பெல்ஜியத்திற்கும் பிரான்சிற்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிக்கும் இங்கிலாந்து உத்திரவாதம் அளித்தது. பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளும் போர் செய்வதில்லை என்று முடிவு செய்தன.
2. ஜெர்மனியின் மேற்கு எல்லை மீறப்படுமானால் ஒப்பந்த நாடுகள் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஜெர்மனியின் கிழக்கு எல்லையைப் பாதுகாக்கும் பொருட்டு பிரான்ஸ், பெல்ஜியம், செ்கோஸ்லோவேகியா, போலந்து ஆகிய நாடுகள் ஜெர்மனியுடன் உடன்பாடுகளை செய்து கொண்டன. ஆனால் இந்த எல்லைக்கு இங்கிலாந்து உத்திரவாதம் அளிக்கவில்லை.
3. பெல்ஜியமும், பிரான்சும் ஜெர்மனியுடனான தங்கள் பிரச்சனைகளை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ள முடிவு செய்து கொண்டன.
4. பிரான்ஸ், செக்கோஸ்லோவேகியா போலந்து ஆகிய நாடுகள் ஆபத்துக் காலங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்து கொண்டன.

### மதீப்பீடு

லொக்கார்னோ ஒப்பந்தங்கள் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நிலவிவந்த பகைமையைத் தணித்து புதிய உணர்வை ஏற்படுத்தியது. இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் சேம்பர்லேன், லொக்கார்னோ ஒப்பந்தம் போர்காலத்திற்கும் அமைதி காலத்திற்கும் இடைப்பட்ட "எல்லை வரைகோடு" என்றார். வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளாத ஜெர்மனி இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் தான் இழந்த தேசிய கௌரவத்தை மீண்டும் பெற்றுக் கொண்டது. இந்த உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை சம்பந்தப்பட்ட நாடுகள் ஏற்றுக் கொண்டன. அமைதிக்காலம் ஆரம்பித்து விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஆனால் லொக்கார்னோ ஒப்பந்தம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்கும், சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளுக்குக் கிடைத்த பெரிய அடியாகும். இதற்கு முக்கியக்

காரணம் பன்னாட்டுக் கூட்டுப் பாதுகாப்பு முறையை இந்த உடன்படிக்கை தவிடு பொடியாக்கியது ஆகும். ரஷ்யா இந்த உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படாததால், தனக்கெதிராக மேற்கத்திய நாடுகள் செய்த சதி என்று லொக்கார்னா உடன்படிக்கையை வர்ணித்தது. லொக்கார்னோ உடன்படிக்கையினால் அதிக நன்மையடைந்த நாடு ஜெர்மனிதான். ஜேர்மனி மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சம அந்தஸ்து நிலைமை பெற்றதோடு மட்டுமல்லாமல், தனது படை பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் ஜெர்மனிக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேரவும், அதன் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக சேரவும் அனுமதியளிக்கப்பட்டது.

**கெல்லாக்-பிரையண்ட் ஒப்பந்தம் 1928**

(Kellogg-Briand Pact)

பிரான்ஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சரான அரிஸ்டைட் பிரையண்ட் (Aristide Briand) அமெரிக்க நாட்டின் வெளியுறவு செயலரான பிராங்க் கெல்லாக் (Frank Kellogg) என்பவருடன் தொடர்பு கொண்டு 'போர் என்பது சமூகத்திலிருந்து விலக்கப்பட்டதாகச்' சொல்லி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். கேல்லாக் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டாலும் பிற உலக நாடுகளும் 'போரை தங்கள் நாட்டு தேசியக் கொள்கையின் ஒரு கருவியாக் கொள்வதில்லை' என ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறினார். அதன்படி 1928 ஆகஸ்ட் 27ம் தேதி சுமார் 15 நாடுகள் ஒப்பந்தம் பாரிசில் கூடி ஒன்றைச் செய்து கொண்டன. அதற்கு கெல்லாக் பிரையண்ட் ஒப்பந்தம் என்று பெயர். அதன் ஷரத்துக்கள் பின்வருமாறு

1. ஒப்பந்த நாடுகள் அனைத்தும் 'தங்கள் நாட்டு தேசிய கொள்கையில் போரைச் சட்டப்படி அமைந்துள்ள ஒரு கருவியாக தாங்கள் கருதவில்லை'' என அறிவித்தன.
2. தங்களுக்குள் ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளையும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதாகவும், போர் செய்வதில்லை என்றும் ஒப்புக் கொண்டன.

கெல்லாக் பிரையாண்ட் ஒப்பந்தத்தில், கையெழுத்திட்ட நாடுகளில் முக்கியமானவை. ஆமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவையாகும். இவ்வொப்பந்தம் உலகப்போருக்குப் பின்பு பிரான்ஸ் நாடு பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பாகும். இது சர்வதேச சங்கத்தின் செயல்பாடுகளுக்குத் துணை புரிந்தது. ஆனாலும்இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்த சிறந்த விதிமுறைகள் பின்பற்றப் பட்டதால், இவ்வொப்பந்தம் பயனள்ள விளைவுகளை ஏற்படுத்த வில்லை.

## ரஷ்யப் புரட்சி
## (THE RUSSIAN REVOLUTION, 1917)

**புரட்சி ஏற்படக் காரணங்கள்:**

**1. சார்மன்னர்களின் ஏதேச்சதிகாரம்**

ரஷ்ய நாட்டுப் சார் மன்னர்கள் ஆட்சிவ ல்லாட்சியாகவேயிருந்தது. இரண்டாம் அலக்ஸாந்தர் (1855-1881) முதல் இரண்டாம் நிக்கோலஸ் (1894-1917) வரை அனைவரது ஆட்சியும் எதேச்சதிகாரத்துக்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்றது. மன்னர்களே அரசியல் தலைவராகவும், சமயத்தலைவராகவும் விளங்கினர். ஏழ்மையினாலும், நோயினாலும் வாடும் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. உதட்டளவில் வெளியிடப்பட்டு, பெயரளவில் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வகையிலும் பலனளிக்கவில்லை. புரட்சிக் கருத்துக்களையும், புதுமை

இயக்கங்களையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்கள் இந்த சார் மன்னர்கள். ஆடிக்கடி போர்களில் ஈடுப்பட்டு அதில் தோல்வியும் அடைந்து நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். எனவே சார் மன்னர்களின் எதேச்சதிகார ஆட்சிதான் ரஷ்யப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

**2. பிரதிநிதி சபைகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட பற்றுகல்**

ரஷ்யப் பாராளுமன்றமான டூமாவின் (னுரஅய) அதிகாரத்தை சார் மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள். துங்களுடைய கருத்துக்களை ஏற்காத டூமாவைக் கலைத்தார்கள். சார் இரண்டாம் நிக்கோலஸ் அதிக சீர்திருத்தங்களைக் கேட்ட முதலாவது டூமாவை 1906 ஜீலை 22-ல் கலைத்தார். பின்னர் ஏற்பட்ட டூமாக்கள் அரசர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட மக்களாட்சி முறை போன்று தாங்களும் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்பினார்கள் ரஷ்ய மக்கள். எனவே மக்களாட்சி முறைக்கோட்பாடுகளின் அடிப்படையில் பிரதிநிதி சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று முற்போக்கு சிந்தனை கொண்ட ரஷ்ய மக்கள் கேட்ட போது சார் மன்னர்கள் அவற்றை வெறுத்தார்கள். மக்களின் அதிருப்தி புரட்சியாக வெடித்தது.

**3. குடியானவர்களின் தாழ்ந்த பொருளாதார நிலை**

ரஷ்ய சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு அற்ற விவசாயிகளாக இருந்தார்கள். சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு நிலமில்லாத காரணத்தினால் குலக்குகள் என்றழைக்கப்பட்ட விவசாய முதலாளிகளிடம் அடிமைகளாக வாழ்ந்தார்கள். நிலமில்லாத பண்ணை அடிமைகளின் அவலநிலை நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தது. பசியும், பட்டினியும் தலை விரித்தாடியது. பருவமழை பெய்யாதபோது பட்டினியால் ஆயிரக்கணக்கில் இறந்தார்கள். ஆனால் நில பிரபுக்களும் செல்வந்தர்களும் மேலும் செல்வந்தர்களானார்கள். இரண்டாம் அலக்ஸாந்தரின் விடுதலைச் சட்டங்கள் வெறும் காகித விடுதலையை அளித்ததே தவிர வறுமையிலிருந்து விடுதலை பெற நிலம் அளிக்கவில்லை. சமுதாயத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடியானவர்கள் இதனால் புரட்சியில் இறங்கினர்.

**4. தொழிலாளர்களின் துன்பங்கள்**

தொழிற்புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. புதிய தொழிற்சாலைகள் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றால் தொழில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியினால் தொழிலாளர் வர்க்கம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது. வேலை தேடிநகரம் வந்த ஏழைத் தொழிலாளர்களை, முதலாளிகள் குறைந்த கூலிக்கு அமர்த்தினர். சுகாதாரமற்ற நிலையில் அதிக வேலை வாங்கினார்கள். துங்களது நலன்களைப் பாதுகாக்க தொழிலாளர்கள் சங்கம் அமைத்த போது முதலாளிகள் அவற்றை ஒழித்தனர். இதனால் தொழிலாளி முதலாளி என்ற புதிய அமைப்பு உருவானது. ஊழைப்புக்குத் தகுந்த ஊதியம், தொழில் பாதுகாப்பு, வேலை உயர்வு ஆகியவை கிடைக்காத காரணத்தினால் தொழிலாளர்கள் ஏழ்மையில் வாடினார்கள். பிரச்சனைகட்குத் தீர்வு புரட்சிதான் என தொழிலாளர்கள் முடிவு செய்தார்கள்.

**5. கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் (Das Capital)**

அறியாமை இருட்டில் அமைதிகிட்டாது அல்லலுற்ற மக்களை தடடியெப்பி உயர் கருத்தை அவர்கள் உள்ளத்தில் பதித்து புரட்சிப் பாதையை நோக்கி அவர்களை இட்டுச் செல்ல, கார்ல் மார்க்ஸ் டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, பிரடரிக் எங்கல்ஸ் போன்ற எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினார்கள். பிரெஞ்சு எழுத்தாளர்களான வால்டர்,ரூசோ போன்று புகழ்பெற்றவர் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆவார்.

கார்ல் மார்க்சின் ‘தாஸ் காபிடல்’ (மூலதனம்) என்ற நூல் முதலாளித்துவத்தின் தீமையையும், ரஷ்யாவில் தொழிலாளர்களின் அவலநிலைமையையும் சுட்டிக் காட்டியது. அவர்,‘‘மூலதனத்தை மட்டும் வைத்துக்கொண்டு எவ்வித வேலையும் செய்யாமல் முதலாளிகள் லாபம் பெறுவதையும், ஏழை மேலும் ஏழையாக மாறுவதையும் செல்வந்தர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதையும்’’ பற்றிக் குறிப்பிட்டார். முக்கியமாகத் தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகள் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பதை தெளிவாக விளக்கினார்.

தாஸ் காபிடலில் புரட்சிக்குப் பின்னர் செல்வந்தர்களின் சொத்துக்களை என்ன செய்வது என்று கார்ல் மார்க்ஸ் எடுத்துக் கூறினார். முதல், நிலம், வீடு சுரங்கங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தமாக்கப்படவேண்டும் என்றார். மூலதனம் எல்லோராலும் சொந்தமாக்கப்பட வேண்டும் என்றார். மூலதனம் எல்லோராலும் சொந்தமாக்கப்படகின்ற ஆங்கில வார்த்தையான ‘‘Common’’ என்ற சொல்லிருந்து பிறந்த (Communism) ‘கம்யூனிசம்’ என்ற கருத்தை வெளியிட்டார். கம்யூனிச அரசாங்கம் ஒன்றைப் புரட்சியின் மூலமே அமைக்க முடியுமென்றார்.

கார்ல்மார்க்ஸின் தாஸ்காபிடல் ரஷ்யப் புரட்சியின் வேதநூல் என்று அழைக்கப்படுகிறது. இது தவிர தன்னுடைய கருத்துக்களைக் கட்டுரையாகவும் புத்தகங்களாகவும் வெளியிட்டார். இவரது பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை (Communist manifesto) சோசலிச அறிக்கையில் அனைத்திலும் தலைசிறந்ததாக கருதப்படுகிறது. ‘‘உலக தொழலாளர்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழக்கவிருப்பது உங்கள் அடிமைத்தளங்களை மட்டுமே. நீங்கள் வெல்லவோ இப்பாருலகமே காத்து நிற்கிறது.’’ என்ற மார்க்ஸின் முழக்கம் தொழிலாளர்களின் தாரக மந்திரமாயிற்று. இதனை ஏற்றுக் கொண்ட மக்கள் புரட்சிக்குத் தயாராயினர்.

### 6.சார் இரண்டாம் நிக்கோலஸின் எதேச்சதிகாரம் 1894-1917

முதல் உலகப்போர் ஆரபித்த போது ரஷ்யாவின் மன்னராக இருந்தவர் இரண்டாம் நிக்கோலஸ் ஆவார். இவர் திறமையற்றவர். மக்களின் நிலையை உணராமல் தன்னிச்சைப்படிச் செயல்பட்டார். இவரது அழகிய மனைவி அலக்ஸாந்திரா பியோதவ்னா (யுடநஒயனெசய குலழனழசழலயெ) நாட்டின் அரசியலில் ஆதிக்கம் கொண்டிருந்தார். ஆனால் இருவரும் கிரிகோரி ரஸ்புதின் என்ற செர்பியத் துறவியின் ஆலோசனைப்படி ஆட்சி புரிந்தனர். ரஸ்புதின் ஹிப்னாடிச முறையில் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர். இவர் நிக்கோலஸின் மகனை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்புமிக்க நண்பரானார்.

ருஸ்புதின் பொறுப்பும் திறமையும் வாய்ந்த அதிகாரிகளையும் தளபதிகளையும் பதவி நீக்கம் செய்து தனக்குச் சாதகமானவர்களை அப்பதவியில் அமர்த்தினார். தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தையும் ஈவு ஈரக்கமின்றி நசுக்கினார். ரஷ்ய முடியாட்சியின் சீர்கேட்டிற்கு இந்த ‘‘கிறுக்குத்துறவியே’’ காரணம் என்று உயர்குடியினர் நம்பனிர். எனவே ரஸ்புதினை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினர். பல கொலை முயற்சிகட்குத் தப்பிய ரஸ்புதின் 1916 டிசம்பர் 17-ல் படுகொலை செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த நிக்கோலஸ் மக்களைக் கொடுமைப்படுத்தினார். எனவே மக்கள் அரசுசெதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர்.

### 7.முதல் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கு

முதல் உலகப் போரில் ரஷ்யா நேச நாடகளின் ஆதரவில் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் போரில் ரஷ்யா ஈடுபட்டதின் விளைவுகளை மக்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டியதாயிற்று. சண்டையிட்ட ரஷ்யப்படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தது. இது சார் ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்தியது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறியது. பயிரிடுவோரே போர்க்களமும் செல்லவேண்டியதிருந்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் தொழில்துறை உற்பத்தியும் சரிந்தது. படையில் பணி புரிய பலர் மறுத்தனர். படைவீரர்களின் மனவலிமையும், உடல் வலிமையும் குன்றியது. எனவே அவர்கள் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு மன்னரை எதிர்த்தார்கள். புரட்சி ஆரம்பமானது.

**8.லெனின் பிரச்சாரம்**

கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய ரஷ்ய புரட்சியாளர் லெனின் ஆவார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும் நல்லொழுக்கமும் நிரம்பப் பெற்றவர். மார்க்சிய சிந்தனைகளை ஆழ்ந்து படித்த லெனின் ‘‘சார் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்ய நாட்டை விடுவிக்க வேண்டுமானால் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டி ஒரு சோசலிச புரட்சியை நடத்துவதின் மூலமே முடியும்’’ என்ற முடிவுக்கு வந்தார். தூங்கிக்கிடந்த ரஷ்ய சமுதாயத்தை தனது புரட்சிக் கருத்துக்கள் மூலம் தட்டி எழுப்பினார். பொதுவுடையை சமுதாயத்தை ரஷ்யாவில் ஏற்படுத்த அயராது உழைத்தார். இவரது புரட்சிக் கருத்துக்களை விரும்பாத அரசாங்கம் லெனினை நாடு கடத்தியது. வெளிநாடுகளில் இருந்துக்கொண்டே ரஷ்ய மக்களை புரட்சிக்கு ஆயத்தப்படுத்தினார். முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நாட்டில் அதிருப்தி மேலோங்கி இருந்த சமயம் பார்த்து சிங்கம் போல ரஷ்யாவினுள் நுழைந்து புரட்சியை ஏற்படுத்தினார். போர்வீரர்கள் போர் செய்ய மறுத்தனர். தொழிலாளர் வேலை செய்ய மறுத்தார்கள். புரட்சி வெடித்தது.

**பிப்ரவரி புரட்சியின் போக்கு**

ரஷ்யப் புரட்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் புரட்சி 1917 பிப்ரவரி மாதம் 23-ம் தேதி தொடங்கியது. அப்போது 6,70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். குலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள், ஊர்வலங்கள் என சங்கிலித் தொடராக நடைபெற்றன. பெட்ரோகிரேட் தொழிலாளர்களட வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 27-ம் தேதி பெட்ரோகிரேட் தொழிலாளர்களுடன் மன்னரின் படைகள் சேர்ந்து கொண்டன. புரட்சிப் படையினர் தங்கள் துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பின. பிப்ரவரி 28-ல் பெட்ரோகிரேட் நகர் முழுவதும் புரட்சியாளர்கட்டுப்பாட்டில் வந்தது. ஒரு தறகாலிக சட்டமன்ற ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அதில் மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மையினராக இருந்தனர்.

சட்டமன்றப் பிரதிநிதிகள் இரண்டு பேர் நிக்கோலஸைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தினர். 1917 மார்ச் 2-ம் தேதி மாலை தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்துவிட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அப்பத்திரத்தைக் கொண்டு வந்த பிரதிநிதி தலைநகர் திரும்பியபோது ‘மன்னர் மைக்கேல் நீடூழி வாழ்க’ என்றார். இதைப் பற்றி ட்ராஸ்கி குறிப்பிட்ட போது, முடியாட்சியை வெகுவேகமாக நாடுவாந்தி எடுத்து விட்டது. அது மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போதும் இறங்காது’ என்றார். மைக்கேல் மன்னர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். இவ்வாறு முதல் புரட்சியில் ரஷ்யாவில்மன்னர்களின் பரம்பரை ஆட்சி முடிவுற்றது. மார்க்ஸிய கருத்துக்களும் ஜனநாயகக் கருத்துக்களுக்கு மிடையிலான ஒரு மிதவாத கருத்துக் கொண்ட அரசு ஏற்படுத்தப்பட்டது.

**புதிய அரசு**

1917, மார்ச் 3-ம் தேதி ஜார்ஜ் லிவாவ் (புநழசபந டுளழஎ) தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மில்யுகோவ் வெளிநாட்டு

அமைச்சராகவும்,குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும் தரஸ்செங்கோ நிதியமைச்சராகவும், பெட்ரோகிரேட் சோவியத்தின் துணைத் தலைவரான கொன்ஸ்கி நீத்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நட்பு நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தன.

ஆனால் இந்த அரசு 'பெட்ரோகிரேட் சோவியத்துடன் இணைந்தே செயல்படவேண்டும் என்று கூறப்பட்டது. நாடெங்கிலும் 'சோவியத்' என்ற அழமப்புகள் உருவாயின். ஆரசின் ஆணைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரம் இந்த சோவியத்களிடமே இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாரளக் தன்மைக் கொண்ட புதிய அரசு எதையும் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சமுதாயத்தைக் கட்டுபாட்டில் வைக்கத் தவறியது. புடையினரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. இச்சூழ்நிலையில் மில்யுகோவ், குக்கோவ் ஆகியோர் ராஜினமா செய்துவிட்டனர். ஆமைச்சரவை மாற்றியமைக்கப்பட்ட போது ஆறு பேர் இடம் பெற்றனர். அதில் கெரன்ஸ்கி, தரஸ்செங்கோ, நெக்ரசோவ் ஆகியோரே வலிமை பெற்றிருந்தனர்.

புதிய போர்த்துறை அமைச்சரான கெரன்ஸ்கி சிறந்த சொற்பொழிவாளர். நுல்ல வழக்கறிஞர். தனது மின்காந்தச் சொற்பொழிவுகள் மூலம் மக்களை கவர்வதில் வல்லவர். ஆட்சியில் அமர்ந்தவர்களிடையே வேற்றுமையும், குழப்பமும் காணப்பட்டபோது கெரன்ஸ்கி பிரபலமானார். பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் கெரன்ஸ்கி புதிய பிரதமரானார். ஆக்டோபர் புரட்சியின் போது ரஷ்ய பிரதமராக இருந்தவர் கெரன்ஸ்கி ஆவார்.

**அக்டோபர் புரட்சி**

ரஷ்யாவில் இரண்டாவது புரட்சி 1917 அக்டோபரில் ஏற்பட்டது. இதுதான் அக்டோபர் புரட்சி என்றும், கம்யூனிசப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மை கொண்ட புதிய மிதவாத அரசு எளிதில் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சுவிட்சர்லாந்திலிருந்த லெனின் 1917, மார்ச் 27-ல் புறப்பட்டு ஏப்ரல் 3-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். 'சமதர்மப்புரட்சி வாழ்க' என்ற முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. முதல் உலகப்போரைத் தொடர்ந்து நடத்தியது புதிய அரசு. போர் வீரர்கள் சலிப்படைந்தனர். போர் நீடித்ததின் காரணமாக மீண்டும் உணவுப் பஞ்சமும் உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. அரசாங்கத்தின் மிகுந்த வெறுப்பை லெனின் தலைமையிலான இடது சாரி அமைப்பான போல்சிவிக்குள் பயன்படுத்திக் கொண்டனர். முக்களுக்கு சமாதானம், உணவு, நிலம் (Peace, Bread and Land) ஆகியவற்றை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். தொழிலாளர்களினட அரசை அமைப்பதாகக் கூறினார் லெனின். "மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றமும் குடியரசும் நமக்குத் தேவையில்லை. நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்பட வேண்டும்" என்றார்.

டீராட்ஸ்கி என்பவர் பெட்ரோகிரேட் சோவியத்தின் தலைவர். இவர் லெனின் கொள்கைகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். கேரன்ஸ்கியின் ஆட்சியைக் கடுமையாக சாடினார். பேட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட இராணுவப் புரட்சிக் குழுவுக்கு அவர் தலைவரானார். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை டிராட்ஸ்கியே விரைந்து செயலாற்றினார். அக்டோபர் 2-ம் தேதி பெட்ரோகிரேட் வந்த லெனின் புரட்சியை உடனடியாக துவக்கினார். அக்டோபர் 24-ம் தேதி ஆயுதம் தாங்கிய 25,000 போல்சிவிக் கட்சியீனர் புரட்சியில் கலந்து கொண்டனர். புரடசியின் மையமான

குளிர்கால மாளிகை தாக்கப்பட்டது. அரசாங்க படைகள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டன. கெரன்ஸ்கி தப்பி ஓடினார். மாளிகை வீழ்ந்தது. இதுவே அக்டோபர் புரட்சியாகும.∴. 'தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு' (Government of the Proletariate) ஒன்று லெனின் தலைமையில் அமைக்கப்பட்டது. இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசாங்கம் தோன்றியது.

**ரஷ்யப்புரட்சியின் விளைவுகள்:**

1. ரஷ்யாவில் பரம்பரை மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. 1918 ஜீலை 16-ம் தேதி கடைசி மன்னரான இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.
2. இதுவரை கொள்கையளவிலேயே இருந்து வந்த 'பொது உடமைத் தத்துவம்' முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கார்ல்மார்க்ஸின் தத்துவங்களின் அடிப்படையில் ரஷ்யாவில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.
3. ரஷ்யாவில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தது. அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்றார்கள். கூட்டுப் பண்ணை விவசாயம் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
4. எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அளவில் ரஷ்யா மாபெரும் வல்லரசாக விளங்குவதற்கு ரஷ்யப் புரட்சி வழி வகுத்தது.
5. கம்யூனிசக் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கு ரஷ்யா பல வழிகளை கையாண்டது. அதன் விளைவாக உலக நாடுகள் கம்யூனிச நாடுகள் என்றும் முதலாளித்துவ நாடுகள் என்றும் இரு அணியாக பிரிந்தது.
6. பொதுவுடைமை இயக்கத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் கம்யூனிச த்தை எதிர்த்துத் தோன்றின.
7. இறுதியாக ரஷ்யப்புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் அறியாமை ஒழிக்கப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்பட்டது. விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## அலகு –IV
## இத்தாலியில் பாசிசமும் முசோலினியும்
## (FASCISM IN ITALY)

### இத்தாலியில் பாசிசம் வளர்ந்தற்கான காரணங்கள்

### 1.பாரிசு அமைதி மாநாட்டில் இத்தாலியின் ஏமாற்றம்

1915-ம் வருட லண்டன் ரகசிய உடன்படிக்கையின்படி நேசநாடுகள் போர் முடிவடைந்தபின், தைரால், டிரிஸ்டி, தால்மேஷியப்பகுதிகள், வலோனா, ஆப்பிரிக்க ஜெர்மனியக் காலனிகளில் சில பகுதிகள் ஆகியவற்றை இத்தாலிக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தன. பாரிசு மாநாட்டில் இந்தப் பகுதிகளை நேச நாடுகள் இத்தாலிக்கு வழங்காததால் இத்தாலி பெருத்த ஏமாற்றம் அடைந்தது. இத்தாலி மிகவும் விரும்பிய ∴பியூம் (Fume) கிடைக்கவில்லை. எனவே இத்தாலியத் தலைவர்கள் ஏமாற்றமடைந்தனர். மக்கள் நாட்டின் தலைமையின் மீதும் ஜனறாயக இயக்கங்களின் மீதும் வெறுப்படைந்து, பாசிசக் கருத்துக்கள் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர்.

### 2.விடுதலை வீரர் டி' அனுன்சியோ (D' Anunzio):

டி' அனுன்சியோ என்பவர் இத்தாலியின் தேசபக்தர். ஊலகப்போருக்குப் பின் இத்தாலிக்கு நன்மை ஏதும் கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்தவர்களில் இவரும்

ஒருவர். எனவே இவர் தனது ஆதரவாளர்களுடன் ∴பயூம் துறைமுகத்திற்கு கப்பலில் சென்று அதனைக் கைப்பற்றினார். ஆனால் இத்தாலியப் பிரதமர் ஜியோலிட்டி (புழைடவைவலை) டி' அனுன்சியோவின் செயல்களால் ஆத்திரமடைந்து ∴ப்யூமிலிருந்து அவரை வெளியேற்ற ஒரு போர்க்கப்பலை அனுப்பினார். இது இத்தாலியத் தேசியவாதிகளிடையே மனவருத்தத்தை ஏற்படுத்தியது. இதனால் இத்தாலிய ஆட்சியாளர்கள் தேசபக்திக்கு எதிரானவர்கள் என்ற உணர்வு மக்களிடையே ஏற்பட்டது.

**3.ஜனநாயக அரசு மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு**

இத்தாலியத் தேசியவாதிகள் முதல் உலகப்போருக்குப்பின் ஜனநாயக அரசு மீது நம்பிக்கை இழந்தனர். இத்தாலியில் வேலை நிறுத்தங்களும் கிளர்ச்சிகளும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. அமைதியை நிலை நிறுத்துவது அரசாங்கத்தின் கடினமான பணியானது. நூாட்டு மக்களிடம் வலிமையான, பாரம்பரியமிக்க ஜனநாயக உணர்வு இல்லாததாலும், பல கட்சி ஆட்சி முறையின் குறைபாடுகளினாலும், ஜனநாயக நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்தனர். 1919 முதல் 1922 வரைக்குள் இத்தாலிய அரசில் ஆறு முறை மாற்றங்கள் ஏற்பட்டது. எனவே நிலையான நல்ல ஆட்சியை வழங்குவதாகக் கூறிய பாசிசக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்தன.

**4.மோசமான பொருளாதார நிலை**

முதல் உலகப் போரினால் இத்தாலி பொருளாதார ரீதியாக பெருத்த நஷ்டமடைந்தது. வெளிநாட்டு வியாபாரம், சுற்றுலாப் பயணிகள் மூலம் கிடைத்த அந்நியச் செலவாணி ஆகியவை பாதிக்கப்பட்டன. இத்தாலிய நாணயமான லியர் (lier) மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இந்த பிரச்சனைகளை அரசாங்கத்தினால் தீர்க்க முடியவில்லை. வேலை நிறுத்தம் கதவடைப்பு ஆகியவை அதிகரித்தது. இப்படிப்பட்ட குழப்பமான பொருளாதார நிலை பாசிசக் கருத்துக்களின் வளர்ச்சியை வேகப்படுத்தியது.

**5.வேகமாகப் பரவிய கம்யூனிசக் கொள்கை:**

இத்தாலியில் நிலவிய மோசமான பொருளாதார நிலையால் அங்கு கம்யூனிசக் கருத்துக்கள் வேகமாகப் பரவின. தொழிலாளர்களிடம் இந்த புரட்சி கொள்கைள் வேகமாகப் பரவியது. புல தொழிற்சாலைகள் கம்யூனிசத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. இதை கண்டு பயந்த நிலச்சுவான்தாரர்கள், முதலாளிகள் ஆகியோர் முசோலினியிடம் பாதுகாப்புப் பெற்றார்கள். கம்யூனிசக் கருத்துக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முசோலினி மேற்கொண்டதால் அவரது பாசிசக் கட்சி வேகமாக வளர்ச்சியடைந்தது.

**6.மக்களைக் கவர்ந்த பாசிசக் கட்சியின் கொள்கைகள்**

முசோலினியின் பாசிசக் கட்சி, மக்களைக் கவரும் விதத்தில் கொள்கைகளை வெளியிட்டது. அது அனைத்துப் பிரிவு மக்களையும் திருப்திப்படுத்துவதாக அமைத்தது. கம்யூனிசத்திற்கு எதிர்ப்பு, தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்குதல், நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு, வேலையில்லாத திண்டாட்டத்தை அறவே ஒழித்தல், பண்டைய ரோமானிய மரபுகளைக் காத்தல், ∴பயூம் டால்மேஷியா ஆகிய பகுதிகளை மீண்டும் இத்தாலியுடன் இணைத்தல் ஆகிய பாசிசத்தின் கொள்கைகள் மக்களை வெகுவாக கவர்ந்தன. பாசிசத்தைப்பற்றி முசோலினி கூறியதாவது "Fascism is a Faith-it is one oof those spiritual forces which renovates tge history of great people" இதனால் கவரப்பட்ட அனைத்துத் தர மக்களும் பாசிசக் கட்சியில் சேர்ந்தார்கள். பாசிசக் கட்சி வளர்ச்சியடைந்தது.

**7.முசோலினியின் வாக்குறுதிகள்**

முதல் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலியில் நிலையான ஆட்சி இல்லை. பல இடங்களில் தெருச்சண்டைகள் நடைபெற்றன. இதனை அரசால் அடக்க முடியவில்லை. மேலும் கம்யூனிச அபாயத்தினால் அரசாங்கம் நிலை குலைந்து காணப்பட்டது. இந்த நிலையில் தான் முசோலினி நாட்டில் வலிமையான, நிலையான அரசாங்கத்தை அமைப்பதாக வாக்குறுதி அளித்தார். தொழிற்சாலைகளில் அமைதியை ஏற்படுத்துவதாகவும், நாட்டில் சோசலிசம், கம்யூனிசம், முதலாளித்துவம் ஆகிய கொள்கைகளை நசுக்குவதாகவும் வாக்களித்தார். இதனால் இவரது கொள்கைகள் வேகமாக வளர்ச்சியடைந்தது.

**8.ரோம் நகரை நோக்கி முசோலினியின் பயணம்: 1922**

இத்தாலியில் வேகமாக வளர்ந்த பாசிசக் கட்சி பல தேர்தல்களில் பங்கு கொண்டாலும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது அதற்கு நம்பிக்கை இல்லை. ‘‘நம்பு, பணிசெய், போரிடு’’ என்பதே பாசிசத்தின் தாரக மந்திரமாகும். பாசிசக் கட்சியினர் கருஞ்சட்டை அணிந்தனர். எப்போதும் துப்பாக்கி ஏந்தியே அலைந்தனர். கம்யீனிஸ்ட்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டார்கள் 1922 செப்டம்பர் மாதம்,‘‘ரோம் நகரை நோக்கிப் புறப்படு’’ (March to Rome) என்ற கோஷத்தை வெளியிட்டார் முசோலினி. 1922 அக்டோபர் 27-ம் தேதி பாசிச கருஞ்சட்டை ராணுவ வீரர்கள் ரோம் நகரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ரோமில் ஆட்சி புரிந்து வந்த மூன்றாம் விக்டர் இமானுவேல் இந்தப் பிரமாண்டமான ஊர்வலத்தைக் கண்டு பயந்து முசோலினியை இத்தாலியில் ஆட்சியமைக்க வருமாறு அழைத்தார். இதற்கு முக்கியக் காரணம் இத்தாலியில் கம்யூனிசப் புரட்சி ஏற்பட்டு விடுமோ என்ற இமானுவேலின் பயமே ஆகும். 1922-ல் அரசாங்கத்தை அமைத்த முசோலினி, பிரதமராகி, பின்னர் சர்வாதிகாரியானார். மிகச் சீக்கிரத்தில் நாட்டை பாசிச மயமாக்கினார். 1936-ல் பாசிசக் கோட்பாடுகளை வெளியிட்டார் முசோலினி.

மேற்கண்ட சூழ்நிலைகள் தான் இத்தாலியில் முசோலினி தலைமையில் பாசிசக் கட்சி வளர்வதற்கும் பாசிச ஆட்சி ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

**பாசிசத்தின் முக்கியக் கோட்பாடுகள்:**

**1.நாட்டின் உயர்வு (State):**

பாசிசக் கோட்பாட்டின்படி நாடே உயர்வானது ஆகும். தனிப்பட்ட நபர்களைவிட, அவர்களின் விருப்பு வெறுப்பை வி நாடு உயர்வானது ஆகும். அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆன்மீக நிறுவனமாகும். முக்களைப் பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு நிறுவனமாகும். குடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் இணைக்கும் ஓர் உன்னத நிறுவனமாகும். முசோலினியின் கூற்றுப்டி ‘‘Everything in the State, nothing outside the State., nothing against the State’.

**2.நாடே அனைத்து அதிகாரங்களையும் கொண்டது**

நாடே அனைத்து அதிகாரங்களையும் கொண்டது. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் நாட்டிற்குக் கட்டுப்பட்டது ஆகும். எனவே, மனிதனைக் கட்டுப்படுத்துகின்ற முழு உரிமையும் நாடடிற்கு உண்டு. மனிதன் வாழ்வது இயங்குவது அனைத்துக்கும் காரணம் நாடுதான் என்று கூறப்பட்டது.

**3.போரின் பெருமை**

முசோலினி போரைப் பெருமைப்படுத்தினார். ஒரு பெண்ணுக்குக் குழந்தைப்பேறு எவ்வளவு முக்கியமானதோ, அதைப் போல ஆணுக்ககு போர் முக்கியமானது ஆகும். சமுதாயத்தை உயர்த்துவதே போர் தான் என்றார். அமைதியாக இருந்தால் மனித இனமே அழிந்துவிடும் என்றார் முசோலினி.

**4. ஏகாதிபத்தியம்**

புாசிசக் கோட்பாட்டின் முக்கிய அம்சமே அதன் ஏகாதிபத்தியக் கோட்பாடு ஆகும். இத்தாலியப் பேரரசை விரிவுபடுத்துவதே தனது நோக்கம் என்றார் மேூசாலினி. இத்தலிய விரிவாக்கம் என்பது வாழ்வா, சாவா என்பதைப் போன்றது. ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளையும், ஏகாபத்திய விரிவாக்கத்தையும் போதித்தார். 'பன்னாட்டு அமைதி என்பது கோழைகள் காணும் கனவு' என்றார். எனவே பாசிசக் கொள்கையானது பன்னாட்டு தொடர்புகளுக்கு எதிரானதாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் அமைந்தது.

**5.ஜனநாயக எதிர்ப்பு**

புாசிசம் என்பது ஜனநாயகத்திற்கு எதிரான கோட்பாடு ஆகும். முசோலினியின் கூற்றுப்படி ' பாராளுமன்றம் ஒரு பேசும் கடையாகும்'. நாட்டில் தனிமனிதனுக்கென்று எந்த உயர்வும் கிடையாது. நாட்டிற்கு அடிபணிவதே மனிதனின் உயர்ந்த பணியாகும். எனவேதான் இத்தாலியில் ஜனநாயகம் நசுக்கப்பட்டது. உரிமைகள் பறிக்கப்பட்டன. தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டது. ஒரு பயங்கரமான எதேச்சதிகாரம் கட்டசிழ்த்து விடப்பட்டது. Give the administration to a good man and believe hime' என்றார் முசோலினி.

**முசோலினியின் உள்நாட்டுக் கொள்கை**

(முசோலினியின் சாதனைகள் அல்லது பணிகள்)

1. **பெனிடோ முசோலினியின் வாழ்க்கை குறிப்பு:**

பெனிடோ முசோலினி 1833-ல் ரொமாக்னாவிலுள்ள பிரிடப்பியா (ீசநனயீயை) என்ற இடத்தருகே பிறந்தார். இவரது தந்தை தீவிர சோசலிச கருத்துக்களக் கொண்ட ஒரு கொல்லர் (டிடயஉமளஅவைா) ஆவார். இவருடைய தாயார் ஒரு பள்ளி ஆசிரியை. அவரது சம்பளத்தில் தான் குடும்பமே வாழும் நிலை. துயாரின் விருப்பப்படி முசோலினி ஆசிரியரானார். ஆனால் சீக்கிரமே வேலையை விட்டுவிட்டு 1902-ல் தனது 19-ம் வயதில் மேற்படிப்புக்காக சுவிட்சர்லாந்து சென்றார். அங்கு பல பத்திரிக்கைகளில் சமதர்ம கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள் எழுதினார்.

சுவிட்சர்லாந்தில் முசோலினி கடுந்துன்பமடைந்தார். பாலத்துக்கடியிலும், சில சமயம் பொதுக்கழிப்பறைகளிலும் படுத்துக் தூங்கினார். குறைந்த கூலியில் தினவேலை செய்தார். கடைசியில் லாசேனில் தொழிற்சங்கம் ஒன்று அமைத்தார். முசோலினி இயற்கையாகவே நல்ல எழுத்தாளர். மார்க்ஸ், சோபன்ஹார், நீட்சே, கிராப்ட்கின், லாசேல் ஆகிய அரசியல் ஞானிகளின் தத்துவங்களைப் படித்தார். அரசாட்சி, பாதிரியார்கள், வீரர்கள், பேங்கர்கள் ஆகிய அனைவரையும் கண்டித்து கட்டுரைகள் பல எழுதினார். இவர் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு போராட்டம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

1914-ல் மீண்டும் இத்தாலி வந்த போது மிலானிலிருந்து முனிசிபல் கவுன்சிலின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றார். "It popolo d italia" என்ற பத்திரிக்கையின் எடிட்டரானார். முதல்

உலகப்போரின் போது ஒரு படைவீரராக சேர்ந்து காயமடைந்து 1917-ல் வீடு திரும்பினார். அதிலிருந்தே இவர் பாசிசப் புரட்சிக் கருத்துக்களைப் பின்பற்றினார்.

இவர் பின்பற்றிய கொள்கைகளுக்குப் பாசிசம் என்று பெயர். இந்தச் சொல் லத்தீன் சொல்லான ''குயளஉநள'' என்பதிலிருந்து வந்ததாகும். இதற்கு 'இருப்புக் கழிகளாலான ஒரு கட்டு' என்று பெயர். எனவே இச்சொல் கட்டுப்பாடு, வலிமை, ஒற்றுமை ஆகிய மூன்றையும் குறிப்பதாகும். 'ரோமானியப் பேரரசின் தலைமை அதிகாரிகள் செல்லும்போது அவர்களுக்கு முன்னால் அவர்களது அதிகாரத்தின் சின்னமாக விக்டர்களால் தூக்கிச் செல்லப்பட்ட 'பாசல்ஸ்' என்ற கழிகளைக் குறிக்கும் சொல்லாகும். 'இரும்புக் கழிகளாலான கட்டும், கோடாலியும் பாசிஸ்டு' களின் சின்னமானது. (Bundle of rods surrounded by axe)

மேலும் Fascio என்றால் இத்தாலிய மொழியில் ஒரு குழுவைக் (Group) குறிக்கும் சொல்லாகும். 1919 அக்டோபரில் முசோலினி மிலானில் முதல் பாசிசக்குழுவை அமைத்தார். இந்த அமைப்பு முதலில் நகரங்களில் பரவி பின் கிராமங்களில் ஊடுருவியது. இந்த இயக்கத்தில் உலகப் போரில் பங்குகொண்ட வீரர்கள், மாணவர்கள், நடுத்தர வகுப்பு இளைஞர்கள் அதிகமாகச் சேர்ந்தார்கள். அவர்களுக்கு ராணுவ முறையிலான பயிற்சி அளிக்கப்பட்டது. பாசிச இயக்கத்தின் உறுப்பினர்கள் கருஞ்சட்டை அணிந்தனர். எனவே இதற்கு 'கருஞ் சட்டை இயக்கம்' (Black shirts) என்ற பெயரும் ஏற்பட்டது. 1919-ல் முதல் பாசிச மாநாடு நடைபெற்றபோது நாடு முழுவதிலும் இருந்த 22 பாசிசக் குழுக்களில் 17 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள். 1920-ல் பாசிசக் குழுக்களின் எண்ணிக்கை 118 ஆனது. ஆவைகளில் முப்பதாயிரம் உறுப்பினர்கள் இருந்தனர். 1921-ல் நாடு முழுவதிலும் இருந்த 2200 பாசிசக் குழுக்களில் மூன்று லட்சம் உறுப்பினர்கள் இருந்தனர். De Bono, De Veechi ஆகிய முக்கிய பாசிசத் தலைவர்கள் இந்த இயக்கத்தை வளர்த்தனர்.

பாரிசு உடன்படிக்கை ஏமாற்றத்தைக் கொடுத்தாலும் வேலையில்லாதத் திண்டாட்டம் போன்ற பிற பிரச்சனைகளாலும் மக்களின் வாழ்க்கை ஸ்தம்பித்திருந்த போது முசோலினி தனது தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பி மக்களின் ஆதரவைப் பெற்றார். மக்களால் Duce (தலைவர்) என்று செல்லமாக அழைக்கப்பட்ட தலைவர் முசோலினி எண்ணிக்கையில்லாத பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் அவர் 'மக்களின் தலைவராக' இருந்த படியால் எல்லாம் மறைக்கப்பட்டன.

**2.இத்தாலியில் எதேச்சதிகார அரசை நிறுவுதல்**

1922-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அதிகாரத்தைக் கைப்பற்றிய முசோலினி, உள்நாட்டு நிர்வாகத்தை பாசிசமயமாக்கினார். தனக்கு எதிராக அரசாங்கத்திலிருந்த அனைத்து சக்திகளையும் ஒவ்ரா (Ovra) என்ற ரகசிய பாதுகாப்புப் படையின் உதவியுடன் நசுக்கினார். 1924 ஏப்ரலில் நடைப்பெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற பிறகு பல தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார் முசோலினி.

இத்தாலியில் போராட்டங்கள் தடைசெய்யப்பட்டது. பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டது. நகராட்சி நிறுவனங்கள் அரசியல் உரிமைகளை இழந்தன. பாசிசக் கட்சி தவிர எல்லா எதிர்கட்சிகளும் தடை செய்யப்பட்டன. சட்டங்களை இயற்றுவதற்கும் அதனைச் செயல்படுத்துவதற்கும் முசோலினிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1921-ல் 'புதிய தண்டனைச் சட்டம்' ஒன்று இயற்றப்பட்டு ''முசோலினி அரசருக்குச் சமமானவர் என்றும், அவரைக் கொலை செய்ய முயலுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும்'' என்றும் கூறப்பட்டது. நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது. விவசாயம், தொழில், வாணிபம், உள்நாட்டுப் போக்குவரத்து, கடல், வானவழிப் போக்குவரத்து, வங்கித்துறை ஆகியவைகளின்

செயல்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டு ‘தேசியக் கவுன்சிலின்’ கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது.

இவ்வாறு நாட்டிலுள்ள ஜனநாயக இயக்கங்கள் ஒழிக்கப்பட்டன. தனிமனித உரிமை நசுக்கப்பட்டது. “எல்லாம் நாட்டின் நலனுக்காகவே” என்ற கோடபாட்டின் அடிப்படையில் எதேச்சதிகார அரசை அமைத்தார். இவரை எதிர்த்தவர்களுக்கு சிறைவாசம், நாடுகடத்தல், மரணதண்டனை ஆகிய தண்டனைகள் வழங்கப்பட்டன.

**3.பொருளாதார சீர்திருத்தங்கள்**

முசோலினி, பொருளாதாரத்தில் இத்தாலியை ஒரு சுய சார்புடைய நாடாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே விவசாயத்துறை வளர்ச்சியில் ஆர்வம் கொண்டார். உற்பத்தியை அதிகரிக்க “தானியத்திற்காக யுத்தம்” (ருயச கழச பசயபை) என்ற கோஷத்தை எழுப்பினார். சதுப்பு நிலங்கள் திருத்தப்பட்டன. ரசாயன உரங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு உதவ ‘விவசாயக் கடன் வங்கி’ ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

தோழில் உற்பத்தியிலும் இத்தாலி உலகத்தில் முதலிடம் வகித்தது. சர்வதேசக் சந்தையில் இத்தாலியில் செய்யப்பட்ட கார்கள் பெருமதிப்பு பெற்றன. இத்தாலியில் சுற்றுலா வளர்ச்சியை முசோலினி ஆதரித்தார். இதனால் வருமானம் அதிகமாகக் கிடைத்தது. இவர் காலத்தில் கடல் போக்குவரத்து மூலமாகவும் அதிக வருமானம் கிடைத்தது. இவ்வாறு முசோலினியின் பொருளாதார நிலை உயர்ந்தது.

**4.லேட்டரன் உடன்படிக்கை**

முசோலினியின் தலைமையிலான பாசிச அரசாங்கத்தின் தலைசிறந்த சாதனையாக கருதப்படுவது லேட்டரன் உடன்படிக்கையாகும். போப்பாண்டவருக்கும் முசோலினிக்கும் இடையே ஏற்பட்டதே லேட்டரன் உடன்படிக்கையாகும். முதத்தை அரசுக்கு ஆதரவாகப் பயன்படுத்தவே முசோலினி லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கை போப்பாண்டவர் பதினொன்றாம் பயஸ் என்பவருக்கும் இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே ரோம் நகரிலுள்ள லேட்டரன் என்ற அரண்மனையில் 1929, பிப்ரவரி 11-ம் தேதி கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி,

a) போப்பாண்டவர் ரோம் நகரத்தின் மீதான தனக்கிருந்த உரிமையை விட்டுக் கொடுத்தார். அத்துடன் ரோமை, இத்தாலிய அரசாங்கத்தின் தலைமை இடமாக ஏற்றுக் கொண்டார்.
b) அதற்குப்பதிலாக இத்தாலிய அரசு போப்பாண்டவர்கள் முழுமையான அதிகாரத்திலுள்ள வாடிகன் நகரைதனி இறைமை உள்ள சுதந்திரப் பகுதியாக அங்கீகரித்தது.
c) கத்தோலிக்க மதம் தேசிய மதமாக அங்கீகரிக்கப்பட்டது. போப்பாண்டவரின் ஆணைகளை இத்தாலிய நாட்டு மக்கள் மீது நடைமுறைப்படுத்த அரசு ஒப்புக் கொண்டது.
d) போப்பாண்டவர் இத்தாலியை ஆண்டுவரும் செவாய் அரசு குடும்பத்தை அங்கீகரித்தார்.

இந்த லேட்டரன் உடன்படிக்கை மூலம் 1870-ல் போப்பின் பகுதிகள் இத்தாலியுடன் இணைக்கப்பட்டதிலிருந்து போப்பாண்டவருக்கும், இத்தாலிய அரசாங்கத்திற்குமிடையே இருந்து வந்த தகராறு முடிவுக்கு வந்தது. எனவே கத்தோலிக்கரின் ஆதரவைப் பெற்றார் முசோலினி. இவ்வாறு பாசிஸ்ட்களும் கத்தோலிக்கர்களும் ஒன்றுபடவே, முசோலினியின் கரங்கள் வலுவடைந்தன.

**முசோலினியின் வெளிநாட்டுக் கொள்கை**

**(ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்)**

முசோலினி தனது வெளிநாட்டுக் கொள்கையின் கீழ்க்கண்ட நோக்கங்களை கொண்டிருந்தார்.

1) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் இத்தாலிக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உடைத்தெறிவது.
2) இத்தாலியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைவ ிற்பதற்குச் சந்தையை ஏற்படுத்தவும், அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குத் தேவைப்படும் உறைவித்தை அளிக்கவும், புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துவது.
3) இத்தாலியின் பழமைவாய்ந்த புகழையும் பெருமையையும் உயர்த்தி, பன்னாட்டு அளவில் இத்தாலிக்கு மீண்டும் உரிய அந்தஸ்தைப் பெற்றுத் தருவது.
4) புல பகுதிகளைக் கைப்பற்றி, இத்தாலிய எல்லைகளை விரிவாக்குவது, மத்தியதரைக்கடர் பகுதியில் இத்தாலியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தி அதனை 'இத்தாலிய ஏரி'யாக மாற்றுவது ஆகியவையாகும்.

தனது மேற்கண்ட வெளிநாட்டுக் கொள்கைகளைச் செயல்படுத்த கீழ்க்கண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் முசோலினி. தனது நோக்கங்களை அடைய போர் ஒன்றே வழி என்று வெளிப்படையாக அறிவித்தார். சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி, பிற நாடுகளின் உரிமைகளை மதிக்காமல் கீழ்க்கண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இரண்டாம் உலகப்போருக்குக் காரணமானார்.

**1.கொர்பூ(Corfu) நிகழ்ச்சி: 1923**

1923-ல் கிரேக்க நாட்டுடனான எல்லைக் கோடு நிர்ணய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு இத்தாலியத் தளபதி கிரேக்கத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதால், கிரிசுக்குச் சொந்தமான கொர்பு தீவைக் கைப்பற்றினார் முசோலினி. நஷ்ட ஈடும் கேட்டார். சர்வதேச சங்கம் தலையிட்டு 5-0 மில்லியன் லயர் நஷ்டத் தொகையை முசோலினிக்கு வாங்கி கொடுத்தது. எனவே கொர்பு தீவை கீரிசுக்கு திரும்ப அளித்தார் முசோலினி.இந்த நிகழ்ச்சி முசோலினியின் ஆக்கிரமிப்பு செயல்களின் ஆரம்பத்தையும், எந்த நாட்டிற்கும் கட்டுப்படாமல் எந்த செயலிலும் ஈடுபடும் அவரது தைரியத்தையும் வெளிப்படுத்தியது.

**2.ஃபியூம் ஆக்கிரமிப்பு (Flume): 1924**

முதல் உலகப்போரின் முடிவில் கூட்டப்பட்ட பாரிசு மாநாட்டில் இத்தாலிக்குத் துறைமுக நகரமான ஃபியூம் கொடுக்கப்படாததால் இத்தாலிய மக்கள் ஏமாற்றமடைந்தனர். நேச நாடுகள் மீது அதிக கோபம் அடைந்தார்கள். இத்தாலியத் தேசியவாதிகள் 'டி' அனுன்சியோ என்பவரின் தலைமையின் கீழ் ஃபியூம் நகருக்குள் நுழைந்தார்கள். இந்தப் பிரச்சனையை முசோலினி தீர்த்து வைத்தார். 1924 ஜனவரி 27-ல் யூகோஸ்லேவியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துக் கொண்டு, ஃபியூமின் பெரும் பகுதியை இத்தாலியுடன் இணைத்தார். எஞ்சிய பரோஸ் என்ற சிறு பகுதி மட்டும் யூகோஸ்லேவியாவிற்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு ஃபியூம் இத்தாலியுடன் இணைக்கப்பட்டது.

**3.அல்பேனியா இணைக்கப்படல்: 1939**

அல்பேனியா சம்பந்தமாக இத்தாலிக்கும் யூகோஸ்லேவியாவிற்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. சுதந்திர நாடான அல்பேனியா 1920-ல் சர்வதேச சங்கத்தில் உறுப்பினராகியது. முசோலினி அல்பேனியாவிற்கு பொருளாதார ராணுவ உதவிகளைத் தாராளமாகச் செய்து அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டார். அல்பேனியா இத்தாலியின் கட்டுப்பாட்டில் வந்து விட்டால், யூகோஸ்லேவியாவிற்கு மத்தியத் தரைக்கடல் பகுதிக்கு போகும் வழி அடைப்பட்டு விடும் என்று திட்டமிட்டார். முசோலினி 1926 நவம்பர் 27-ல் அல்பேனியாவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து அல்பேனியாவுக்கும், யூகோஸ்லேவியாவிற்கும் போர் ஏற்பட்டது. அதன் விளைவாக அல்பேனியாவில் உள்நாட்டுக் குழப்பங்கள் நிலவி வந்தது. 1939-ம் வருடம் பெரிய, வெள்ளிக்கிழமையன்று திடீரென முசோலினி அல்பேனியா மீது போர் தொடுத்து இத்தாலியுடன் இணைத்துச் கொண்டார். அல்பேனியா அரசர் சாக் என்பவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார்.

### 4.ஸ்ட்ரெஸ்ஸா முன்னி (Stressa front) :1935

1935-ம் ஆண்டு மார்ச் 19-ம் தேதி வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறி ராணுவத்தில் ஆள்சேர்ப்பதற்கான உத்தரவை வெளியிட்டார் ஹிட்லர். இதனை எதிர்த்து உடனடியாக இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஏப்ரல் மாதம் ஸ்ட்ரெஸ்ஸா மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். இந்த மாநாட்டில் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைத் தன்னிச்சையாக மீறும் நாடுகள் கண்டிக்கப்பட்டன. அத்துடன் சர்வதேச சங்கத்தின் கீழ் செயல்படும் ‘கூட்டுப்பாதுகாப்பு முறைக்கு’ (Collective Security) ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த ஸ்ட்ரெஸ்ஸா முன்னனி அதிக காலம் நீடிக்கவில்லை. ஜீன் மாதத்தில் இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் இடையே ஒரு கடற்படை உடன்படிக்கை ஏற்பட்டது. இதனைக் கண்டு முசோலினி அதிர்ச்சியடைந்தார். இந்த நிகழ்ச்சியிலிருந்து பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுடனான நட்பிலிருந்து விலகி, ஜெர்மனிஈ ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர முற்பட்டார் முசோலினி.

### 5.முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு

### (எத்தியோப்பயப் படையெடுப்பு 1936)

#### படையெடுப்பிற்கான காரணங்கள்

அபிசினியா அல்லது எத்தியோப்பியா என்ற நாடு கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்த ஒரே சுதந்திர நாடாகும். அபிசீனிய மீது இத்தாலியின் கண் அதிக காலமாகவே இருந்து வந்தது. பேரரசர் மெனலிக் காலத்தில்இத்தாலியர்கள் அபிசீனியா மீது படையெடுத்தார்கள். ஆனால் 1896-ல் நடைப்பெற்ற அடேவாப் போரில் அபிசீனியாவால் இத்தரி தோற்கடிக்கப்பட்டது. முசோலினியின் தலைமையில் ஏற்பட்ட பாசிச அரசு அடோவாவில் இத்தாலிக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்காக அபிசீனிய மீது மீண்டும், படையெடுப்பதை ஒரு கௌரவப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டது.

2) அபிசீனியாவில் பெருமளவில் காணப்பட்ட தாது வளங்களும், இயற்கை வறங்களும், பெரும் செல்வமும் இத்தாலியைக் கவர்ந்தன.

3) மேலும், இத்தாலியில் பெருகி வந்த ஜனத்தொகையை குடியமர்த்துவதற்குத் தகுந்த இடமாக அபிசீனியா அமைந்திருப்பதாக இத்தாலி கருதியது.

4) ஐரோப்பாவில் அப்போது வந்த அரசியல் சூழ்நிலையும் முசோலினி அபிசீனியா மீது படையெடுப்பதை ஊக்குவித்தது. காரணம் 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கி ஜப்பான் கைப்பற்றிய போது ஐரோப்பிய நாடுகள் முக்கியமாக இங்கிலாந்து

“சாந்தப் படுத்துதல் கொள்கையே” (Policy of Appeasement) பின்பற்றின. மேலும் 1935ல் ஹிட்லர் வெர்செயல்ஸ் உடன்படிக்கையை மீறி படைப்பெருக்கத்திற்கு உத்தரவிட்ட போது எந்த எதிர்ப்பும் வலிமையாகத் தெரிவிக்கப்படவில்லை. இச்சூழ்நிலைகளை முசோலினி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

**அபிசீனியா மீது தாக்குதல்**

அபிசீனியா மீது படையெடுப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினார் முசோலினி. ஆதற்காக இத்தாலியப் படைகளை அபிசீனியப் படைகள் மீது சிறு சிறு தாக்குதல்களைத் தொடுக்குமாறு ஏவிவிட்டார். 1934 டிசம்பர் 5ல் வால்வல் (Walwal) என்ற கிராமத்தில் நடைபெற்ற தாக்குதல்களின் விளைவாக இருபது இத்தாலியப்படை வீரர்கள் கொல்லப்பட்டார்கள். இதற்கு நஷ்டஈடு தரும்படி அபிசீனியாவிடம் கேட்டார் முசோலினி. இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த அபிசீனியா முன்வந்தபோது முசோலினி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சர்வதேச சங்கத்தின் 10, 11, 15-ம் விதிகளின் படி, அபிசீனியா 1935 ஜனவரி 5-ல் சங்கத்திடம் முறையிட்டது.

ஆனால் மேற்கத்திய நாடுகள் ஜெர்மனியின் எதிர்கால ஆக்கிரமிப்பைத் தடுப்பதைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தன. எனவே இந்த நாடுகள் அபிசீனியப் பிரச்சனையில் அதிக ஈடுபாடு காண்பிக்கவில்லை. இந்த நாடுகள் சர்வதேச சங்கத்தில் இத்தாலியைக் கண்டித்து அதனுடைய ஆக்கிரமிப்பைப் பற்றி நீண்ட விவாதம் செய்து முடிப்பதற்குள் அபிசீனியாவைக் கைப்பற்றிவிடத் திட்டம் தீட்டினார் முசோலினி. அபிசீனிய விவகாரத்தில் தலையிட அமெரிக்காவும் முன்வராதது, முசோலினிக்கு அதிக தைரியத்தைக் கொடுத்தது.

உண்மையில் முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு, 1935, அக்டோபர் 3-ம் தேதி, சர்வதேச சங்கம் இப்பிரச்சனை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் போது நடந்தது. இத்தாலியின் மீது சர்வதேச சங்கத்தின் திட்டங்களை மீறி செயல்பட்டு விட்டது என்றும், அது ஒரு ஆக்கிரமிப்பாளர்’ என்றும் கண்டனம் தெரிவித்து அக்டோபர் 19-ல் தீர்மானம் ஒன்றை சங்கம் இயற்றியது. அதன்பின் இத்தாலியின் மீது பொருளாதார, ஆயுதப்தடை விதிக்கப்பட்டது. ஆனால் முசோலினி எதையும் பொருட்படுத்தாமலட அபிசீனியப் படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தினார். 1936 மே மாதம் இத்தாலியப் படைகள் அபிசீனியத் தலைநகர் ‘அடிஸ் அபாபா’ வினுள் நுழைந்தது. அபிசீனிய அரசர் ஹெய்லிசெலசி முடிதுறந்து நாட்டை விட்டு ஓடினார். இத்தாலியப் பேரரசர் மூன்றாம் விக்டர் இமானுவேல் அபிசீனியாவின் பேரரசராகவும் பிரகடனப்படுத்தப்பட்டார்.

**அபிசீனியப் படையெடுப்பின் முக்கியத்துவம்:**

1.முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு சர்வதேச சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு எதிரானதாகும். இந்த நிகழ்ச்சி முசோலினியின் தைரியத்தை வெளிப்படுத்தியது.

2. ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபடும் நாடுகளைச் கண்டிக்க முடியாமல், செயல் இழந்து நிற்கும் வலிமையற்ற சர்வதேச சங்கத்தின் உண்மை நிலையை இது வெளிப்படுத்தியது. இதுவே பின்னர் சர்வதேச சங்கம் அழிந்து போகவும் காரணமானது.

3. அபிசீனியப் படையெடுப்பு பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் ராஜதந்தித் தோல்வியைக் காட்டுகிறது. ஜேர்மனிக்கு எதிராக அமைந்த ஸ்ட்ரெஸ்ஸா முன்னணியின் வீழ்ச்சியை உணர்த்துகிறது.

4.இந்தப் படையெடுப்பிற்குப் பின்னர் இங்கிலாந்து பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து இத்தாலி விலகி, ஜெர்மனியுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது.

5. ஹிட்லர் பின்னர் ஆஸ்திரியாவை இணைத்துக் கொள்வதற்கு அபிசீனியப் படையெடுப்பு முக்கிய காரணமாகும்.

**6. ஸ்பானிய உள்நாட்டுப் போரில் தலையீடு:**

1936-ம் ஆண்டு ஜீலை மாதம் ஜெனரல் பிராங்கோஎன்பவர் ஸ்பானிய அரசுக் கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அவருக்கு ஆதரவாக ராணுவமும் சேர்ந்து கொண்டது. ஸ்பெயினில் உள்நாட்டுக் போர் நாட்டு நடைபெற்றது. இதில் ஜெனரல் பிராங்ஆகாவிற்கு முசோலினி படைஉதவி செய்தார். இத்தாலியும் ஜெர்மனியும் ஒன்று சேர்ந்து ரகசியமாக பிராங்கோவை ஆட்சியிலமர்த்த உறுதி கொண்டன. சுமார் ஒரு லட்சம் இத்தாலியப் படைவீரர்கள் ஸ்பெயினில் பிராங்கோவிற்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள். ஸ்பானிய உள்நாட்டுப் போரில் இத்தாலி தலையிடுவதை சர்வதேச சங்கத்தினால் கண்டிக்க முடியவில்லை. 1939-ல் பிராங்கோ தலைமையில் ஒரு பாசிச அரசாங்கம் ஸ்பெயினில் நிறுவப்பட்டது. இது பாசிஸ்ட்டுகளின் வலிமையை ஐரோப்பாவில் உறுதிப்படுத்தியது. கூட்டுப் பாதுகாப்பு முறை ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்ததைக் காட்டியது. இங்கிலாந்து பிரான்ஸ் போன்ற ஜனநாயக நாடுகளின் பலவீனத்தை வெளிப்படுத்தியது.

**8.இரண்டாம் உலகப் போருத் முசோலினியின் வீழ்ச்சியும்**

இரண்டாம் உலகப்போர் 1939, செப்டம்பரில் தொடங்கிய போது இத்தாலி நடுநிலை வகித்தது. போரில் நேச நாடுகள் களைப்படையும் போது அவைகளைத் தாக்க முசோலினி திட்டமிட்டார். அதன்படி 1940-ல் பிரான்ஸ் வீழ்ச்சியடையும் நிலையிலிருந்த போது அதனைத் தாக்கினார். பின்னர் இங்கிலாந்து, கீரிஸ், எகிப்து, சூடான், கென்யா ஆகிய நாடுகள் மீது படையெடுத்தார். 1942-ல் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் எதிராக போர் தொடுத்தார்.

1943 ஜீலை மாதம் நேசநாடுகள் இத்தாலியைத் தாக்கிய போது இத்தாலியின் ‘பாசிச உயர்நிலைக்குழு’ முசோலினி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியது. படைத்தலைமையை அரசரிடம் ஒப்படைக்குமாறு முசோலினியிடம் கூறியது. முசோலினி மன்னரை சந்திக்கச் சென்றபோது கைது செய்யப்பட்டார். முதலில் சார்டீனியா, பின்னர் எல்பா, கிரான்சசோவில் சிறை வைக்கப்பட்டார். ஆனால் ஜெர்மானிய பாராசூட் கேப்டன் ஸ்கோர்ஸினி என்பவர் கிரன்சசோவில் இறங்கி முசோலினியைக் காப்பாற்றி ஜெர்மனி கொண்டு சென்றார். இதன்பின் வடஇத்தாலியில் முசோலினி தலைமையில் புதிய பாசிச அரசு நிறுவப்பட்டது.

**9.முசோலினியின் இறுதிக் காலம்**

முசோலினியின் புதிய அரசாங்கம் கார்டா ஏரிக்கரையிலுள்ள (Lake Garda) (Salo) என்ற சிறிய நகரத்தில’ செயல்பட்டு வந்தது. உண்மையில் இந்த அரசு ஹிட்லரின் கையிலிருந்த ஒரு பொம்மைஅரசேயாகும். 1945 –ல் நேசப்படைகள் இத்தாலியைத் தோற்கடித்தன. வடஇத்தாலியில் இருந்து ஜெர்மானிய வீரர் போல வேஷம் போட்டுக் கொண்டு தப்பி ஓடினார் சர்வாதிகாரி முசோலினி! ஆனால் அவர் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு மறுபடியும் கைது செய்யப்பட்டார்.

Count Bellini Delle Stelle என்ற இடத்தில் சிறை வைக்கப்ட்டார் முசோலினி. ஆனால் கோபமடைந்த மக்கள் கர்னல் வலினி என்பவர் தலைமையில்போய்

முசோலினியையும், அவருடைய மனைவி (கடைசி மனைவி) கிளாரிட்டா பெடாசிஎன்பவரையும் பிடித்து வந்து டோங்கோ என்ற இடத்தில் 1945 ஏப்ரல் 28-ல் தெருவில் வைத்து சுட்டுக் கொன்றனர். இவர்கள் இருவர் மற்றும் பதினாறு பேர்களின் உடல்கள் மிலானுக்கு எடுத்து செல்லப்பட்டு அங்குள்ள Piazzale Loreto என்ற இடத்தில் தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்டன. பல சிறுமைகளுக்கு உள்ளான முசோலினியின் உடல் முசாக்கோ என்ற கல்லறை தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

நிபந்தனையின்றி இத்தாலி சரணடைந்தது. அத்துடன் பாசிசமும் வீழ்ச்சியடைந்தது. முடியாட்சி ஒழிக்கப்பட்டு 1946 ஜீன் 10-ம் தேதி இத்தாலி ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## வெய்மார் குடியரசு

## (WEIMAR REPUBLIC)

முதல் உலகப்போரின் முடிவில் நேசநாடுகள் ஜெர்மனியுடன் செய்து கொண்ட வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் படி, ஜெர்மனி இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் பொருளாதார நிலை படுமோசமானது. ஜெர்மனியின் ராணுவ பலம் ஒடுக்கப்பட்டது. வளமான ஜெர்மானியப் பகுதிகள் நேசநாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் ஜெர்மானிய மக்களிடம் பெரும் அதிருப்தி நிலவியது. நெதர்லாந்துக்குத் தப்பி ஓடிய இரண்டாம் கெய்சர் வில்லியத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. சுருக்கமாகக் கூறினால் வெய்மார் குடியரசு ஜெர்மனியில் தோன்றுவதற்கு முன்னால் ஒரு உள்நாட்டுப் போரே நடைபெற்றது. 1919-ல் தோற்றுவிக்கப்பட்ட வெய்மர் குடியரசு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாததால் தோல்விடைந்தது. அதே சமயம் ஹிட்லரின் தலைமையில் நாசிசக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்து ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

### வெய்மார் குடியரசு தோன்றுதல்

முதல் உலகப்போரில் தோல்வியடைந்து கொண்டிருந்த ஜெர்மனி உள்நாட்டுப் பிரச்சனைகளில் சிக்கித் தவித்தது. 1918 நவம்பரில் கீல் கடற்படைத்தளத் தொழிலாளர்கள் புரட்சி செய்தார்கள். அதனை தொடர்ந்து பவேரியா, பெர்லின் ஆகிய தொழிற்கூடங்களில் வேலை நிறுத்தங்கள் நடைப்பெற்றது. இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி கம்யூனிசவாதிகள் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சித்தார்கள். இந்த ஜெர்மானிய போல்சிவிக்குள் ‘‘ஸ்பார்டகஸ்’’ (Spartacus) என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால் ஹெர்எபர்ட் (ர்நசச நுடிழசவ) டின் தலைமையினால் சோசலிச ஜனநாயகக் கட்சியினர் போல்சிவிக்குகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை நசுக்கினார்கள். ஆதன்பின் 1919 பிப்ரவரி 6ம் தேதி வெய்மார் என்ற நகரின் தேசிய சபையை அமைத்து புதிய அரசியலமைப்பை உருவாக்கினார்கள். இதற்கு வெய்மார் அரசியலமைப்பு என்றுபெயர். ஆந்த அரசியலமைப்பின்படி ஜெர்மனியில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு வெய்மார் குடியரசு என்று பெயர். எபர்ட் ஜனாதிபதியாக ஏழு ஆண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு சபைகளைக் கொண்ட ‘ரீஸ்டாக்’’ என்ற ஜெர்மானிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. மக்களுக்கு அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டன.

### வெய்மார் குடியரசு எதிர்நோக்கிய பிரச்சனைகள்:

புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. முக்கியமாக,

1. தீவிரவாதிகளின் நாடு தழுவிய கிளர்ச்சி
2. போரில் வெற்றியடைந்த நாடுகளுடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடுவது
3. ஜேர்மனிக்கு நிரந்தரமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல் ஆகியவையாகும்.
   கம்யூனிசவாதிகள் கிளர்ச்சிகளை ஒடுக்க ராணுவ வீரர்களுடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டு கிளர்ச்சி நசுக்கப்பட்டது. நேச நாடுகள், ஜெர்மனிக்கு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட கெடு விதித்திருந்தால் வேறு வழியில்லாமல் அதனைக் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டது. புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டு அதன்படி புதிய 'ஜெர்மன் கூட்டாட்சி' நிறுவப்பட்டது. அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி எபர்ட்டின் ஆட்சிக்காலம் 1925-ம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. தேசிய சபையின் தலைமையிடம் பெர்லின் நகருக்கு மாற்றியமைக்கப்பட்டது.

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்கு எரிதுப்பு:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அரசாங்கத்தை மக்கள் எதிர்த்தார்கள். உடன்படிக்கையின் ஷரத்துக்களை வெறுத்தார்கள். ஏனெனில் அதில,''ஜெர்மனி ஒரு போர்க்குற்றவாளி என்று கூறப்பட்டிருந்தது. மேலும் வளமிக்க பகுதிகளை ஜெர்மனி இழந்தது. பல குடியேற்ற நாடுகளை இழந்தது. இதனாலட தொழிற்வளர்ச்சி பாதிக்கப்பட்டது. உடன்படிக்கைக்கு தெிரான கிளர்ச்சிகளால் நாட்டில் எங்கும் குழப்பம் நிலவியது.

**வெய்மார் குடியரசைக் கவிழ்க்க முயற்சி:**

பல உள்நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்த வெய்மார் குடியரசை எதிர்த்து ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றது. நாட்டின் அரசியல் நிலைமை சீரடையாததாலும், மக்கள் புண்பட்டிருந்தாலும், நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு சுப்புட்ஸ் என்பவர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இந்த கவிழ்ப்பு முறியடிக்கப்பட்டது. இச்சமயத்தில்தான் 1920 மார்ச் மாதம் ''தேசிய சமதர்ம ஜெர்மானியத் தொழிலாளர் கட்சி'' ஒன்று ஜெர்மனியில் உருவாகியது. இதில் ஹிட்லர் உறுப்பினராகச் சேர்ந்தார். இக்கட்சி கம்யூனிச விரோதக் கட்சியாக செயல்பட்டது. விரைவில் ஹிட்லர், லூடன்டார்ப் (டுரனநனெழசகக) ஆகியோர் தலைமையில் இன்னொரு கவிழ்ப்பு முயற்சி 1923 நவம்பர் 9-ல் நடந்தது. ஆனால் அரசு அதனையும் முறியடித்து ஹிட்லரை ஒன்பது மாதம் ஜெயிலுக்கு அனுப்பியது. ஆங்குதான் ஹிட்லர் 'எனது போராட்டம்' (மெயின் காம்ப்) என்ற நூலை எழுதினார். இவ்வாறு வெய்மார் குடியரசு பிரச்சனைகளில் சிக்கி தவித்தது.

**ரூர் பள்ளதாக்கை பிரான்ஸ் கைப்பற்றுதல்:1923**

ஜெர்மனி மீது போர் இழப்புத் தொகையாக 32 மில்லியன் டாலர் 1921-ல் இறுதியாக விதிக்கப்பட்டது. இதுவும் ஜெர்மனியால் தாங்கமுடியாத தொகையாகும். 1922 டிசம்பர் வரை இந்த இழப்பீட்டுத் தொகையை செலுத்த முடியாமல் போயிற்று. எனவே 1923 ஜனவரி 11-ம் தேதி பிரெஞ்சு பெல்ஜிய நாடுகளின் படைகள் ரூர் பள்ளதாக்கிற்குள் நுழைந்தன. இரும்பு எ∴கு நிலக்கரி வளம் நிறைந்த ரூர் பள்ளதாக்கை பிரெஞ்சுப் படைகள் கைப்பற்றியது. ஜெர்மனியின் குரல்வளையை நெறித்ததற்குச் சமம் ஆகும். ஆனால் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு அதிக நாள் நீடிக்கவில்லை. அங்கிருந்த மக்களும், தொழிலாளர்களும் பிரெஞ்சு ஆக்கிரமிப்புப்

படைக்கு ஒத்துழைப்புத் தரவில்லை. மேலும் பிரான்ஸ் இங்கிலாந்தின் நல்லெண்ணத்தையும் இழந்தது. இறுதியில் பேச்சு வார்த்தை மூலம் 1924-ல் ரூர் பள்ளதாக்கை விட்டு பிரெஞ்சுப்படைகள் வெளியேறின. ஆனால் மக்களின் கோபம் அதிகரித்தது.

**நேசப்படையினரின் ரைன்லாந்து ஆக்கிரமிப்பு:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ரைன்லாந்து பகுதியில் நிரந்தரமாக ஜெர்மனி படைகளை விலக்கிக் கொள்ளவேண்டும். அப்பகுதி 15 ஆண்டுகளுக்கு நேச நாடுகளின் படையில் கட்டுப்பாட்டிலிருந்க வேண்டும். இதன்படி ஆங்கில பிரெஞ்சுப் படைகள் ரைன்லாந்துப் பகுதியை ஆக்கிரமித்தன. ரைன்லாந்தின் தெற்கு பகுதியிலுள்ள பிரெஞ்சுப்படைகள் அங்கிருந்த சமூக விரோதிகளையும், தீவிரவாதிகளையும் ஊக்குவித்து, அப்பகுதியைச் சுதந்திரமாக அறிவிக்க முயற்சி செய்தன. இதனால் ஜெர்மானியர்கள் பிரான்சு மீது அளவுகடந்த வெறுப்படைந்தார்கள்.

**வெய்மார் குடியரசு எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சனைகள்:**

முதல் உலகப்போரின் விளைவாக ஜெர்மனியின் பொருளாதார நிலை மோசமானது. தோழில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் பணவீக்கம் ஏற்பட்டது. வெய்மார் குடியரசு காகிதப்பணத்தை அதிகமாக அச்சிட்டு வெளியிட்டதால் நாட்டின் நாணய மதிப்பு குறைந்தது. லட்சக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, தங்க இடமின்றி, அடிப்படை வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்க்க முடியாமல் தவித்த வெய்மார் குடியரசுக்கு உதவி செய்ய நேச நாடுகள் முன்வந்தன. அதன் விளைவாக உருவானதே ‘டாஸிட்டம்’‘யங்திட்டம்’ ஆகியவை ஆகும்.

**டாஸ் திடம் (Dawes Plan) :1924 ஜீன்**

ஜெர்மானியப் பொருளாதார நிலை படுமோசமானதாலும், போர் இழப்பீட்டுத் தொகையை கொடுக்கும் திறனற்றுப் போய்விட்ட காரணத்தாலும், ஜெர்மானிய சான்சலர் ஸ்ட்ராஸ்மென் வெளிநாட்டு உதவியை நாடினார். ஏப்படியாவது ஜெர்மனியைப் பொருளாதார சீரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற கூட்டு முயற்சி நடைபெறறது. ஆதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த சார்லஸ்டாஸ் என்பவரினால் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதனற்று ‘‘டாஸ் திட்டம்’’ என்று பெயர்.

டாஸ் திட்டத்தின்படி ஜெர்மனியில் புதிதாக ‘‘ரிஸ்மார்க்’’ என்ற செலவாணி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் நேச நாட்டினரைக் கொண்ட தனிப்பட்ட வங்கி ஒன்றும் நிறுவப்பட்டது. ஜெர்மனியின் ரயில் போக்குவரத்து, ஏற்றுமதிஈ தொழிற்துறை ஆகியவற்றை நிர்வகித்து அதிலிருந்து வரும் வருமானத்தைப் போர் நஷ்டஈட்டுத் தொகையாகப் பெறலாம் என்று இத்திட்டம் கூறியது. சுமார் 400 மில்லியன் பவுண்டுகளை ஜெர்மனி கடனாகப் பெற்று அதனைப் புதிய செலவாணியாக உபயோகிக்க வேண்டும். 1924-ல் இந்தத் தொகை ஜெர்மனிக்கு கடனாகக் கொடுக்கப்பட்டது. டாஸ் திட்டத்தின்படி ஜெர்மனியின் தொழில்வளமும், வியாபாரமும் பெருகியது. ‘‘போர் நஷ்டஈடு  என்பது ஒரு அரசியல் பிரச்சனை அல்ல’’ என்பதை இத்திட்டம் தெளிவாக்கியது. இத்திட்டத்தினால் ஜெர்மனியின் நிதிநிலை உயர்ந்தது. சுமார் நான்கு வருடங்கள் தவணை முறையில் இஜர்மனி கடனைச் செலுத்தி வந்தது.

**யங் திட்டம் (Young plan):**

டாஸ்திட்டத்தினால் ஜெர்மானியப் பொருளாதாரப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்ட போதிலும், வெளிநாட்டுச் சட்டதிட்டங்கள் தங்கள் உள்நாட்டுப் பிரச்சனையில்

தலையிடுவதை ஜெர்மானியர்கள் விரும்பவில்லை. மேலும் நஷ்டஈட்டுத் தொகையை குறைக்க வேண்டுமென்றும் ஜெர்மானியர் விரும்பினர். எனவே 'யங்' என்ற அமெரிக்க நிதியாளர் 1929-ல் தனது திட்டத்தை அறிவித்தார். அதுவே 'யங்' திட்டமாகும்.

அதன்படி வருடத்திற்கு 100 மில்லியன் பவுண்டுகள் வீதம் 37 வருடங்கள் ஜெர்மனி தவணை முறையாகச் செலுத்தலாம். இது தவிர 22 சிறிய தவணைகளிலும் செலுத்தலாம். யுங்திட்டம் எல்லாச் சிக்கல்களையும் தீர்த்துவிட்டது போல் தெரிந்தது. ஆனால் 1929-ல் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினால் ஜெர்மனி மீண்டும் கடனை அடைக்க முடியாமல் திணறியது. ஆனால் யங்திட்ம் செயல்படுத்தப்பட்ட பிறகு, 1930-ல் ரைன்லாந்துப் பகுதியிலிருந்து நேசப்படை விலகியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

**ரபெல்லா உடன்படிக்கை : 1922**

1922-ல் ஜெர்மனியும், ரஷ்யாவும் ரபெல்லா உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அதன்படி இரு நாடுகளுக்குமிடையே வியாபாரத் தொடர்பு சீரடைந்தது. மேலும் ராணுவ ரீதியாகவும் பரஸ்பரம் ஒத்துழைப்பு கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நாடுகளும் ஒன்றையொன்று அங்கீகரித்துக் கொண்டன.

**வெய்மார் குடியரசின் வீழ்ச்சி:**

1919-ம் வருடத்திற்கும் 1933-ம் வருடத்திற்குமிடையே ஜெர்மனியில் 19 மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. நாட்டின் அரசியலில் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை. அரசாங்கத்தால் ஜெர்மனியின்இழந்த புகழை மீண்டும் மீட்டுத்தர இயலவில்லை. ஜெர்மனியால் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை. வெளிநாட்டுப் பிரச்சனைகளிலும் எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. எனவே ஜெர்மமானியர்கள் இந்தப் பிரச்சனைகளையெல்லாம் தீர்ப்பதற்கு ஒரு வலிமையான தலைவரை எதிர்நோக்கி யிருந்தார்கள். தாங்கள் எதிர்பார்த்த தலைவரை ஹிட்லரிடம் கண்டார்கள். வெய்மார் குடியரசின் மீது மக்களுக்கு எவ்வித உற்சாகமோ நம்பிக்கையோ இல்லாத நிலையைப் பயன்படுத்தி கொண்ட ஹிட்லரின் நாசிக்கட்சி வளர்ந்தது. வெய்மார் குடியரசு வீழ்ச்சியடைந்தது.

## நாசி ஜெர்மனியும் அடால்ப் ஹிட்லரும்

ஜெர்மானிய வரலாற்றில் ஹிட்லரின் உயர்வு படிப்படியானதாகவும், சட்டப்பூர்வமானதாகவும் அமைந்த ஒன்றாகும். முதல் உலகப்போரின் போது ராணுவத்தில் சேர்ந்த அவர் கார்பொரலாக பணிப்புரிந்தார். தனது சிறந்த அறிவுகூர்மையினாலும் மக்களின் மனநிலையைப் புரிந்துக் கொள்ளும் திறமையினாலும் புகழ் ஏணியின் உச்சியை அடைந்தார். முதல் உலகப்போர் முடிவடைந்த பின் ஜெர்மனியில் அமைக்கப்பட்ட வெய்மார் குடியரசு பல பிரச்சனைகளினால் சிக்கித் தவித்துக் கொண்டியிருந்தது. அதிருப்தியடைந்த ஜெர்மானிய மக்கள் நாட்டிற்கு ஸ்திரத்தன்மையையும், செழிப்பையும் மதிப்பையும் கொண்டுவரும் எந்தத் தலைவரையும் எந்தக் கட்சியையும் அதன் கொள்கைகளையும் பின்பற்றத் தயாராயினார்.

ஹிட்லரின் நாசிக் கொள்கைகள் மக்களின் மனதைக் கவர்ந்தது. எனவே பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஹிட்லரின் நாசிக் கட்சியில் சேர்ந்தார்கள். படிப்படியாக மக்களின் ஆதரவால் உயர்ந்த ஹிட்லர், 1933 ஜனவரி 30-ல் ஜனாதிபதி வான்ஹிண்டன் பர்க் (Von-Hindanburg) என்பவரால் சான்சலராக நியமிக்கப்பட்டார். அத்துடன் வெய்மார் குடியரசு வீழ்ச்சியடைந்தது. பதவி ஏற்றதிலிருந்து சிறிது சிறிதாக

தனது கொள்கையைச் செயல்படுத்தி ஜெர்மனியை நாசிச மயமாக்கினார். உலகில் அழிவு சக்திக்கு வித்திட்டவர் அடால்ப் ஹிட்லர் ஆவார்.

**வெய்மார் குடியரசின் வீழ்ச்சிக்கும், நாசிசக் கட்சியின் எழுச்சிக்கும் காரணங்கள்:**

**1.ஜனநாயகக் கோட்பாட்டின் மீது ஜெர்மானிய மக்களுக்கு நம்பிக்கையின்மை**

வெய்மார் குடியரசு மூலமாக ஜெர்மனியில் ஒரு குடியரசு அமைக்கப்பட்டாலும் அது ஜெர்மானிய மக்களுக்குப் புரியாத ஒன்றாகவே காணப்பட்டது. ஜனநாயகக் கருத்துக்கள் மூலமாக மக்களிடம் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. பொருளாதாரத்துறையில் தனது தோல்வியை வெய்மார் குடியரசு ஒத்துக் கொண்டது. இது ஜனநாயகத்திற்கு பெரிய இழுக்கை கொண்டு வந்தது. பிஸ்மார்கின் காலத்திலிருந்தே ஜெர்மானிய மக்கள் எதேச்சதிகார ஆட்சியில் வாழ்நது வந்ததால் ஜனநாயகக் கருத்துக்கள் அவர்களிடம் வேரூன்றவில்லை. எனவே தான் வெய்மார் குடியரசு வீழ்ச்சியடைந்தது.

**2.வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையினால் ஜெர்மனிக்கு ஏற்பட்ட அவமானம்:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைகளின் விளைவாக ஜெர்மனி அவமானப்படுத்தப் பட்டது. அரசியல் ரீதியாக பொருளாதார ரீதியாக, ராணுவ ரீதியாக ஜெர்மனி நசுக்கப்பட்டது. ஜெர்மனி மீது திணிக்கப்பட்ட இந்த உடன்படிக்கையை, ஜெர்மானியர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகக் கருதினார்கள். இச்சூழ்நிலையில் நாசிக்கட்சி மின்னல் வேகத்தில் தனது கொள்கைகளையும் திட்டங்களையும் வெளியிடவே, அவைகள் எல்லா வகையான மக்களையும் கவர்ந்தன. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையால் ஜெர்மனி இழந்த புகழை திரும்பவும் பெற வழிவகைகளைச் செய்து தருவதாக ஹிட்லர் வாக்குறுதி அளித்தபோது நாசிக்கட்சி வளர்ந்தது. வெய்மார் குடியரசு மக்கள் மதிப்பை இழந்தது.

**3.அரசியல் ஸ்திரத் தன்மையின்மை:**

ஜேர்மனியில் அமைக்கப்பட்ட வெய்மார் குடியரசு ஒரு ஸ்திரமான அரசியல் தன்மையை நாட்டிற்கு வழங்கத் தவறிவிட்டது. 1919 முதல் 1933-ம் வருடத்திற்குள்ளாக 19 முறை மந்திரி சபைகள் மாற்றியமைக்கப்பட்டன. எனவே மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. அரசியல் ஸ்திர தன்மையில்லாததால் பொருளாதார, நல்வாழ்வுத் திட்டங்களை அரசால் முறையாகச் செயல்படுத்த முடியவில்லை. எனவே சிலர் வலிமைவாய்ந்த முடியாட்சி வேண்டுமென்றனர். சிலர் பொதுவுடைமை ஆட்சி வேண்டுமென்றனர்.அரசியல் ஸ்திரத் தன்மையை அளிப்பதாக வாக்குறுதி அளித்த நாசிக் கட்சியை மக்கள் நாடியதில் வியப்பில்லை.

**4.நாட்டில் நிலவிய பொருளதாரச் சீர்கேடுகள்:**

ஜெர்மனியின் பொருளாதார நிலை அபாயகரமான நிலையிலிருந்து வெய்மார் குடியரசின் பொருளாதாரத் திட்டங்கள் எல்லாம் தோல்வியடைந்தன. நாட்டில் பணவீக்கமும் வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவியது. இச்சூழ்நிலையில் ஹிட்லர் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் திட்டங்களை அறிவித்தார். மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த நாசிக்கட்சியிடம் நம்பிக்கை வைத்தார்கள். ஜெர்மனியின்

பொருளாதார நிலையை ஹிட்லரால்தான் மீட்க முடியும் என்று நினைத்தார்கள். எனவே நாசிக்கட்சி வளர்ச்சியடைந்தது.

**5.கம்யூனிச அபாயம்**

1917-ம் வருடம் ரஷ்யாவில் போல்சிவிக் புரட்சிக்குப் பிறகு கம்யூனிசக் கருத்துக்கள் ஜெர்மனியிலும் ஊடுருவின. மக்களிடம் ஏற்பட்ட கம்யூனிச பயத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது நாசிசக்கட்சி. வேய்மார் அரசு கம்யூனிச ரஷ்யாவுடன் செய்து கொண்ட ரபெல்லா உடன்படிக்கையை ஹிட்லர் கண்டித்தார். ஜெர்மானிய கம்யூனிசவாதிகள் பிரிவினைவாதிகள் என்று பிரச்சாரம் செய்தார். வெய்மார் அரசாங்கமும் கம்யூனிசத்தைக் கண்டு பீதியால் நடுங்கியபோது ஹிட்லர் மிகத் திறமையாக கம்யூனிச எதிர்ப்பை தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு, தொழிலாறர்களிடமும், படையினரிடமும், தொழிலதிபர்களிடமும் தனக்கு ஆதரவை பெருக்கிக் கொண்டார்.

**6.மக்களைக் கவர்ந்த ஹிட்லரின் குணநலன்களும் கொள்கைகளும்:**

ஹிட்லர் வரலாற்றில் காணப்பட்ட ஒரு அசாதாரணமான மனிதர். அவர் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைப்பற்றி வெளிப்படையாகவே கூறி அதை வன்மையாகக் கண்டித்தார். இழந்த ஜெர்மனியின் மரியாதையையும் புகழையும் மீட்க 25 திட்டங்களைக் கொண்ட வாக்குறுதிகளை வழங்கினார். அவரது வாக்குறுதிகள் நாட்டிலுள்ள ஒவ்வொரு பகுதியினரையும் திருப்திப்படுத்துவதாக அமைந்தது. இவரது நாசிக்கட்சி கம்யூனிச எதிர்ப்பு, யூதர்கள் எதிர்ப்பு, பொருளாதாரக் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே வளர்க்கப்பட்டது. மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்து கொண்ட அவர் அதற்கேற்றப்படி பேசி வந்தார். இவருடைய இனவெறிக் கொள்கை நல்ல பலன்களைத் தந்தது. ‘எனது போராட்டம்’ என்ற தனது சுயசரிதை மூலம் இளைஞர்களை கவர்ந்தார். அந்த நூல் இளைஞர்களிடம் எழுச்சியையும், ஜெர்மனிக்கு நேசநாடுகள் இழைத்த அநீதிக்குப் பழிவாங்கும் உணர்வையும் ஏற்படுத்தியது. ஹிட்லரின் கொள்கைகளைப் பின்பற்றி அவரது கட்சியில் இளைஞர்கள் சேர்ந்தார்கள். நாசிக்கட்சி வளர்ச்சியடைந்தது. மக்களின் ஆதரவுடன் சான்சலராகிப் பின்னர் சர்வாதிகாரியானார் ஹிட்லர்.

**நாசிக்கட்சியின் கொள்கைகள்:**

1. **அனைத்து அதிகாரமும் நாட்டிற்கே:**

நாசிசம் தனிமனிதனை விட தேசத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தது. தனிமனித உரிமைகள் தேசத்திற்காகத் தியாகம் செய்யப்பட வேண்டும். ஒரே மக்கள், ஒரே தலைவர்’ என்ற கோட்பாட்டைக் கொண்டது நாசிசம். கடமை, கட்டுப்பாடு, தியாகம் ஆகியவை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் பின்பற்ற வேண்டியவை ஆகும். ஹிட்லர் நாசிக் கட்சியின் தலைவராக மட்டுமல்லாது அரசாங்கத்தின் தலைவராகவும், தேசத்தின் தலைவராகவும், ராணுவத்தின் தலைவராகவும் கருதப்பட்டார். தேசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது நாசிசம்.

2. **தனிமனிதத் துதி**

நாசிசக் கட்சியின் கோட்பாட்டின்படி ஹிட்லர் கடவுளாக வழிபாடு செய்யப்பட்டார். “ஹிட்லரைத் தவிர வேறு கடவுள் இல்லை நாசிசத்தைத் தவிர வேறு கொள்கைகள் இல்லை” இதுவே தனி மனிதத் துதிக்கு வழிவகுத்தது. இயேசு கிறிஸ்துவை விட அதிக சக்தி கொண்டவராக ஹிட்லர் வணங்கப்பட்டார். “ஹிட்லர் பேசுவது வெறும் பேச்சல்ல. அது ஒரு சொற்பொழிவு. அவரது விவாதங்கள் எல்லம் தீர்ப்புகள் ஆகும்.

அவரது தடை முன்னேற்றத்தின் மைல் கல்லாகும்'' என்று ஹிட்லர் போற்றப்பட்டார். ஜெர்மானியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகக் காணப்பட்டார். இவ்வாறு 'தனி மனித துதி' நாசிக்கட்சியின் முக்கியக் கோட்பாடாகும்

### 3. தீவிர தேசியவாதமும் ஏகாதிபத்தியமும்

தீவிரமான நாட்டுப்பற்றும் ஏகாதிபத்தியமும் நாசிக் கட்சியின் முக்கிய கோட்பாடுகள் ஆகும். ஜெர்மனி இழந்த பகுதிகளைப் பெற்று ஜெர்மானியப் பேரரசை உருவாக்குவதே நாசிக்கட்சியின் கொள்கை. ஹிட்லர் வன்முறையைப் போதித்தார். அதனையே தேசியக் கொள்கையாக பாவித்து செயல்படுத்தினார். போரின் பெருமையை பறைசாற்றியது. நாசிசம். ''வாழும் மனிதர்கள் ஒவ்வொரு வரும் போர்புரிய வேண்டும். போர் புரிய விருப்பம் இல்லாதவர்கள் நாட்டில் வாழும் உரிமையை இழந்தவர்கள் ஆவார்கள்.'' இவ்வா஌ குறுகிய தேசப்பற்றையும் ஏகாதிபத்தியத்தையும், போர் புரிதலையும் முக்கியக் கொள்கைகளாகக் கொண்டிருந்தது நாசிக்கட்சி.

### 4. ஜெர்மானிய இனவெறி:

நாசிசம் ஜெர்மானிய இனவெறியை முக்கியக் கோட்பாடாக கொண்டிருந்தது. ஜெர்மானீய இனத்தவர்களே மிக உயர்ந்த ஆரிய இனத்தை சார்ந்தவர்கள். ஆரியர்கள் அல்லாதவர்கள் கலைக்கும் கலாசாரத்திற்கும் எவ்வித சேவையும் செய்யமுடியாது என்றார் ஹிட்லர். பிற இனத்தவரை ஆள்வதற்கு ஜெர்மானியருக்கே உரிமை உண்டு என்றார். உலகில் ஜெர்மானிய மக்களின் ஏகாதிபத்தியம் ஏற்பட வேண்டும். இவ்வாறு நாசிசம் இனவெறிக் கொள்கையை அடிப்படையாக கொண்டிருந்தது.

### 5. யூதர் எதிர்ப்புக் கொள்கை:

நாசிசத்தின் அடுத்த முக்கியமான கொள்கை அதன் யூத எதிர்ப்புக் கொள்கையாகும். ''யூதர்களே முதல் உலகப்போரில் ஜெர்மனி தோல்வியடைக் காரணம். யூதர்களும் யூதர்களை ஆதரிப்பவர்களும் ஜெர்மனியின் சாபம். யூதர்கள் குகுடியுரிமைக்குத் தகுதியற்றவர்கள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவது குற்றமாகும்'' இவ்வாறு கூறி யது இனத்தை ஒழிப்பதை ஹிட்லர் உரிமையுடன் கோரினார். எனவே நாசிசம் யூதர்களை ஒழிப்பதை முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தது.

### 6. கிறிஸ்துவ மதத்திற்கு எதிர்ப்பு:

நாசிசம் கிறிஸ்துவ மதத்தை எதிர்த்தது. ஏசு கிறிஸ்து ஆசியாவை சேர்ந்த யூதர் என்று அவரையும் புறக்கணித்தது. கிறிஸ்துவ மதத்தின் கோட்பாடுகளை எதிர்த்தார் ஹிட்லர். முக்களும் கிறிஸ்துவ மதத்தை எதிர்க்கும் உளவுக்கு ஹிட்லர் மீது மதிமயங்கி காணப்பட்டார்கள்.

### 7. போருக்காக ஆண்கள், குழந்தை பெறுவதற்காகப் பெண்கள்

நாசிசத்தின் கொள்கைப்படி, மிக உயர்ந்த இனமக்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே பெண்கள் கருதப்பட்டார்கள். ஜெர்மானிய இனத்தைப் பெருக்குவதற்காக முறையற்ற வகையில் பெண்கள் ஈடுபடுவதை நாசிசம் வரவேற்றது. ஏனெனில் ஏகாதிபர்தியக் கொள்கையில் வெற்றிபெற வேண்டுமானால், உயர்ரக ஜெர்மானிய இன ஆண்கள் தேவை. எனவே தான் 'போரில் ஈடுபடுவது ஆண்களின் கடமை என்றும், அவர்களைப் பெற்று தருவது பெண்களின்

கடமை’என்றும் நாசிசம் கூறியது. இதற்காகவே தனியாக செயல்திட்டம் (project) ஒன்று வகுக்கப்பட்டது.

நாசிசக் கட்சி ஸ்வஸ்திக் குறியை தனது சின்னமாகக் கொண்டது. நாசிக் கட்சியினர் ராணுவப் பயிற்சி பெற்று “பழுப்பு நிறச்சட்டை’ களை அணிந்தார்கள். எனவே அவர்கள் ‘பழுப்புச் சட்டையினர்’ (Brown Shirts) என்றழைக்கப்பட்டனர். நூசிக் கட்சியின் வெற்றிக்கு முக்கியக் காரணம் கொள்கை பரப்புச் செயலாளர் ஜோசப் கோயபல்ஸ் ஆவார். ஒரு பொய்யை இரண்டு முறை கூறினால் உண்மையாகிவிடும் என்று அவர் நம்பினார். பத்திரிக்கை, ரேடியோ ஆகிய சாதனங்களைத்தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து தனது பேச்சாற்றல் மூலம் நாசிக் கட்சியின் கொள்கைகளைப் பரப்பினார். “பத்திரிக்கை பியானோ போன்று இருக்க வேண்டும். அது அரசாங்கத்தினர் வாசிப்பதற்குத் தகுந்தபடி இசை கொடுக்க வேண்டும்’ என்றார் கோயபல்ஸ்.

**ஹிட்லரின் வாழ்க்கைக் குறிப்பு**

ஹிட்லர் 1889-ம் வருடம் ஏப்ரல் 20-ல் ஒரு கீழ்நிலை நடுத்தரக் குடும்பத்தில் ஆஸ்திரியாவிலுள்ள ‘பிரானு’ (டீசயரயெர) என்ற ஊரில் பிறந்தார். ஹிட்லர் பிறப்பாலோ அல்லது படிப்பாலோ் எந்த உயர்வையும் பெற்றிருக்கவில்லை. சுங்க அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற தனது தந்தையுடன் சண்டையிட்டு வீட்டை விட்டு ஓடினார். ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவிற்கு வந்து அலைந்து திரிந்தார். அங்குள்ள ஒரு “Art academy’ ல் சேர தேர்வு எழுதினார். ஆனால் அந்த தேர்வில் பெயிலாகிவிட்டார். வேறு வேலையில்லாததால் அன்றன்று உழைத்துச் சாப்பிடும் நிலையில்தான் இருந்தார். ஆனால் ஹிட்லரிடம் சிகரெட், குடி, பெண்சகவாசம் போன்ற எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. அவரது தோற்றத்திலும் எவ்வித சிறப்பும் இல்லை. இவ்வாறு எந்தச் சிறப்பும் இல்லாத ஒரு சாதரண வாழ்க்கையே வாழ்ந்து வந்தார்.

வியன்னாவில் இவரது நேரப்போக்கு அரசியலைப் பற்றி பேசுவதுதான். 1913-ல் வியன்னாவிலிருந்து மியுனிச் நகர் வந்தார். அங்கு அவர் வாழ்த்து அட்டைகளில் வர்ணம் தீட்டி விற்றும், வீடுகளுக்கு வெள்ளையடித்தும் பிழைத்து வந்தார். இந்த மாதிரியான வாழ்க்கை 1914 வரை முடிந்தது. அப்போது அவருக்கு வயது 24 ஆகும்.

1914, ஆகஸ்ட் மாதம் ஒரு ஆஸ்திரியன் என்ற முறையில் ஜெர்மானியப் படையில் சேர பவேரிய மன்னர் மூன்றாம் லூட்விக் (King Ludwig, III) கிடம் விண்ணப்பித்தார். அனுமதி கிடைத்தபின் பவேரிய பீரங்கிப் படையில் சேர்ந்து பணியாற்றினார். முதல் உலகப்போரில் நான்கு ஆண்டுகள் படைத்துறை சிற்றலுவலராகப் (Corporal) பணிபுரிந்தார். போரில் செய்த சேவைக்காக ‘iron cross’ என்ற விருதைப் பெற்றார். ஆனால் போரில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அதன்பின் முழுநேர அரசியல்வாதியானார்.

போருக்குப் பிறகு மியுனிச்சில் அரசாங்கத்தினால் அரசியல் துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார். போர் முடிந்த அந்த நேரத்தில்தான் யூதர்கள், செக், போலந்து இனமக்கள் ஆகியோரை வெறுத்தார். ‘விரோதிகள் துப்பாக்கிகளை விட இவர்கள் கொடியவர்கள்’ என்றார். இந்த வெறுப்பின் அடிப்படையிலேயே இவரது அரசியல் கொள்கைகள் அமைந்தன. தேசப்பற்று என்பது ஹிட்லரைப் பொறுத்த அளவில் ‘ஜெர்மானிய இனத்தின் உயர்வில்தான்’. ரோமானிய வரலாறு, யோகா, சோதிடக்கலை (astrology) சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படித்தார். தனது பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார். சமுதாயத்தில் கீழ்மட்ட மக்களை எப்படி வசப்படுத்துவது என்பதையும்

புரிந்து கொண்டார். ஹிட்லரது கண்கள் ஹிப்னாடிச சக்தி கொண்டது. அவரது கண்களைப் பார்ப்பவர்களுக்கு பயம் ஏற்படும்.

1918-ல் மியுனிச்சில் உள்ள டீநயசா-ர்யடட-ல் ஏழுபேர் கொண்ட கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு, யேவழையெ ளுழஉயைடளைவ புநசஅயெ றழசமநசள ிசவல ஒன்று ஜூலியஸ் ஸ்டிரிச்சர் (துரடரைள ளுவசநஉைாநச) என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இக்கட்சியில் சேர்ந்த ஹிட்லர் ஒரு பிரபலமான உறுப்பினர் ஆனார். இக்கட்சியே 'நாசிக்கட்சி' என்று அழைக்கப்பட்டது. யேவழையெட ளுழஉயைடளைஅ என்பதின் சுருக்கமே யேணுஐ ஆகும். 1920-ல் ஹிட்லர் நாசிக் கட்சியின் 21 கொள்கைகளை வெளியிட்டார். நாசிக் கட்சியில் கொள்கைகள் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. இக்கட்சி நீட்சே (ழேைவணளஉாந)யின் நிகிலிசக் கருத்துக்களையும், ஹெகலின் (ர்நபயட) தீவிரமான மறுதலிப்பு மற்றும் குறுகிய தேசியக் கருத்துக்களையும், ரோசன்பர்கின் (சுழளநடிநசப) இன வெறிக் கொள்கையையும் கொண்டிருந்தது. நாசிசக் கட்சியின் தலைவரான ஹிட்லர் 1924-ம் வருடம் முதல் 1930 வரை கட்சியைப் பலப்படுத்தினார். 1932-ல் நாசிக்கட்சிக்கு ரெய்ஸ்டாக்கில் 23 இடம் கிடைத்தது. நாசிக் கட்சியின் சின்னம் 'ஸ்வஸ்திக்' ஆகும். நாசிக் கட்சியினர் 'பழுப்பு நிற' உடை அணந்தனர்.

1933-ம் ஆண்டு ஜனவரி 30-ம் தேதி ஜெர்மானிய ஜனாதிபதி ஹிண்டன்பர்க் ஜெர்மனியின் சான்சலராக ஹிட்லரை நியமித்தார். இவ்வாறு அரசியலமைப்பின்படி, பாராளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெற்றிருந்த நாசிக் கட்சியின் தலைவர் ஹிட்லர் சான்சலரானார். பதவியேற்ற பின் ஹிட்லர் தன்னை வலிமைப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கினார். 1933, மார்ச் 5-ல் புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது. அதில் 288 இடங்களை நாசிக் கட்சி பிடித்தது. 1934-ல் ஜனாதிபதி ஹிண்டன்பர்க் இறக்கவே ஹிட்லர் ஜனாதிபதியின் எல்லா அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டார். பின்னர் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஜெர்மனியை நாசிச மயமாக்கினார். வெளியுறவில் ஆக்கிரமிப்புக் கொள்கைகளைப் பின்பற்றி இரண்டாம் உலகப்போருக்குக் காரணமானார். போரின் இறுதியில் தோற்கடிக்கப்பட்ட ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

**ஹிட்லரின் உள்நாட்டுக் கொள்கை: (ஜெர்மனி நாசிச மயமாக்கப்படுதல்)**

1. **அரசியல் கட்சிகள் மீது தடை**
   சான்சலராகப் பதவி ஏற்ற ஹிட்லர் ஜெர்மனியில் புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார். ஆனால் அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே ஜெர்மானியப் பாராளுமன்றமான 'ரெய்ஸ்டாக்'கை நாசிக் கட்சியின் ஏஜண்டுகள் தீ வைத்துக் கொளுத்தினர். ஆந்தப் பழியை கம்யூனிசக் கட்சியினர் மீது போட்டு, அக்கட்சியை தேர்தலில்நிற்கவிடாமல் தடை செய்தார் ஹிட்லர். பின்னர் நடைபெற்ற புதிய தேர்தலுக்குப் பிறகு கூடிய ரெய்ஸ்டாக் Enabling Act என்ற சட்டத்தை இயற்றி ஹிட்லருக்கு சர்வாதிகார அதிகாரங்களைக் கொடுத்தது. அதன்படி 1933, ஜீலை 4-ல் ஹிட்லர், நாசிக் கட்சியை தவிர எல்லாக் கட்சிகளையும் தடை செய்தார்.

2. **வெய்மர் குடியரசின் முடிவு:**

   Enabling Act இயற்றப்பட்டவுடனேயே வெய்மார் குடியரசு தனது அனைத்து அதிகாரங்களையும் இழந்தது. ஆணைகளை வெளியிட்டே ஆட்சி நடத்தினார் ஹிட்லர். ஏல்லா அதிகாரங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஒருமகப்படுத்தி விட்டதால் கூட்டாட்சி மாகாணங்கள் தங்கள் அதிகாரங்களை இழந்தன. ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்த மாகாண சட்டமன்றங்கள் (Diet)

ஒழிக்கப்பட்டன. அதற்குப் பதிலாக நாசிகளைக் கொண்ட மந்திரிசபை அமைக்கப்பட்டது.

3. **ஜனாதிபதியின் அதிகாரங்களையும் ஹிட்லர் ஏற்றுக் கொள்ளுதல்:**

   1934, ஜீன் 30-ம் தேதி ஜனாதிபதி ஹிண்டன்பர்க் இறந்தவுடன் ஹிட்லர் ஜனாதிபதியின் அதிகாரங்களையும் தேர்த்து ஏற்றுக் கொண்டார். இந்த புதிய பதவிக்கு 'imperial leader' (Reichs Fuhere) என்று பெயர். இதற்கு ஒப்புதல் அளிக்க மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 38 மில்லியன் ஜெர்மானியர்கள் ஹிட்லர் ஜனாதிபதியின் அதிகாரங்களை எடுத்துக் கொண்டதற்கு ஒப்புதல் அளித்தார்கள். இவ்வாறு மக்களின் ஆதரவுடன் ஜெர்மனியின் பெருந்தலைவர் ஆனார் ஹிட்லர்.

4. **கெஸ்டபோ' என்ற ரகசிய போலீஸ்துறை அமைப்பு:**
   ஹிட்லர் 'கெஸ்டபோ' (Gestapo) என்ற ரகசியப் போலீஸ் துறையை ஹின்ரிச் ஹிம்லர் என்பவர் தலைமையில் அமைத்தார். (Gestapo- என்றால் geheime state polizei (or) Secret state police என்று பெயர். இதன் முக்கிய நோக்கம் ஹிட்லரை எதிர்க்கும் சக்திகளையெல்லாம் நசுக்குவதேயாகும். இதன் விளைவாக கட்சியிலும் ஆட்சியிலும் ஹிட்லரின் கொள்கையை எதிர்த்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தனக்கு இருந்த எதிர்ப்புகளையெல்லாம் இதன் மூலம் அறவே ஒழித்துக்கட்டினார் ஹிட்லர். ஆதன்பின் 1934, ஆகஸ்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டப்படி ஜெர்மனியின் முப்படைகளின் தலைவரானார் ஹிட்லர்.

**5.ஜெர்மனி நாசிச மயமாக்கப்படுதல்**

ஜேர்மனியில் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கையிலும் நரிசிகளின் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தார் ஹிட்லர். ஹிட்லரின் கருத்துக்கள் அவரது "எனது போராட்டம்" (Meincampf) என்ற நூலில் மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்புத்தகத்தை டுயனௌடிநசப என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த போது ஹிட்லர் எழுதினார். இஸ்லாமிய நாடுகளின் ஆட்சியில் குர்-ஆன் எந்த இடத்தை பெற்றுள்ளதோ அதே போன்ற இடத்தைத் தனது நூலும் பெற வேண்டும் என விரும்பினார். லட்சக்கணக்கில் மெயின்காம்ப் பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. ஜெர்மானியர் அனைவரும் அந்த நூலை வைத்திருப்பது கடமை என்று அறிவிக்கப்பட்டது. அந்த நூலில் காணப்பட்ட கருத்துக்கள் எல்லாம் கோயபல்ஸினால் பரப்பபட்டது. பத்திரிக்கைகள், பல்கலைக்கழகங்கள், நாடக அரங்குகள், சினிமாக்கள் ஆகியவை நாசிச மயமாக்கப்பட்டன. நாசிசக் கொள்கைகளுக்கு ஏற்ப கல்விபாடத்திட்டங்கள் மாற்றப்பட்டன. இவ்வாறு ஜெர்மனி நாசிச மயமாக்கப்பட்டது.

5. **ஹிட்லரின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள்**

ஹிட்லர் பதவியேற்ற பின்னர் ஜெர்மனியின் வளத்தை பெருக்குவதற்கு திட்டமிட்ட பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட பல சீர்திருத்தங்கள் மேற்கொண்டார். விவசாய உற்பத்தியை அதிகரிக்கும்படி விவசாயிகளுக்கு நிலங்களையும் கொடுத்து விவசாய செலவுக்கு கடனும் வழங்கினார். 1933-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி உணவுக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது உணவுப் பொருட்களின் உற்பத்தி விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபத்தியது. பயன்படுத்தப்படாத நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகளை மேற்கொண்டார்

ஹிட்லர். இம்முயற்சிகளின் விளைவாக 1939-ம் ஆண்டுக்குள்ளாக விவசாய உந்பத்தி ஐம்பது சதவிதத்திற்கு மேல் உயர்ந்தது.

ஜெர்மனியின் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டது. தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் சட்ட விரோதமாக்கப்பட்டன. தொழிலாளர்கள் கிட்டதட்ட அடிமை போல் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஆனாலும் இவரது பொருளாதாரத் திட்டங்கள் மூலம் தொழில் உற்பத்தி அதிகரித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட்டது. ஜெர்மனி ஒரு தன்னிறைவு பெற்ற நாடானது.

**7.யூதர்களுக்கு எதிரான நடவடிக்கைகள்**

ஹிட்லர் யூதர்கள் மீது எப்போதும் ஒரு வெறிபிடித்த வெறுப்பைக் கொண்டியிருந்தார். அவர்களை ஜெர்மானிய இனத்தின் பகைவர்கள் என்றார். யூதர்களின் இனக்கலப்பால் ஜெர்மனியின் தூய்மையான ஆரிய இனத்திற்குத் தீங்கு ஏற்படும் என்றார். எனவே அவர்களைக் கூண்டோடு ஒழிக்கத் திட்டமிட்டார். யூதர்களின் ஓட்டுரிமை, பத்திரிக்கைகள் அச்சிட்டு வெளியிடும் உரிமை ஆகியவற்றை ஒழித்துக்கட்டினார். பல்கலைக் கழகங்களிலிருந்தும், பல்வேறு தொழில்களிலிருந்தும், எல்லாவித வாணிப அமைப்புகளிலிருந்தும் யூதர்கள் விலக்கப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விஷவாயு கூடாதரத்துக்கள் அடைத்துக் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டார்கள். சுமார் 60 லட்சம் யூதர்கள் மாண்டார்கள். உயிர் தப்புவதற்காகப் பலர் ஜெர்மனியை விட்டே ஓடினார்கள். ஹிட்லரின் இரக்கமற்ற, நீதியற்ற இச்செயல்களுக்கு இணையாக ஒரு செயலை எந்த ஒரு நவீன கால அரசாங்கத்திலும் காண முடியாது!

ஹிட்லரின் ஆட்சி மிகக் கடுமையாக இருந்த போதிலும் மக்கள் அதனை ஆதரித்தனர். ஹிட்லரின் விருப்பங்களே நாட்டின் சட்டமாயின. அவரது முடிவே இறுதியானது. இவ்வாறு ஜெர்மனி நாசிசமயமானது.

**ஹிட்லரின் வெளிநாட்டுக் கொள்கை: (ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் (Or) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஹிட்லரின் பொறுப்பு**

ஹிட்லர் தனது தன்னிகரற்ற தலைமைத் தன்மையினாலும், மக்களுக்கு அவரிமிருந்த அளவிட முடியாத நம்பிக்கையினாலும் தன்னுடைய திட்டங்களை தங்கு தடையின்றி செயல்படுத்த முற்பட்டார். ஜெர்மானிய மக்கள் அவர் மீது முழுநம்பிக்கை வைத்திருந்ததால் தனது வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்ற முடிந்தது. எனவேதான் இவர் மிகத் தீவிரமான கொள்கையைப் பின்பற்றி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதுவே இரண்டாம் உலகப்போருக்கு காரணமானது.

**ஹிட்லரின் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கங்கள்**

1. ஜேர்மனிக்குத் தாங்கமுடியாத அவமானத்தையும் இழப்பையும் ஏற்படுத்திக் கொடுத்த வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைத் தகர்த்தெறிவது.
2. ஐரோப்பாவில் புதிய நிலப்பகுதிகளைப் பெற்று ஜெர்மானிய அரசின் எல்லைகளை விரிவடையச் செய்வது. மேலும் அந்தப்பகுதிகளில் ஜெர்மானிய மக்களை குடியமர்த்துவது.
3. ஊலக அளவிலும் பல குடியேற்றப் பகுதிகளைப் பெற்று ஜெர்மனியை இங்கிலாந்துக்கு நிகரான அதிகாரங்கள் கொண்ட ஒரு குடியேற்றப் பேரரசாக்குவது.
4. ஜேர்மானியர்கள் வாழும் பகுதிகளையெல்லாம் ஜெர்மானிய அரசின் கீழ் இணைப்பது.

5. ஜேர்மனியை ஐரோப்பாவில் வலிமை மிகுந்த வல்லரசு நாடாக மாற்றி அதன் பெருமையையும், புகழையும் மீண்டும் நிலை நாட்டுவது ஆகியவை ஆகும்.

**வெளிநாட்டுக் கொள்கையின் செயல் வடிவம்:**

**1.உலகப்படைக் குறைப்பு மாநாட்டை புறக்கணித்தல்**

1932-ல் ஜெனிவாவில் உலகப்படைக் குறைப்பு மாநாடு கூட்டப்பட்டது. இதில் ஜெர்மனி உட்பட 61 நாடுகள் பங்கு கொண்டன. இந்த மாநாட்டில் படைக்கலங்களை வாங்குவதற்கு பிற நாடுகளுக்குச் சமமாக ஜெர்மனி நடத்தப்பட வேண்டுமென்று ஜெர்மானிய பிரதிநிதிகள் வற்புறுத்தினார்கள். இதனைப் பிரெஞ்சுப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே 1933 அக்டோபர் மாதம் உலகப்படைக்குறைப்பு மாநாட்டிலிருந்து ஜெர்மனி வெளியேறியது அதோடு மட்டுமில்லாமல், சர்வதேச சங்கத்திலிருந்தும் வெளியேறியது. ஹிட்லரின் இந்த நடவடிக்கை சர்வதேச சங்கத்திற்கு சாவுமணி அடித்தது.

**2.டான்சிக் பகுதியை நாசிசமயமாக்குதல்**

ஹிட்லர் பதவியேற்ற பிறகு ஜெர்மானிய எல்லைக்களுக்கு அப்பால் இருந்த பகுதிகளையும் நாசிச மணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். போலந்திலுள்ள டான்சிக் நகரத்தில் நாசிச ஏஜண்டுகளை ஊடுருவச் செய்து தனக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய வைத்தார். 1933 மே மாதம் அங்கு தேர்தல் நடைபெற்ற போது ஹிட்லரின் ஆதரவாளர்களே பெரும் வெற்றி பெற்றார்கள். டான்சிக்கில் ஹிட்லரின் செல்வாக்கு நிலை நிறுத்தப்பட்டது.

**3.போலந்துடன் உடன்படிக்கை: 1934**

ஹிட்லர் போலந்துடன் 1934 ஜனவரியில் பத்து வருடகால போர்த்தடை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இதனால் ஜெர்மனிக்கு நல்ல பலன் கிடைத்தது. ஜெர்மனி இன்மேல் ஒரு தனிமையான நாடு இல்லை என்பதையும், போலந்துக்கு வலிமை மிக்க ஜெர்மனியிடமிருந்து எந்த அபாயமும் இல்லை என்பதையும் இந்த உடன்படிக்கை உறுதி செய்தது. ரஷ்யாவுக்கும் ஜெர்மானிக்குமிடையே ஒரு இடைபடு நாடாக போலந்து மாறியது. ஆனால் பின்னர் ஹிட்லர் இந்த உடன்படிக்கையை மிதித்து நடக்கவில்லை.

**4.சார்பள்ளதாக்கில் வாக்கெடுப்பு: 1915**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைப்படி சார்பள்ளதாக்கு ஜெர்மனியிடமிருந்து பிரிக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட்டது. அத்துடன் சுமார் பதினைந்து ஆண்டுகாலம் பிரான்ஸ் நாட்டிற்கு சார் பள்ளதாக்கிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்துக் கொள்ளவும் உரிமையளிக்கப்பட்டது. பதினைற்து ஆண்டு காலம் முடிந்த பின்னர், ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டபடி, தங்களின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள 1934 ஜனவரியில் சார் பள்ளதாக்கில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. சுமார் ஐந்து லட்சம் மக்கள் ஜெர்மனியுடன் இணைவதாக வாக்களித்தனர். அதன்படி 1935, மார்சட 1-ம் தேதி சார் பள்ளதாக்கு ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டது. இது நாசிக் கட்சியின் பிரச்சாரத்திற்கு கிடைத்த வெற்றியாகும். ஹிட்லரின் புகழ் உயர்ந்தது.

**5.உடன்படிக்கையை மீறி படைப்பெருக்கம்**

1935, மார்ச் மாதம் ஹிட்லர் ஜெர்மனியின் படைபலப் பெருக்கத்தில் ஈடுபட்டார். வெளிப்படையாகவே 'ஜெர்மனி விமானப்படை ஒன்றை ஏற்படுத்தி உள்ளது' என்று

அறிவித்தார். 36 பகுதிகளைக் கொண்ட மொத்தம் 5,35,000 வீரர்களைக் கொண்ட ராணுவத்தைத் திரட்டினார். ஹிட்லரின் இந்த நடடிவக்கைகள் ஒரு தலைப்பட்சமாக வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களை மீறிய செயலாகும்.

**6.ஸ்ட்ரெஸ்ஸா மாநாடும், ஆங்கிலோ ஜெர்மானிய கடற்படை ஒப்பந்தமும்: 1935, ஜீன்**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் விதிகளை மீறிய ஜெர்மனியின் செயல்கள் பற்றி விவாதிக்க ஸ்ட்ரெஸ்ஸாவில், மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. அதில் உடன்படிக்கையை மீறிய ஜெர்மனி மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் அந்தத் தீர்மானம் சர்வதேச சங்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்டது. இதனால் ஜெர்மனியில் இங்கிலாந்திற்கு எதிரான வெறுப்பு அதிகமானது.

இந்த வெறுப்பைக் குறைக்கும் பொருட்டு ஜெர்மனியுடன் கடற்படை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள முன்வந்தது இங்கிலாந்து. அதன்படி 1935, ஜீன் மாதம் ஆங்கிலோ-ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் படி ஆங்கிலேயரின் கப்பற்படை பலத்தில் 35 சதவீதமும், நீர்முழ்கிக் கப்பற்படை பலத்தில் சமநிலையும் ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டது. இந்த உடன்பாடு, ஸ்ட்ரெஸ்ஸா மாநாட்டின் முடிவுகளை மீறுவதாகவும், இங்கிலாந்தின் இரட்டை வேடத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்தது. ஒரு பக்கம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறும் ஜெர்மனியைக் கண்டிப்பது, மறுபக்கம் அதன் ராணுவப் பெருக்கத்திற்கு உதவி செய்வது என்ற இங்கிலாந்தின் இரட்டைவேடம் வெளிப்பட்டது. மேலும் இது உடன்படிக்கையை மீறி செயல்படும் ஹிட்லருக்கு ஊக்கமளிப்பது போல் இருந்தது.

**7.ரைன்லாந்தை ராணுவ மயமாக்குதல்:1936**

1936, மார்ச்மாதம், வெர்செய்ல்ஸ் மற்றும் லொக்கார்னோ உடன்படிக்கைகளை மீறி, ரைன்லாந்துப் பகுதி மீண்டும் ராணுவ மயமாக்கப்படும் என்று ஹிட்லர் அறிவித்தார். சுமார் இருபதாயிரம் ஜெர்மானிய வீரர்கள் ரைன்லாந்துப் பகுதிக்குள் நுழைந்தனர். இதனால் இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. சர்வதேச சங்கம் ஹிட்லரின் இந்தச் செயலைக் கண்டித்ததுடன் நிறுத்திக் கொண்டது. ஸ்டாலின் மேற்கத்திய நாடுகளின் நோக்கங்களைக் குறித்து சந்தேகம் கொண்டார். ஆனால் ஜெர்மனியின் கம்யூனிசத்திற்கு எதிரான நிலையைச் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் ஹிட்லர் என்பதே உண்மை.

**8.ரோம்-பெர்லின்-டோக்கியோ அரசு ஒப்பந்தம்: 1937**

முதலாவது உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனியில் ஏறப்பட்ட மாறுதல்கள் நேரடியாக இரண்டாவது உலகப்போருக்கு வழி வகுத்தன. அவற்றில் மிக முக்கியமானது ரோம்-பெர்லின்-டோக்கியோ ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்டதாகும். ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியை வெகுவாகக் கவர்ந்தன. இதன் விளைவாக 1936, அக்டோபர் 21-ம் தேதி இரண்டு நாடுகளும் ரோம்-பெர்லின் அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. 1937-ல் ஏகாதிபத்திய வெறி கொண்ட ஜப்பானும் சேர்ந்து கொள்ளவே ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு ஒப்பந்தமாகியது. இந்த ஒப்பந்தம் ஹிட்லருக்கு மேலும் அதிக தைரியத்தை அளித்தது.

**9.ஸ்பானிய உள்நாட்டுப் போரில் தலையீடு:**

1936-ல் ஸ்பெயினில் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. ஜெனரல் பிராங்கோ என்பவர் அரசாங்கத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்தார். அவருக்கு முசோலினி உதவி செய்தது

போல ஹிட்லரும் உதவி செய்தார். படைக்கலங்களையும், ராணுவவீரர்களையும் பிராங்கோவுக்கு ஆதரவாக அனுப்பினார். பிராங்கோ தான் உண்மையான ஆட்சியாளர் என்று ஜெர்மனி அங்கீகரித்தது. 1939-ல் ஸ்பெயின் முழுவதும் சர்வாதிகாரி பிராங்கோ கட்டுப்பாட்டில் வந்தது. இது ஹிட்லருக்கு பெரும் வெற்றியையும் நம்பிக்கையையும் அளித்தது.

**10.ஹிட்லரின் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பு: அன்சுலஸ்)1938 ஏப்**

ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு நல்ல சூழ்நிலை காணப்பட்டது. இத்தாலி, ஜப்பான், போலந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் ஹிட்லர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அவரது ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு ஊக்கமளித்தன. எல்லா உடன்படிக்கைகளையும் மீறிய ஹிட்லர் ஜெர்மனியுடன் ஆஸ்திரியவை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைப்பதற்கு ‘‘அன்சுலஸ்’’ (Anschluss-Union) என்று பெயரிட்டார்.

ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்றவகையில் உலக சூழ்நிலையும் இருந்தது. ரோம் பெர்லின் டோக்கியோ ஒப்பந்தம் ஹிட்லருக்கு வலிமை அளித்தது. பிரான்ஸ் உள்நாட்டுக் குழப்பங்களில் மூழ்கிக்கிடந்தது. ரஷ்யா மேற்கத்திய நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருக்கவில்லை. இங்கிலாந்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியுட’ எந்தப் போரிலும் கலந்து கொள்வதில்லை என்ற கொள்கையினடிப்படையிலேயே செயல்பட்டன. அமெரிக்காவோ ‘தனிமை’ கொள்கையைப்’ பின்பற்றி நடுநிலை வகித்து வந்தது. இச்சூழ்நிலையில் தான் ஹிட்லர் தனது ஆஸ்திரிய ஆக்கிரமிப்பை ஆரம்பித்தார்.

ஹிட்லரின் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பிற்கு பெரிதும் உதவியர் வான்பாப்பன் (Vonpapen) என்பவராவார். இவர் வியன்னாவில் ஜெர்மானிய மந்திரியாக ஹிட்லரால் நியமிக்கப்பட்டிருந்தார். இவருடைய தலைமையில் ஆஸ்திரியாவில் 40,000 நாசிக்கட்சியினர் இருந்தனர். ‘சச்நிக்’ (Sehuschnigg) என்பவர் ஆஸ்திரியப் பிரதமராக இருந்தார்.

1938, பிப்ரவரி மாதம் சச்நிக்கை தனது மாளிகைக்கு வரவழைத்தார் ஹிட்லர். ஆஸ்திரிய நாசித்தலைவரான ஆர்தர்சையஸ் இன்குவார்ட் (Arther Seyss Inquart) உட்பட சில நாசிகளை அவரது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள கட்டாயப்படுத்தினார். ஆஸ்திரியா நாசிசமயமாக்கப்படுதலை விரும்பாத சச்நிக் ‘ஆஸ்திரியா சுதந்திரமாக இருக்க வேண்டுமா அல்லது ஜெர்மனியுடன் இணைய வேண்டுமா என்பதைப்பற்றி அறிய 1938, மார்ச் 13-ல் வாக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டார்.

ஆனால் வாக்கெடுப்பு நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஹிட்லர் தனது படைகளுடன் ஆஸ்திரியாவிற்குள் நுழைந்தார். ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் ஹிட்லருக்கு எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. சையஸ் இன்குவார்ட் நாசி கவர்னராக நியமிக்கப்பட்டார். ஆஸ்திரிய பிரதமர் சச்நிக் கைது செய்யப்பட்டார். 1938, ஏப்ரல் மாதம் ஆஸ்திரியா ஜெர்மனியுடன் இணைத்து விட்டதாக அறிவித்தார் ஹிட்லர். இந்த இணைப்பினால் ஜெர்மனிக்கு ரோடுமார்க்கம், ரயில்மார்க்கம், நதிமார்க்கமாக பல தொடர்புகள் கிடைத்தன. மேலும் 66 மில்லியன் மக்கள் தொகையும், பல சுரங்கங்கள், வங்கிகளில் வைக்கபட்டியிருந்த கையிருப்புகள் ஆகியவையும் ஜெர்மனிக்கு கிடைத்தன. எதிர்ப்புகள் வலிமையாக இல்லாது போகவே தனது அடுத்த கவனத்தை செக்கோஸ்லோவேகியா மீது திருப்பினார் ஹிட்லர்.

**11.செக்கோல்லோவேகியா ஆக்கிரமிப்பு: 1938 செப்**

முதல் உலகப்போரின் முடிவில் புதிததாக உருவாக்கப்பட்ட நாடுகளில் செக்கோஸ்லோவேகியாவும் ஒன்று. அங்கு அறுபது சதவீதம் செக் இனத்தவர்களும், மீதி ஜெர்மன், போலந்து, ஸ்லாவ் இனத்தவர்களும் வாழ்ந்து வந்தனர். செக்கோஸ்லோவேகியாவிலுள்ள ‘சுடட்டன்லாந்து’ (Suddentenland) என்ற பகுதியில் வாழ்ந்து வந்த ஜெர்மானியர் தங்களது ஜெர்மானிய தேசப்பற்றை மறக்கவில்லை. செக்கோஸ்லோவேகியாவில் தலையிடுவதற்கு இந்த சுடட்டன்லாந்து ஜெர்மானியர் பிரச்சனை நல்ல சந்தர்ப்பத்தை ஹிட்லருக்கு அளித்தது.

1938, மார்ச் மாதம் பிரான்சும், ரஷ்யாவும் செக்கோஸ்லோவேகியாவைப் பாதுகாப்பதாக வாக்களித்தன. ஆனால் ஹிட்லர் இதனைக் கண்டு கொள்ளவில்லை. காரணம், ஜெர்மனியின் கிழக்குப் பகுதியில் போலந்து ஒரு அரணாக இருப்பதாலும், அதனுடன் ஹிட்லர் உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததாலும், அவ்வளவு எளிதில் சோவியத் ரஷ்யா செக் பிரச்சனையில் தலையிட முடியாது. மேலும், மேற்குப் பகுதியில் ரைன்லாந்தில் ஹிட்லர் படைபலத்தை பெருக்கிக் கொண்டதால், பிரான்சும், அவ்வளவு எளிதில் செக் பிரச்சனையில் உதவி செய்ய முடியாது. மேற்கண்ட சூழ்நிலையில் செக்கோஸ்லோவேகியாவை ஆக்கிரமிக்க ஹிட்லர் துரிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

### சுடட்டன்லாந்து ஜெர்மானியர்களுக்கு சுயநிர்ணய உரிமையை ஹிட்லர் கேட்டல்:

சுடட்டன்லாந்து ஜெர்மானியர்கள் கொனார்ட் ஹென்லின் (Honard Henlein) என்பவர் தலைமையில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1938, செப்டம்பர் மாதம் ஹிட்லர்,‘‘சுடட்டன்லாந்து ஜெர்மானியர்களுக்கு செக்கோஸ்லோவேகியா நிர்ணய உரிமை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் அவர்களின் பாதுகாப்பிற்கு ஜெர்மானியப் படைகள் அனுப்பப்படும்’ என்று எச்சரித்தார். இச்சூழ்நிலையில் பிரான்சும், இங்கிலாந்தும் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிக் காணப்பட்டன. செக்கோஸ்லோவேகியாவிற்கு ஆதரவளித்தால், போர் தவிர்க்க முடியாததாகிவிடும். ஆதரவளிக்காவிட்டால் செக்கோஸ்லோவேகியா ஹிட்லரால் ஆக்கிமிக்கப்பட்டுவிடும்.

இச்சூழ்நிலையில் 1938, செப்டம்பரில் இங்கிலாந்துப் பிரதமர் சேம்பர்லின் ஹிட்லரைச் சந்தித்தார். அந்த சந்திப்பின் போது ஹிட்லர் ‘சுடட்டன்லாந்து ஜெர்மானியர்களுக்கு சுயநிர்ணய உரிமையை செக்கோஸ்லோவேகியா அளிக்காவிட்டால் அந்த நாட்டின் மீது ஜெர்மனி படையெடுப்பதை இந்த உலகத்தின் எந்த சகத்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது’ என்றார். அக்டோபர் 1-ம் தேதிக்குள் சுடட்டன்லாந்து ஜெர்மனியிடம் ஒப்படைக்கப்பட வேண்டம் என்றார். இதுதான் ஐரோப்பாவில் நான் கேட்கும் கடைசி நிலப்பகுதியாக இருக்கும் என்றும் உறுதியளித்தார். எனவே ஒரு ஐரோப்பியப் போர் ஏற்படுவதைக் தடுக்கும் முயற்சியில் இங்கிலாந்து ஈடுப்பட்டது.

### மியுனிச் உடன்படிக்கை: (Munich Pact):

1938 செப்டம்பர் 30-ம் தேதி இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் மியுனிச் நகரில் கூடின. இந்தக் கூட்டத்திற்கு ரஷ்யா அழைக்கப்பட வில்லை. இக்கூட்டத்தின் இறுதியில் உடன்படிக்கை ஒன்றில் சேம்பர்லின், டலாடிர், முசோலினி, ஹிட்லர் ஆகியோர் கையெழுத்திட்டனர். ஆதன்படி

1. சேக்கோஸ்லோவேகியா சுடடன்டன்லாந்து பகுதியையும் மேலும் ஜெர்மனியர்கள் வாழக்கூடிய அதனை ஒட்டியுள்ள பகுதியையும் ஜெர்மனிக்கு அளிக்க வேண்டும்.

2. ஜேயில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் எல்லா ஜெர்மனியர்களையும் செக்கோஸ்லோவேகியா விடுதலை செய்ய வேண்டும்.
3. புதிய செக்கோஸ்லோவேகியா எல்லைகளுக்கு பிரான்சும் ஜெர்மனியும் பாதுகாப்பு அளிக்கும்.

துப்பாக்கிச் சத்தம் இல்லாமல், உயிர்ச் சேதங்கள் இல்லாமல் ஹிட்லர் 11,000 சதுர மைல் பரப்பளவு உள்ள பகுதிகளையும், எட்டு லட்சம் செக்கோஸ்லோவேகிய மக்கள் உட்பட 36 லட்சம் மக்கள் தொகையையும், செக்கோஸ்லோவேகியா நாட்டின் 75 சதவீத தொழில்வளத்தையும் பெற்றுக் கொண்டார்.

இந்த உடன்படிக்கையை செக்கோஸ்லோவேகியா ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல்போய்விட்டது. மியுனிச் உடன்படிக்கை, இதுவரை மேற்கத்திய நாடுகள் பின்பற்றி வந்த சாந்தப்படுத்துதல் (யீநயளநஅநவெ) கொள்கைக்கும், ஜனநாயக முறைகளுக்கும் கிடைத்த மரண அடியாகும். இந்த உடன்படிக்கையின்படி “செக்கோஸலோவேகியாவிற்குக் கூட்டுப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக கூட்டுப் பயமுறுத்துதல் செய்யப்படபட்டது.

1938, அக்டோபர் 1ம் தேதி ஜெர்மானியப் படைகள் சுடட்டன்லாந்தைப் பிடித்துக் கொண்டன. இந்த மியுனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு விட்டு நாடு திரும்பிய இங்கிலாந்து பிரதமர் சேம்பர்லின் ‘நம் காலத்தில் போர் ஏற்படாதவாறு செய்து விட்டேன் என்று பெருமிதத்துடன் கூறினார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வின்ஸ்டன்சார்ச்சில் “போர் வேண்டுமா அவமானம் வேண்டுமா என்ற கேள்விக்கு இங்கிலாந்தும், பிரான்சும் அவமானத்ததை தேர்ந்தெடுத்தன. ஆனால் போரும் வந்தே தீரும்” என்று மியுனிச் உடன்படிக்கைப் பற்றி விமர்சனம் செய்தார். மியுனிச் உடன்படிக்கையால் போர் ஒரு வருடம் தள்ளிப் போடப்பட்டது அவ்வளவுதான்!.

சுடட்டன்லாந்தை இணைத்ததுடன் ஹிட்லர் திருப்தியடையவில்லை. 1939, மார்ச் மாதம் 14-ம் தேதி செக் ஜனாதிபதியை பெர்லினுக்கு அழைத்து அவரது நாட்டை ஜெர்மனியிடம் ஒப்படைக்கும்படி பயமுறுத்தினார். இதனைக் கண்டு பயந்த ஜனாதிபதி எமில் ஹச்சா (Emil Hacha) செக்கோஸ்லோவேகியாவை ஜெர்மனியிடம் ஒப்படைப்பதாக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். மறுநாள் ஜெர்மானியப் படைகள் செக்கோஸ்லோவேகியாகை ஆக்கிரமித்துக் கொண்டன. அங்கு காணப்பட்ட எதிர்ப்புகள் நசுக்கப்ட்டன. ஹிட்லர் மியுனிச் உடன்படிக்கையில் மேற்கத்திய நாடுகளுக்கு அளித்த வாக்குறுதியை மீறி செக்கோஸ்லோவேகியாவை இணைத்துக் கொண்டார். இங்கிலாந்தும், பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. ஆனால் எவ்வித முணுமுணுப்புமின்றி இணைப்பை ஏற்றுக் கொண்டன.

### 12.ரஷ்யாவுடன் ஆக்கிரமிப்பு இன்மை உடன்படிக்கை: 1939 ஆகஸ்ட்

ஹிட்லர் செக்கோஸ்லோவேகியாவை இணைத்தது ஐரோப்பாவையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதே நேரம் மியுனிச் உடன்படிக்கையின் போது ரஷ்யாவை ஒதுக்கி தள்ளியதாலும், போலந்து பற்றிய ரஷ்யாவின் முடிவை மேற்கத்திய ாநடுகள் ஏற்றுக் கொள்ளாததாலும் ரஷ்யா மனவருத்தமடைந்திருந்தது. இச்சூழ்நிலையை ஹிட்லர் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். தனது அடுத்த இலக்கான போலந்து மீது தாக்குதல் தொடுக்கும் போது பிரான்சும் இங்கிலாந்தும் கட்டாயம் தலையிடும் என்று ஹிட்லருக்குத் தெரியும். எனவே ரஷ்யாவுடன் ஆக்கிரமிப்பு இன்மை (non-aggression pact) செய்து கொள்வதில் ஹிட்லர் ஆர்வம் காட்டினார். இதன்படி, 1939 ஆகஸ்ட் மாதம் ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்குமிடையே ‘ஆக்கிரமிப்பு இன்மை’ ஒப்பந்தம் கையெழுத்தானது. இது இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் மேலும் அதிர்ச்சியை அளித்தது.

**13.போலந்து மீது ஜெர்மனியின் படையெடுப்பும் இரண்டாவது உலகப்போரின் ஆரம்பமும்: 1939, செப் 1**

இதுவரை தனது எண்ணங்களையெல்லாம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வந்த ஹிட்லர் தனது அடுத்த இலக்கான போலந்து மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தமானார். போலந்திலிருந்து பால்டிக் கடல் செல்வதற்கான போலிஷ் இடைப்பாதையையும் (Polish Corridor) போலந்ர் நகரான டான்சிக்கைப் பெற்றுக் கொள்ளவும், ரயில்பாதை ஒன்றை போலந்துவரைப் போடவும், போலந்துடன் பேச்சு வார்த்தையைத் துவக்கினார் ஹிட்லர். ஆனால் இச்சூழ்நிலையில் இங்கிலாந்து பிரதமர் சேம்பர்லின்,"போலந்தின் சுதந்திரம் பறிக்கப்படுமானால், இங்கிலாந்து அதனைப் பார்த்துக் கொண்டிராமல் போலந்துக்கு ஆதரவாக செயல்படும்." என்று இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் பேசினார். பிரான்ஸ் இங்கிலாந்து ஆகிய நாடுகள் போலந்து நாட்டுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. 1939, செப்டம்பர் முதல் தேதி ஜெர்மானியப் படைகள் போலந்து மீது படையெடுத்தன. இப்பிரச்சனையைத் தீர்க்க இரண்டு நாட்கள் முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும் வெற்றியடையவில்லை. போலந்து நாட்டின் உரிமையையும் சுதந்திரத்தையும் காக்கும் பொறுப்பு இங்கிலாந்தையும் பிரான்சையும் சார்ந்திருந்ததால் 1939, செப் 3-ம் தேதி ஜெர்மனி மீது இரண்டு நாடுகளும் போர்த்தொடுத்தன. இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது.

**14.ஹிட்லரின் முடிவு:**

இரண்டாம் உலகப்போர் பேரழிவை ஏற்படுத்தியது. ஹிட்லரின் நாசிப் படைகள் அரக்கத'தனமாக நடந்து கொண்டன. இறுதியில் நேசப்படைகளே வெற்றி பெற்றன. போரின் இறுதிக் கட்டத்தில் தோல்வி ஏற்பட்டுவிடும் என்று உணர்ந்த ஹிட்லர் பூமிக்கு அடியில் கட்டப்பட்டிருந்த பங்களாவில் ஒளிந்து கொண்டார். 1945, ஏப்ரல் மாதம்-30 தேதி அந்த இடத்தருகே ரஷ்யப்படைகள் வந்து விட்டதைத் தெரிந்து கொண்ட ஹிட்லர் தனது மனைவி ஈவா பிரான் என்பவருடன் தனது 57-ம் வயதில் தற்கொலை செய்துக் கொண்டார்.

## துருக்கியும்முஸ்தபா கமால் பாஷாவும்

## (MUSTAFA KAMAL PASHA)

முதல் உலகப் போரில் தோல்வியடைந்த துருக்கியுடன் நேச நாடுகள் 1920-ல் செவ்ரஸ் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. துருக்கியப் பேரரசு கலைக்கப்பட்டது. துருக்கியின் ஐரோப்பிய பகுதிகள் நேச நாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. மேலும் துருக்கிக்குச் சொந்தமான சிரியா, பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகியவையும் வல்லரசுகளின் கட்டிப்பாட்டில் விடப்பட்டன. இதனால் துருக்கியின் பெருமை குறைந்தது. துருக்கியின் அழிவுக்காலம் நெருங்கிவிட்டது என்றே கருதப்பட்டது. ஆனால் துருக்கிக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்கி, அதனை அழிவினின்று காப்பாற்றி நவீனத் துருக்கியாக்கிய பெருமை முஸ்தபா கமால் பாஷாகையே சாரும். இவர் "நவீன துருக்கியின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

**துருக்கியில் தேசியப்புரட்சி ஏற்படக் காரணங்கள்:**

**1.இளம் துருக்கியர் இயக்கமும், தேசிய எழுச்சியும்:**

துருக்கிய ஆட்சியிலிருந்து கிரீஸ், செர்பியா, பல்கேரியா ருமேனியா ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்றதை இளம் துருக்கியர் இயக்கம் விரும்பவில்லை. இந்த

இயக்கம், பொதுமக்கள், ராணுவ அதிகாரிகள் ஆகியோரின் உள்ளங்களில் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தி தேசிய ஜனநாயக அரசை ஏற்படுத்த முயற்சி செய்தது.

**2.சுல்தான் ஆறாவது முகமதுவின் ஆட்சியின் மீது வெறுப்பு:**

துருக்கிய சுல்தான் ஆறாவது முகமதுவின் பிற்போக்குக் கொள்கையும், அவரது திறமையற்ற நிர்வாகமுமே முதல் உலகப்போரில் துருக்கி தோல்வியடையக் காரணமாக அமைந்தது. செவ்ரஸ் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டால் துருக்கி இல்லாமல்போய்விடும் என்று கமால்பாஷா போன்ற ராணுவ அதிகாரிகள் எச்சரித்தார்கள். சுல்தானின் எதேச்சதிகார ஆட்சியை அகற்றிவிட்டு துருக்கியக் குடியரசை நிறுவ தேசியப்பற்று கொண்ட துருக்கியர்கள் தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார்கள்.

**3.தேசப்படையின் ஆக்கிரமிப்பு:**

முதல் உலகப் போரில் துருக்கி தோல்வியடைந்த பின்னர் இத்தாலியப் படை 1919, ஏப்ரல் மாதம் அடேரியா, அனட்டேரியாவில் இறங்கியது. அதே ஆண்டு மே மாதம் கிரேக்கப்படை சிமிர்ணாவைக் கைப்பற்றியது. ஆனால' சுல்தான் ஆறாவது முகமது ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் கான்ஸ்டாண்டிநோபிளில் பாதுகாப்பாக இருந்தார். எனவே சுல்தானின் ஆட்சியை அகற்றவும் அன்னியரின் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் இளம் துருக்கியர் இயக்கம் முயன்றது. இச்சூழ்நிலையைக் கமால்பாஷா பயன்படுத்திக் கொண்டு புரட்சியில் ஈடுபட்டார்.

**4.செவ்ரஸ் உடன்படிக்கை மீது ஏற்பட்ட அதிருப்தி:**

சேவ்ரஸ் உடன்படிக்கைப்படி துருக்கி கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. (விரிவாக எழுதவும்) அது துருக்கியர் நலன்களுக்கு விரோதமாக அமைந்ததால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த உடன்படிக்கையின் மீதுள்ள வெறுப்பினால் துருக்கி சுல்தானுக்கெதிரான புரட்சி வலுவடைந்தது.

**புரட்சியின் போக்கு**

**எர்சீரமில் தேசிய காங்கிரஸ்**

முஸ்தபா மகால்பாஷா தலைமையில் 1919-ம் ஆண்டு ஜீலை மாதம் தேசிய துரக்கியர்கள் கிளர்ச்சி செய்தனர். அந்நியரை விரட்டவும், துருக்கியின் நிலையை உயர்த்தவும் எர்சீரமில் கூடிய தேசிய காங்கிரஸ் முயற்சிகளை மேற்கொண்டது.

**மாகாண அரசு:**

நேச நாடுகள் துண்டுதலின் பேரில் சுல்தான் ஆறாம் முகமது தேசியத்தலைவர்களைக் கைது செய்தார். ஆனால் கமால் பாஷா அனட்டோரியாவிலுள்ள அங்காராவைத் தலைநகரமாகக் கொண்டு 1920 ஏப்ரலில் ஒரு மாகாண அரசை ஏற்படுத்தினார். அங்காராவிலுள்ள ராணுவத்தை தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டார். சுல்தான் இந்த தேசியவாதிகளின் படையை அடக்க அனுப்பிய படை தோற்கடிக்கப்பட்டது. 1921-ல் துருக்கிய தேசியப்படை ஆர்மீனியரைத் தோற்கடித்தது. 1921 ஜனவரியில் ஜனாதிபதியையும், பொறுப்பாளர்களையும் ஒரு மந்திரி சபையையும் ஒரு மக்கள் மன்றத்தையும் உருவாக்கியது மாகாண அரசு.

**கிரேக்க நாட்டிற்கு எதிரான மாகாண அரசின் போர்:**

1921-ல் சுமிர்னாவைக் கைப்பற்றிய கிரீஸ் கமாலுக்கு எதிராக படையெடுத்தது. அங்காராவுக்கு அருகில் பெரிய போர் ஏற்பட்டது. இப்போரில் கமால்பாஷா பெரும் வெற்றி பெற்றார். 1922 ஆகஸ்டில் கிரேக்கப்படை அழிக்கப்பட்டது. செப்டம்பரில் சிமிர்னா கைப்பற்றப்பட்டது. இந்தப்படையெடுப்பினால் துருக்கியப் பகுதியிலிருந்த கிரேக்க வீரர்களும் மக்களும் விரட்டப்பட்டனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் நேசப்படைகள் துருக்கியுடன் சமாதானம் செய்து கொள்ள முன் வந்தன. தான் இழந்த பகுதிகளை துருக்கி மீண்டும் பெற்றுக் கொண்டதால் துருக்கியின் மதிப்பு உயர்ந்தது. அதற்குக் காரணமான கமரலின் பெருமை உயர்ந்தது. சுல்தானின் புகழ் மங்கியது. நாட்டின் தலைமை அங்காராவில் அமைக்கப்பட்ட மாகாண அரசு வசம் வந்தது.

**சுல்தானின் ஆட்சியின் முடிவு:**

1922-ம் ஆண்டு நவம்பர் மாதம் அங்காராவில் கூடிய தேசிய சபையில் ‘காலி.்.பா’ பதவி சுல்தானின் பதவியிலிருந்து பிரிக்கப்பட்டது. அதன்பின் சுல்தான் பதவி ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் நாட்டின் உண்மையான அரசியல் தலைமை மக்களிடம் உள்ளது என்று அறிவிக்கப்பட்டது. கடைசி காலி.்.பா சுல்தானான ஆறாம் முகமது பதவி விலக்கப்பட்டார். அவர் ஓர் ஆங்கிலப் போர் கப்பலில் மால்டாவிற்குத் தப்பி ஓடினார்.

**லாசேன் உடன்படிக்கை: 1923, ஜீலை 24**

போர் செய்து அலுத்துப் போயிருந்த எந்த வல்லரசும் துருக்கியுடன் போர் புரிவதை விரும்பவில்லை. எனவே 1923-ல் ஸ்விட்சர்லாந்திலுள்ள லாசேனில் மாநாடு ஒன்று கூட்டப்பட அழைப்பு விடுக்கப்பட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா, ஜப்பான், பல்கேரியா, ருமேனியா, யூகோஸ்லேவியா, கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இதில் கலந்து கொண்டன. கமால் பாஷா வுடன் புதிய உடன்படிக்கை ஒன்றை 1923 ஜீலை 24-ல் செய்து கொண்டன. அதற்கு லாசேன் உடன்படிக்கை என்று பெயர். அதன்படி

துருக்கி, எதிர்னே, சிலிசியா, அடாலியா, கிழக்கு திரேஸ், அட்ரியநோபிள், ஏஜியன் தீவுகளிலுள்ள டெனிடாஸ் இம்பிராஸ் மற்றும் டொனிக்கனிஸ் ஆகிய பகுதிகளை துருக்கி பெற்றுக் கொண்டது. டார்டனல்லஸ் துருக்கியின் ஆட்சியிலே விடப்பட்து. இங்கிலாந்தும் துருக்கியும் தங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை முக்கியமாக மோசலின் எல்லைப் பகுதி பற்றி பிரச்சனையை பேச்சு வார்த்தை நடத்தித் தீர்த்துக் கொள்ள வேண்டும். துருக்கியில் வெளிநாட்டினர் அனுபவித்து வந்த சலுகைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. போருக்கு முன்பு துருக்கிக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை நேசநாடுகள் ஏற்றுக் கொண்டன. இவ்வாறு லாசேன் உடன்படிக்கை துருக்கியின் மதிப்பை மீண்டும் உயர்த்தியது. கமால் பாஷாவின் தலைமையில் ஒரு ஐக்கியமடைந்த வலுவான துருக்கி உருவானது.

**துருக்கி குடியரசாதல்: 1923**

1923 அக்டோபர் 29-ம் தேதி அங்காராவிலிருந்த தேசிய மன்றம் துருக்கியை ‘ஒரு குடியரசு’ என்று அறிவித்தது. அதே நாளில் முஸ்தபா கமால்பாஷா குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கபட்டார். ஆட்டோமான் பேரரசு ஒழிந்தது. தேசியப்புரட்சி வெற்றியடைந்தது. கமால்பாஷாவின் தலைமையில் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது.

**கமால்பாஷாவின் சாதனைகள்:** (துருக்கியக் குடியரசின் சாதனைகள்)

முஸ்தபா கமால்பாஷா 1881-ம் ஆண்டு சலோனிகா என்ற இடத்தில் ஒரு ஏழை நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். இஸ்தான்புல் ராணுவப் பள்ளியில் பயிற்சி பெற்றார். இவர் கணிதத்திலும், சொற்பொழிவாற்றும் வன்மையிலும் புகழ்பெற்று விளங்கினார். துருக்கியப் புரட்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இத்தாலிக்கு எதிராக நடைப்பெற்ற போர்களிலும், பால்கன் போர்களிலும் கலந்து கொண்டார். முதல் உலகப்போர் ஆரம்பித்த போது அவர் சோ∴பியாவில் ராணுவத் தூதராக நியமிக்கப்பட்டார். பின்னர் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குரிய ராணுவ தளபதியானார். 1918-ம் வருடத்திற்குள்ளாக ஒவ்வொரு துருக்கியப் போர் முனைகளஜலும் படைகளுக்குத் தலைமை தாங்கி திறமையுடன் போரிட்டார்.

முஸ்தபாகமால்பாஷா ஒரு மாபெரும் தலைவர். புத்திக் கூர்மையும், தரமான வேலையைத் தாமே செய்வதற்கும் பிறரைச் செய்ய வைப்பதற்குமான ஆற்றலையும் பெற்றிருந்தார். எதைச் செய்தாலும் அதில் குறையிருக்கக்கூடாது என்று வற்புறுத்தினார். ஆடம்பரத்தையும் அர்த்தமற்ற வெற்றுச் சடங்குகளையும் அவர் விரும்பவில்லை. அசைக்க முடியாத மனஉறுதி, ஆற்றல், கைக்கூலி வாங்காத குண இயல்பு ஆகியவற்றைப் பெற்ற முதல்தரத் தேசியவாதியாக விளங்கினார். எனவேதான் மக்களின் ஆதரவைப் பெற்று புரட்சி மூலம் துருக்கியைத் குடியராச்சினார். துருக்கியக் குடியரசின் தலைவரான முஸ்தபா பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு துருக்கியைப் பலப்படுத்தி நவீனமாக்கினார். எனவே மக்கள் இவரை ‘‘கமால் அட்டாடர்க்’’ (Ataturk-துருக்கியர்களின் தலைவர்) என்று பெருமையுடன் அழைத்தனர்.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்: Kamalism.**

**கமாலிசம் அல்லது கமாலின் ஆறு கோட்பாடுகள்:**

கமால்பாஷாவின் சீர்திருத்தங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தொடுவதாக அமைந்தது. தன்னுடைய சீர்திருத்தங்களை வரிசைப்படுத்தி ஆறுகோட்பாடுகளாக வெளியிட்டார். அவைகளைக் கமாலிசம் (Kamalism) என்று துருக்கியர்கள் குறிப்பிட்டனர். அவை பின்னர் 1937-ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. கமாலிசத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு: 1. குடியாட்சி 2. தேசப்பற்று 3. மக்களின் இறைமை 4.அரசுடைமை 5. மதசார்பின்மை 6. புரட்சிரமான சீர்திருத்தங்கள் ஆகியவையாகும். (Republicanism, Nationalism, Populism, Etatism, Secularism, Revolutionism) இநத ஆறு அம்சங்களைக் குறிக்கும் படியாக சிகப்பு நிறப் பின்னணியில் ஆறு வெள்ளை அம்புகள்’ கொண்ட சின்னத்தை தனது ஆட்சியின் அடையாளமாக வைத்துக் கொண்டார் கமால்பாஷா.

## 1.குடியாட்சி (Republicanism)

துருக்கியில் முடியாடசி அகற்றப்பட்டு, அது ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டது. 1924, ஏப்ரல் 20-ம் தேதி ‘புதிய குடியரசின் அரசியலமைப்புச் சட்டம்’ ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட குடியரசை வலிமையடுத்துவதற்காக பல புதியச் சட்டச் சீர்திருத்தங்களைப் புகுத்தினார் கமால்பாஷா. துருக்கியக் குடியரசின் நீதித்துறை மைப்பு இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலைக்கு உகந்ததாக இருக்கவில்லையென்று கூறினார். எனவே துருக்கிய வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் மேலை நாட்டுச் சட்டங்களில் பயிற்சி அளிப்பதற்காக அங்காராவில் 1926-ல் சட்டக் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது. சிவில் மற்றும் கடன் சட்டத் தொகுப்பு சுவிட்சர்லாந்துச் சட்டங்களின் அடிப்படையிலும், குற்றவியல் சட்டத்தொகுப்பு இத்தாலியச் சட்டங்களின் அடிப்படையிலும், வர்த்தகச் சட்டத்தொகுப்பு ஜெர்மானியச் சட்டங்களின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன.

**2.தேசப்பற்று (Nationalism):**

தேசப்பற்று கமாலிசத்தின் இரண்டாவது அம்சமாகும். குமால்பாஷா இயல்பாகவே தேசப்பற்று மிக்கவர். தான் ஒரு துருக்கியர் என்று கூறிக் கொள்வதில் பெருமை கொண்டார். துருக்கியர் அனைவரையும் தங்கள் இனத்திலும், மரபுரிமையிலும் பழங்கால வரலாறடறழலும் பெருமை கொள்ளும்படி செய்தார். துருக்கிய மொழிக்கு இதுவரை அராபிய எழுத்து வடிவமே இருந்து வந்தது. அது அவ்வளவு எளிமையாக இல்லை. எனவே 1928-ல் லத்தீன் மொழியின் அடிப்படையில் துருக்கிய எடுத்து வடிவம் உருவாக்கப்பட்டு 1929 முதல் அது கட்டாயமாக்கப்பட்டது. அடுத்து பத்தாண்டு காலத்துக்குள் நாட்டின் 50% மக்கள் இந்த எழுத்து வடிவத்தை எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டார்கள். லத்தீன் எழுத்து முறையில் உருவாக்கப்பட்ட புதிய துருக்கிய மொழியில் துருக்கிய வரலாறு எழுதப்பட்டது. அதில் துருக்கியர்களின் பழம்பெருமை எடுத்துக் கூறப்பட்து. துருக்கிய இலக்கியங்களில் வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்த அராபிய எழுத்துக்கள் நீக்கப்பட்டன. பழங்கால தூய்மையான துருக்கியர் சொற்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. துருக்கிய மொழி குடியரசின் ஆட்சி மொழியாக்கப்பட்டது. ஒவ்வொருவரையும் அவர்களின் குடும்பப் பெயர்களைப் பயன்படுத்துமாறு கட்டாயப்படுத்தினார். துருக்கி துருக்கியர்க்கே. துருக்கியர்கள் துருக்கிக்கே' என்ற கமால்பாஷாவின் கோஷம் மக்களால் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளப்ட்டது. இவ்வாறு மக்களிடையே தேசப்பற்றை வளர்த்தார் கமால்பாஷா.

**3.மக்களின் இறைமை(Populism)**

"Sovereignity springs from the people' என்று கூறினார் கமால் பாஷா. புதிதாக 1924-ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் 'இறைமை மக்களிடமே உள்ளது' என்று திட்டவட்டமாக அறிவித்தது. எல்லாத் துருக்கியர்களும் இனசமய வேறுபாடின்றி சரிசமமானவர்கள் பேச்சுரிமை, சிந்திக்கும் உரிமை, எழுத்துரிமை, நடமாடும் உரிமை ஆகியவை மக்களுக்கு வழங்கப்பட்டது. எனவே மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு அவர்களின் வலிமை உணர்த்தப்பட்டது.

**3.அரசுடைமைச் சீர்திருத்தங்கள் (Etatism)**

துருக்கியின் பொருளாதார நிலையை உயர்த்தவும் மூலப்பொருட்களைப் பெருக்கிக் கொள்ளவும், நாட்டில் அந்நியர்கள் செல்வாக்கைக் குறைக்கவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார் கமால்பாஷா. நாட்டில் தீக்குச்சி, தேயிலை, சிகரெட்டுகள், பருத்தி, மதுபானங்கள், உப்பு, பருத்தி, கம்பளி, எ∴கு போக்குவரத்து, சுரங்கத்தொழில் ஆகியவை அரசுடமையாக்கப்பட்டன. தனியார் கம்பெனிகள் மீது அரசின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டது. துறைமுகங்கள் நீராவிக் கப்பல்கள் ஆகியவை அரசாங்கத்தாலேயே நடத்தப்பட்டன. 1933-ல் அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கென்று ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியது. இவை தவிர குடியானவர்கள் கமால் பல சலுகைகளை அறிவித்தார். 1925-ல் குடியானவர்களுக்கு மீது விதிக்கப்பட்டிருந்த 'டைத்' (Tithe) என்ற பத்தில் ஒரு பங்கு தீர்வை ரத்து செய்யப்பட்டது.

**5.மதசார்பின்மை (Secularism):**

முஸ்தபா கமால் பாஷா நாட்டின் சமயத்துறையில் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்தார். அரசியலில் மதம் சேர்ந்திருப்பது நாட்டின் வளர்ச்சியை தடை செய்யும் என்று நினைத்தார். எனவே துருக்கிய குடியரசு ஒரு மதசார்ப்பற்ற அரசாக இருக்க வேண்டுமென்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். காலம் காலமாக இருந்துவந்த காலி∴பா (Calipate) பதவி ஒழிக்கப்பட்டது. சமய நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டன. புதிதாக ஒரு சமயத்துறை அமைக்கப்பட்டு அது பிரதம அமைச்சரின்

மேற்பார்வையில் வைக்கப்பட்டது. நாட்டில் சமயப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. புனிதக் கல்லறைகளும் மூடப்பட்டன. 1928-ல் துருக்கி ஒரு இஸ்லாமிய நாடு என்ற வார்த்தை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் முஸ்லீம் மதபோதனை நிறுத்தப்பட்டது. 1939-க்குள் துருக்கி ஒரு சமய சார்ப்பில்லாத நாடாகியது.

### 6.புரட்சிக்கரமான சீர்திருத்தங்கள் (Revolutionism):

குமால்பாஷா புரட்சிகரமான சீர்திருத்தங்களை துருக்கியில் புகுத்தி, நாட்டை மேற்கத்திய மயமாக்கினார். மக்கள் ∴பெஸ் (Fez) என்ற பழைமை வாய்ந்த தொப்பியை அணியக்கூடாது என்றும், மேலை நாட்டினர் அணியும் தொப்பியை (Hat) அணிய வேண்டுமென்று உத்தரவிட்டார். கமால், 1926-லிருந்து முஸ்லீம் நாட்காட்டி பின்பற்றப்படுவது கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக மேலை நாடுகளிலுள்ள கிரிகேரியன் நாட்காட்டி முறை பின்பற்றப்பட்டது. வெள்ளிக்கிழமை அரசு விடுமுறைக்கு பதிலாக ஞாயிறு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. நாட்டில் லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் என்று கூறப்பட்டது. அது நிரூபிக்கப்பட்டால் லஞ்சம் வாங்கிய அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

பெண்களின் அந்தஸ்து உயர்வதற்கு பெண்கள் மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், அதிகாரிகளாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் ஆக வேண்டும் என்று கூறினார் கமால்பாஷா. பலதார மணம் தடை செய்யப்பட்டது. 1934-ல் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. 1935-ல் நடைபெற்ற தேர்தலில் 35 பெண்கள் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவ்வாறு கமால்பாஷா பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை மேற்கொண்டு துருக்கியை நவீனப்படுத்தினார்.

### கமாலின் வெளிநாட்டுக் கொளள்கை:

### மோசல் விவகாரம்:

மோசல் என்பது ஒரு எண்ணை வளம் நிறைந்த துருக்கியப் பகுதியாகும். இந்தப்பகுதிக்கு துருக்கியும், பிரிட்டனின் கீழிருந்த ஈராக்கும் உரிமை கொண்டாடின. இதனை விசாரித்த சர்வதேச சங்கம் மோசல் பகுதியை ஈராக்குக்கு அளித்ததால் துருக்கிக்கும் இங்கிலாந்துக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

### ரஷ்யா இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை:

மோசல் தனக்குக் கிடைக்காததால் வெறுப்படைந்த துருக்கி ரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்ர் கொண்டது. இதனால் ரஷ்யாவின் அரசியல் பொருளாதார ஆதரவு துருக்கிக்கு கிடைத்தது. 1926-ல் இங்கிலாந்துடன் செய்து கொண்ட உடன்டிக்கைப்படி மோசல் பகுதியிலிருந்து கிடைக்கும் எண்ணைவள லாபத்தில் ஒரு பகுதியை துருக்கிக்கு கொடுக்க ஈராக் ஒப்புக் கொண்டது. 1928-ல் ஆப்கானிஸ்தானத்துடன் கமால் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

## இரண்டாம் உலகப் போர்

## (SECOND WORLD WAR, 1939-45)

முதல் உலகப்போருக்குப்பின் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம், தன்னுடைய நோக்கங்களைச் செயல்படுத்துவதில் தோல்வியடைந்தது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அமைதி இழந்து காணப்பட்டன. ஹிட்லர், முசோலினி போன்றவர்களின் எதேச்சதிகாரப் போக்கும், ஜனநாயக கொள்கைகளை அவர்கள் எதிர்த்த விதமும்

உலக அமைதிக்குப் பங்கம் விளைவிப்பனவாக அமைந்தது. மேலும் ஜப்பான் ராணுவ வலிமை பெற்று தூரக்கிழக்குப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபட்டு அமைதிக்குக் கேடு விளைவித்து வந்தது. எனவேதான் 1939-ல் மீண்டும் ஓர் உலகப்போர் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது. இரண்டாவது உலகப்போர் ஜனநாயத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையே ஏற்பட்ட போராகும். இது முதல் உலகப் போரைவிட மனிதகுலத்திற்கு அதிக அழிவை ஏற்படுத்தியது. போரின் இறுதியில் சர்வாதிகாரம் வீழ்ச்சியடைந்து ஜனநாயகம் வென்றது.

**போருக்கான காரணங்கள்:**

**1.ஜெர்மனியின் பழிவாங்கும் எண்ணம்:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி எல்லாவகையிலும் முடமாக்கப்பட்டது. அதன் 440 ஷரத்துக்களும் ஜெர்மனி மீண்டும் தலைதூக்காமல் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. எனவே வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை மூலமாக தனக்குக் கிடைத்த அவமானத்தையும், இழிவையும் ஈடுகட்ட நினைத்தது. ஜெர்மானிய மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்ட ஹிட்லர் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களை மீறிச் செயல்பட்டு உலகப்போர் ஏற்படக் காரணமானார்.

**2.சர்வதேச சங்கத்தின் தோல்விகள்**

முதல் உலகப்போரின் இறுதியில் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச சங்கம் தனது எல்லா நடவடிக்கைகளிலும் தோல்வியடைந்தது. அமெரிக்கா சங்கத்தில் சேராமல் போனதே சங்கத்தின் வலிமையைக் குறைத்தது. கூட்டுப் பாதுகாப்பு முறையை சங்கத்தினால் செயல்படுத்த முடியவில்லை. பொருளாதாரத் தடைகள் ஆக்கிரமிப்பு செய்த நாடுகளுக்கெதிராகச் செயல்படுத்த உறுப்பு நாடுகள் ஒத்துழைக்கவில்லை. உதாரணமாக, 1931-ல் ஜப்பான் மஞ்சூரியாவை பிடித்தபோது சங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. ஹிட்லர், முசோலினி ஆகியோரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் சக்தி சங்கத்திடம் இல்லை. எனவேதான் சங்கம் தோல்வியடைந்தது. இது இரண்டாம் உலக்போருக்கு முக்கியக்காரணம் ஆகும்.

**3.சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே ஏற்பட்ட போட்டி:**

இரண்டாம் உலகப்போருக்கு முன்பு ஐரோப்பா இரு பெரும் அணிகளாகப் பிரிந்திருந்தன. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் சர்வாதிகாரக்கருத்துக்களுக்கும், இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஜனநாயகக் கருத்துகளுக்கும் ஆதரவு அளித்தன. இதுபற்றி முசோலினி கூறும் போது ''இவ்விரு உலகங்கட்சிடையே சமரசம் ஏற்படுத்த முடியாது என்றார்''. இப்படிக் கொள்கை அடிப்படையில் கருத்து வேறுபாடுகள் கொண்ட நாடுகள் தங்களுக்குள் விரோதத்தை வளர்த்துக் கொண்டன. அதுவே போருக்குக் காரணமானது.

**4.மேற்கத்திய நாடுகளின் 'சாந்தப்படுத்துதல்' கொள்கையும், அச்சு நாடுகளின் ஏமாற்றுக் கொள்கையும்:**

முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னரும் பிரான்ஸ் ஜெர்மனியைப் பார்த்து பயந்து கொண்டே இருந்தது. மீண்டும் ஜெர்மனி தன்னைத் தாக்கும் என்ற பயத்தின் அடிப்படையிலேயே தனது வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து வந்தது. அதேபோல் இங்கிலாந்தும் ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடாமல் இருந்தது. இரண்டு நாடுகளுமே இனிமேல் ஒரு போர் வேண்டாம் என்ற எண்ணத்தில் ஜெர்மனியும் இத்தாலிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும் ''சாந்தப்படுத்துதல்'' கொள்கையையே (Policy of appeasement) பின்பற்றின. மேலும்

பிரான்சும்,இங்கிலாந்தும் ‘கம்யூனிசத்திற்கு எதிராக ஜெர்மனியும் இத்தாலியும் பெரிய தடைகளாக இருக்கும்’ என்று நம்பின. இவைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஹிட்லரும், முசோலினியும் மேற்கத்திய நாடுகளை ஏமாற்றி, ஒவ்வொரு நாடாக ஆக்கிரமித்தனர். 1939-ல் சோவியத் ரஷ்யாவுடன் ஜெர்மனி உடன்படிக்கை செய்து கொண்டபோது, தாங்கள் பின்பற்றிய கொள்கைகளின் தோல்வியை உணர்ந்தன பிரான்சும், இங்கிலாந்தும்.

**ரோம்-பெர்லின்-டோக்கியோ ஒப்பந்தம்: 1937**

இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து கம்யூனிசத்தை எதிர்ப்பதற்காகக் ‘கம்யூனிச’ எதிர்ப்பு இயக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஏகாதிபத்தியம் மற்றும் ஆக்கிரமிப்பு ஆகிய கொள்கைகளில் ஒன்றுப்பட்டுக் காணப்பட்ட இந்த மூன்று நாடுகளுக்கிடையே ரோம்-பெர்லின்-டோக்கியோ ஒப்பந்தம் ஏற்பட்டது. 1936, அக்டோபர் 31-ம் தேதி முதலில் ஜெர்மனியும் இத்தாலியும் அச்சு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. 1937-ல் ஜப்பானும் சேர்ந்து கொண்டது. இந்த அச்சு ஒப்பந்தத்தின்படி போர் மற்றும் அரசியல் விவகாரங்களில் ஒருவருக்கொருவர் உதவியும் ஆலோசனையும் செய்து கொள்ளவும், ராணுவ ஒத்துழைப்புக் கொடுக்கவும் உடன்பட்டன. இந்த அச்சு ஒப்பந்தத்தினால் மூன்று நாடுகளும் தைரியமடைந்தன. இங்கிலாந்து பிரான்சு ஆகிய நாடுகளுக்கெதிராக வெறுப்பை வளர்த்தன. எனவே இந்த அச்சு ஒப்பந்தம் இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதைத் துரிதப்படுத்தியது.

**6.படைக்குறைப்பு மாநாடுகளின் தோல்வியும் படைப் பெருக்கமும்:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைப்படி படைக்குறைப்பு செய்யப்பட வேண்டுமென்ற கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. முக்கியமாக ஜெர்மனியின் படைக்குறைப்பிற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் 1935, மார்ச் 16-ல் ராணுவ வலிமையைப் பெருக்க ஆரம்பித்தார். 1936, மார்ச் 7-ல் ரைன்லாந்துப் பகுதியை மீண்டும் ராணுவ மயமாக்கினார். இவருடைய படைபெருக்கத்தைக் கண்ட நேசநாடுகளும் சுயபாதுகாப்பிற்காக தங்களை வலிமைப்படுத்திக் கொள்ள ஆயுதப் பெருக்கத்தில் ஈடுபட்டன. சர்வதேச சங்கத்தின் எல்லாபடைக் குறைப்பு மாநாடுகளும் தோல்வியடைந்தது. 1938-ம் வருடத்திற்குள்ளாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட படை பலப்பெருக்கம் போருக்கான சூழ்நிலையை உருவாக்கியது.

**7.ஜப்பானின் எழுச்சியும், ஆதிக்க வெறியும்:**

முதல் உலகப்போரின் போதே ஜப்பானின் ஆதிக்கவெறி அதிகமானது. போருக்குப்பிறகு இங்கிலாந்தும் பிரான்சும் ‘சாந்தப்படுத்துதல்’ கொள்கையைப் பின்பற்றிய போது ஜப்பான் தனது ராணுவ வலிமையை அதிகரித்துக் கொண்டது. 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கியது. சர்வதேச சங்கம் கண்டித்தும் கூட 1937-ல் சீனாவின் மீது படையெடுத்தது. 1941-ல் பேர்ல்ஹார்பரைத் தாக்கி இரண்டாம் உலகப்போரில் தீவிரமாக இறங்கியது. இவ்விதமான ஜப்பானின் ஆக்கிரமிப்புத் திட்டங்களால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது.

**8.அமெரிக்காவின் தனிப்போக்கு:**

முதல் உலகப்போர் முடிவடைந்த பின் அமெரிக்கா ஐரோப்பிய அரசியலில் தலையிடாமல் தனித்திருத்தல் கொள்கையைப் பின்பற்றி வந்தது. உலகில் போரைத் தடுத்து சமாதானத்தை நிலை நாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்திலும்

அமெரிக்க சேரவில்லை. எனவே ஜெர்மனி, இத்தாலி போன்ற சர்வாதிகார நாடுகளின் நடவடிக்கைகள் தடையில்லாமல் தொடர்ந்தன.

**உடனடிக் காரணம்: ஹிட்லரின் போலந்துப் படையெடுப்பு 1939, செப்-1**

ஹிட்லர் 1938, மார்ச் 14-ல் ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார். பின்னர் மியுனிச் உடன்படிக்கைப்படி சுடட்டன்லாந்துப் பகுதியை இணைத்துக் கொண்டார். 1939 மார்ச் 14-ல் செக்கோஸ்லோகியர் ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டது. ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்ட இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. 1939, செப்.1-ல் ஹிட்லர் போலந்தின் மீது படையெடுத்த போது இரண்டாம் உலக்போர் ஆரம்பமானது. போலந்திலிருந்து ஜெர்மானியப் படைகள் வெளியே போக எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியடையவே செப்.3-ம் தேதி இங்கிலாந்தும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் பிரகடனம் செய்தன. இரண்டாம் உலகப்போர் வெடித்தது.

**போரின் போக்கு: (Course of the War)**

**1.போலந்தில் போர்: 1939**

இங்கிலாந்தும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் தொடுத்தாலும், போலந்துக்கு உடனடியாக உதவி ஏதும் செய்ய முடியவில்லை. ஜெர்மானியப் படைகளின் 'மின்னல்' வேகத்தாக்குதல் (Blitzkrieg) களால் பதினைந்து நாட்களுக்குள் தலைநகர் வார் வீழ்ந்தது. தொழில்வளம் மிகுந்த போலந்தின் மேற்குப்பகுதி ஹிட்லர் வசம் வீழ்ந்தது. அதே நேரத்தில் போலந்தின் வளம்மிக்க கிழக்குப் பகுதிகளை சோவியத் ரஷ்யா பிடித்துக் கொண்டது. பால்டிக் கடல் பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டவும், கடல் மார்க்கம் மூலமாக எதிரிகள் ரஷ்யாவைத் தாக்காமல் பாதுகாக்கவும், ஸ்டாலின் பின்லாந்தைத் தாக்கி ரஷ்யாவின் பாதுகாப்புக்குத் தேவையான பகுதிகளைப் பிடித்துக் கொண்டார்.

**2.மேற்கு முனைப்போர்:**

'ஹிட்லர் போலந்தைக் கைப்பற்றியபின் சுமார் எட்டு மாதங்கள் மேற்கு ஐரோப்பாவில் போர் ஏதும் நடக்கவில்லை. இந்த இடைவெளியின் போது, பிரான்சும், இங்கிலாந்தும் துருக்கியுடன் உடன்படிக்கை செய்து கொண்டன. மேலும் கனடா, நியுசிலாந்து ஆஸ்திரேலியா தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் நேசநாடுகளுடன் சேர்ந்து ஜெர்மனி மீது போர் தொடுத்தன. 1947- ஏப்ரல் 9-ம் தேதி ஹிட்லர் மீண்டும் தனது 'மின்னல்' வேகத்தாக்குதல்களை ஆரம்பித்தார். டென்மார்க்கும், நார்வேயும் வீழ்ந்தது. இப்போரில் நடுநிலை வகித்த ஹாலந்தையும், பெல்ஜியத்தையும் கூட ஹிட்லர்விட்டு வைக்கவில்லை அவையும் வீழ்ந்தன.

இதன்பின்னர் 1940, ஜீன் 5-ம் தேதி பிரான்சின் மீது ஹிட்லர் தனது முழுபலத்தையும் கொண்டு தாக்கினார். ஜெர்மனிக்கு ஆதரவாக ஜீன் 10-ம் தேதி இத்தாலியும் போரில் இறங்கி பிரான்சைத் தாக்கியது. ஜீன் 14-ல் பாரிசு வீழ்ந்தது. அப்போது பிரான்சின் ஆட்சியாளராக இருந்த 'மார்ஷல் பிடைன்' (Marshall Patain) என்பவருடன் ஜெர்மனி உடன்படிக்கைச் செய்துக் கொண்டது. அதன்படி பிரெஞ்சு நாட்டின் பாதிப்பகுதிக்கு மேல் ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டது. அதன் போர் வலிமை முடக்கப்பட்டது. பிரான்சின் மூன்றாவது குடியரசு வீழ்ச்சியடைந்தது. பிடைன் தலைமையில் ஒரு சர்வாதிகார அரசு பிரான்சில் அமைக்கப்பட்டது.

**பிரிட்டனின் போர் (Battle of Britain)**

பிரான்சின் வீழ்ச்சிக்குப் பிறகு இங்கிலாந்து தனித்து நின்று போர் புரிந்தது. 1940, மே 10-ம் தேதி இங்கிலாந்தின் புதிய பிரதமராகப் பதவியேற்ற வின்ஸ்டன் சர்ச்சில் , தனது பேச்சாற்றல் மூலமாக இங்கிலாந்து மக்களைக் கிளர்ந்தெழச் செய்தார். 1940, ஜீன் 18-ம் தேதி ஹிட்லரின் விமானப்படை இங்கிலாந்தின் மீது 'தினசரித் தாக்குதல்' களை ஆரம்பித்தது. இங்கிலீஸ் கால்வாய், வடகடல் பகுதியில் ஜெர்மானிய விமானங்கள் குண்டுகளை வீசின. இங்கிலாந்து விமானப்படை பல விமானங்களை இழந்தது. பின்னர் லண்டன் நகர் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார் ஹிட்லர். 57 இரவுகள் தொடர்ந்து லண்டன் மீது குண்டு வீசப்பட்டது. பல கட்டிடங்கள் நொறுக்கப்பட்டன. பதிலடியாக பெர்லின் நகர் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார் சர்ச்சில். புல ஜெர்மானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டனைத் தோற்கடிப்பது எளிதல்ல என்று உணர்ந்தார் ஹிட்லர். ''பிரிட்டனின் போர்'' முடிவடைந்தது. நாசிக்கள் முதல் தடவையாகத் தோல்வியைச் சந்தித்தார்கள். இதன் பின்தான் ஹிட்லர் தனது பார்வையை ரஷ்யா மீது திருப்பினார்.

**4.வடஆப்பிரிக்கப் போர்:**

பிரான்ஸ் நாட்டின் வீழ்ச்சிக்குப் பிறகு முசோலினியின் தலைமையில் இத்தாலியப் படைகள் வட ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் சோமாலிலாந்து, எகிப்து ஆகிய நாடுகளைத் தாக்கியது. ஆனால் ஆங்கிலத் தளபதிகளின் தலைமையில் இத்தாலியப் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. போரின் இறுதிக் கட்டத்தில் நேசநாடுகள் இத்தாலியை முற்றுகையிட்டன. தெற்கு இத்தாலி நேசப்படைகளிடம் வீழ்நதது. 1945-ல் முசோலினி சிறைப்பிடிக்கப்பட்டு இத்தலிய மக்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டாம் உலகப்போரில் இத்தாலியப் படைகளின் சாதனைகள் ஏதும் இல்லை. இத்தாலியால் ஜெர்மனிக்கும் எந்த நன்மையும் இல்லை.

**5.இரண்டாவது உலகப்போரில் அமெரிக்கா இறங்குதல்:**

அ) 1933-ல் ஹிட்லர் பதவிக்கு வந்ததிலிருந்து அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற அடிப்படையிலேயே செல்பட்டு வந்தது. 1935-37 ஆகிய வருடங்களுக்குள் அமெரிக்க காங்கிரஸ் மூன்று நடுநிலைச் சட்டங்களை இயற்றியது. உலகின் எந்தப்பகுதியில் போர் நிகழ்ந்தாலும் அமெரிக்கா ஈடுபடாமல் நடுநிலை வகிக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. போர்க் கருவிகளின் விற்பனை தடை செய்யப்பட்டது. இதுவே ஹிட்லருக்கு ஊக்கம் அளித்தது. அவர் இரண்டாம் உலகப் போரை விரைவாகத் துவங்குவதற்குக் காரணமாக அமைந்தது.

ஆ) ஆனால் போர் துவங்கியதும் அமெரிக்க மக்களின் எண்ணம் மாறியது. ஆரம்பத்திலிருந்தே மக்கள் நேச நாடுகளை ஆதரித்தனர். ஹிட்லரின் கொடுமைகளைக் கண்ட அமெரிக்கா, நேசநாடுகளின் வெற்றியும் தனது பாதுகாப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது என்று கருதியது. ஐரோப்பிய நாடுகளைத் தோற்கடித்த பின்னர் அமெரிக்காவையும் வெற்றிக் கொள்ள ஹிட்லர் முயல்வார் என்று அமெரிக்க மக்கள் நம்பினர். 1939 நவம்பரில் காங்கிரஸ் இயற்றிய புதிய நடுநிலைச் சட்டத்தின்படி, போரில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்குப் போர்க்கருவிகள் விற்பதற்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. இதன்படி இங்கிலாந்தும் பிரான்சும் அமெரிக்காவிடம் படைக்கலன்களை வாங்கிச் செல்ல முடிந்தது.

இ) 1940-ம் ஆண்டில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் அமெரிக்க மக்கள் ஹிட்லர் மீது வெறுப்படைந்தனர். ஹிட்லர் தனது ''மின்னல் வேகத்தாக்குதல்'' மூலம் ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளைக் கைப்பற்றினார். ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஹிட்லரின் இந்த கொடுஞ்செயல்களால் அமெரிக்க மக்களின் மனம் முற்றிலும் மாறியது.

எனவே 1940 செப்டம்பர் முதல் அமெரிக்கா தனது ராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. முதல் முறையாக அமைதிக் காலத்தில் ராணுவ சேவை கட்டாயமாக்கப்பட்டது. துப்பாக்கிகள், கப்பல்கள் இங்கிலாந்துக்கு கடனாகக் கொடுக்கப்பட்டன. இதற்குப் பதிலாக அட்லாண்டிக் கடல் பகுதிகளில் உள்ள தனது குடியேற்றங்களில் அமெரிக்க விமானப்படை தளங்களை அமைக்க இங்கிலாந்து சம்மதித்தது.

ஈ) அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட் இங்கிலாந்துக்கு எல்லாவகையான உதவிகளையும் அளிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இங்கிலாந்துக்குப் பணமாகக் கொடுப்பதைவிடப் பொருளாகக் கொடுக்கலாம் என்ற நோக்கத்துடன் ‘ஈட்டுக்கடன் முறை’ என்ற சட்டத்தை இயற்றினார். (Lend Lease Act) அதன்படி போர்க்கருவிகள் செய்ய ஏழு மில்லியன் டாலர் ஒதுக்கப்பட்டது. அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிடும் நாடுகள் அனைத்திற்கும் இலவசமாகப் போர்கருவிகள் அனுப்பப்பட்டன.

உ)1941, ஆகஸ்ட் 14-ம் தேதி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்துப் பிரதமர் சர்ச்சிலும் அட்லாண்டிக் கடலில் ஓர் அமெரிக்கப் போர்க்கப்பலில் கூடிப்பேசி ஒரு சாசனத்தை வெளியிட்டார்கள். அதற்கு ‘‘அட்லாண்டிக் சாசனம்’’ என்று பெயர். அதன்படி இரண்டு நாடுகளும், தங்கள் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், எல்லைகளைப் பாதுகாக்கவும், கடல் போக்குவரத்து உரிமைகளை நிலைநாட்டவும் உறுதி எடுத்துக் கொண்டன. மக்களின் விருப்பத்திற்கு மாறாக பிறநாடுகளின் ஆட்சி நிறுவப்படாது என்றும், அவரவர் விருப்பப்படி தங்களுக்கேற்ற அரசுகளை அமைத்துக் கொள்ளலாம் என்றும் சாசனம் கூறியது. குறிப்பிட்ட உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும் மக்கள் பாதுகாப்புடன் வாழவும், அச்சம் வறுமை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், பகை நாடுகளின் படைக்கலன்களைக் குறைக்கவும் இச்சாசனம் வலியுறுத்தியது.

ஊ)இதற்கிடையில் கிழக்கு ஆசியப் பகுதியில் ஜப்பானின் கை ஓங்கியது. ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் தென்கிழக்கு ஆசியாவில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தது. பசிபிக்கடல் பகுதியில் அமெரிக்காவுடனான பிரச்சனைகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதாக கூறி வந்தது. ஆனால் 1941 டிசம்பர் 7ம் தேதி ஞாயிறு காலை 8 மணிக்கு திடீரென பசிபிக் பெருங்கடலிலுள்ள பார்மோசா தீவிலுள்ள அமெரிக்காவின் முத்து துறைமுகத்தை (Pearl Harbour) சுமார் 200 ஜப்பானிய விமானங்கள் சராமாரியாகக் குண்டுவீசித் தாக்கின. இரண்டு மணி நேரத்தில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எட்டு பெரிய அமெரிக்கப் போர்க்கப்பல்களும் எண்ணற்ற பீரங்கிப் படகுகளும் முழ்கடிக்கப்பட்டன. 86 கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டன. 2403 வீரர்களும், மக்களும் உயிரிழந்தார்கள். 1178 பேர் காணமடைந்தார்கள். இந்த பேர்ல்ஹார்பர் நிகழ்ச்சி அமெரிக்க மக்களை ஒன்றுபடுத்தியது. மக்கள் வெகுண்டெழுந்தனர். மறுநாளே அமெரிக்க காங்கிரஸ் ஜப்பான் மீது போர் பிரகடனம் செய்தது. ஐரோப்பிய நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் நடைபெற்று வந்த போர் இப்பொழுது உலகப் போராக மாறியது. ஆமரிக்கா போரில் இறங்கியதும் இரண்டாம் உலகப்போரின் போக்கே மாறியது!

### 6.ஹிட்லரின் ரஷ்யப் படையெடுப்பு: 1941

1939, ஆகஸ்டுமாதம் ஜெர்மனியும் ரஷ்யாவும் ஆக்கிரமிப்பு இன்மை உடன்படிக்கையைச் செய்து கொண்டு போரின் ஆரம்ப கட்டத்தில் இரண்டு நா:களும் ஒன்று சேர்ந்து போரிட்டன. ஆனால் இந்த ஒற்றுமை அதிக காலம் நீடிக்கவில்லை. அல்பேனியா, பல்கேரியா, யூகோஸ்லோவியா, கிரீஸ், கிரீட், ஆகிய பால்கன் நாடுகள்

முழுவதையும் ஹிட்லர் கைப்பற்றிக் கொண்டதால் ரஷ்யா மீது போர் தொடுப்பதற்கான ஒரு சாதகமான சூழ்நிலை ஹிட்லருக்கு கிடைத்தது. எனவே 1941, ஜீன் மாதம் ஹிட்லர் ரஷ்யா மீது போர் தொடுத்தார். நவம்பர் 16-ம் தேதிக்குள் ஐந்து லட்சம் சதுர மைல் ரஷ்ய நிலப்பகுதிகளைப் பிடித்து, தலைநகர் மாஸ்கோவிற்கு பதினைந்து மைல் அருகாமையில் ஜெர்மானியப் படைகள் வந்துவிட்டன. இச்சமயத்தில் நேசநாடுகள் விமானங்கள் டாங்கிகள், மற்றும் பொருளாதார உதவிகளை ரஷ்யாவிற்கு அளித்தன. அத்துடன் ரஷ்யாவில் கடுங்குளிர் ஏற்படவே ஹிட்லரின் படைகள் 1942-ல் பின்வாங்கின.

வரலாற்றில் பன்னிரெண்டாம் சார்லஸ், நெப்போலியன் போனபர்ட் ஆகியோர் ரஷ்யப் படையெடுப்பில் எவ்விதம் தோற்றனரோ அந்த முடிவுதான் ஹிட்லருக்கும் கிடைத்தது. ஜெர்மானியப் படைகள் பசியாலும் பட்டினியாலும் பெரும் துன்பமடைந்தன. பின்வாங்கிய நாசிப்படைகளை ரஷ்ய கொரில்லாப் படை வீரர்கள் தாக்கியதில் ஜெர்மானியப் படைகள் சிதறி ஓடின. ஜேர்மனி ரஷ்யப் படையெடுப்பில் தோல்வியடைந்தது. ஹிட்லரின் இந்த தோல்வி இரண்டாவது உலகப் போரின் திருப்பு முனையாக அமைந்தது.

**7.ஹிட்லரின் முடிவு:**

ரஷ்யர்கள் தங்கள் வெற்றிக்குப் பிறகு ஜெர்மனியை நோக்கி முன்னேறினார்கள். போலந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா, கிழக்கு ஜெர்மனி ஆகியவற்றை ரஷ்யா பிடித்தது. 1944, ஜீன் மாதம் நேசப்படைகள் பிரான்சிலிருந்து ஜெர்மானியப் படைகளை விரட்டின. ஜேர்மனியை கிழக்குப் பகுதியிலிருந்துது ரஷ்யப்படைகளும், மேற்கு பகுதியிலிருந்து நேசப்படைகளும் தாக்கியதால் ஜெர்மானியப் படைகள் சரணடைந்தன. ஏப்ரல் 30-ல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். ஹிட்லரின் தளபதி கார்ல் டோனிட்ஸ் (Karl Doenitz) மே 7-ம் தேதி சரணாகதிப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். மே 8-ம் தேதி ஐரோப்பாவில் போர் முடிந்து விட்டதாக அறிவித்து, வெற்றி விழா உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. (V.E.DAY- Victory in Europe)

**8.போட்ஸ்டேம் மாநாடு (Postsdam conference)**

(1945 ஜீலை 17 முதல் ஆகஸ்ட் 2 வரை)

ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைந்தபின் பெர்லினுக்கு அருகே போஸ்டேம் என்ற இடத்தில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் இங்கிலாந்துப் பிரதமர் சர்ச்சில், ரஷ்யப் அதிபர் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் போர் முடிந்த பிறகு ஜெர்மனியை எப்படி நடத்துவது என்ற பொதுவான கொள்கைகளை உருவாக்கினர்.

1.ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட வேண்டும்.

2.நாசிக் கட்சியைக் கலைத்து விட்டு ஜெர்மனியில் மக்களாட்சி நிறுவப்பட வேண்டும். அங்கு அரசியல் கட்சிகள் ஜனநாயக அடிப்படையில் இயங்க வேண்டும்.

3.ஜெர்மனியின் படைகள் முற்றிலும் அழிக்கப்படவேண்டும்.

4.முப்பது ஜெர்மானிய நீர்முழ்கிக் கப்பல்களை நேசநாடுகள் எடுத்துக் கொண்டு மற்றவைகளை அழித்துவிட வேண்டும்.

5. போர்க் குற்றவாளிகளாக நாதித் தலைவர்கள் கருதப்பட்டு, விசாரணை செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

**நூரம்பர்க் விசாரணை**

போட்ஸ்டேம் விதிகளின்படி போர்க்குற்றங்கள் புரிந்ததாகவும் மனித இனத்திற்கு கொடுமை விளைவித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்ட 22 நாசித் தலைவர்கள் நூரம்பர்க் நகரில் விசாரணை செய்யப்பட்டார்கள். நூரம்பர்க், நாசிக்கட்சியின் அடிக்கடி, பேரணி நடத்திய இடமாகும். விசாரணை சர்.ஜியோபரி லாரன்ஸ் (Sir Geoffrey Lawrence) என்பவர் தலைமையில் நடைபெற்றது. 1945, நவம்பர் 20-ல் விசாரணை ஆரம்பமானது.

குற்றம் சுமத்தப்பட்ட 22 பேரில் முக்கியமானவர்கள் ஹெர்மன் ஹோயரிங், கடற்படைத் தளபதஜயான கார்ல் டோனிட்ஸ், அயல்நாட்டு மந்திரி ஜோகிம்வான் ரிப்பன்ட்ராப், நாசிக்கட்சியின் தத்துவ ஞானியான ரோசன்பர்க் ஆகியோர் ஆவர். நாஜிகள் செய்த கொடுமைகள் பற்றிய அதிகாரப்பூர்வமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இரு தரப்பிலும் நன்கு விசாரணை செய்யப்பட்டபின் 1946, அக்டோபர் முதல் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. மூன்று பேர் குற்றமற்றவர் என்றும் நான்கு குறைந்த தண்டனை, மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை, பன்னிரெண்டு பேருக்கு தூக்குத் தண்டனை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஹெர்மன் ஹோயரிங் சிறைச்சாலையிலுள்ள தனது அறையில் விஷம் குடித்து இறந்தான். நாசிக்கட்சி துணைத்தலைவர் போர்மேன் என்பவர் தப்பி ஓடி விட்டார். மீதி பத்து பேர் தூக்கிலிடப்பட்டார்கள்.

**9.ஜப்பானின் தோல்வியும், போரின் முடிவும்:**

ஐரோப்பாவில் போர் முடிவடைந்த பின்னர், தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானில் ஆக்கிரமிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மேக்ஆர்தரின் தலைமையில் தொடர்ந்து போர் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. பர்மா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து ஜப்பானியப் படைகளை விரட்டியடித்தார் மேக் ஆர்தர். 1945, ஜீலை மாதம் ஜெர்மனியில் போட்ஸ்டேம் நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த மாநாட்டிலிருந்தபடியே, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா ஆகிய நாடுகள் ஜீலை 29-ம் தேதிக்குள் ஜப்பான் சரணடைந்து விடவேண்டும் அல்லது பேரழிவை எதிர்நோக்க வேண்டியதிருக்கும் என்று கெடு விதித்தன. ஆனால் ஜப்பானிய அரசாங்கம் இந்தக் கெடுவை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று நிராகரித்தது.

எனவே 1945, ஆகஸ்ட் 6-ம் தேதி காலை 8-15 மணியளவில் ஹிரோஷிமா நகர் மீது ‘அனலாகே’ (Enolagay) என்ற அமெரிக்க விமானம்‘லிட்டில்பாய்’ (Littleboy) என்ற பெயருடைய உலகின் முதல் அணுகுண்டை வீசியது. சுமார் 78,000 பேர் உடனடியாக இறந்தார்கள். ஐந்து சதுர மைல் பரப்பளவில் நகரம் தூள் தூளாவியது. பேரழிவு ஏற்பட்டது. அனைத்தும் எரிந்து சாம்பலானது.

ஆயினும் ஜப்பான் உடனடியாகச் சரணடையவில்லை. ஜப்பானின் உயர் ராணுவ கவுன்சில் சரணடைவதுசம்பந்தமாக விவாதிக்க ஆகஸ்ட் 9-ம் தேதி டோக்கியோவில் கூடியது. ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டது. அதே நாள் காலை 11 மணி அளவில் ∴பேட்மேன் (Fatman) என்ற புளூட்டோனியம் அணுகுண்டை அமெரிக்கா நாகசாகி நகர்மீது வீசியது. ஆனால் அக்குண்டு குறிதவறி நகருக்கு மூன்று மைல் தள்ளி யுரேகமி (Urakamy) என்ற புறநகர்ப் பகுதியில் விழுந்தது. முப்பத்தி எட்டு ஆயிரம் பேர் இறந்தார்கள். அப்பகுதி முழுவதும் எரிந்து தரைமட்டம் ஆகியது.

நாகசாகி அழிவுக்கு மறுநாள்தான் ஜப்பான் ‘போட்ஸ்டேம் விதிகளின்படி சரணடைவதாக அறிவித்தது. பேர்ல்ஹார்பர் நிகழ்ச்சி நடைபெற்று மூன்று வருடம் எட்டு மாதங்களுக்குப் பிறகு 1945 செப்டம்பர் 2-ம் தேதி டோக்கியோகுடாவில் நின்ற ‘மிசௌரி’ என்ற அமெரிக்க போர்க்கப்பல் தளத்தில் சரணாகதி ஒப்பந்தத்தில் ஜப்பான் கையெழுத்திட்டது. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தது.

இவ்வாறு எல்லாவற்றிலும் மிகப் பயங்கரமான போர் முடிவடைந்தது. இன்னொரு போர் நடைப்பெற்றால் மனித இனமே அழிந்து போகும் என்பதை இந்த இரண்டாம் உலகப்போர் தெளிவாக்கியது. தீயமனமும், பேராசையும் கொண்டவர்களால் தான் இப்போர் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் அவர்கள் வெற்றி பெற்றாலும் இறுதியில் தோல்வியடைந்தனர். 'கத்தியைப் பிடித்தவர் கத்தியாலே அழிவர் என்பதை நிரூபித்தனர். 'மனித நம்பிக்கையையும் மனித வாழ்க்கையின் மதிப்புகளையும் நிராகரித்து உலகத்தில் மனிதத்தன்மையைப் பாராட்டும் சக்திகளுக்கெல்லாம் பகைவரானதால் அச்சு நாடுகள் தோல்வியடைந்தன'. மனிதனின் நற்குணங்களிலும் அறிவிலும், பெருமையிலும் நம்பிக்கையுள்ளவர்களே இறுதியில் ஜெயித்தார்கள்.

**போரின் விளைவுகள்**

**1.பெருமளவில் மனித உயிர் இழப்பு, பொருள் இழப்பு:**

இரண்டாம் உலகப்போரில் மொத்தம் 2.50 கோடிப்பேர் இறந்தார்கள். 3.50கோடி பேர் காயமடைந்தார்கள். போரில் ஈடுபட்டநாடுகளின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. எல்லா நாடுகளுமாகச் சேர்ந்து 1350 மில்லியன் டாலர் மதிப்புள்ள பணம் செலவு செய்தன.

**2.அச்சு நாடுகளின் அழிவு:**

ஆச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை படுதோல்வியடைந்தன. ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஜெர்மனியில் நாசிசமும், இத்தாலியில் பாசிசமும் ஒழிக்கப்பட்டன. ஜப்பானில் பேரழிவு ஏற்பட்டது. தோற்கடிக்கப்பட்ட இந்த அச்சு நாடுகளுடன் தனித்தனியே உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு அவர்களின் ராணுவ வலிமை குறைக்கப்பட்டது.

**3.பல பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன:**

ஏந்தப் பிரச்சனைகளுக்காக இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டதோ அந்தப் பிரச்சனைகள் முடிவடைந்தன. தீர்க்கப்பட்டன. போர் நடந்து கொண்டிருந்த போதே உலகின் எதிர்காலக் கட்டமைப்பிற்கான பல கொள்கைகளையும், அறிக்கைகளையும் வெளியிட்டன. நேசநாடுகளின் பிரதிநிதிகள் பல மாநாடுகளைக் கூட்டி அச்சு நாடுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாடகளின் எதிர்காலம், எதிர்கால அமைதி, உலகத்தின் பாதுகாப்பு ஆகியவை குறித்து விவாதித்தன.

**4.பல புதிய பிரச்சனைகள் உருவாயின:**

இரண்டாம் உலகப்போரின் விளைவாக உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியப ல புதிய பிரச்சனைகள் ஏற்பட்டன. அவை பின்வருமாறு: லட்சக்கணக்கான அகதிகளின் புனர்வாழ்வு, ஐரோப்பிய பொருளாதாரம், கலாச்சார சீரமைப்பு, போர்க்குற்றவாளிகளின் வழக்கு விசாரணை, ஐரோப்பாவிலிருந்து நாசிக் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை ஒழித்துக் கட்டுதல், தோற்ற நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளின் நகல்களைத் தயாரித்தல், போர் இழப்பீடு பற்றிய முடிவு செய்தல், உலக வாணிபத்தை மேம்படுத்துதல், படைக்குறைப்பு போன்றவையாகும்.

**5.வல்லமைச் சமநிலையில் மாற்றம்:**

இரண்டாம் உலகப்போரின் விளைவாக பல ஐரோப்பிய நாடுகள் வலிமை இழந்தன. ஜெர்மனியின் அரசியல் ஒற்றுமை குலைக்கப்பட்டது. அது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இத்தாலியும் வலிமை இழந்து ஒரு மூன்றாம்தர நாடானது. பிரான்ஸ் பிரச்சனைகளைக் கொண்ட நாடாக மாறியது. வுலிமை இழந்தது.

இங்கிலாந்தும் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதனால் உலக அரசியல் நடவடிக்கைகளின் மீது தனக்கிருந்த ஆதிக்கத்தை ஐரோப்பா இழந்தது. ஐரோப்பாக் கண்டம் பிரச்சனைகளின் மைய இடமாக மாறியது. அதே நேரம் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் வலிமையான நாடுகளாக உருவாயின. எனவே அதிகார மையம் அமெரிக்காவிடமும், சோவியத் யூனியனிடமும் சென்றது. இவ்வாறு வல்லமைச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது.

**6.பல நாடுகள் சுதந்திரமடைந்தன:**

இரண்டாம் உலகப்போரின் தாக்கம் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அதிகமாகக் காணப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் பல ஆசிய நாடுகள் பங்கு கொண்டன. போரின் முடிவில் இந்த ஆசிய நாடுகளில் தேசிய இயக்கங்கள் வலுவடைந்து மேற்கத்திய நாடுகளின் ‘ஆசியக் குடியேற்றம்’ (Asian Colonialism) முடிவுக்கு வந்தது. போருக்கு பிறகு இந்த நாடுகளில் தேசிய இயக்கங்கள் ஆயுதப் போராட்டமாக மாறி பல நாடுகள் சுதந்திரமடைந்தன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பர்மா இந்தோனேசியா, மலேஷியா, வியட்நாம், லாவோஸ், கொரியா ஆகிய நாடுகள் சுதந்திமடைந்தன. இஸ்ரேல் என்ற புதிய நாடு தோன்றியது. மத்தியக் கிழக்கில் ஈராக்,ஈரான், சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் சுதந்திரமடைந்தன. சூடான், டூனிஷியா, சிரியா, லிபியா, அல்ஜீரியா சுதந்திரம் பெற்றன. மேலும் நீக்ரோமக்களின் தேசியம் வளர்ச்சியடைந்து கோல்ட்கோஸ்ட் கேமரூன்ஸ், மாலி, நைஜீரியா, சோமாலிலாந்து, காங்கோ, டங்கனிகா போன்ற நீக்ரோ நாடுகள் சுதந்திரமடைந்தன.

**7.இங்கிலாந்தின் வலிமை குறைந்தது:**

இரண்டாம் உலகப்போரின் விளைவாக, உலகத்தில் வலிமையிலும் செல்வாக்கிலும் முதல்தர நாடாக இருந்த இங்கிலாந்து இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. போரின் போது இங்கிலாந்து அமெரிக்காவைச் சார்ந்தே செயல்பட வேண்டியிருந்தது. அமெரிக்கா உதவி செய்யாமலிருந்தால் ஜெர்மனியிடம் தோற்றுப்போய் இருக்கும். இவ்வாறு இங்கிலாந்தின் பழம்பெருமையும், வலிமையும் குறைந்தது.

**8.அமெரிக்காவும் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாயின:**

இரண்டாவது உலகப் போரில் அமெரிக்காவின் படைபலமும், பொருளாதார உதவியுமே, போரின் போக்கை மாற்றியமைத்தது. எனவே போர் முடிந்த பின்னர் அது உலக வல்லரசானது. அதே போல் ரஷ்யாவும் தனது படைபலத்தால் ஜெர்மனியின் படைபலத்தை உடைத்தெறிந்தது. இவ்வாறு சர்வாதிகாரிகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்ற அமெரிக்காவும், ரஷ்யாவும் உலக வல்லரசுகளாயின.

**9.உலகம் இரண்டு பிரிவுகளானது:**

போரின் போது ஒன்றுப்பட்டுப் போரிட்ட அமெரிக்காவும், ரஷ்யாவும், போருக்குப் பிறகு கொள்கை வேறுபாடுகளினால் பிரிந்துவிட்டன. ரஷ்யா கம்யூனிசக் கருத்துக்களுக்கும் அமெரிக்கா முதலாளித்துவக் கருத்துக்களுக்கும் தலைமை வகித்தன. ரஷ்யா கம்யூனிசக் கருத்துக்களைப் பரப்ப முயன்றபோது, அதனை அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய நாடுகள் எதிர்த்தன. இவ்வாறு உலகம் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பனிப்போர் ஆரம்பித்தது.

**10.ஐ.நா.சபையின் தோற்றம்:**

இரண்டாம் உலகப்போரின் விளைவாக, உலகத்தில் போரை தடுப்பதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும், ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. 1945, அக்டோபர் 24-ம் தேதி முதல் ஐ.நா.சபை செயல்பட ஆரம்பித்தது.

## ஐக்கிய நாடுகள் சபை (UNO)
## (United Nations Organisation)

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மிகப்பெரிய உலக நாடுகளின் கழகமே 'ஐக்கிய நாடுகள் சபை' ஆகும். இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இச்சபை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும் என்ற எண்ணம் நேச நாட்டுத் தலைவர்கள் மனதில் தோன்றியது. இதற்காகப் பல இடங்களில் பல மாநாடுகள் கூட்டப்பட்டன. இறுதியாக 1945, ஜீன் 26-ல் சான்பிரான்ஜிஸ்கோ நகரில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயம் (Charter) கையெழுத்திடப்பட்டது. 1945, அக்டோபர் 24-ம் தேதி ஐக்கிய நாடுகள் சபை நடைமுறையில் செயலபட ஆரம்பித்தது. ஐ.நா. சபை அமைக்கப்படக் காரணமாக இருந்தவர்கள் இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்டன்சர்ச்சில். அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட், ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் ஆகியோர் ஆவர்.

**ஐ.நா. சபையின் தோற்றம்:**

**1.அட்லாண்டிக் சாசனம்: 1941, ஆகஸ்ட் 4**

இரண்டாம உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நேசநாட்டுத் தலைவர்கள், பல இடங்களில் கலந்துரையாடினார்கள். 1941 ஆகஸ்ட் 4-ம் தேதி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அட்லாண்டிக் கடலில் நியுபவுண்ட்லாந்து தீவு அருகே "பிரின்ஸ் ஆப் வேலஸ்"(Pince of Wales) என்ற கப்பலில் சந்தித்து ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதுவே அட்லாண்டிக் சாசனமாகும்.

இந்த சாசனம் உலகநாடுகள் வன்முறையில் ஈடுபடுவதையும் பிற நாடுகளைக் கைப்பற்றுவதையும், படை உற்பத்தியைப் பெருக்குவதையும் கண்டித்தது. சுயாட்சி உரிமையைப் பறிகொடுத்த மக்களுக்கு மீண்டும் அதனைப் பெற்றுத்தரவும் உறுதி பூண்டது. நாசிக் கொடுமைகள் நீங்கியபின் அனைத்துலக மக்களும் அச்சமின்றி சுதந்திரமாக வாழ இன்றியமையாத உலக அமைதியை நிலைநாட்ட முயற்சி எடுக்க முடிவு செய்தது. இவ்வாறு ஐ.நா. சபை அமைக்கப்படுவதற்கான கரு அட்லாண்டிக் சாசனத்தில் காணப்படுகிறது.

**2.ஐக்கிய நாடுகள் அறிக்கை: 1942**

1942, ஜனவரி மாதம் வாஷிங்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதில் 26 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்கள் அட்லாண்டிக் சாசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். அச்சு நாடுகளுக்கு எதிராக தொடர்ந்து போரிடவ் உறுதி பூண்டார்கள். அப்போது உலகின் அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவுவதற்காக ஒன்று சேர்ந்த நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் என்ற சிறந்த பெயரைக் கொடுத்தவர் ரூஸ்வெல்ட் ஆவார். எனவே அவரது நினைவாக உலக நாடுகள் கழகம் 'ஐக்கிய நாடுகள் சபை" என்று பெயர் பெற்றது. மாநாட்டின் இறுதியில் 'ஐக்கிய நாடுகள் அறிக்கை' வெளியிடப்பட்டது.

**3.மாஸ்கோ மாநாடு: 1943**

1943, அக்டோபர் மாதம் இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நான்கு நாடுகள் மாஸ்கோவில் கூடி இறுதியில் ‘‘மாஸ்கோ அறிக்கை’யை வெளியிட்டார்கள். அதன்படி,‘‘இறைமையும் சமத்துவமுடைய அமைதியை விரும்பும் எல்லா நாடுகளைமுடைய ஒரு பன்னாட்டு நிறுவனம் ஒன்றை பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தும் பொருட்டு அமைத்தல் வேண்டும்’’ என்று உறுதி செய்யப்பட்டது.

**4.டம்பர்டன் ஓக்ஸ் மாநாடு: 1944, ஆகஸ்ட்**

1944, ஆகஸ்ட் மாதம் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வாஷிங்டன் நகரத்தில் டம்பர்டன் ஓக்ஸ் என்ற மாளிகையில் கூடி ஐ.நா. சபை சாசனத்தின் முதல் வரைவை (Draft) தயாரித்தார்கள். பொதுச்சபையும், பாதுகாப்பு சபையும் சர்வதேச சங்க அமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

**5.யால்டா மாநாடு: 1945, பிப்ரவரி**

ரஷ்யாவில் கிரிமியா தீபகற்பத்திலுள்ள யால்டா என்ற இடத்தில் முப்பெரும் தலைவர்களான ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் சந்தித்தார்கள். போரில் வெற்றி நிச்சயம் என்ற நிலையில் இந்த மாநாடு கூட்டப்பட்டதால் போருக்குப்பின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி பேசப்பட்டன. நாசிக் கருத்துக்களை அழித்தல், ஜெர்மனியை நான்கு பிரிவுகளாகப் பிரித்தல்,‘போலந்தின் எல்லை நிர்ணயம் ஆகியவை பற்றி முடிவு எடுக்கப்பட்டது. மிக முக்கியமான முடிவு என்னவென்றால், ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் வல்லரகளுக்கு ரத்து அதிகாரம் (Vetopower) இருத்தல் வேண்டுமென்று முடிவு எடுக்கப்ட்டது. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவதற்கு ஐந்து வல்லரசுகளின் ஆதரவும் இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்தார்கள். மேலும் ஐ.நா. சபையின் பட்டயம் வரையப்பட்டது.

**6.சான்பிரான்ஸிஸ்கோ மாநாடு: 1945, ஏப்ரல்**

1945-ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ நகரில் 50 நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. ஐ.நா. சபையின் பட்டயம் உறுப்பினர்களால் ஆய்வு செய்யப்பட்டு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு வாக்குடன் ஒப்பு கொள்ளப்பட்டது. 1945, ஜீன் 26-ம் நாள் உறுப்பு நாடுகள் கையெழுத்திட்டு ஒப்புக் கொண்டன. உறுப்பு நாடுகளின் ஒவ்வொரு அரசாங்கமும் ஒப்புதலளித்த பின் 1945 அக்டோபர் 24-ம் தேதி ஐ.நா.சபை அதிகாரப்பூர்வமாகச் செயல்படத் தொடங்கியது. ஐ.நா. சபையின் தலைமையகம் நியுயார்க் நகரில் முதல் அவின்யூவில் அமைந்துள்ளது. இதன் செயல்பாடுகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஷ், சீனம், அரபு ஆகிய ஐந்து மொழிகளில் நடைபெற்று வருகிறது. ஐ.நா. சபை தனக்கென்று தனித் தபால்தலை வெளியிடும் உரிமை பெற்றுள்ளது.

**7.ஐ.நா. சபையின் நோக்கங்கள்:**

1.பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவுதல்.

2. சமஉரிமை, சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையில் உலக நாடுகளுக்கிடையே நட்புறவுகளை வளர்த்தல்.

3. பன்னாட்டுப் பொருளாதார, சமூக பண்பாட்டு மனிதபண்புகளை வளர்த்தல்.

4. நாடுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளை ஒற்றுமையுடனும் அமைதியுடனும் தீர்த்தல்.

5. பலாத்காரம், ஆயுத உற்பத்தி, ஆக்கிரமிப்பு, ராணுவ வலிமை ஆகியவற்றைக் குறைத்து சமாதானத்தை நிலை நாட்டுதல்.

6. அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தி அச்சுறுத்துகின்ற நாட்டிற்கு எதிராக கூட்டு நடவடிக்கைகளை எடுத்தல்.

**ஐ.நா. சபையின் சாசனம் (Charter):**

ஐ.நா. சாசனம் 10,000 சொற்களையும், 19 அதிகாரங்களையும், 111 விதிகளையும் கொண்டது. இந்த சாசனம் ஐ.நா. சபையின் நோக்கம், அதன் அமைப்பு, செயல்முறை விதிகள் ஆகியவற்றைத் தெளிவாக விளக்குகிறது. ஐ.நா. சாசனத்தின் முகப்புரை மிகவும் புகழ்பெற்றது.

**ஐ.நா. சபையின் முகப்புரை (Preamble):**

ஐ.நா. சபையின் வழிகாட்டியாகத் திகழ்வதே சாசனத்தின் முகவுரையாகும். அந்த முகப்புரை,"வருங்கால சந்ததியினரைப் போரின் கோரப்பிடியிலிருந்து பாதுகாப்பதற்காகவே…" (To save the succeeding generation from the scourge of war) என்று ஆரம்பிக்கிறது. மேலும் இது பன்னாட்டுக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பும், உலகில் நீதியும் நிலவுவதற்கான தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதில் ஐ.நா. கொண்டுள்ள திடமான நம்பிக்கையைத் தெரிவிக்கிறது. சமூக முன்னேற்றம், நல்ல வாழ்க்கைத்தரம் போன்றவற்றை வளர்ப்பதே ஐ.நா.வின் குறிக்கோள். "மக்களாகிய நாம்" என்று ஆரம்பிக்கும் வாசகம் ஐ.நா.வின் முகப்புரையின் சிறப்பு அம்சமாகும்.

**ஐ.நா. சபையின் அமைப்பு:**

**1. பொதுச் சபை (General Assembly)**

ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளெல்லாம் பொதுச்சபையில் உறுப்பினராக உள்ளன. துற்பொழுது 189 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் பொதுச்சபைக்கு ஐந்து பிரதிநிதிகளை அனுப்பலாம். ஆனால் பொதுச்சபைத் தீர்மானங்களில் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்குதான் உண்டு. ஐ.நா. சபை பட்டயத்தை மீறும் உறுப்பு நாட்டை விலக்க உரிமை உண்டு. பொதுச்சபை ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் மூன்றாம் செவ்வாய்கிழமை கூடும். இது சுமார் மூன்று மாதங்கள் நடைபெறும். பொதுச்சபையின் தீர்மானங்களுக்குக் கூட்டத்துக்கு வந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கினருடைய ஆதரவு இருந்தால் அது நிறைவேறும். பாதுகாப்பு சபைக்கு பத்து சாதாரண உறுப்பினர்களை பொதுச்சபை தேர்ந்தெடுக்கிறது. உலகஅமைதி, பாதுகாப்பு, உலகநலன் ஆகியவற்றை விவாதித்துப் பாதுகாப்பு சபைக்கு பரிந்துரை செய்யும்.

மேலும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், தர்மகர்த்தா சபை சமூக பொருளாதார சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அங்கீகரித்தல், பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகளை தேர்ந்தெடுத்தல் ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது. அமைதி, பாதுகாப்பு குறித்த ஒரு பிரச்சனையில் பாதுகாப்புசபை வல்லரசுகளின் ரத்து அதிகாரம் காரணமாக ஒரு முடிவிற்கு வரமுடியாமல் போனால், அப்பிரச்சனை பொதுச்சபைக்கு கொண்டு வரப்பட்டு மூன்றில் இரு பங்கு வாக்கு பெரும்பான்மையில் முடிவு செய்யப்படலாம். இதனால் பொதுச்சபையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. இந்த உரிமை 'அமைதிக்கு ஒன்றுபடுதல்'(Unity for peace) என்ற தீர்மானப்படி 1950-ல் பொதுசபைக்கு அளிக்கப்பட்டது. பொதுச்சபை ஒவ்வொரு ஆண்டும் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

**2.பாதுகாப்பு சபை (Security Council)**

ஐ.நா சபையின் முக்கியமான நிர்வாக உறுப்பு, பாதுகாப்பு சபையாகும். இதில் மொத்தம் 15 உறுப்பினர்கள் உள்ளனர். ஆமெரிக்கா, இங்கிலாந்து, சீனா,

பிரான்ஸ்,ரஷ்யா ஆகியவை நிரந்தர உறுப்பினர். மீதி பத்து உறுப்பினர் நாடுகள் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படும். இந்த பத்து உறுப்பினர்களில் ஆண்டுதோறும் ஐந்து உறுப்பினர்கள் பதவி விலகுவர். பொதுச்சபையில் எந்த தீர்மானமும் நிறைவேறுவதற்கு ஐந்து நிரந்தர உறுப்பினர் வாக்குகளையும் சேர்த்து மொத்தம் ஒன்பது வாக்குகள் வேண்டும். எந்த தீர்மானத்தையும் நிரந்தர உறுப்பினர் எவரேனும் தனது மறுப்பாணையைக் கையாண்டு (veto power) தள்ளுபடி செய்துவிடலாம். இந்த மறுப்பாணை அதிகாரமம் பட்டயத்தின் 27-ம் பிரிவினால் வழங்கப்படுகிறது. பாதுகாப்பு சபை பதினான்கு நாட்களுக்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்.

உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் இடையூறான சூழ்நிலைகளை உறுப்பினர் இச்சபையின் பார்வைக்குக் கொண்டுவரும் போதோ, இத்தகைய சூழ்நிலைகளை சபை தானே கவனித்தோ, இது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் உடையது. தாக்குதல் செய்யும் நாட்டிற்கு எதிராகவும், பொருளாதாரத் தடை விதித்தும், தடுப்பு நடவடிக்கை எடுத்தும், அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவ இச்சபைக்கு அதிகாரம் உண்டு.

### 3.பொருளாதார சமூக சபை (Economic and social Council):

உலக மக்களின் சமூகநல வளர்ச்சிக்காகவும் அவர்களின் வாழ்க்கைத்தர உயர்விற்காகவும் அமைக்கப்பட்டதே பொருளாதார சமூக சபை ஆகும். இதன் உறுப்பினர்கள் 54 பேர். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்பது உறுப்பினர்கள் பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது ஆண்டிற்கு இரண்டுமுறை கூடும். உயர்ந்த வாழ்க்கைதரம், முழுவேலை வாய்ப்பு, பொருளாதார சமூக வளர்ச்சி, பன்னாட்டுப் பொருளாதார சமூக சுகாதார பண்பாட்டுக் கல்விச் சிக்கல்களை தீர்த்து ஒத்துழைப்பை ஏற்படுத்துதல், மனித உரிமைகளுக்கும், ஆதார உரிமைகளுக்கும் இனம், பால், மொழி, சமய வேறுபாடின்றி எங்கும் மதிப்புக் கொடுக்கும்படி செய்தல் ஆகியவையே இதன் பணிகளாகும். இப்பணிகளைச் செயலாற்ற பல சிறப்பு நிறுவனங்களை இச்சபை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, மேற்காசியா ஆகிய ஐந்து பகுதிகளில் ஐந்து மண்டல பொருளாதாரக் குழுக்களைக் கொண்டுள்ளது.

### 4.பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Council)

ஐ.நா. சபையின் உறுப்பினர்கள் தன்னாட்சி பெறாத குடியேற்ற நாடுகளில் நடத்தும் ஆட்சியைக் கண்காணித்து, அவற்றின் மக்களுடைய நல்வாழ்வுக்கானவற்றைச் செய்யவும், தன்னாட்சியை நிறுவுவதற்குத் தேவையான பயிற்சியைக் கொடுக்கவும், பொறுப்பாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்பு சபையின் நிலையான உறுப்பினர்களும், குடியேற்ற நாடுகளை ஆட்சி செய்யும் உறுப்பு நாடுகளும் அவற்றுக்குச் சம எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்ட்ட பிற உறுப்பு நாடுகளும் இருக்கின்றன. பொறுப்பு நாடுகளை ஆளும் நாடுகள் அளிக்கும் அறிக்கைகளை பொறுப்பாண்மைக் குழு வாங்கி ஆராய்ந்து தனது முடிவுகளை வெளியிடுகிறது.

### 5.பன்னாட்டு நீதிமன்றம்: (International Court of Justice)

இது ஐக்கிய நாட்டு சபையின் நீதிமன்றமாகும். ஒரு தனி இமைப்பாகத் திகழும் இந்த நீதிமன்றம் தனக்கென ஒரு சாசனத்தைக் கொண்டுள்ளது. ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடுகள் யாவும் இந்த நீதிமன்றத்தின் அடிப்படைச் சட்டத்திறகுக் கட்டுப்பட்டவையாகும். நெதர்லாந்திலுள்ள ‘திஹேக்’ என்னும் நகரில் இந்நீதி மன்றம் செயல்பட்டு வருகிறது. இதிலுள்ள 15 நீதிபதிகள் பொதுச்சபையாலும், பாதுகாப்புச்சபையாலும் ஒன்பது ஆண்டு காலத்திற்குத்

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.பன்னாட்டைச் சார்ந்த சிறப்புமிக்க சட்ட வல்லுநர்கள் இந்த நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இது நாடுகளிடையே தோன்றும் வழக்குகளை விசாரிக்கும் போது பன்னாட்டு வழக்கங்கள், நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட பொது விதிகள், சட்ட வல்லுநர்கள் கூறும் விதிகள் முதலியவற்றைப் பின்பற்றுகிறது. இது பல ஆலோசனைகளை வழங்கும் தகுதியும் பெற்றுள்ளது.

### 6.தலைமைச் செயலகம் (Secretariat)

இது ஐ.நா. சபையின் ஆட்சித் துறைப் பிரிவாகச் செயல்படுகிறது. ஐ.நா.வின். அன்றாட பணிகள் அனைத்தையும் தலைமை செயலகமே ஏற்றுச் செயல்படுகிறது. இதன் இருப்பிடம் அமெரிக்காவிலுள்ள நியுயார்க் நகரமாகும். இதன் கிளை அலுவலகம் ஒன்று ஜெனிவாவில் செயல்படுகிறது. இந்தச் செயலகத்தின் பல பிரிவுகளில் பல நாட்டிலிருந்து அலுவலர் வந்து பணி செய்கின்றனர். இதன் தலைவராகச் செயல்படுபவர் ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் ஆவார். இவர் பொதுச் சபையால் ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்ந்த்தெடுக்கப்படுகிறார்.

ஐ.நா. சபையின் முதல் பொதுச் செயலாளர் ஜெனரல் டிரிகிவ்லி (Trygvelie) என்பவர் ஆவர். இவர் 1948 முதல் 1953 வரை பதவி வகித்தார்.

ஐ.நா. சபையின் முக்கிய உறுப்புகளின் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது, நீதிபதிகளை தேர்ந்தெடுக்க தேர்தல்களை நடத்துவது, உலக அமைதிக்குப் பாதகமான சூழ்நிலைகளை பாதுகாப்பு சபையின் கவனத்திற்கு கொண்டு வருவது ஆகியவை ஐ.நா. பொதுச் செயலாளரின் பணிகளாகும். ஐ.நா. அமைதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தும் அதிகாரம் பெற்றவர்.

### ஐ.நா. சபையின் சிறப்பு நிறுவனங்கள்:

### 1.ஐ.நா. கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO)

ஐ.நா. சபையின் நிறுவனமாக “ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம்” 1946, நவம்பர் 4-ம் தேதி பாரிசு நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. உலக மக்களின் கல்வி, அறிவியல் பண்பாட்டு உறவுகள் பெருகவும், இத்துறையில் முன்னேற்றம் அடையவும், மனித சமூகத்தின் மொத்த நன்மைக்காக உலக அளவில் அமைதியை ஏற்படுத்தவும் இது நிறுவப்பட்டது. உலகின் பல்வேறு இடங்களில் யுனஸ்கோ நிறுவனம் கல்வி மையங்கள், அறிவியல் மையங்கள், பண்பாடு மற்றும் தகவல் தொடர்பு நிலையங்கள் முதலியவற்றை நிறுவியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் அனைவரும் யுனஸ்கோ நிறுவனத்தின் உறுப்பினராகத் தகுதியுடையவர்கள் ஆவர். இதில் இந்தியாவும் ஓர் உறுப்பு நாடாகப் பங்கு வகிக்கிறது.

யுனஸ்கோ நிறுவனம் “கல்வி வாழ்க்கை முழுவதும் பரந்து பயன் தரக்கூடியது” என்ற கோட்பாடுடையது. எனவே தான் இதன் நடவடிக்கைகள் அனைத்துமே கல்வி என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் கல்வி ஒன்று தான் அடிப்படையானது என்பதை உணர்ந்து உறுப்பு நாடுகள் அனைத்துக் கல்வி நிலைகளிலும் முன்னேற்றம் அடைய இது எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுகிறது. ‘வாழக்கற்றல்’ என்ற பொருள் தரக்கூடிய இதன் அறிக்கை 1972-ம் ஆண்டு உலகம் முழுவதும் கல்வியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்

வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை உலக நாடுகளின் கல்வியின் போக்குகள் குறித்து ஆய்ந்து, மேலும் 'வாழ்நாள் முழுவதற்குமான கல்வி' என்ற கருத்தினை விவரிக்கிறது.

யுனஸ்கோ நிறுவனம் உலக அளவில் பன்னாட்டுக் கருத்தரங்குகளைப் பல நிலைகளில் நடத்துவதன் மூலம், பன்னாட்டு கல்வியாளர்களிடம் செய்தி பரிமாற்றங்கள் ஏற்படுத்த ஏதுவாக உள்ளது. அறிவியல் வழிச் செயல்களில் நிறைந்த அளவு இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தின், அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் அறிவியல் மையங்களை நிறுவி அறிவியல் பணிசெய்து வருகிறது. அறிவியற்கல்வி சிறப்புற அறிவியல் துணைப் பொருட்களை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் அளித்துள்ளது.

இந்த நிறுவனம் தொலைக்காட்சி வழியே கல்வியை மேம்படுத்த விண்கோள்கள், தகவல் தொடர்பு கருவிகள் மூலம் தனது உறுப்பு நாடுகளுக்கு உதவி செய்து வருகிறது.

இது மனித உரிமைகளைப் பேணி காக்கவும், அமைதிக் துறையில் ஆய்வு மேம்படுத்தவும் தூண்டுதல் அளித்து வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தொல்பொருட்களைப் பேணிக் காப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. உலக மக்களின் கூட்டுறவுக்கும் மேம்பாட்டிற்கும் யுனஸ்கோ நிறுவனம் தன் பணிகளைச் செய்கிறது. பண்பாட்டைப் பேணிகாக்கவும், அறிவியல் நாட்டத்தை வளர்க்கவும், மனித சமுதாயத்தை மென்மேலும் முன்னேற்றமடையச் செய்யவும், இந்த நிறுவனம் பணிபுரிகிறது. உலகின் பல மொழிகளில் யுனஸ்கோவின் இதழான 'கூரியர்' வெளியிடப்பட்டு வருகிறது.

**2.அனைத்து நாட்டுக் குழந்தைகள் நெருக்கடி கால நிதி நிறுவனம் (UNICEF)**

இந்த நிறுவனம் 1946-ம் ஆண்டு டிசம்பர் 11-ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. முதலில் இரண்டாம் உலகப்போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மீட்புக்காகவும், மறுவாழ்வுக்காகவும் இது அமைக்கப்பட்டது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட அவசர நிலை முடிந்த பின்னர் பின்தங்கிய நாடுகளிலுள்ள குழந்தைகளின் நலனுக்காக பொதுவான திட்டங்களுக்கு உதவி செய்யத் தொடங்கியது. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய அறிக்கை 1939, நவம்பர் 20-ம் தேதி முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மனித சமுதாயம் குழந்தைகளுக்குத் தன்னுடையதில் சிறந்தவற்றைத் தரக் கடமைப்பட்டுள்ளது. குழந்தைகளுடைய இவ்வுரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் செய்யும் உதவிகளும், உடல்நலம் பேணுதல் தூண்மையான தண்ணீர் கல்வி, உடல்நலக்கல்வி, குடும்பம், குழந்தைகள் நலம், சிறுவர்களுக்கான பொது நலத்திட்டங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். பொதுவாக இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகள் இரண்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளன. ஒன்று வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள குழந்தைகளின் உடனடிக் தேவைகளை நிறைவு டிசய்வது, மற்றொன்று குழந்தைகளுக்கு அரசாங்கங்கள் செய்ய நினைக்கும் நீண்டகாலப் பணிகளைச் செயல்படுத்துவதில் உதவி செய்வது ஆகும். இந்த நிதி நிறுவனம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுடன் சேர்ந்து, அந்நாட்டுக் குழந்தைகளின் நோய்கள், சத்துணவின்மை, குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் மற்ற இடையூறுகள் ஆகியவற்றைத தடுப்பதிலும் குழந்தைகளை உடல் நலமிக்க பயன்படக்கூடிய திடமான மனதர்களாக உருவாக்கும் பணிகளிலும் ஈடுபடுகிறது. அங்கோலா, வங்காளதேசம், எத்தியோப்பியா, லெபனான், ருவாண்டா ஆகிய நாடுகளில் இந்நிறுவனம் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வருடமும் சுமார் 30 லட்சம்

குழந்தைகளின் உயிரை இந்த நிறுவனம் காப்பாற்றி வருகிறது. இதன் தலைமையகம் நியுயார்க் ஆகும்.

**3.பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (ILO):**

இந்நிறுவனம் 1919-ல் சர்வதேச சங்கத்தின் சிறப்பு நிறுவனமாக அமைக்கப்பட்டது. ஐ.நா. சபை அமைக்கப்பட்ட பின் தொடர்ந்து அதன் சிறப்பு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. 1919லிருந்து உலகத் தொழிலாளர் நலன்களைப் பேணும் முகமாக சுமார் 300 கூட்டங்களை நடத்தியுள்ளது. இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் நான்கு உறுப்பினர்களை அனுப்புகிறது. 1959-60ம் ஆண்டில் ஜெனிவாவில் இதன் செயல்பாட்டு மையம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் ஒரு டைரக்டர் ஜெனரலின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

**4.உணவு வேளாண்மை நிறுவனம் (FAD)**

இந்நிறுவனம் 1945-ல் அமைக்கப்பட்டது. இதன்தலைமையிடம் ரோம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உலக நாடுகளுக்கு உணவுப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்குவது ஆகும். இவை தவில உணவு உற்பத்தியைப் பாதிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் சொல்லிக் கொடுக்கிறது. முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிறுவனத்தின் பணி பாராட்டுதலுக்குரியது.

**5.உலக சுகாதார நிறுவனம் (WHO):**

1948 ஏப்ரல் 7-ம் தேதி உலக சுகாதார நிறுவனம் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் ஜெனிவா. இந்நிறுவனம் உலக சுகாதாரத்தைப் பேணுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேகமாகப் பரவும் பயங்கர நோய்களைத் தடுக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளது. அனைவருக்கும் நோயிலிருந்து பாதுகாப்பு என்ற கொள்கையைக் கொண்டுள்ளது. தற்போது உலகத்தில் பரவிவரும் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை உலக மக்களிடையே பரப்பி வருகிறது. 1960-ல் மொராக்கோ நாட்டிலுள்ள அகாடிர் நகரில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டு பேரழிவு ஏற்பட்டபோது இந்நிறுவனம் அங்கு சிறந்த பணியாற்றியது. உலக சுகாதார நிறுவனம் 2020 ஆண்டுக்குள் எல்லோருக்கும் பார்வை நலம்' என்ற திட்டத்தை 1999, பிப.18 முதல் துவக்கியுள்ளது.

கண் நோயைக் குணப்படுத்த முதலில் அந்த நோய் பற்றிய விழிப்புணர்வு முக்கியம். ஆந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தவிர்க்கக் கூடிய பார்வை இழப்பை குணப்படுத்துவதற்கும் உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதிலும் உள்ள இருபது பார்வைத் தடுப்பு இயக்கங்களுடன் இணைந்து 2020-ம் ஆண்டுக்குள் 'எல்லோருக்கும் பார்வை நலம்' என்ற திட்டத்தை உருவாக்கி உள்ளது.

**திட்டத்தின் நோக்கம்:**

பார்வை இழப்பு என்பது பொது நலவாழ்வுப் பிரச்சனை என்பதை அனைவரும் அறியவைத்தல்.

தவிர்க்கக்கூடிய பார்வை இழப்பிற்குரிய முக்கிய காரணங் கட்டுப்படுத்த முயற்சி செய்தல் கண் டாக்டர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல் ஆகியவையாகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ஆண்டுக்கு 75 முதல் 100 மில்லிய் டாலர் செலவாகும். இந்தியாவில் இத்திட்டத்தை நிறைவேற்ற மதுரையில் உள்ள அர்விந்த் கண் ஆஸ்பத்திரி டில்லியில் உள்ள ஆல் இந்தியா இன்ஸ்டிட்யுட் ஆப் மெடிகல்

சையின்ஸ் ஆகிய இரண்டு மையங்களுக்கு உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் வழங்கி உள்ளது.

## ஐ.நா.சபையின் சாதனைகள்

உலகத்தில் போரைத் தடுத்து சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஐ.நா. சபையின் பணிகள் மகத்தானவை. புன்னாட்டுப் பிரச்சனைகள் பலவற்றைத் தீர்த்து வைத்து போரைத் தடுத்துள்ளது. பல பிரச்சனைகள் தீர்க்கப்படாவிட்டாலும் நாடுகளுக்கிடையே சுமுகமான சூழ்நிலைகள் ஏற்பட ஐ.நா. வின் தலையீடு பெரிதும் உதவி செய்து வருகிறது. பிராந்தியப் போர்கள் உலகப்போராக மாறாதபடி தடுத்த பெருமை ஐ.நா.விற்கு உண்டு.

**1.ரஷ்யா-ஈரான் பிரச்சனைகள் 1945:**

ஐ.நா. சபைக்கு கொண்டுவரப்பட்ட முதல் பிரச்சனை ரஷ்ய-ஈரான் பிரச்சனையாகும். ஐ.நா. பாதுகாப்புச்சபை முதல் முறையாகக் கூடிய இரண்டு நாள் கழித்து, 1946 ஜனவரி 19-ம் தேதி ஈரான் தனது நாட்டிலிருந்து ரஷ்யா படைகளை விலக்கிக் கொள்ள மறுப்பதாகவும், தனது நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகவும், ரஷ்யா மீது புகார் செய்தது. ரஷ்யா இந்தப்புகாரை மறுத்த போதிலும், பாதுகாப்புச்சபை ஈரானிலிருந்து ரஷ்யப் படைகள் வாபசாக வேண்டும் என்று கூறியது. மேலும் இருதரப்பு பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாக 1946, மே மாதம் முதல் ரஷ்யப்படைகள் வாபசாக ஆரம்பித்தன.

**2.இந்தோனேஷிய சுதந்திரப் பிரச்சனை 1947:**

இரண்டாவது உலகப்போரின் போது இந்தோனேஷியா ஜப்பானின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது. இந்தோனிஷியா தேசியவாதிகள் அந்நாட்டைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் 947, ஜீலை 29-ம் தேதி டச்சுப்படைகள் இந்தோனேஷியக் குடியரசின் மீது தாக்குதல் தொடுத்தது. இப்பிரச்சனை உடனடியாகப் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பாதுகாப்பு சபை உடனடியாக ஆஸ்திரேலியா, பெல்ஜியம், அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட 'நல்லெண்ணக் குழு' ஒன்றை அமைத்தது. அக்குழு பதினெட்டு அம்ச அமைதித் திட்டம் ஒன்றை 1948, ஜனவரியில் உருவாக்கியது. ஆனால் அதனை இரண்டு நாடுகளும் மீறவே, பாதுகாப்புச் சபை போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டு, இந்தோனேஷியாவிற்கான ஐ.நா.குழு' ஒன்றை அமைத்தது. ஹேக்கில் வட்டமேஜை மாநாடு ஒன்று கூட்டப்பட்டு விவாதிக்கப்பட்டது. அதன்பயனாக, 1949, டிசம்பர் 27-ம் தேதி டச்சு அரசாங்கம் இந்தோனேஷிய சுதந்திரத்தை அங்கீகரித்தது.

**3.கிரேக்க சோவியத் பிரச்சனை 1947:**

1946, ஜனவரி மாதம், ரஷ்யா பாதுகாப்பு சபையில் ஒரு புகார் செய்தது. கிரீஸ் நாட்டில் ஆங்கிலப் படைகள் தொடர்ந்து இருந்து வருவதாலும் அது கிரீஸ் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு வருவதாலும், தனது நாட்டின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் புகார் கூறியது. இப்பிரச்சனை பாதுகாப்புச் சபையின் விசாரணையில் இருக்கும் போது, 1946, டிசம்பர் 3-ம் தேதி கிரீஸ் தனது அரசாங்கத்திற்கெதிரான கொரிலாப் போருக்கு பக்கத்து நாடுகளான பல்கேரியா, அல்பேனியா போன்ற நாடுகள் உதவி செய்து வருவதாகவும், இது குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு சபையைக் கேட்டது. விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகளை பாதுகாப்புச் சபை 1947, ஜீன் 27 மதல் ஆகஸ்ட் 29

வரை விவாதித்தது. இந்தப் பிரச்சனைகளில் சோவியத் ரஷ்யா பலமுறை தனது வீட்டோ அதிகாரத்தை உபயோகப்படுத்தியது. மேலும் இந்த கிரீஸ் சோவியத் பிரச்சனை விளைவாக 'பால்கனுக்கான ஐ.நா.சபையின் விசேஷக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1946 முதல் 1951 வரை ஐ.நா. வில் முக்கியத்துவமம பெற்ற இப்பிரச்சனை ஐ.நா. சபைக்கு வெற்றியைத் தராவிட்டாலும், பாதுகாப்பு சபையில் ரத்து ஆணை மூலம் பிரச்சனைகளை விவாதிக்கத் தடை ஏற்பட்டாலும் அதனைப் பொதுச்சபை விவாதிக்கு என்ற முன்மாதிரி ஏற்படுத்தப்பட்டது.

**4.காஷ்மீர் பிரச்சனை 1947:**

இந்தியாவும் பாகிஸ்தானும் 1947, ஆகஸ்ட் 15-ல் சுதந்திரமடைந்த போது இந்து ராஜாவால் ஆளப்பட்டு வந்த காஷ்மீர் சமஸ்தானம் எந்த நாட்டுடனும் சேரவில்லை. இதனைப் பயன்படுத்திக் கொண்ட பாகிஸ்தான் காஷ்மீர் மீது படையெடுத்து அதன் ஓர் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. இதற்கிடையில் இந்தியாவுடன் இணைந்து விடுவதாக காஷ்மீர்ராஜா அறிவித்தார். அவரது வேண்டுகோளின்படி இந்தியப்படைகள் ஆக்கிரமிப்பு செய்த பாகிஸ்தானியரை விரட்டியடிக்க முற்பட்டனர். 1948, ஜனவரி 1-ம் தேதி, இந்தியா ஐ.நா. பாதுகாப்பு சபையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்வதாக புகார் செய்தது. அதனை பாகிஸ்தான் மறுத்தது. இப்பிரச்சனையைப் பற்றி விசாரிக்க இந்தியா பாகிஸ்தானுக்கான ஐ.நா.குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது போர் நிறுத்தத்திற்கு உத்தரவிட்டது. மேலும் காஷ்மீர் எதிர்காலம் பற்றிய வாக்கெடுப்பு நடத்தி தீர்மானிக்கப்படும் என்றும் கூறியது.

1957, ஜனவரியில் பாகிஸ்தானின் வேண்டுகோளுங்கிணற்க பாதுகாப்பு சபை, காஷ்மீர் பிரச்சனையை விசாரிக்க முற்பட்டது. ஆனால் காஷ்மீர் இந்தியாவுடன் சட்டப்படி இணைந்துவிட்டதாகவும், அது இந்தியாவில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகும் என்று இந்தியா பாதுகாப்பு சபை கூறியது. இது தொடர்பாக "ஜாரிங் அமைதிக் குழுவை" ஐ.நா.சபை அமைத்தது. பிரச்சனை தீரும் வரை காஷ்மீரில் ஐ.நா.படையை அனுப்ப வேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டு வருகிறது. 1965-ல் இந்தியா பாகிஸ்தான் போர் ஏற்பட்டது. 1965 செப்டம்பர் 22-ல் ஐ.நா. சபை போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது. காஷ்மீர் பிரச்சனையை பாகிஸ்தான் பெரிதுபடுத்தி வருகிறது. அதற்கு மேலை நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. பல முயற்சிகளை ஐ.நா. சபை மேற்கொண்டாலும் இது இந்தியா, பாகிஸ்தானிடையே தீராப் பிரச்சனையாகவே இருந்து வருகிறது.

**5.கொரியாப் பிரச்சனை 1950:**

இரண்டாவது உலகப்போரின் போது கொரியா ஜப்பானால் ஆக்கிரமிக்கப் பட்டது. ஆனால் ஜப்பான் தோற்கடிக்கப்பட்ட போது கொரியாவின் வடபகுதியில் ரஷ்யப்படைகளும், தென்பகுதியில் அமெரிக்கப்படைகளும் இருந்தன. அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு 38வது அட்சரேகை எல்லையாக வரையறுக்கப்பட்டது. ஆனால் 1950, ஜீன் 25-ம் தேதி ரஷ்ய ஆதரவுடன் வடகொரியா தென்கொரியா மீது படை எடுத்தது. இதனை அமெரிக்கா பாதுகாப்பு சபையில் உடனே புகார் செய்தது. போர் நிறுத்த தீர்மானத்தை நிறைவேற்றியது. வடகொரியா மீது ராணுவத்தடை, தென்கொரியாவிற்கு உறுப்பு நாடுகளின் உதவி அமெரிக்கா தலைமையிலான ஐ.நா. படை அமைப்பு ஆகியவையே அத்தீர்மானங்களின் முக்கிய அம்சமாகும். மேக் ஆர்தரின் தலைமையில் 15 நாடுகளிலிருந்து 35,000 வீரர்களைக் கொண்ட படை அமைக்கப்பட்டது. அப்படை வடகொரியாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தியது. போர் 1953, ஜீலை 27-ம் தேதியுடன் முடிவடைந்தது. கொரியாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. ஆனால் வடகொரியா, தென்கொரியா தொடர்ந்து பிரிந்தே

இருந்தது. இப்பிரச்சனையில் கூட்டுப் பாதுகாப்பு முறை பின்பற்றப்பட்டதும் ஐ.நா.பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டதும் சிறப்பு அம்சமாகும்.

**6.சூயஸ் கால்வாய் பிரச்சனை 1956:**

**நை**நல் நதியின் குறுக்கே கட்டப்பட்டு வந்த அஸ்வான் அணைக்கட்டு திட்டத்திற்கு அளித்து வந்த ஆதரவையும் உதவியையும் பிரான்சும் இங்கிலாந்தும் திடீரென நிறுத்திவிட்டன. இதனால் கோபமடைந்த எகிப்திய அதிபர் நாசர் 1956, ஜீலை 26-ல் சூயல்கால்வாய் கம்பெனியை தேசிய மயமாக்குவதாக அறிவித்தார் இதனால் இங்கிலாந்பு் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. எகிப்துக்கும் சூயஸ்கால்வாய்க் கம்பெனிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை எகிப்து மீறிவிட்டதாக ஐ.நா. பாதுகாப்பு சபையில் இரண்டு நாடுகளும் முறையிட்டன. இதற்கிடையில் பிரான்சின் துண்டுதலின் பேரில் 1956 அக்டோபர் 29-ல் இஸ்ரேல் எகிப்து மீது படையெடுத்தது. உடனே அமரிக்கா பாதுகாப்புச்சபையில் “எகிப்தில் எந்த நாடும் படைபலத்தை உபயோகிக்கக் கூடாது என்றும், இஸ்ரேல் தனது படைகளை வாபஸ்’ பெற வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. ஆனால் இத்தீர்மானத்தை இங்கிலாந்தும், பிரான்சும் தங்கள் ரத்து ஆணை மூலம் தோற்கடித்ததுடன் எகிப்து மீது கூட்டுப் படையெடுப்பை மேற்கொண்டன. 1956, நவம்பர் 7-ம் தேதி ஐ.நா. பொதுச்சபை கூடி ஆங்கில, பிரெஞ்சு, இஸ்ரேலியப் படைகள் எகிப்திலிருந்து வாபசாக வேண்டுமெமனத் தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் ஐ.நா. அவசரப்படை ஒன்று அமைக்கப்பட்டு எகிப்துக்கு அனுப்பப்பட்டது. இப்பிரச்சனையில் ஐ.நா.சபை தலையிட்டதால் தான் எகிப்தில் ஏற்படவிருந்த பேரழிவு தடுக்கப்பட்டது. போர் ஏற்படுவதும் தடுக்கப்பட்டது.

**7.ஹங்கேரியப் பிரச்சனை 1956:**

சூயஸ் பிரச்சனையும் ஹங்கேரியப் பிரச்சனையும் கிட்டதட்ட ஒரே சமயத்தில் நடைபெற்றன. சூயஸ் பிரச்சனையில் ஐ.நா. வெற்றியடைந்தது. ஆனால் ஹங்கேரியப் பிரச்சனை கம்யூனிச நாடுகளில் ஐ.நா. சபையின் வலிமையின்மையினை வெளிப்படுத்தியது. 1956-ல் ஹங்கேரியில் ஜனநாயகச் சீர்திருத்தங்கள் கேட்டும், ரஷ்யா தலையீட்டுக்கெதிராகவும், நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அந்த தேசிய இயக்கத்தை நசுக்க ஜனோஸ் காடர் என்பவரின் தலைமையிலான அரசு சோவியத் ரஷ்யாவின் உதவியைக் கேட்டது. சில மணி நேரத்தில் தலைநகர் புடாபஸ்டுக்கு சோவியத் படையும் டாங்குகளும் அனுப்பப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட தேசியவாதிகள் ஈவிரக்கமில்லாமல் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் இப்பிரச்சனையை 1956, அக்டோபர் 28-ல் பாதுகாப்புச்சபை முன் வைத்தன. பாதுகாப்புசபை ஹங்கேரியிலிருந்து ரஷ்யா தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்ட தீர்மானத்தை ரஷ்யா தனது ரத்து ஆணை மூலம் தோற்கடித்தது. எனவே பொதுச்சபை கூடி ரஷ்யாவை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. 1957 ஜனவரி 10-ல் ஒரு விசேஷக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆனால் ரஷ்யாவோ, ஹங்கேரியோ இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கோ அல்லது ஐ.நா தீர்மானங்களுக்கோ எந்த மதிப்பும், மரியாதையும் அளிக்கவில்லை. ஐ.நா.குழு ஹங்கேரியினுள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. இப்பிரச்சனை வல்லரசு நாடு தலையிட்டுள்ள பிரச்சனைகளில் ஐ.நா. சபையின் செயலிழந்த தன்மையை வெளிப்படுத்தியது.

**8.காங்கோ பிரச்சனை 1960:**

1960, ஜீன் 30-ம் தேதி பெல்ஜியத்திடமிருந்து காங்கோ சுதந்திரமடைந்து. ஆனால் பிரிவினைவாத இயக்கங்களினால் காங்கோவின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டது. வளமிக்க கடங்கா மாநிலத்தின் தலைவரான மோயிசே டிசோம்பி: கடங்கா

காங்கோவிலிருந்து பிரித்துவிட்டதாக அறிவித்தார். எனவே காங்கோபிரதமர் லுமும்பா ஐ.நா.சபையில் ராணுவ உதவி கேட்டு விண்ணப்பித்தார். காங்கோவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அந்நியநாடுகள் தலையிடும் ஆபத்து ஏற்பட்டது. பிரதமர் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார். இப்பிரச்சனையை ஐ.நா. சபைச் செயலர் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். காங்கோவில் அமைதியை நிலை நாட்டச் சென்ற இருபதாயிரம் வீரர்களில் இந்திய வீரர்களும் அடங்குவர். 1963-ம் வருட இறுதிக்குள் எல்லா பிரிவினை இயக்கங்களும் நசுக்கப்பட்டன. பிரிந்து சென்ற கடங்கோ மாநிலம் காங்கோவுடன் இணைக்கப்பட்டது. காங்கோவின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது. ஆனால் இப்பிரச்சனையில் ஐ.நா. பொருளாதார ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. சோவியத் ரஷ்யா அமைதிப் பணியில் ஈடுபட்ட ஐ.நா படைக்கான செலவில் தனது பங்கைத் தர மறுத்துவிட்டது.

**9.சைப்ரஸ் பிரச்சனை 1967:**

குிழக்கு மத்தியதரைக் கடல் பகுதியில் உள்ளது சைப்ரஸ் தீவு. இதன் மொத்த மக்கள் தொகையான 6 லட்சத்தில் 77 சதவீதம் கிரேக்கர்கள், 18 சதவீதம் துருக்கியர்கள் ஆவர். சைப்ரஸிலிருந்த கிரேக்கர்கள் சைப்ரஸை கிரிசுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்தபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. ஏனெனில் சைப்ரஸிலிருந்த துருக்கியர் இதனை எதிர்த்தனர். இதன் விளைவாக 1965-ல் சைப்ரஸில் இரண்டு பிரிவினருக்குமிடையே மோதல் வெடித்தது. ஐ.நா. பொதுச்பை தலையிட்டு அமைதியை ஏற்படுத்தியது. ஐ.நா. சபை அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளுடன் சேர்ந்து சைப்ரஸ் பற்றிய முக்கிய முடிவு எடுத்தது. அதன்படி சைப்பரஸின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் ஐ.நா. உத்தரவாதம் அளித்தது. அந்நியப்படைகள் வெளியேற வேண்டும் என்றும் ஐ.நா. வின் அவசரப்படை ஒன்று சைப்ரஸில் வைக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. சைப்ரஸ் பிரச்சனை பெரிய அளவில் வளர்ந்து விடாதபடி பார்த்துக் கொண்டதும், அந்நிய நாடுகள் சைப்ரஸில் தலையிடுவதைக் தடுத்ததும் ஐ.நா. சபையின் சாதனைகளாகும்.

**10.பாலஸ்தீனப் பிரச்சனை 1947:**

முதல் உலகப்போருக்குப் பின்னர் பாலஸ்தீனம் இங்கிலாந்தின் கீழ் ஒரு மாண்டேட்டாக வைக்கப்பட்டது. அப்பகுதியில் யூதர்கள் தங்கள் தாயகத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள். அதனை அராபியர்கள் எதிர்த்தார்கள’. இருபகுதியினரும் அடிக்கடி கலகத்தில் ஈடுபட்டனர். பாலஸ்தீனத்தை தொடர்ந்து நிர்வாகம் செய்ய இணலாது என்று ஐ.நா. சபையிடம் இங்கிலாந்து 1947, ஏப்ரல் 2-ல் முறையிட்டது. பாலஸ்தீனதிற்கான ஐ.நா. சபையின் விசேஷக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அராபியருக்கும் தனித்தனி நாடுகளை உருவாக்கி, ஐ.நா. சபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. ஜெருசலம் நகரம் பன்னாட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. இதனை யூதர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அராபியர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. 1948, மே 15-ல் இங்கிலாந்துப் படைகள் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறியபோது சுதந்திர இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது.

உடனே இஸ்ரேலைச் சுற்றியுள்ள அராபிய நாடுகளான எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகியவை இஸ்ரேல் மீது படையெடுத்தன. 1948 ஜீலையில் பாதுகாப்புச்சபை, போர்நிறுத்தத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் ஐ.நா. சபையாலட இஸ்ரேலுக்கு அராபிய நாடுகளுக்குமிடையே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை. 1956, 1967, 1973-ம் ஆண்டுகளில் இஸ்ரேலுக்கும் அராபிய நாடுகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அதன் விளைவாக பாலஸ்தீனத்தில் ஒரு

அராபிய நாடு உருவாக்க ஒதுக்கப்பட்ட பகுதிகளையும் இஸ்ரேல் பிடித்துக் கொண்டது. பாலஸ்தீனியர்கள் விரட்டப்பட்டனர். ஆனால் பல ஆண்டுகளாக நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் 1993, செப்டம்பர் 13-ல் இஸ்ரேலியருக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே இருதரப்பு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி காசா, ஜெரிக்கோ பகுதியில் பாலஸ்தீனியர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. 1947 ஆண்டிலிருந்து நடைபெற்று வந்த போர் முடிவடைந்துள்ளது.

**11.ஆப்கானிஸ்தான் பிரச்சனை 1979:**

ஈரான், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் மத்தியில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தான் உலக அரங்கில் மிக முக்கியத்துவம் உள்ள நாடாகும். ஆங்கு எப்போதுமே ரஷ்யாவின் தலையீடு இருந்து வந்தது. இங்கே சீனாவும், பாகிஸ்தானும், அமெரிக்காவும் தலையிட்டதால் பிரச்சனை ஏற்பட்டது. 1979 செப்டம்பரில் ரஷ்ய ஆதரவாளரான பார்பக்கார்மல் (Barbak Karmal) என்பவர் பதவி ஏற்றார். இவருக்கு எதிராக செயல்பட்டு வந்த ஆறு முஜாஹிதீன் அமைப்புகளுக்கு அமெரிக்காவும், பாகிஸ்தானும் ஆதரவளித்து ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்ட கம்யூனிச அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தன.

எனவே கார்மலின் வேண்டுகோளின் பேரில் 1979, டிசம்பர் மாதம் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டன. இதனை அனைத்து உலக நாடுகளும் கண்டித்தன. 1980, ஜனவரியில் 17 முஸ்லீம் நாடுகள் சேர்ந்து ‘ஆப்கானிஸ்தானத்திலிருந்து ரஷ்யா தனது படைகளை வாபஸ் வாங்கவேண்டும்’ என்ற தீர்மானத்தை கொண்டு வந்தன. ஆனால் தனது ரத்து ஆணை மூலம் ரஷ்யா அதனை தோற்கடித்தது. ஐ.நா. பொது செயலாளர் சேவியர் பெராஸ்டி கொய்யா சமாதான முயற்சிகளை மேற்கொண்டார். 1988 ஏப்ரல் மாதம் ஜெனிவாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கு கொண்டன. அதன் விளைவாக ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வாபஸ் பெற ரஷ்யா சம்மதித்தது. 1988 மே 15-ல் படைகள் வாபசாகத் தொடங்கின. இது ஐ.நா.சபையின் சாதனையாகும். அதன் வலிமையும், புகழும் அதிகரித்தது.

**12.ஈரான்-ஈராக் போர் 1980:**

1980, செப்டம்பர் மாதம் ஈரானுக்கும்,ஈராக்கிற்குமிடையே போர் ஆரம்பித்தது. ஈரானியர் வசமிருந்த மக்கள் வாழமுடியாத 200 சதுர மைல் பரப்பளவு நிலத்தைப் பெற்றுக் கொள்ளவே போரைத் துவக்கியது. ஈராக் போர் ஆரம்பிக்கப்பட இது உடனடிக் காரணமாக இருந்தாலும், இரண்டு நாடுகளுக்குமிடையே சுமார் 350 ஆண்டுகளாகத் தீர்க்கப்பட முடியாத எல்லைப் பிரச்சனை இருந்து வந்தது. மேலும் 1975-ல் ஏற்பட்ட அல்ஜியர்ஸ் உடன்பாட்டின்படி ஷ்எல் அராப் (Shatt el Arab) என்ற நீர்வழிப் போக்குவரத்தின் மீதிருந்த ஆளுமையை ஈரானுக்கு விட்டுக் கொடுத்ததுஈராக், பதிலாக ஈராக்கிலிருந்த குர்தீஷ் இனமக்களுக்கு இனி ஆதரவளிப்பதில்லை’ என்று ஈரானும் உறுதியளித்தது.

ஆனால் திடீரென்று 1980, செப்டம்பரில் ஈராக் அதிபர் சதாம்ஹீசேன், 1975-ம் வருட அல்ஜியர்ஸ் உடன்படிக்கை செல்லாது என்று கூறி ஈரான் மீது படையெடுத்தார். போர் பல வருடங்கள் நீடித்தது. இரண்டு பக்கமும் ஆள்சேதம், பொருட்சேதம் அதிகம் ஏற்பட்டது. இஸ்லாமிய நாடுகளும் பிற நாடுகளும் கொண்டு வந்த அமைதித் திட்டங்களையெல்லாம் இரண்டு நாடுகளுமே ஏற்க மறுத்துவிட்டன.

குடைசியாக 1987, ஜீலை 21-ல் ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ‘‘போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் போரை உடனடியாக நிறுத்திக் கொளள் வேண்டும். அப்படி நிறுத்தாவிடில் இரண்டு நாடுகள் மீதும் பொருளாதாரத்தடை விதிக்கப்படும்’’ என்று தீர்மானம் கூறியது. இத்தீர்மானம் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல்ஷ நிறைவேறியது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் இந்த 598வது தீர்மானத்தை ஈரானும்,ஈராக்கும் ஏற்றுக் கொண்டதால் போர் முடிநவடைந்தது. போர் நிறுத்தம் போர்க்கைதிகள் பறிமாற்றம், படைகள் வாபஸ் ஆகியவற்றைக் கண்காணிக்க ஐ.நா. சபை தனது பார்வையாளர்களை அனுப்பியது.

பின்னர் ஐ.நா. பொதுச் செயலர் சேவியர் பெராஸ் டி கொய்யாவின் சமாதான முயற்சிகளின் விளைவாக 1988, ஜீலை மாதம் நியுயார்க் நகரில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. 1988 , ஆகஸ்ட் மாதம் ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது. இது ஐ.நா. சபையின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தியது.

**13.ஈராக்-குவைத் போர் 1991 வளைகுடாப் போர் (புரடக ரயச)**

குவைத் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்திய ஈராக் 1990, ஆகஸ்ட் 2-ம் தேதி குவைத் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. உலக நாடுகள் அதிர்ச்சியடைந்தன. இது பற்றி விசாரிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை குவைத்திலிருந்து ஈராக் படைகள் வாபசாகத் தீர்மானம் இயற்றியது. ஈராக் பணியவில்லை. 1990, நவம்பர் 30-ல் பாதுகாப்பு சபை வரலாற்று சிறப்புமிக்க தீர்மானம் ஒன்றை இயற்றியது. 1991 ஜனவரி 15-ம் தேதிக்குள் ஈராக் குவைத்தை விட்டு வெளியேற வில்லையென்றால் ஈராக்குக்கு எதிராகப் படைபலம் உபயோகப்படுத்தப்படும்’’ என்று எச்சரிக்கை விடுவிக்கப்பட்டது. ஈராக் இந்தக் காலக்கெடுவை மதிக்காததால் 1991, ஜனவரி 17-ல் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஈராக் மீது தாக்குதல் தொடுத்தன.

இப்போரில் முப்பது நாடுகளின் கூட்டுப்படைகள் அமெரிக்காவின் தலைமையில் போரிட்டன. பல புதுவகையான ஆயுதங்களை இந்தப் படைகள் பயன்படுத்தின. ‘லேசர் டிவி கேமரா கொண்ட குண்டுகள் இரவில் 11 கி.மீ. தூரம் வரை பார்க்கக்கூடிய night vision devises, cruise misslles, cluster, Bomba, Carper Bombs, Patriot missiles, Stealth Bomber Planes’ ஆகியவை உபயோகிக்கப்பட்டன. ஆறுவாரங்கள் நடைபெற்ற இப்போரில் ஹிரோஷிமாவில் போடப்பட்டதைவிட ஏழு மடங்கு அதிகமான 90,000 டன் எடை அளவுள்ள குண்டுகள் ஈராக் மீது வீசப்பட்டன. ஒரு லட்சம் வீரர்களை ஈராக் இழந்தது. கூட்டுப் படைகளின் இழப்போ வெறும் 467 மட்டுமே! 1991 பிப். 23-ம் தேதி குவைத் மீட்கப்பட்டதாக அமெரிக்க குடியரசுத்தலைவர் ஜார்ஜ்புஷ் அறிவித்தார். பிப்.28-ல் ஈராக் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தன. ஈராக் தோற்கடிக்கப்பட்டது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிபந்தனையின் படி ஈராக்கிலுள்ள பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை அழிக்க நூறு உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. சிறப்புக்குழு ஒன்று (Uniter nations Special Commission-UNISCOM) ரிச்சர்ட் பட்லர் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு சபையின் போர் நிறுத்த தீர்மானத்தை ஈராக் ஏற்றுக் கொண்டது. இப்போரில் பாதுகாப்பு சபை மொத்தம் 12 தீர்மானங்கள் இயற்றியது குறிப்பிடத்தக்கது. ஈராக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து குவைத்தை மீட்ட ஐ.நா. சபையின் பெருமை உயர்ந்துள்ளது. அதன் வலிமை கூடியுள்ளது.

குவைத் மீது படையெடுத்ததால் குவைத் படுசேதம் அடைந்தது. அதன் எண்ணை கிணறுகள் கொளுத்தப்பட்டது. ஏராளமானோர் குவைத்தை விட்டு வெளியேறினர். இவற்றுக்கெல்லாம் ஈராக் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று ஐ.நா.

சபை முடிவு செய்தது. இதற்காக சேத்தை மதிப்பீட்டு ஐ.நா. நஷ்டஈட்டு கமிஷனிடம் சமர்பித்தது. அந்த மதிப்பீட்டின் படி ஈராக் 10 கோடியே 50 லட்சம் ரூபாய் (100 மில்லியன் டாலர்) 1997 அக்டோபரில் ஐ.நா. நஷ்ட ஈட்டு கமிஷனிடம் டெபாசிட் செய்தது.. இந்த தொகை பாதிக்கப்பட்ட நாற்பத்தி இரண்டாயிரம் பேருக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்று ஐ.நா. சபை உலகம் முழுவதும் 2,27,841 பேருக்கு 500 மில்லியன் டாலர் வழங்கி உள்ளது. குவைத் நஷ்டஈட்டு குழுத்தலைவராக நியமிக்கப்பட்டவர் கலித் அல்முடாய்ப் என்பவர் ஆவார்.

**14.அமைதி காக்கும் பணி:**

முதன் முதலாக 1953-ல் கொரியா போரின் போது அங்கு அமைதிப் பணிகளுக்காக ஐ.நா. படை அனுப்பப்பட்டது. பின்னர் சூயஸ் கால்வாய், காங்கோ பிரச்சனை ஏற்பட்ட போதும் அமைதிப்படை அனுப்பப்பட்டது. தற்போது உலகின் பல இடங்களில் ஐ.நா. படைகள் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

முதலாவதாக, கம்போடியாவில் 13 ஆண்டு காலமாக நடந்த உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் அங்கு பொதுத் தேர்தல் 1993-ல் நடைபெறும் வரை ஐ.நா. பாதுகாப்பு படைகள் அமைதியை நிலைநாட்ட அங்கு அனுப்பட்டன. இரண்டாவதாக, குழப்பமும் கொந்தளிப்பும் நிலவிய யூகோஸ்லோகியா நாட்டில் அமைதியை நிலைநாட்ட 1992, பிப்ரவரி 21-ல் இந்தியத் தளபதி சதிஷ் நம்பியார் தலைமையில் ஐ.நா. அமைதிப்படை அனுப்பப்பட்டது. மூன்றாவதாக, மொசாம்பிக் குடியரசில் நடந்து வந்த உள்நாட்டுப் போர் 1992 அக்டோபரில் முடிவடைந்தாலும் உண்மையான அமைதியை ஏற்படுத்துவதற்காக 1992, டிசம்பரில் 7500 பேர் கொண்ட அமைதிப்படை அனுப்பப்பட்டது. இதை தவிர, பஞ்சத்தாலும், உள்நாட்டுப் போராலும் சீரமிந்து கிடக்கும் சோமாலியா நாட்டிற்கும் ஐ.நா. அமைதிப்படை அனுப்பப்பட்டது.

ஆரசியல் பிரச்சனைகள் தவிர, உலக படைக்கலக் குறைப்பிற்காகவும், உலக வியாபாரப் பெருக்கத்திற்காகவும், பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாடுகளுக்கிடையே பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. ஐ.நா. சபை உலக அகதிகள் பிரச்சனையையும், நாடு இல்லாதவர்கள் பிரச்சனைகளையும் வெற்றிகரமாக தீர்த்து வைத்துள்ளது. 1948 டிசம்பர் 11-ல் இனப்படுகொலையை கண்டித்தும் அது ஒரு தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்றும் ஐ.நா. பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியது. உலக பெண்களின் நிலைமையை உயர்த்தவும், சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஐ.நா. சபை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## கெடுபிடிப் போர்

## பனிப்போர் (Cold War)

இரண்டாவது உலகப்பபோருக்குப் பின்னர் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வலிமைமிக்க வல்லரசு நாடுகளாக விளங்கின. கொள்கை அளவில் வேறுபட்ட அமெரிக்காவும் ரஷ்யாவும் ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்காகத் தங்கள் வேறுபாடுகளை மறந்து இரண்டாம் உலகப் போரில் ஒன்றுப்பட்டு செயல்பட்டன. ஆனால் போர் முடிவடைந்த பின்னர் இரண்டு நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் மீண்டும் ஏற்பட்டு வேற்றுமைகள் அதிகமாயின. அமெரிக்கா மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், ஜனநாயக அரசாங்கத்திற்கும் முக்கியத்துவம் அளித்தது. ஆனால் ரஷ்யா கம்யூனிசக் கொள்கைகளை உலகம் முழுவதும் பரப்ப முயற்சி எடுத்ததது. இதன் விளைவாக உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்தது.

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் அமெரிக்காவின் தலைமையிலும், கிழக்கத்தியக் கம்யூனிச நாடுகள் ரஷ்யாவின் தலைமையிலும் ஒன்று சேர்ந்தன. இதன்

மூலம் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்குமிடையே பொறாமையும், பகைமையும் அதிகரித்தன. ஒன்றையொன்று அழிப்பதற்கு முயன்றன. இதனால் உலகில் பதட்டநிலை ஏற்பட்டது. நேரடியாக இரு நாடுகளும் போரில் ஈடுபடாவிட்டாலும், எப்போது மூன்றாம் உலகப்போர் ஏற்படுமோ என்ற பீதி நிலவியது. இதுவே கெடுப்பிடிப்போர் அல்லது பனிப்போர் (cold war) என்று கூறப்படுகின்றது. coldwar என்ற வார்த்தையை இதற்கு முதன்முதலில் உபயோகித்தவர் வால்டர்லிப்மேன் (Walter Lippman) என்பவராவார். இப்போர் 1947 முதல் 1965 வரை உச்சக்கட்டத்திலிருந்தது 1991-ல் சோவியத் யூனியன் உடைந்து சிதறிவிட்டதால் பனிப்போர் முடிவடைந்து விட்டது.

**கெடுப்பிடிப் போருக்கான காரணங்கள்:**

1.இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ரஷ்யா உலகம் முழுவதும் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. கம்யூனிசம் பரவினால் ரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்று அமெரிக்கா கருதியது. அத்துடன் ரஷ்யாவின் ஊடுருவல்களையும் மற்ற நாடுகளில் அது தலையிடும் நடவடிக்கைகளையும் அதன் எல்லைகளை விரிவுபடுத்தும் செயல்களையும் எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டுமென்று அமெரிக்கா நினைத்தது.

2. இரண்டாம் உலகப்போர் முடிந்தபொழுது இங்கிலாந்தும், பிரான்சும் மிகவும் பலவீனமடைந்த நாடுகளாகி விட்டன. மேலும் ஜெர்மனியும், இத்தாலியும் அழிந்துவிட்டன. எனவே ஐரோப்பாவில் ரஷ்யா மட்டுமே நாடாக எஞ்சி நின்றது. எனவே ஐரோப்பா முழுவதிலும் ரஷ்யா கம்யூனிசத்தைப் பரப்பி விட்டால் இறுதியில் அமெரிக்காவிலும் கம்யூனிசம் பரவும் அபாயம் ஏற்பட்டு விடும் என்று அமெரிக்கா நம்பியது.

3. இவைதவிர இரண்டு நாடுகளுக்கிடையே பொருளாதார ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது. இது பகைமையை மேலும் வளர்த்தது. முதாலளித்துவ நாடான அமெரிக்கா தனது உற்பத்திப் பொருட்களுக்கு உலகளாவிய சந்தை இருக்க வேண்டுமென விரும்பியது. இதனை ரஷ்யா எதிர்த்தது.

4. இறுதியாக மேற்கத்திய நாடுகள் மீது ரஷ்யா 1917-ம் வருட போல்சிவிக் புரட்சியிலிருந்தே விரோதம் கொண்டிருந்தது. காரணம் போல்சிவிக அரசாங்கத்தை மேற்கத்திய நாடுகள் அங்கீகரித்தாதது மட்டுமில்லாது புதிதாக அமைக்கப்பட்ட கம்யூனிச அரசாங்கத்தை ஒழித்துக்கட்ட ரஷ்யா மீது படையெடுத்தன. அப்படையெடுப்பை ரஷ்யா வெற்றிகரமாகச் சமாளித்தது. அப்போதே கெடுப்பிடிப் போர் ஆரம்பித்து விட்டது என்று கூறலாம்.

இவ்வாறு பல காரணங்களால் அமெரிக்காவும், ரஷ்யாவும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் போட்டி மனப்பான்மையுடனும், பொறாமையுடனும்,விரோதத்துடனுமநடந்து கொண்டன. யார் பெரியவன் என்றும், உலகளாவிய ஆதிக்கத்தை யார் பெறுவது என்றும் ஒரு ஆதிக்க வெறி இரண்டு நாடுகளுக்கிடையே ஏற்பட்டது. எங்கெங்கெல்லாம் ரஷ்யா கம்யூனிசத்தை பரப்ப முயற்சி எடுத்ததோ அப்பகுதிகளிலெல்லாம் அமெரிக்கா தலையிட்டுத் தடுத்து நிறுத்தியது. கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதையே அமெரிக்கா தனது கொள்கையாக வகுத்துக் கொண்டது. உலகில் எங்கெங்கெல்லாம் போர் அல்லது பிரச்சனைகள் ஏற்படுகிறதோ, அங்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் தலையிட்டன. ஆனால் நேரடியான நடவடிக்கைகளில் இரண்டு நாடும் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக உலகத்தில் பதட்ட நிலை ஏற்பட்டது. போர் பீதி நிலவியது. இந்தக் கெடுப்பிடிப் போர் உலகம் முழுவதும் பல பகுதிகளில் நடைபெற்றது.

**கெடுப்பிடிப் போரின் முக்கிய நிகழ்ச்சிகள்:**

### 1.ட்ருமன் கொள்கை (Truman Doctrine)

கெடுப்பிடிப் போர்க்காலத்தில் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமிடையே பதட்ட நிலையை அதிகப்படுத்தும் விதமாக பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சோவியத் ரஷ்யாவின் கம்யூனிசத்தை பரப்பும் நடவடிக்கையின் பயனாக, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா, அல்பேனியா, ருமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிச அரசு நிறுவப்பட்டது. எஞ்சி நின்ற கிரிசிலும், துருக்கியிலும் ரஷ்யா தலையிட்டு அந்த நாடுகளில் பெருங்குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட அமெரிக்கா அதிர்ச்சியடைந்து. கிரீசிலும், துருக்கியிலும் கம்யூனிச அரசு அமைக்கப்படும் அபாயத்தை தடுத்து நிறுத்த உறுதி கொண்டார் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரூமன். ஆதற்காக அவர் வெளியிட்ட கொள்கையே ‘ட்ரூமன் கொள்கையாகும்’.

கிரீசிலும் துருக்கியிலும் கம்யூனிசம் பரவுவதைக் தடுத்து அந்த நாடுகளின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அந்த நாடுகளுக்கு பொருளாதார, ராணுவ உதவியை அமெரிக்கா அளிக்க வேண்டும்’’ என்ற தனது திட்டத்தை 1947 மார்ச் 12-ம் தேதி அமெரிக்கா காங்கிரஸில் சமர்பித்தார் ட்ருமன். ஆத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் அந்த நாடுகளின் பொருளாதார ராணுவ உதவிக்காக 400 மில்லியன் டாலரை அனுமதித்தது. இதன் விளைவாக கிரீசும், துருக்கியும் கம்யூனிசத்தின் பிடியில் சிக்கி விடாமல் தடுக்கப்பட்டது. உலகம் முழுவதும் கம்யூனிசம் பரவ விடாமல் தடுக்கும் அமெரிக்கக் கொள்கைக்கு ‘ட்ரூமன் கொள்கை’ செயல் வடிவம் கொடுத்தது.

### 2.மார்சல் திட்டம் (Marshall Plan):

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை சீர்கேடடைந்து பசி, பட்டினி, வறுமை, வேலையின்மை ஆகியவை நிலவியது. இதனால் இந்த நாடுகளில் கம்யூனிசம் பரவும் அபாயம் காணப்பட்டது. பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கூட கம்யூனிசக் கட்சியின் செல்வாக்கு பெருக ஆரம்பித்தது. எனவே இந்த நாடுகளில் கம்யூனிசம் பரவுவதைக் தடுக்க வேண்டுமானால், அங்குள்ள பொருளாதாரத்தைச் சீரமைப்பது தான் சிறந்த வழி என்று அமெரிக்கா கருதியது. இந்தக் கருத்தை அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜார்ஜ் மார்ஷல் 1947 ஜீன் 5-ம் தேதி ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் வெளியிட்டார். இதுவே மார்ஷல் திட்டம் என்று அழைக்கப்பட்டது. மார்ஷல் திட்டம் கம்யூனிசத்திற்கெதிரான அமெரிக்காவின் முக்கியத் திட்டமாகும்.

இத்திட்டத்தை முதலில் பிரான்சும், இங்கிலாந்தும் ஏற்றுக் கொண்டன. அதன்பின் 14 ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டன. அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில இந்த நாடுகள் தங்களுக்கு வழங்கப்படும் நிதியை பங்கிட்டுக் கொள்ள ‘ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பை (Organization Of European Economic Co-operation – OEEC) ஏற்படுத்திக் கொண்டன. இந்த அமைப்பிற்கு 1948, ஏப்ரல் மாதம் அமெரிக்கா 5.5 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்கியது. இதன் விளைவாக அங்கு பொருளாதார நிலை சீரடைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. இதனால் கம்யூனிசம் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் செல்வாக்கு இழந்தது.

### 3.ஜெர்மானிய பிரச்சனை (German Problem)

ஜெர்மானிய பிரச்சனையால், கெடுபிடிப்போரில் புதிய திருப்பம் ஏற்பட்டது. ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு மோதல்

அதிகரித்தது. போட்ஸ்டேம் மாநாட்டின் முடிவின்படி, தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் ரஷ்யாவும், எஞ்சிய மூன்று பகுதிகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் ஆதிக்கம் கொண்டன. மேலும் போட்ஸ்டேம் மாநாட்டின் முடிவின்படி தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் நாசிக் கோட்பாடுகளையும் நிறுவனங்களையும் ஒழித்துக் கட்டிவிட்டு, சுதந்திரமான தேர்தல் நடத்தி மக்களாட்சி நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும். அதன்பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வல்லரசு நாடுகள் வெளியேறிவிட வேண்டும்.

ஆனால் வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளை ஒருங்கிணைத்து ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு என்று பெயரிட்டன. இதுவே மேற்கு ஜெர்மனியானது. ரஷ்யா தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியை 'ஜெர்மானிய ஜனநாயக் குடியரசு' என்ற தனி நாடாக்கியது. இதுவே கிழக்கு ஜெர்மனியானது. மேற்கு ஜெர்மனியில் ஜனநாயக அரசம் கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிச அரசம் நிறுவப்பட்டது. இவ்வாறு கெடு பிடிப்போரின் விளைவாக ஜெர்மனி நிரந்தரமாக இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

### 4.பெர்லின் சிக்கல் (Berlin Crisis):

கெடுபிடிப்போரின் மூர்க்கத்தனத்தை பெர்லின் சிக்கலில் நாம் காணலாம். ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது போல பெர்லினும்வல்லரசுகளால் பிரிக்கப்பட்டது. கிழக்கு சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கமும், மேற்கு பெர்லினில் மற்ற மேற்கத்திய வல்லரசுகளின் கூட்டு ஆதிக்கமும் அமைக்கப்பட்டது. இதில் முக்கிய பிரச்சனை என்னவென்றால் மேற்கு பெர்லினுக்கும்,மேற்கு ஜெர்மனிக்குமிடையிலான போக்குவரத்துத் தொடர்புகள் எல்லாம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு ஜெர்மனி வழியாகவே அமைந்திருந்தன. இதனைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கு பெர்லினிலுள்ள மேற்கத்திய வல்லரசுகளை வெளியேற்ற ரஷ்யா திட்டமிட்டது.

எனவே 1948, ஜீன் 23-ம் தேதி இரவு திடீரென மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்லினுக்குமிடையிலான நில, நீர் மார்க்கங்களை ரஷ்யா அடைத்துவிட்டது. இதனால் பெர்லினில் வாழ்ந்த 22 லட்சம் மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்காமல் போய்விட்டது. ரஷ்யாவின் இந்த சவாலை உறுதியுடன் சமாளிக்க அமெரிக்கா முடிவு செய்தது. அப்போது மேற்கு பெர்லினிலிருந்த அமெரிக்க தளபதி லூசியஸ் டி கிளே (Loucius D.Clay) என்பவரின் தலைமையில் "operation Vittles" என்ற பெயருடன் சோவியத் யூனியனுக்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனது விமானப் படைபலத்தைப் பயன்படுத்தி 1948 ஜீன் 26 முதல் 1949 மே-12-ம் தேதி வரை மேற்கு பெர்லின் மக்களுக்கு எல்லாப் பொருட்களையும் ஆகாயவழி மூலம் அமெரிக்கா அனுப்பியது. இவ்வாறு ரஷ்யாவின் பெர்லின் முற்றுகையை விலக்கிக் கொண்டது. ஆனால் 1961-ல் மேற்கு பெர்லினையும் கிழக்கு பெர்லினையும் பிரிக்கும் 62 கி.மீ. நீளமுள்ள பெர்லின் சுவரைக் கட்டியது ரஷ்யா. இது கெடுபிடிப் போரை மேலும் தீவிரப்படுத்தியது (1989-ல் இந்த பெர்லின சுவர் இடிக்கப்பட்டது)

### 5.ரியோ உடன்படிக்கை (Rio treaty)

பிராந்தியக் கூட்டுப் பாதுகாப்பு முறையில் செய்து கொள்ளப்பட்ட முதல் உடன்படிக்கை 'ரியோ உடன்படிக்கையாகும்'. ஆமெரிக்க நாடுகளின் பாதுகாப்பிற்கான மாநாடு ஒன்று 1947, ஆகஸ்ட் 15-ல் நியோடி ஜெனிரோ நகரில் உள்ள பெட்ரோ போலிஸ் என்ற இடத்தில் கூட்டப்பட்டது. வட அமெரிக்கா, தென் அமெரிக்க நாடுகள் அனைத்தும் பங்கு கொண்டன. மாநாட்டின் இறுதியில் ரியோ உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கயின் படி 'அகில அமெரிக்க நாடுகளின்

சங்கம்’(pan American Union) ஒன்று அமைக்கப்பட்டது. 25 ஷரத்துக்களைக் கொண்ட ரியோ உடன்படிக்கை அமெரிக்க பகுதியில் அமைதியை நிலைநிறுத்தவும் ஆக்கிரமிப்புப் போர்களைத் தடுப்பதற்கும், ஆக்கரமிப்பு செய்யும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வழி செய்தது. இது அமெரிக்காவின் புதிய வெளிநாட்டுக் கொள்கையை வெளிப்படுத்தியது.

### 6.வட அட்லாண்டிக் ஒப்பந்தம் (NATO) 1949:

மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவவிடாமல் தடுப்பதற்காக ஏற்பட்ட ராணுவ ஒப்பந்தமே வட அட்லாண்டிக் ஒப்பந்தமாகும். ஆட்லாண்டிக் கடல் பகுதியிலுள்ள நாடுகளான பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுக்கல், இங்கிலாந்து ஆகியவை அமெரிக்காவுடன் சேர்ந்து வாஷிங்டனில் 1949 ஏப்ரல் 4-ம் தேதி ஒரு 25 வருட ராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதற்கு வட அட்லாண்டிக் ஒப்பந்தம் என்று பெயர். 1952-ல் கிரீசும் துருக்கியும், 1955-ல் மேற்கு ஜெர்மனியும் நேட்டோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் தலைமையிடம் பாரிசில் அமைக்கப்பட்டது. நேட்டோ நாடுகளுன் ஏதேனும் ஒரு நாட்டின் மீதான தாக்குதல் அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்பட வேண்டுமென்பது’’ இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். வுட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் விளைவாக, உலகில் பயமும், போர் பீதியும் பதட்ட நிலையுமே ஏற்பட்டது. ரஷ்யாவும், அமெரிக்காவும் மேலும் படைப்பல பெருக்கத்தில் ஈடுபட்டன. தற்சமயம் நேட்டோவில் 16 நாடுகள் உறுப்பினராக உள்ளன. 1999 மார்ச் 1-ல் போலந்து ஹங்கேரி செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகள் இணைந்தன.

### 7.ஆன்சுஸ் ஒப்பந்தம் (ANZUS pact : 1951)

1951, செப்டம்பர் 1-ம் தேதி ஆஸ்திரேலியா, நியுசிலநர்து அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ‘பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம்’ ஒன்றில் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரில் கையெழுத்திட்டன. இந்த பசிபிக் வட்டார நாடுகளின் ஒப்பந்தத்திற்கு ‘ஆன்சுஸ் ஒப்பந்தம்’ என்று பெயர் (A.ஆஸ்திரேலியா,NZ நியுசிலாந்து,US-அமெரிக்கா) இந்த ஒப்பந்தத்தின்படி உடன்படிக்கை நாடுகளின் ஒரு நாட்டின் மீது இராணுவத் தாக்குதல் ஏற்பட்டால் மற்ற நாடுகள் உதவி செய்து அந்த ராணுவத் தர்குதல்களை முறியடிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இதுவும் கெடுபிடிப்போரின் விளைவாக ஏற்பட்ட ராணுவ ஒப்பந்தமாகும்.

### 8.தென்கிழக்கு ஆசிய நாடகளின் உடன்படிக்கை : (SEATO)

தேன்கிழக்கு ஆசிய நாடுகளிலும் கம்யூனிசம் பரவி விடுமோ என்ற பயம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. எனவே அப்பகுதியின் பாதுகாப்பிற்காக உடன்படிக்கை செய்யப்பட வேண்டிய அவசியத்தை அமெரிக்கா உணாந்தது. எனவே அமெரிக்காவின் முயற்சியின் விளைவாக இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரியா, நியுசிலாந்து பிலிப்பைன்ஸ் பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கூடி 1954 செப்டம்பர் 8-ம் தேதி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இதற்கு ‘மணிலா உடன்படிக்கை’ என்றும் பெயர். உடன்படிக்கை நாடுகள் தங்கள் பகுதி நாடுகள் மீது ஆக்கிரமிப்பு நிகழ்ந்தால் அதனை முறியடிக்க ஒன்றுபட்டு கூட்டாக செயலாற்றி அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது என்று முடிவு செய்தனர். ஆனால் இந்த உடன்படிக்கை ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் செயல்படவில்லை. கம்யூனிசம் பரவுவதை தடுத்து நிறுத்துவதற்கு மட்டுமே இந்த உடன்படிக்கை என்று அமெரிக்கா அறிவித்தது. இங்கிலாந்தும் இந்த உடன்படிக்கையின் செயல்பாடுகளில் அதிக அக்கறை காட்டவில்லை. 1962-63-ல்

பாகிஸ்தான் சீனாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை சீட்டோ உடன்படிக்கையின் நோக்கத்தையே சிதறடித்தது. பின்னர் இந்த உடன்படிக்கையிலிருந்து பாகிஸ்தான் விலகிவிட்டது.

### 9.பாக்தாத் உடன்படிக்கை (Central Treaty Organisation CENTO) Feb, 1955

முத்தியக்கிழக்குப் பகுதியில் கம்யூனிசம் பரவவிடாமல் தடுத்து நிறுத்துவதற்காகவே சென்டோ அல்லது பாக்தாத் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது ரஷ்யாவிற்கு எதிரான ஓர் உடன்படிக்கையே ஆகும். 1955 பிப்ரவரியில் பரஸ்பர பாதுகாப்பு கருதி துருக்கியும் ஈராக்கும உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டன. அதன் பின்னர் நவம்பர் 22-ல், இங்கிலாந்து,ஈரான்,ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த பாக்தாத் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. ஆனால் இந்த பாக்தாத் உடன்படிக்கை வலிமையற்று காணப்பட்டதால் பின்னர் இதில் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. இந்த பாக்தாத் உடன்படிக்கை நாடுகளுடன் ரஷ்யா நட்புறவை ஏற்படுத்திக் கொண்டதால் நாளடைவில் பாக்தாத் உடன்படிக்கை அதன் முக்கியத்துவத்தை இழந்தது.

### 10.வார்சா உடன்படிக்கை (Warsaw pact): May 1955

சோவியத்யனுியனுக்கு எதிராக அமெரிக்கா பல ராணுவ உடன்படிக்கைகளைச் செய்து கொண்டதால் ரஷ்யாவிற்கும், கிழக்கு ஐரோப்பிய கம்யீனிச நாடுகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சோவியத் யூனியன் கருதியது. எனவே பதிலடியாக, தனது நட்பு நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ரஷ்யா முடிவு செய்தது. அதன் விளைவாக, 1954 டிசம்பரில் அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா செக்கோஸ்லோவேகியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் கூடினர். ராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். பின்னர் மீண்டும் இந்த நாடுகள் 1955 மே மாதம் வார்சாவில் கூடி ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். நேட்டோ ஒப்பந்த நாடுகளுக்கெதிராகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதே இவ்வுடன்படிக்கையின் நோக்கமாகும். வார்சா ஒப்பந்த நாடுகளின் தலைமையிடம் மாஸ்கோவில் அமைக்கப்பட்டது. கூட்டு ராணுவப்படை ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஆனால் சோவியத் யூனியனின் சிதறலுக்குப் பிறகு 1991 ஜீலை 1-ல் பிரேக் (pragee) நகரில் வார்சா ஒப்பந்த நாடுகள் கூடின. ஆதில் வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விதம் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று எதிராகப் பல பிராந்திய ராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன இந்த ஒப்பந்த நாடுகள் அனைத்தும் படைப்பெருக்கத்தில் ஈடுபட்டன. ஐரோப்பா இரண்டு ராணுவ முகாம்களாகப் பிரிக்கப்பட்டது. எனவே பதட்ட நிலை அதிகரித்தது. கெடுபிடிப் போர் மேலும் வளர்ந்தது.

### 11.கொரியாப் போர் (Korean war) :1950

அமெரிக்காவும், ரஷ்யாவும் கெடுப்பிடிப் போர் காலத்தில் கொரியாவில் நேரடியாகவே தலையிட்டன. கொரியாப் போர் இதனாலேயே ஏற்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு, வடபகுதியில் ரஷ்ய ஆதிக்கமும் தென்பகுதியில் அமெரிக்க ஆதிக்கமும் ஏற்பட்டது. கெடுபிடிப்போரின் தாக்கம் இங்கு அதிகமாகவே காணப்பட்டது. 1950 ஜீன் 25-ல் வடகொரியா கம்யூனிசப் படைகள் ரஷ்ய டாங்குகளின் உதவியுடன் தென்கொரியா மீது படையெடுத்தது. இப்பிரச்சனையில் ஐ.நா. சபை தலையிட்டு வடகொரிய ஆக்கிரமிப்புப் படைகளை

விரட்டி ஐ.நா.படையை அமைத்தது. வடகொரியா தோற்கடிக்கப்பட்டு இரண்டாகப் பிரிந்தே உள்ளது. இதுவும் கெடுப்பிடிப்போரை அதிகப்படுத்தியது.

**12.வியட்நாம் போர் (Vietnam war) 1964:**

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு வியட்நாம் பிரான்சு நாட்டின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. ஆனால் வியட்நாமிலிருந்த தேசியவாதிகள் பிரெஞ்சுக்காரர்களின் மேலதிகாரத்தை கடுமையாக எதிர்த்தனர். தேசியவாதிகள் தலைவராக விளங்கியவர் ஹோசிமின் என்பவராவார். இவர் வியட்நாமின் வடபகுதியில் ஒரு மாகாண அரசாங்கத்தை நிறுவினார். தேசியவாதிகளை பிரான்ஸால் முறியடிக்க முடியவில்லை. எனவே 1954-ல் ஜெனிவாவில் மாநாடு கூட்டப்பட்டு வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பதினேழாவது அட்சரேகை எல்லைக்கோடாக வரையறுக்கப்பட்டது. வட வியட்நாமில் ஹோசிமின் தலைமையில் ஒரு கம்யூனிச அரசம், தென்வியட் நாமில் பாவோடாய் என்பவர் தலைமையில் ஒரு சுதந்திர அரசம் நிறுவப்பட்டது. இங்கு கெடுபிடிப் போரின் தாக்கம் காணப்பட்டது.

வட வியட்நாமிய கம்யூனிச அரசு ரஷ்ய ஆதரவுடன் தென்வியட்நாமில் கம்யூனிசத்தைப் பரப்புவதற்கு ‘‘வியட்காங்’’ என்ற புரட்சி இயக்கத’தை உருவாக்கிஅ னுப்பியது. ஊலகம் முழுவதும் கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்ட அமெரிக்கா தென்வியட்நாமிற்கு பண உதவியும் படை உதவியும் அளித்து நேரடியாகத் தலையிட்டது. சுமார் ஐந்து லட்சம் அமெரிக்க வீரர்கள்அனுப்பப்பட்டனர். 1964-65 ஆண்டுகளில் வியட்நாம் போர் நடைபெற்றது. வட வியட்நாம் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் தொடுத்தன. ஆனால் இப்போரில் சுமார் ஒரு லட்சம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். வியட்காங்கினரை அமெரிக்காவால் தோற்கடிக்க முடியவில்லை. 1968-ல் போர் முடிவடைந்தது. 1973-ல் பாரிசு அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் அமெரிக்கப் படைகள் வியட்நாமிலிருந்து வாபஸ் பெறப்பட்டன.

**13.இந்தியாவலன் கெடுபிடிப்போர்:**

இந்தியா சுதந்திரமடைந்தபின் காஷ்மீர் பிரச்சனையை மையமாக வைத்து இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாகப் போர்களும் ஏற்பட்டது. இதில் பாகிஸ்தானுக்கு அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் ஆதரவு அளித்து வருகிறது. ரஷ்யா இந்தியாவிற்கு ‘காஷ்மீர் பிரச்சனையில் நிலையான ஆதரவை அளித்தது. 1971-ல் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போரிலும், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் ரஷ்யா இந்தியாவிற்கு ஆதரவாகவும் செயல்பட்டன. தற்போது கெடுபிடிப்போர் இல்லை என்றாலும் இந்த காஷ்மீர் பிரசச்சனையால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே தொடர்ந்து பதட்டநிலை இருந்து வருகிறது.

**14.மத்திய கிழக்கில் கெடுப்பிடிப்போர்:**

முத்திய கிழக்கில் பாலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலுக்குமிடையே தீராத பகை ஏற்பட்டு அதன் விளைவாக நான்கு அரேபிய இஸ்ரேலியப் போர்கள் ஏற்பட்டன. இந்தப் போர்களில் அமெரிக்கா முழுமையாக இஸ்ரேலை ஆதரித்தது. அரபு நாடுகளுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் ரஷ்யா ஆதரவு அளித்தது. ஆனால் தற்போது அங்கு கெடுபிடிப் போரின் தன்மை குறைந்து, பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**15.யு-2, நிகழ்ச்சி**

வுல்லரசு நாடுகளுக்கிடையே உள்ள கெடுபிடி போரை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ரஷ்ய பிரதமர் குருஷேவ் 1959-ல் அமெரிக்காவிற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகை புரிந்தார். சர்வதேச சிக்கல்களைத் தீர்ப்பதற்கு 1960, மே மாதம் உச்சநிலை மாநாடு கூட்ட முடிவு செய்யப்பட்டது. பாரிசு உச்சிமாநாடு நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக நடைபெற்ற யு.2- நிகழ்ச்சியினால் சமாதான முயற்சிகள் பலனற்றுப் போயின. லூக்ஹீட் யு-2 (Lockheed U2) என்ற அமெரிக்க வேவு விமானம் ரஷ்யா மீது பறந்த போது சுட்டுவீழ்த்தப்பட்டது. அதன் விமானி பிரான்சின் பவர்ஸ் (Francis poers) உயிருடன் பிடிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியினால் பாரிசு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள குருஷேவ் மறுத்துவிட்டார். அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் ரஷ்யா மீது வேவுபார்க்கும் விமானம் அனுப்பப்பட்டதை ஒத்துக் கொண்டார். அமெரிக்காவுக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது. 1962, பிப்ரவரி மாதம் U2 விமானி பவர்ஸ் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அதற்குப் பதிலாக அமெரிக்காவில் கைதியாக இருந்த ஒற்றர் ரடால்ப் ஏபல் (*Rudoll Abel) என்பவரை அமெரிக்கா விடுதலை செய்தது. இந்த யு-2 நிகழ்ச்சி கெடுபிடிப்போரை மீண்டும் அதிகப்படுத்தியது.

**16.கியுபா ஏவுகணை நெருக்கடி:**

1959-ல் கியுபாவின் அதிபரானார் பிடல்காஸ்ட்ரே. ஆதிபரான பின் கம்யூனிசக் கொள்கையின் அடிப்படையில் நாட்டின் பொருளாதார நிலையைச் சீரமைத்து வெற்றி கண்டார். இதனால் அங்கிருந்த அமெரிக்க முதலாளிகள் பாதிக்கப்பட்டார்கள். இதனால் கியுபா அமெரிக்க உறவு கெட்டது. கியுபாவில் அமெரிக்க உள்நாட்டுப் பொரைத் துண்டிவிட்டு காஸ்ட்ரோவை கவிழ்க்க முயற்சி செய்தது. இதனால் தனது பாதுகாப்பிற்காக காஸ்ட்ரோ ரஷ்யாவை நாடியதில் வியப்பில்லை. ரஷ்யாவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கியுபாவிற்கு ராணுவ சாதனங்களை அனுப்பி வைத்தது. ரகசியமாக ஏவுகணைத் தளங்களை நிறுவியது. இதனால் அமெரிக்கா அதிர்ச்சியடைந்தது. கியுபாவில் ரஷ்யா ஏவுகணைத் தளங்களை நிறுவவிடாதபடி செய்ய அமெரிக்க ஜனாதிபதி கென்னடி உறுதியுடன் செயல்பட்டார்.

1962 அக்டோபர் 22ம் தேதி ஏவுகணைகளைக் கொண்டு வரும் ரஷ்யக் கப்பல்களைத் தடுத்து நிறுத்த கியுபாவை அமெரிக்கா முற்றுகையிட்டது. படைக்கருவிகளைக் கொண்டுவரும் கப்பல்களைக் சோதனையிடுவோம் என்று கூறியது. அப்போது கியுபாவை நோக்கி ஒன்பது ரஷ்யக் கப்பல்கள் ஏவுகணைகளுடன் வந்து கொண்டிருந்தன. இந்த கியுபா ஏவுகணை நெருக்கடி கெடுபிடிப்போரின் உச்சக்கட்டமாகக் கருதப்படுகிறது. கேன்னடியும் குருஷேவும் ஐ.நா. செயலர் யூதாண்ட்டின்சமரசத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். பன்னாட்டுக் கண்காணிப்பின கீழ் கியுபாவிலிருந்து ஏவுகணைத் தளத்தை அகற்றிவிடுவதாக அக்டோபர் 28-ல் ரஷ்யா அறிவித்தது. இவ்வாறு ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் ஏற்படவிருந்த போர் தடுக்கப்பட்டது.

**கெடுப்பிடி போரின் தணிவு:**

கியுபா ஏவுகணைப் பிரச்சனையில் போர் ஏற்பட்டிருந்தால் மனித இனமே அழிக்கப்பட்டிருக்கும் என்று ரஷ்யாவும் அமெரிக்காவும் நினைத்தன. அணு ஆயுதப் போர் ஏற்பட்டிருந்தால் நாள் ஒன்றுக்கு 30 கோடிப்பேர் இறந்திருப்பார்கள். எனவே கியுபா நெருக்கடியிலிருந்து ‘அணு ஆயுதப் போர் ஏற்படும் அளவிற்கு நடந்து கொள்வதில்லை’ என்று இருநாடுகளுமே முடிவு செய்தன. அதன் பயனாக 1963-லிருந்து கெடுபிடிப்போர் தணிந்து காணப்பட்டது.

ரஷ்யா ராணுவ பலத்தின் மூலம் மட்டுமே கம்யூனிசத்தைப் பரப்பி விடலாம் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டது. அதே போல் அமெரிக்காவும், ராணுவ உதவி அளிப்பதின் மூலம் மட்டுமே கம்யூனிசம் பரவுவதைத் தடுத்து விடமுடியாது என்பதைப் புரிந்து கொண்டது. இதனால் இந்த இரண்டு வல்லரசுகளுக்கிடையே நிலவி வந்த பனிப்போர் மறைய ஆரம்பித்தது. 1963, ஜீன் 20-ம் தேதி வாஷிங்டனுக்கும் மாஸ்கோவிற்குமிடையே நேரடிஹாட்லைன் போன் வசதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் இரண்டு நாடுகளுக்கிடையே நல்லெண்ணப் பயணங்களும் நட்பு ஏற்படக் காரணமாயின. ஜேர்மனியை மையமாக வைத்து ஆரம்பமான பனிப்போர் 1973-ல் இரண்டு ஜெர்மனி நாடுகளும் ஐ.நா. சபையில் சேர்க்கப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட கெடுப்பிடிப்போர் முடிவடைந்து விட்டது.

**கெடுபிடிப் போானி முடிவு**

1985-ம் வருடம் ஜெனீவாவில் உச்சி மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கலந்து கொண்டன. ‘‘அணு ஆயுதப் போரில் யாரும் ஜெயிக்க முடியாது. எனவே அணு ஆயதப் போர் புரிதல் கூடாது: என்று இரண்டு நாடுகளும் முடிவு செய்தன. இத்துடன் கெடுபிடிப் போரின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. இந்தக் காலக்கட்டத்தில் தான் நமீபியா சுதந்திமடைந்த நிலை தென் ஆப்பிரிக்க இனவெறிக் கொள்கையில் காணப்பட்ட மாறுதல், நெல்சன் மண்டேலாவின் விடுதலை, 1989-ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட கம்யூனிச வெறுப்பு அலை சொவியத் யூனியனின் சிதைவு ஆகியவை கெடுபிடிப்போரின் முடிவை அறிவிப்பனவையாக அமைந்தன. 1990, அக்டோபரில் வல்லரசுகளின் சம்மதத்துடன் நடைபெற்ற ‘ஜெர்மானிய மறு இணைவு’ கெடுப்பிடிப் போர் முடிந்து விட்டதை அறிவித்தது.

1990, நவம்பர் 19-ம் தேதி பிரெஞ்சு அதிபர் பிராங்காய் மிட்டரண்டட் (Francois Mitterand) ன் தலைமையில் நேட்டோ உறுப்பு நாடுகளும், வார்சா உறுப்பு நாடுகளும் கலந்து கொண்ட உச்சி மாநாடு பாரிசில் கூட்டபபட்டது. இந்த மாநாட்டில் எதிர்பாராமல் தாக்குதல் தொடுப்பதற்கு எதிராகவும், ஐரோப்பிய நாடுகளிடையே சமநிலையை ஏற்படுத்தவும்’ முடிவு செய்தன. 1991 ஜீலை 1-ம் தேதி வார்சா ஒப்பந்த நாடுகளான போலந்து, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, சோவியத்யூனியன் ஆகிய நாடுகள் பிரேக் (prague) நகரில் சந்தித்தன. அதன் விளைவாக வார்சா உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. இதன’ மூலம் இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததிலிருந்து நிலவி வந்த மேற்கு கிழக்கு பாகுபாடும், போட்டி மனப்பான்மையும் முடிவுக்கு வந்தது. கெடுப்பிடிப்போரும் மறைந்தது.

## ஐரோப்பிய பொதுச்சந்தை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய தேசியஉணர்வுகள் முழுத்திறமை வாய்ந்த நாடுகள் பலவற்றை உருவாக்கின. அளவுக்கு மீறிய தேசிய உணர்வுகள் அண்டைநாடுகளோடு பொருளியல் கூட்டுறவு கொள்ள இடையூறாய் அமைந்தன. தேசிய நலன்களைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் நாடுகளிடையே கடச்ச இயலாக் காப்புவரிச்சுவர்கள் பல எமுப்பப்பட்டன. ஆனால் இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐரோப்பாவில் எழுந்த புதிய பொருளியல் பாதுகாப்புப் பிரச்சனைகள் காரணமாக நாடுகள் தானாக ஒருங்கிணையத் தொட்ங்கின. காப்புவரிச் சுவர்கள் பொலபொலவெனச் சரிந்தன. தனித்தனி காற்றுப்புகா மண்டலமாக இயங்கிய நாடுகள் தொடர்பு வாயில்களை அகலத் திறந்து வைத்து அண்டை நாடுகளுடன் கூட்டுறவாடத் தொடங்கின. கூடி வாழ்வதன் மூலமே கோடி நன்மை பெற முடியும் என்ற அரிச்சுவடிப் பாடத்தின் உட்பொருளை உணர்ந்தனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளைப்போல் ‘‘ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்’’ (Unites States of Europe) உருவாக

வேண்டும் என ராஜதந்திரிகள் குரல் எழுப்பினர். ஆதன்விளைவாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் அரசியல் பொருளியல் பாதுகாப்புத் துறைகளில் நெருங்கிவந்து இணைந்து செயல்படத் தொடங்கின். அதன் காரணமாக

1) ஐரோப்பியப் பொருளியல் கூட்டுறவு நிறுவனம் (Organization for European Economic- Co-operation)
2) ஐரோப்பியக் கவுன்சில் (Council of Europe)
3) ஐரோப்பிய நிலக்கதி எ∴கு சமூகம் (The European coal and Steel Community)
4) ஐரோப்பிய பாதுகாப்பு சமூகம் (European Defence Community)
5) வுட அடலாண்டிக் பாதுகாப்பு சமூகம் (NATO)
6) ஐரோப்பிய அணுசக்தி சமூகம் (European Atomic Energy Community, Euratom)
7) ஐரோப்பிய பொருளியல் சமூகம் (European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச்சந்தை (European Common Market) ஆகிய கூட்டமைப்பு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

### ஐரோப்பிய பொருளியல் கூட்டுறவு நிறுவனம்

இரண்டாம் உலகப்போருக்குப்பின் பொருளியல் சீரமைப்புப் பணிக்கு அமெரிக்கா அளித்த உதவியான ‘‘மார்ஷல் திட்டம்’’ (பொருளாதார ரீதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைய வழிவகுத்தது. 1948-ல் மார்ஷல் திட்டத்தின் மூலம் பயன்பெறும் 16 நாடுகள் கூடி பொருளாதார ஒத்துழைப்பிற்காக ஐரோப்பிய பொருளியல் கூட்டுறவு நிறுவனத்தை உருவாக்கினர். அது மார்ஷல் உதவியைப் பங்கிட்டுக் கொள்ளவும் அதன் மூலம் வர்த்தகத் தடைகளை நீக்கவும் உதவியிருந்தது. வர்த்தகத்தடைகளை மேலும் நீக்கி 1931-ல் ஜெர்மன் அரசுகள் ஏற்படுத்திய சால்வரைன் சுங்க வரிக்கூட்டு போன்ற ஏற்பாடுகளைச் செய்ய முயன்றன. ஏற்கனவே 1944-ல் பெனிலக்ஸ் நாடுகள் (பெல்ஜியம், நெதர்லாந்து, லக்னம்பர்க்) இத்தகைய சுங்கவரிக்கூட்டினை நிறுவியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனை மேலும் பல நாடுகளுக்கு விரிவுபடுத்தினால் நல்லது என்ற கருத்து தோன்றியது. ஆனால் பிரிட்டன் இத்தகைய திட்டத்திற்கு ஆதரவு அளிக்காததால் அது செயல்படுத்தப்பட முடியாது போயிற்று.

### ஐரேப்பியக் கவுன்சில்

1948-ல் தி ஹேக் நகரில் 25 நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ஐரோப்பிய அறிஞர்கள் கூடி ஐரோப்பியப் பேரவை ஒன்று அமைக்கக் கோரினார். இதன் விளைவாக 1949-ல் லண்டனில் 10 ஐரோப்பிய நாடுகள் ஒன்று கூடி ஐரோப்பியக் கவுன்சிலை நிறுவின. ஆந்நாடுகள் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், லக்னம்பர்க், நெதர்லாந்து, இத்தாலி, அயர்லாந்து, நார்வே, ஸ்வீடன், டென்மார்க் ஆகியவைகளாகும். பின்னர் இதில் துருக்கி கிரீஸ் (1949) ஐஸ்லாந்து (1950) மேற்கு ஜெர்மனி (1951) ஆஸ்திரியா (1959) சைப்ரஸ் (1961) ஸ்விட்சர்லாந்து (1963) மால்டா (1965) ஆகிய நாடுகள் சேர்ந்தன.

ஐரோப்பியக் கவுன்சில் இரு முக்கியக் குழுக்களைக் கொண்டிருந்தது.

1) வெளிநாட்டமைச்சர்கள் குழு: இது ஆண்டிற்கு இருமுறை கூடும்.
2) 140 பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைப் பேரவை. இது ஆண்டுதோறும் மூன்று வார காலம் கூடும்.

**நோக்கம்**

1) உறுப்பு நாடுகளிடையே அதிக அளவு ஒருமைப்பாடு உண்டு பண்ணவுது
2) பொதுவான பாரம்பரியப் பண்பாடுகளைப் பாதுகாப்பது, பொருளியல் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவது ஆகியவைகளாகும்.

ஐரோப்பியக் கவுன்சிலின் முதல் தலைவராக பெல்ஜியம் வெளிநாட்டமைச்சர் பால்ஹென்றி ஸபர்க் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் கூட்டம் ஸ்ட்ராஸ்பர்க் நகரில் கூடியது. உண்மையான அரசியல் ஆணை அதிகாரங்களைக் கொண்டு வரையறுக்கப்பட்ட சில பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த ஒருமைப்பாடு ஏற்படவில்லை. இன்னமும் தேசிய நலன்களே ஐரோப்பிய அரசியல்வாதிகளின் முதன்மை நோக்கமாக இருந்தன. எனினும் 1966-ல் சட்டம், சமூகம், பொருளாதாரம், பொதுச்சுகாதாரம், சுற்றுப்புறச் சூழ்நிலைப்பாதுகாப்பு, கல்வி, அறிவியல் ஆகியவற்றில் கூட்டுறவுடன் செயல்படக்கூடிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. உறுப்பு நாடுகள் தங்கள் குடிகட்கு பொருளியல் சமூக சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டது மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புத் திட்டங்களுக்கென 70க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருந்தன. ஒருமைப்பாட்டை நோக்கி ஐரோப்பாவை இட்டுச்செல்லும் படிக்கட்டுகளாக அமைந்தன.

**ஐரோப்பிய நிலக்கரி எ.்.கு சங்கம்**

1950 மே 9-ல் பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் ராபர்ட் ஸ்கூமேன் பத்திரிக்கை நிருபர்களை அழைத்து எதிர்பாராத வியப்பூட்டும் செய்தியொன்றை வெளியிட்டார். “பிரெஞ்சு ஜெர்மன் இரும்பு நிலக்கரி உற்பத்தி அனைத்தையும் ஒரு பொதுவான ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க பிரெஞ்சு அரசு தயாராயிருக்கிறது. அந்தச் செய்தி. மேற்கு ஐரோப்பாவின் இரும்பு நிலக்கரிச் சுரங்கங்கள், ரூர் ஆல்செஸ், லொர்ரைன் ஜார், லக்சம்பர்க் பிரனாசினுள் வட்டத்தினுள்ளே அமைந்திருந்தன. நாடுகளின் பொருளியல் வளத்திற்கு மூலக் காரணமான அவ்விரு கனிப்பொருள்கள் அடங்கியுள்ள பகுதிகளை தங்கள் நாட்டு எல்லைக்குள் கொண்டுவர வேண்டுமென நாட்டுப்பற்றுள்ள ஜெர்மன், பிரெஞ்சு மக்கள் விரும்பியதில் வியப்பில்லை.

எனவே இருநூற்றாண்டு காலமாக அப்பகுதியின் மோலாதிக்க அரசியல் உரிமை குறித்து அவ்விரு நாடுகளும் பெரும் சர்ச்சையில் ஈடுபட்டன. அதனால் உலகப்போர்கள் மூண்டன. இரு நாடுகளுக்கிடையே தீராப்பகைக்குக் காரணமான அவ்விடங்களை இரு நாடுகளுக்கும் பொதுவாக்கிவிட்டால் பகை நீங்கும். வளம் பெருகும் அமைதி உறுதிபெறும் என எண்ணிய ஸ்கூமேன் தன் திட்டத்தை வெளியிட்டார். இதனை ஜெர்மன் சான்ஸ்லர் கொன்காடு அடினாரும் இத்தாலிப் பிரதமர் கஸ்பேரியும் வரவேற்றனர். 1951-ல் பாரீசில் இதற்கான ஒரு உடன்படிக்கை சம்பந்தப்பட்ட நாடுகளிடையே கையெழுத்தானது. 1952-ல் ஐரோப்பிய நிலக்கரி எ.்.கு சமூகம்’ உருவானது. இச்சமுகத்தில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம் லக்சம்பர்க், நெதர்லாந்து இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்தன.

இச்சமூகம் மூன்று முக்கிய நோக்கங்களை கொண்டிருந்தது அவை,

1) நிலக்கரி எ.்.குத் தொழிலில் உறுப்பு நாடுகளிடையேயுள்ள அனைத்துத் தடைகளையும் அகற்றி ஒருமுகப்படுத்துதல.
2) பொருளியல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

3) தொடர்ந்து பிற பொருளியல் துறைகளிலும் அரசியலிலும் ஒருமைப்பாடு ஏற்படுத்துதல்

1943,பிப்ரவரியில் இரும்பு நிலக்கரி கனிப்பொருட்களுக்கும் பொதுச்சந்தை ஏற்படுத்தப்பட்டது. அவ்வாண்டு மே திங்களில் எ.ஃ.கும் பொதுச்சந்தைப் பொருளாக்கப்பட்டது. 1954 ஆகஸ்டில் சிறப்பு எ.ஃ.கும் அவ்வினத்தோடு சேர்க்கப்பட்டது. உறுப்பு நாடுகளுக்கிடையில் உள்ள சுங்கவரித் தடைகள் படிப்படியாக அகற்றப்பட்டன. விலை நிர்ணயம் போக்குவரத்துக் கட்டணம் ஆகியவற்றில் நிலவிய வேறுபாடுகள் அகற்றப்பட்டன. நான்கு ஆண்டுகளில் சமூக நாடுகளின் பொருளாதாரம் உறுதிப்பட்டு வளர்ச்சியடைந்தது. எனவே இச்சமூகக் கூட்டுறவு விற துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அதன் பயனாக ஐரோப்பிய பொதுச்சந்தை பொருளியல் சமூகம், அணுசக்தி சமூகம் போன்றவை உருவாயின.

இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு வியந்த பிரிட்டன், அயர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் 1973-ல் இச்சமூகத்தில் இணைந்தன.

இதனை நிர்வகிக் மூன்று நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

1) உயர் ஆணைக்குழு
2) பொதுப்பேரவை
3) நீதிமன்றம்

இதில் பொதுப்பேரவை ஸ்ட்ராஸ்பர்க் நகரிலும் பிற இரண்டு நிறுவனங்கள் லக்சம்பர்க்கிலும் நிறுவப்பட்டன. பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் ஜின்மோனட் சமூகத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஐரோப்பிய பாதுகாப்பு சமூகம்**

ஐரோப்பிய நிலக்கரி எ.ஃ.கு சமூகம் பெற்ற வெற்றியால் புதிய உற்சாகமடைந்த ஆறு நாடுகளும் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெனிலக்ஸ் நாடகள்) பொதுவான பாதுகாப்புப் படையை உருவாக்க முயன்றன. அதில் தேசியப் படைகள் இருக்காது பொதுவான சமூகப் படைகளே இருக்கும். அப்படைகள் அனைத்து உறுப்பு நாடுகளின் ஆணைக்குழுவால் நிர்வகிக்கப்படும். மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் ஒருமைப்பாட்டை நோக்கி ஒரு பெரும் அடி எடுத்து வைக்கப்பட்டது. பிரிட்டன் இச்சமுகத்தில் சேரத் தயங்கியது. ஆனால் எதிர்பாராத விதமாகப்பிரெஞ்சு தேசிய மன்றம் 1954-ல் இப்பாதுகாப்பு சமூகத்திற்கு எதிராக தீர்மானமும் இயற்றி அம்முயற்சியை முளையிலேயே கொன்றுவிட்டது. ஏனென்றால் அது பிரெஞ்சு தேசியப் பெருமையை மங்கச் செய்வதுடன் ஜெர்மனியை மீண்டும் படைவலுமிக்க நாடாக மாற்ற வழிவகுக்கிறது என்று எண்ணியதேயாகும். ஆனால் பின்னர் நேட்டோ ராணுவ அமைப்பில் படை வலுவுடன் கூடிய மேற்கு மேற்கு ஜெர்மனி இணைந்தது குறிப்பிடத்தக்கது.

**ஐரோப்பிய அணுசக்தி சமூகம்**

ஐரோப்பிய நிலக்கரி எ.ஃ.கு சமூகத்தின் வெற்றி மேலும் அந்நாடுகளை நெருக்கமாக்கியது. 1957-ல் அச்சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் அயல்நாட்டமைச்சர்கள் ரோமில் கூடி அமைதிப் பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்தும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இது 1958-ல் நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாக 1961-ல் 1.75 மில்லியன் கிலோவாட் உற்பத்தித்திறனுடைய அணுஉலைகள் நிறுவப்பட்டன. பெல்ஜியம் ஜெர்மன், நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் அணு ஆய்வுக்கூடங்கள் நிறுவப்பட்டன.

தனியார் அணுசக்தித் திட்டங்களுக்குப் பயனுள்ள தொழில் நுட்ப பண உதவிகள் வழங்கப்பட்டன.

**ஐரோப்பிய பொருளியல் சமூகம்**

1957 ம் ஆண்டு ரோம் நகரில் கூடிய ஆறு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அயல் நாட்டமைச்சர்கள் (பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பெனிலக்ஸ் நாடுகள்) ஐரோப்பிய பொதுச்சந்தை ஒன்று நிறுவ முடிவு கட்டினர். இது 1959-ல் செயல்படுத்தப்பட்டது. இதனை நிறுவ பெல்ஜியம் அயல்நாட்டமைச்சர் பால் ஹென்றி ஜ்பர்க் பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் ஜீன்மோனட் ஆகியோர் பெரும் முயற்சி எடுத்தனர். இத்தகைய ஒரு நிறுவனம் மேற்கு ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைந்து வலுப்படுத்தும் என்று அமெரிக்கா கருதியதால் அந்நாடும் அதற்கு ஆதரவளித்தது. இதன்படி இச்சமூக நாடுகள் தம்மிடையுள்ள சுங்கவரித் தடைகளை 12 முதல் 15 ஆண்டு காலத்திற்குள் படிப்படியாக அகற்றிவிட ஒப்புக் கொண்டன. இச்சமூகத்திற்கு வெளியில் உள்ள நாடுகளுடனான சுங்கவரியும் பொதுவாக நிாணயிக்கப்பட்டது. போக்குவரத்துக்கட்டணங்கள் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் சமூக நாடுகளிடையே வேறுபாடு காட்டக்கூடாது. தனியார் தொழிலியல் வர்த்தக நிறுவனங்களில் முற்றுரிமைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. சமூக நாடுகளிடையே தடையற்ற தாராள மூலதன நடமாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டு மூலதன வங்கிகள் பொதுவான வேளாண்மைக் கொள்கைகள், வரிவிதிப்புக் கொள்கைகள் சமூக நலச்சட்டங்கள் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன.

இந்த பொருளியல் சமூகம் மூன்று வித நிர்வாக நிறுவனங்களைக் கொண்டியிருந்தது. அவை

1) சமூக நாட்டுப் பாராளுமன்றங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகள் அடங்கிய பேரவை இது. ஆலோசனை மன்றமாகச் செயல்பட்டது.
2) நாடுகளின் அமைச்சர் குழு, இது கொள்கைகளை வகுக்கும் செயற்குழுவாக இயங்கியது.
3) நீதிமன்றம்

1968ல் ஜீலையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்திற்கு பதினெட்டு மாதங்களுக்கு முன்னதாகவே நாடுகளிடையேயுள்ள சுங்கவரித்தடைகள் முற்றிலும் அகற்றப்பட்டு விட்டன. பிற நாடுகள் மீது ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. இதன்மூலம் ஆறு நாடுகளில் உள்ள 18,30,00,000 மக்கள் ஒரே பொருளியல் சமூகமாக இயங்கத் தொடங்கினர். பொருளியல் நிலையும் வாழ்க்கைத் தரமும் அதனால் உயர்ந்தது.

ஐரோப்பியப் பொதுச்சந்தைத் திட்டத்தை தொடக்க காலம் முதற்கொண்டே சந்தேகக் கண்கொண்டு பார்த்து ஒதுங்கி நின்ற பிரிட்டன் அதன் வெற்றி கண்டு வியபுற்றது. அதில் சேர அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. பிரிட்டன தன் காமன்வெல்த் நாடுகளுடன் நெருங்கிய பொருளியல் தொடர்பு கொண்டிருப்பதாலும் அமெரிக்காவுடன் பொருளியல் தொடர்பு கொண்டிருப்பதாலும் அந்நாடு தன் ஐரோப்பியத் தன்மையை இழந்துவிட்டது என்று பிரான்ஸ் கூறியது.

அதன் காரணமாக 1973 வரை பிரிட்டன் சமூகத்தின் உறுப்பினராக இயலவில்லை. அட்லாண்டில் பிரிட்டனும் அயர்லாந்தும் டென்மார்க்கும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தன.

### ஐரோப்பிய தடையில்லா வாணிப அமைப்பு (European Free Trade Association)

பொதுச்சந்தைத் திட்டத்தைக் கண்டு ஐயுற்ற பிரிட்டன் தொடக்க காலத்தில் அதில் சேரவில்லை. பின்னர் அதன் வெற்றியைக் கண்டு பொறாமை கொண்ட பிரிட்டன் அதற்குப் போட்டியாக ஒரு பொதுப் பொருளியல் நிறுவனத்தை நிறுவ முயன்றது. அதன் விளைவாக 1963-ல் ஐரோப்பியத் தடையில்லாத வாணிப அமைப்பு உருவானது. ஆதில் பிரிட்டன், நார்வே, ஸ்வீடன், டென்மார்க், போர்ச்சுக்கல், ஆஸ்திரியா,ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன. இவ்வமைப்பும் உறுப்பு நாடுகளிடையே சுங்க வரித்தடைகளை அகற்றி பொதுச்சந்தை முறையை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் இவ்வமைப்பில் உள்ள நாடுகள் தங்கள் தெசிய ஆதிக்க உரிமைகளைச் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வமைப்பு எதிர்பார்த்த பயன்களை நல்கவில்லை. சகலவிதத்திலும் ஐரோப்பிய பொருளியல் சமூகமே விஞ்சி நிற்கின்றது. ஆகவேதான் பிரிட்டனும் வேறு சில நாடுகளும் பொருளியல் சமூகத்தில் சேர விருப்பம் தெரிவித்தன.